D
V211,31'P00
P00·107·2

௨௩௨785

17-5-2000

## உள்ளடக்கம்

| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள் - விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 351-391 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 17, 18, 19 மற்றும் 20) | 392-519 |
| **2. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| திருப்பூரில் கோயில் இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றியது | 520-535 |
| *திரு. கே. சுப்பராயன் | 520-524, 534, 535 |
| திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில் | 524-525 |
| *மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் | 526-533 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 535 |
| **3. கவன ஈர்ப்பு—** | |
| (அ) ராசிபுரம் பகுதியில் மின்தடங்கல் | 535-541 |
| (ஆ) ஒட்டன்சத்திரம் நல்லதங்காள் ஆற்றின் குறுக்கே அணை | 542-543 |
| **4. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) பொதுக் கணக்குக் குழு | 543-544 |
| (ஆ) பொது நிறுவனங்கள் குழு | 544 |
| (இ) சட்டவிதிகள் ஆய்வுக் குழு | 544 |
| (ஈ) அரசு உறுதிமொழிக் குழு | 544 |

| | பக்கங்கள் |
|---|---|
| **5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| *(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000* | 545 |
| *(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000* | 545-546 |
| *(இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000* | 546-547 |
| *(ஈ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000* | 547 |
| *(உ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000* | 548 |
| *(ஊ) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000* | 548-549 |
| *(எ) பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000* | 549-550 |
| *(ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2000.* | 552-553 |
| **6. அறிவிப்புகள்—** | |
| *(அ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1989-90 முன்மொழிதல் (ஆ.செ.)* | 550 |
| *(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2000 (ஆஇ.)* | 552 |
| *(இ) கிருஷ்ணா நதி நீர் குறித்து 18-5-2000 அன்று ஒரு மணி நேரம் விவாதம்* | 612 |





| | பக்கங்கள் |
|---|---|
| **7. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1989-90, வாக்கெடுப்பு—** | 550-552 |
| **8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** | 553-611 |
| *(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2000* | |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 553, 554, 556, 558, 579, 583, 584, 597-612 |
| திரு. சி. ஞானசேகரன் | 554-565 |
| *திரு. குத்தாலம் பி. கல்யாணம் | 565-570 |
| *திரு. நா. பெரியசாமி | 570-575 |
| திரு. ப. கோவிந்தன் | 575-578 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 578-584 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 584-588 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 588-596 |
| *(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000* | 612-620 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணநிதி | 618-619 |
| மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் | 613, 620 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 613-615 |
| திரு. சி. ஞானசேகரன் | 615-616 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 616-617 |
| திரு. ப. மோகன் கந்தசாமி | 617 |

| | பக்கங்கள் |
|---|---|
| (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 —தொடர்ச்சி | |
| திரு. மு. அப்பாவு | 617-618 |
| திரு. ஜி. நிஜாமுதீன் | 618 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 618-619 |
| **9. அரசினர் தீர்மானம்—** | |
| விதி 32-ஐத் தளர்த்தல் | 611-612 |
| **10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** | 621-623 |


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## வைகாசி 4, விக்கிரம - திருவள்ளுவர் ஆண்டு 2031

## 2000 மே 17, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது*
*சொல்லுதல் வல்லார்ப் பெறின்."*

வகைப்படுத்தியும், சுவையாகவும் கருத்துகளைச் சொல்லும் வல்லமையுடையோர் சுட்டிக்காட்டும் பணியை உலகத்தார் உடனடியாக நிறைவேற்ற முனைவார்கள்.

### 1. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 661. திரு. ஐ. கணேசன். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**661—**

### அவ்வையின் வாழ்க்கை வரலாறு

***26586. திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அவ்வை மூதாட்டியின் வாழ்க்கை வரலாற்றைப் பள்ளிப் பாடப் புத்தகத்தில் இடம் பெறச் செய்ய அரசு முன்வருமா?

[2000 மே 17

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதிய பாடத் திட்டம் மாற்றியமைக்கும் சூழ்நிலையில், அவ்வை மூதாட்டியின் வாழ்க்கை வரலாற்றைப் பள்ளிப் பாடப் புத்தகத்தில் இடம்பெறச் செய்வது சார்பாக பாட வல்லுநர் குழுவின் உரிய பரிசீலனையின் அடிப்படையில், அரசு இயன்ற வகையில் இடம் பெறச் செய்யும்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலையும் இரண்டே வரியிலே அடக்கி உலகத்திற்கு அளித்த அய்யன் திருவள்ளுவரைப் போல, அறம் செய விரும்பு, ஆறுவது சினம், இளமையில் கல் மற்றும் ஊக்கமது கைவிடேல் என்று அற்புதமான இரண்டே வார்த்தைகளிலே உலகத்திற்குத் தேவையான, மாணவர்களுக்குத் தேவையான நல்ல ஒழுக்கத்தைக் கொடுக்கக்கூடிய அந்த அற்புதமான வரிகளை மாணவர்களுடைய உள்ளங்களிலே பதிய வைக்கக்கூடிய அளவிற்கு இந்த நிதியாண்டிலேயே அவ்வை மூதாட்டியின் வாழ்க்கை வரலாற்றை பாடத் திட்டத்திலே இணைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்,** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வையார் வழங்கியிருக்கிற இப்படிப்பட்ட அறநெறிக் கருத்துகள் பாடப் புத்தகங்களிலே இடம் பெறுகின்றன. இங்கே கேட்கப்பட்ட கேள்வி அவ்வையாருடைய வாழ்க்கை வரலாறு. அவ்வையாருடைய வாழ்க்கை வரலாறு என்று, ஒரு திட்டவட்டமான வரலாறு அவ்வைக்கு இல்லை. சங்ககாலத்து அவ்வையார் ஒருவர். புராணகாலத்திலே முருகனிடத்திலே உறவாடிய அவ்வையார் ஒருவர் அறநெறி நூல்களை வழங்கிய அவ்வையார் ஒருவர். அவர்களைப் பற்றியும் திட்டவட்டமான வரலாறு இல்லை. சில செய்திகள் கிடைக்கும். ஆகவே, அவ்வையார் வரலாறு என்று சொல்கிறபோது, சங்ககால அவ்வையாராக நாம் கருதினால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் சொன்ன இந்த "அறம் செய விரும்பு" என்பதிலே தொடங்காது. ஆகவே, வரலாறு என்று கருதாமல் அவ்வையார் வழங்கிய அறநெறிகள், நூலில் இடம் பெறுமா என்றால், இடம் பெறும், இடம் பெற்றுக்கொண்டிருக்கிறது. அதற்கு எந்தத் தடையும் இல்லை. ஆனால்,



2000 மே 17]

ஒவ்வொரு காலகட்டத்திலும் பாடங்களில் வெவ்வேறு மாற்றங்கள் வருகிறபோது, இதே அறம் செய விரும்பு, வேறு ஒருவர் சொன்ன கருத்தாக, பாரதியார் சொன்னதாக அல்லது வள்ளுவருடைய குறளிலே இருந்து இடம் பெறுகிற ஒரு நிலையும் உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 662, திரு. இ.ஜி. சுகவனம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**662—**

### பள்ளிக் கட்டடம் கட்டுதல்

***29783—திரு. இ. ஜி. சுகவனம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் தொகுதி, ஆனந்தூர் அரசு உயர்நிலைப் பள்ளியின் ஓட்டுக் கட்டடங்கள் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டடங்கள் கட்டித் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பர்கூர் தொகுதி, ஆனந்தூர் உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்களைச் சீர் செய்ய சிறப்பு மராமத்துப் பணியின்கீழ் ரூ.1,00,000 நிதி ஒதுக்கப்பட்டு, தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களை நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர் தொகுதி, ஆனந்தூர் அரசு உயர்நிலைப் பள்ளியின் மொத்த மாணவர்கள் எண்ணிக்கை 820 ஆகும். இந்தப் பள்ளியிலே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் 3 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவிலே இரண்டு வகுப்புகள் கொண்ட ஒரு பள்ளிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது. அதேபோல, அந்த மாணவர்களின் குடிநீர்ப் பிரச்சினைக்காக ஒரு

லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் ஒதுக்கி அதைப் பயன்படுத்தி வருகிறார்கள். அங்கே நமக்கு நாமே திட்டத்தின் மூலமாக சுற்றுச் சுவர் கட்டுவதற்காக பொது மக்கள் 60 ஆயிரம் ரூபாய் செலுத்தி இப்போது 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவிலே அதை கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பள்ளியில் ஓட்டுக் கட்டடங்கள் பழுதடைந்த நிலையில் இருக்கிற காரணத்தினாலே அந்த ஓட்டுக் கட்டடங்களைச் சீர் செய்தால் அந்தப் பள்ளியிலுள்ள குறைகள் நிறைவேறுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படும். ஆகவே, விரைவாக இந்தப் பணியினை செய்து முடிப்பார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.35

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விடையிலேயே, அந்தப் பள்ளியைப் பழுதுபார்ப்பதற்காக நிதி ஒதுக்கப்பட்டு, பொறியாளருக்குத் தெரிவிக்கப்பட்டுவிட்டது; அவரும் அந்தப் பணியை விரைந்து எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பதை நான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் நிதியிலேயிருந்து புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும் மற்றவற்றிற்கும் நிதி வழங்கி இருப்பதற்காக என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால், பழுதுபார்க்கும் பணிகள், tender மூலமாகத்தான் அங்கே நடைபெற வேண்டிய அவசியம் இருக்கும். எனவே, அவற்றைத் துரிதப்படுவதற்கு அரசு தெரிவித்திருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அந்தப் பொறியாளரை நேரில் அணுகி வலியுறுத்தலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியத்திலுள்ள குள்ளமணை மஜூர் அரசு உயர்நிலைப் பள்ளியினுடைய கட்டட இரண்டு சுவர்களில் விரிசல் ஏற்பட்டு விழுகின்ற நிலையிலே இருக்கின்றது. அதிலே படிக்கின்ற பள்ளி மாணவர்கள் மத்தியில் மிகவும் பயமான ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கின்ற காரணத்தினால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், உங்கள் பள்ளி அவ்வளவு ஆபத்தில் இருந்தால், தனிக் கேள்வி போட வேண்டும். இன்னொருவர் கேள்வியிலே இதைக் கேட்டீர்களானால் அமைச்சர் எப்படி பதில் சொல்ல முடியும்? அந்த விவரம் அமைச்சரிடம் இருக்குமா? (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.



**திரு. ப. கோவிந்தன்:** அந்தப் பள்ளிக் கட்டடத்திற்கு மாற்றுக் கட்டடங்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் அதுபற்றி எனக்கு உள்ள, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அங்கே உள்ள கட்டடத்தைப் பழுதுபார்க்க வேண்டிய பணிக்கு ஆவன செய்ய முடியும். அதைவிட அந்தப் பள்ளிக்கட்டடம் பழைய கட்டடமாக இருந்து, சிதிலமடைந்து இருக்குமானால் பழுதுபார்த்தாலும்கூட, அது செம்மையாக இருக்காது. அதற்காகத்தான் மாண்புமிகு உறுப்பினருக்குத் தொகுதி நிதி வழங்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து வழங்கி அவர்கள் தேவையான கட்டடங்களைக் கட்டிக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கல்வித் துறையினுடைய வளர்ச்சிக்காக ஆக்கபூர்வமான பல்வேறு நல்ல காரியங்களையெல்லாம் செய்து வருகிறார்கள். அவர்களுடைய அனுபவத்திற்கும் ஆற்றலுக்கும் ஏற்ற வகையிலே கல்விக்குச் செய்யக்கூடிய சேவையை நாங்கள் மிகுந்து பாராட்டுகிறோம். அந்தநோக்கிலே கடந்த ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டும் புதிதாக வழங்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகளுக்கு எல்லாம் கட்டடங்களை வழங்கியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைகளை எல்லாம் நாங்கள் பாராட்டுகிறோம். தொடக்கப் பள்ளிகளே இல்லாத கிராமங்கள் இன்னும் நிறைய இருந்துகொண்டிருக்கின்றன. கடந்த ஆண்டும் அதற்கு முந்தைய ஆண்டும்கூட, ஆரம்பப் பள்ளிகள் தொடங்குவதற்கு அரசு நிறைய திட்டங்களை வழங்கி, நிறைய பள்ளிகளைத் தொடங்கியது. நடப்பாண்டிலே தொடக்கப் பள்ளிகள் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக அரசால் நிதிநிலை அறிக்கையிலோ அல்லது எந்த நிலையிலும் சொல்லப்படவில்லை. என்னுடைய தொகுதியிலேகூட ஏறக்குறைய 30 ஊர்களுக்கு மேலே தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட வேண்டிய நிலை இருக்கிறது. இப்படிப் பரவலாகத் தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற காரணத்தினாலே, ஏழை எளிய மக்கள், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வி பெறுகின்ற வகையிலே, மீண்டும் தொடக்கப் பள்ளிகளை நடப்பு

[2000 மே 17

ஆண்டிலே கூடுதலாகத் தொடங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டாயக் கல்வித் திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தொடக்கப் பள்ளிகள் தேவையான இடங்களில் தொடங்குவதற்கு மத்திய அரசு நிதி வழங்க ஒப்புதல் கிடைக்கவேண்டும். அவர்களிடமிருந்து அதற்குரிய நிதி கிடைக்க வேண்டுமென்று தமிழக அரசு எதிர்பார்த்தது. ஏனென்றால், கடந்த காலத்தில் தேவையான அனைத்துக் கிராமங்களுக்குப் பள்ளிக்கூடங்கள் அமைக்கும் திட்டத்தில் 700 பள்ளிக்கூடங்கள் அமைத்தால் போதும் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டு, இரண்டாண்டுகளில் 700-க்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலே பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டுவிட்டன. அந்தத் திட்டம் ஒரு முடிவுக்கு வரககூடிய நிலையில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களோ அல்லது அந்தந்த ஊர் மக்களோ, அதிக மாணவர்களுக்குப் பயன்படாத நிலையிலே உள்ள இடங்களிலேகூட பள்ளிக்கூடங்கள் கேட்டுப்பெற்றிருக்கிறார்கள். 10 பேர், 7 பேர், 5 பேர் இருக்கிற ஒன்றிரண்டு பள்ளிக்கூடங்கள்கூட இருக்கின்றன. அதிக எண்ணிக்கையில் அல்ல. அதற்குக் காரணம், தேவை என்று அவர்கள் சொன்னபோது, நாம் பள்ளிக்கூடத்தைத் தொடங்க ஏற்றுக்கொண்டவுடன் அந்த ஊர் மாணவர்கள் 7 பேர், 8 பேர், 9 பேரைத் தவிர வேறு யாரும் அங்கே வரக்கூடிய நிலை இல்லை. ஆகவே, அப்படியுள்ள பள்ளிக்கூடங்களை மறுஆய்வு செய்து, தேவையான இடங்களுக்கு மாற்ற முடியுமா என்பதை அரசு ஆராய்ந்துகொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். மூக்கையா.

*முற்பகல் 9-40*

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் பல பள்ளிகளின் ஓட்டுக் கட்டடங்கள் பழுதடைந்து உள்ளன. அந்தப் பள்ளிகளுக்குப் புதிதாக கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து நிதி ஒதுக்கித் தருகிறோம். அப்படி இருந்தும்கூட அந்தப் பகுதி மக்களும் ஆசிரியர்களும் அங்கே பழுதடைந்து கிடக்கின்ற ஓட்டுக் கட்டடங்களைப் பழுது நீக்கம் செய்வதற்கு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிந்து மேலும் நிதி ஒதுக்கித் தர வேண்டும் என்று கோரிக்கை வைக்கின்றார்கள். எனவே, அரசு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து அங்கே பழுது நீக்கம் செய்வதற்கு அனுமதி வழங்குமா என அறிய விரும்புகிறேன்.



2000 மே 17]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஆலோசனை வரவேற்கக்கூடியது. இருந்தாலும், அரசு நடைமுறைகளிலே உள்ள விதிமுறைகள், எந்த அளவிற்கு அதை அனுமதிக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. அரசு அதற்காக முயற்சிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.எல். வெங்கடாசலம்.

**திரு. ஜி.எல். வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலும் பேரூராட்சிகளில் 2, 3 தொடக்கப் பள்ளிகள் இருக்கின்றன. அவை முழுமையான கட்டட வசதிகள் இல்லாத நிலையில் இருப்பதால் 1 அல்லது 2 தொடக்கப் பள்ளிகளுக்குத்தான் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து நிதி கொடுக்க முடிகின்ற நிலை இருக்கின்றது. ஆகவே, பேரூராட்சிகளில் உள்ள பள்ளிக் கட்டடங்களுக்கு சிறப்பான கவனம் செலுத்தி, சிறப்பு நிதியாக வழங்கி, புதிய கட்டடங்களைக் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றங்களான பேரூராட்சிகள், ஒன்றியங்கள், நகராட்சிகள் போன்ற அமைப்புகளில் இதுவரையில் அவர்களிடத்திலே உள்ள கல்வி நிதியிலே இருந்து பள்ளிக் கட்டடங்களைப் பழுதுபார்ப்பது, (maintenance) பாதுகாப்பது என்ற அடிப்படையில் அவர்கள் செலவிடலாம் என்றுதான் அனுமதி வழங்கப்பட்டு இருந்தது. இப்போது அந்தப் பள்ளி இருக்கிற இடங்களில் கட்டடங்கள் கட்ட வேண்டுமானாலும் அந்த நிதியைப் பயன்படுத்திக் கட்டலாம் என்று அரசு அவர்களுக்குத் தெரிவிக்க இருக்கிறது. அது ஓர் ஆணையாக வெளிவரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 663, திரு. செ. மதிவாணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

[2000 மே 17

**663—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

***18759—திரு. செ. மதிவாணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், அச்சரப்பாக்கம் தொகுதி, வேடந்தாங்கல் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், அச்சரப்பாக்கம் தொகுதி, அச்சரப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், வேடந்தாங்கல் கிராம மக்கள் தொகை 1,322 ஆகும். இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும், தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகைக்கேற்ப ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், தற்போது வேடந்தாங்கல் பகுதியில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச.க. வெங்கடேசன்.

**திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் ஒன்றியம், இரும்பேடு கிராமத்தில் கடந்த ஆண்டு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கப்பட்டது. அதற்கு இந்த ஆண்டு கட்டடங்கள் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே 652 ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டுவதற்கு முதலமைச்சர் அவர்கள் அரசு நிதியிலே இருந்து 52 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்து, அவை அத்தனையும் ஏறக்குறைய



2000 மே 17]

கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அந்த ஆரம்ப சுகாதார நிலையம், புதிதாகத் தொடங்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம். அதற்கு அரசாங்கத்தின் அனுமதி பெற வேண்டுமென்றால், இன்னும் ஓராண்டுகாலம் ஆகும். அதைத் தவிர்க்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் விரும்புவாரேயானால், அவருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாய் கொடுத்தால், இந்த ஆண்டே கட்டடம் கட்டித் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. வேலுசாமி.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரில் உள்ள அரசு இராஜாஜி மருத்துவமனை பல்வேறு வசதிகளோடு இப்போது சிறப்பான முறையிலே இயங்கி வருகிறது. அதற்காக நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே 100 கோடி ரூபாயிலே மருத்துவ ஆராய்ச்சி மையம் மற்றும் மருத்துவமனை மதுரையிலே அமைய இருப்பதற்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேசமயத்தில் மதுரையின் தென் பகுதியில் இருக்கக்கூடிய பாலரங்கபுரம் அரசு மருத்துவமனையில் புதிதாக சில துறைகள் தொடங்குவதற்கு நான் ஏற்கெனவே கடிதம் மூலமாகவும் எழுதிக் கொடுத்து இருந்தேன்; அதற்கு ஆவன செய்வதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி இருந்தார்கள். இதுவரையிலேயும் அங்கே புதிதாக பிரிவுகள் தொடங்கப்படவில்லை. அவை தொடங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மதுரை மாவட்டத்திற்கே மொத்தமாக எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிற பேரவைத் தலைவர் அவர்களே எங்களைத் தூங்கவிடாமல் Cobalt Therapy வேண்டும்; M.R..I. Scan வேண்டும் என்று ஒவ்வொரு நாளும் வற்புறுத்தி எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவரே இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர், பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ளலாம்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

[2000 மே 17

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களிலே மனநோய் மருத்துவம் பார்ப்பதில்லை. கிராமப் பகுதிகளிலே மனநோய் காப்பகங்கள் அல்லது மனநோய் பிரிவு அமைக்க வேண்டியது அவசியம். சமீபத்திலே ஏர்வாடிக்குச் சென்றிருந்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்கூட மிகச் சிறந்த கருத்துகளை அங்கே சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலே ஏர்வாடியிலே நடப்பது என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவதுடன் கிராமப்புறங்களிலே மனநோய் பிரிவு அமைக்க வேண்டுமாய் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு பெரிய டாக்டர், இதெல்லாம் நடக்கிற வேலையா? கிராமப்புறங்களுக்கு மனநோய் மருத்துவர் கொடுக்க முடியுமா? கேட்க வேண்டுமென்று கேட்பதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிமிடம் வரையிலே மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் நன்றாகத்தான் இருப்பதாக நான் கருதுகிறேன். (சிரிப்பு) ஒவ்வொரு கிராமத்திலும் மனநோய் மருத்துவமனை ஆரம்பிப்பது என்று சொன்னால், பிறகு மக்கள் யாரும் வெளியிலே இருக்கமாட்டார்கள். எல்லோரும் உள்ளே போய் விடுவார்கள். ஏனென்றால் அங்கே சில வசதிகள் செய்து தரப்படுகின்றன. எனவேதான் ஒவ்வோர் ஊருக்கும் என்று ஆரம்பிக்காமல், இந்தியா முழுவதற்குமே, நம்முடைய தமிழகத்திலேதான் மிகச் சிறந்த மனநோய் காப்பகம் கீழ்ப்பாக்கம் மருத்துவமனையிலே இருக்கிறது. அங்கே நோயாளிகள் மிகச் சிறப்பாகக் கவனிக்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டு, அவர்கள் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, ஏர்வாடியிலே இருப்பது மனநோய் மருத்துவமனையும் அல்ல, மருந்தகமும் அல்ல. அது மக்களைச் சுரண்டக்கூடிய ஒரு மருந்தகம். யார், யார் குடும்பத்திலே பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ அல்லது பிரச்சினையாக இருக்கிறார்களோ, அவர்களையெல்லாம் எப்படியோ ஏமாற்றி அங்கே கொண்டுபோய் விட்டுவிடுகிறார்கள். பெற்றோர்கள், நாங்கள் மாதந்தோறும் உங்களுக்கு பணத்தை அனுப்பிவிடுகிறோம், இவரை நீங்கள் இங்கே பார்த்துக்கொள்ளுங்கள் என்று விட்டுவிட்டு வந்துவிடுகிறார்கள். உண்மையிலேயே நோயாளியாக இல்லாமல் நல்லமுறையிலே போகின்ற அவர்களெல்லாம் அங்கே அவர்கள் மீது



2000 மே 17]

நடத்துகின்ற பயங்கரமான தாக்குதல் காரணமாக, மிரட்டல் காரணமாக, கட்டிப்போடுவதன் காரணமாக உண்மையிலேயே மனநோயாளிகளாகவே ஆகிவிடுகிறார்கள். இதிலிருந்து அவர்களை விடுவிக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். விரைவிலே நம்முடைய கீழ்ப்பாக்கம் மருத்துவமனையிலே இருக்கக்கூடிய மருத்தவர்களை அங்கே அனுப்பி, அனைத்து நோயாளிகளையும் பரிசோதனை செய்து, யார் யார் உண்மையிலேயே மனநோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களை கீழ்ப்பாக்கத்தில் இருக்கின்ற மனநோய் மருத்துவமனைக்குக் கொண்டு வந்து சேர்க்கவும், மற்றவர்களை விடுவிக்கவும் கேட்டுக்கொண்டு இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன் போன்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மனநோய் பரிசோதனை இலவசமாக அரசு செய்து தருமா? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் விரும்பினால் நிரந்தரமாகவே அங்கே அவருக்கு ஓர் இடத்தைத் தருவதற்கு அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லத்தீப்.

*(மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் எழுந்து நின்று திரு. லத்தீப் அவர்களை உட்காரச் சொன்னார்.)*

நான் லத்தீப் அவர்களைத் துணைக் கேள்வி கேட்க அனுமதித்தேன். மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், பிறகு உங்களைப் பேச அனுமதிக்கிறேன். நீங்கள் என்ன அவரைப் பார்த்து உட்காரச் சொல்வது?

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அரசு, ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தொடங்குவதற்கு என்ன அடிப்படைத் தகுதிகளை வைத்திருக்கிறது? நீண்ட நாட்களாக என்னுடைய கோரிக்கை ஒன்றிருக்கிறது. கஷ்டத்தில் இருக்கிற ஜவ்வாது மலைப் பகுதியில் காவலூர் சத்திரத்திலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஏனோ தெரியவில்லை, அங்கே தொடங்கப்படவில்லை. அதற்கு ஏதாவது காரணம் உண்டா? இல்லையென்றால் தயவுசெய்து அதற்கு முன்னுரிமை கொடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு அங்கே தொடங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்குவதற்கு முதலாவது, 8 கிலோமீட்டர் தூரத்திலே எந்த மருத்துவமனையும் இருக்கக் கூடாது. இரண்டாவது, 30,000 மக்கள்தொகை கொண்ட ஒரு பகுதியிலேதான் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல ஜவ்வாது மலையிலே அவர் குறிப்பிடுகின்ற இடத்திலே ஆரம்ப சுகாதார நிலையத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று கடந்த ஆண்டு பகுதி-2 திட்டத்திலேகூட நாங்கள் விவாதித்தோம். ஆனால் மத்திய அரசாங்கம் 1,400 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குமேல் தமிழகத்திலே தொடங்கக்கூடாது என்று தடை விதித்திருக்கிற காரணத்தால் அந்த இடத்திலே ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தொடங்க முடியவில்லை. மக்கள் பெருக்கத்தின் காரணமாக இப்போது புதிதாக எடுத்திருக்கின்ற கணக்கெடுப்பின்படி மேலும் 10 ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தொடங்குவதற்கு மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். அதிலே ஒன்று நிச்சயமாக எதிர்க்கட்சித் தலைவருக்கு என்று முடிவு செய்திருக்கிறோம். அடுத்து மாண்புமிகு உறுப்பினருடைய அந்தத் தொகுதியும் கவனிக்கப்படும்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஏர்வாடி என்று குறிப்பிட்டார்கள். அது ஏர்வாடி ஊரை மட்டும்தான் குறிக்குமே தவிர ஏர்வாடி தர்காவை அல்ல. ஏனென்றால் சில விஷமிகள் இதை வேறுவிதமாகத் திரித்துக் கூறிவிடுவார்கள் என்பதற்காக இந்த விளக்கத்தைச் சொல்கிறேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 664. திரு. என்.ஆர். அழகராஜா. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**664—**

## தொழுநோயாளிகள் பிரிவு

**•34461 திரு. என்.ஆர். அழகராஜா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தேனி மாவட்டம், சின்னமனூர் பகுதியில், அரசு மருத்துவமனையில் தொழுநோயாளிகள் பிரிவினைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தேனி மாவட்டம், சின்னமனூர் பகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் தொழுநோயாளிகளுக்குத் தொழுநோய் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. எனவே, சின்னமனூர் அரசு மருத்துவமனையில் தனியாக தொழுநோயாளிகள் பிரிவு தேவையில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னமனூர் பகுதியில் மற்ற பகுதிகளைக் காட்டிலும் அதிகமாக தொழுநோயாளிகள் இருக்கின்ற காரணத்தால் சின்னமனூர் அரசு மருத்துவமனையில் இதற்கு என்று தனியாக ஒரு சிறிய பிரிவினை ஆரம்பித்து அங்கே தொழுநோயாளிகளுக்கு என்று சிகிச்சை அளிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே ஒன்றைக் கூறினார்கள். அதாவது, நீண்ட நாட்களாக நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள் 10 இடங்களில் தொடங்குவதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதில் குச்சனூர் பேரூராட்சிக்கு ஒன்று ஒதுக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் தொழு நோயாளிகள் மிகச் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு, தொழுநோயாளிகளுடைய எண்ணிக்கையே குறைந்துவிட்டது. எனவேதான், இதற்கு என்று இருந்த ஓர் இலாகாவைக்கூட இப்போது wind-up செய்துவிட்டு அங்கே பணியாற்றிக்கொண்டிருந்தவர்களெல்லாம் களப் பணியாளர்களாக 5,000 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல அவருடைய அந்தப் பகுதியிலே தொழுநோயாளிகள்

அதிகம் இருப்பார்களேயானால், அதற்கு என்று சிறப்பு முகாம் ஒன்று அமைத்து ஓரிரு வாரங்களில் நோயாளிகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படும். அடுத்து அவர்கள் புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பற்றிக் கேட்டார்கள். 234 சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ள இந்த அவையில் ஏறக்குறைய 300 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் கேட்டிருக்கிறார்கள். 10 நிச்சயமாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். அந்த பத்தில், நான் ஏற்கெனவே வாக்குறுதி கொடுத்த அந்த இரண்டு போக மீதமிருப்பதில் தகுதி அடிப்படையிலே கொடுக்கப்படும்.

(உட்கார்ந்து கொண்டு) திரு. மு. அப்பாவு: நான் ஒன்று கேட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு, உட்கார்ந்து கொண்டே பேசுகிறீர்கள். உட்கார்ந்துகொண்டு பேசுவது என்ன பழக்கம்? இனிமேல் அப்படிப் பேசினால், அவையிலிருந்து வெளியேற்றுவேன். இதுதான் கடைசி எச்சரிக்கை. இப்போது உங்களைக் கூப்பிடலாம் என்று இருந்தேன். உட்கார்ந்து கொண்டே பேசியதால் உங்களைக் கூப்பிடவில்லை. அடுத்து, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தொழுநோயாளிகள் பிரிவுகள் பெருமளவில் குறைக்கப்பட்டிருப்பது உண்மைதான் என்றாலும் அதற்காக அமைக்கப்பட்டிருக்கிற அந்த மருத்துவமனைகளில் சிகிச்சைப் பெறாதவர்கள் பல இடங்களில், குறிப்பாக நகர்ப்புறங்களில் திரிந்து கொண்டிருக்கிறார்கள். பிச்சை எடுக்கிற மற்றும் வேறு மாதிரியான காரியங்களில் ஈடுபடுகின்ற தொழுநோயாளிகள் ஒருசிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களைக் கண்டறிந்து திரும்பவும் அந்த மருத்துவமனையில் அவர்களைச் சேர்த்து சிகிச்சை அளிப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா? அதோடு ஓராண்டுகாலமாக நாம் இங்கே பேசி வருகின்ற ஒன்று. வட்ட மருத்துவ மனைகளுக்கும் மற்ற மருத்துவ மனைகளுக்கும் Ambulance வழங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்தார்கள். பல மருத்துவமனைகளுக்கு Ambulance வழங்கப்படவில்லை. குறிப்பாக என்னுடைய மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு வழங்கப்படவில்லை. அதை வழங்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழுநோயாளிகளைப் பொறுத்தவரையில் நகரத்தில் இருந்தாலும், கிராமத்தில் இருந்தாலும் ஏற்கெனவே தொழுநோயாளிகளாக இருந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் குணமானதற்குப் பிறகு அவர்கள் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். புதியதாக நகரப் பகுதிகளிலேயோ அல்லது கிராமப் பகுதிகளிலேயோ தொழுநோயாளிகள் இருக்கிறார்களா என்பதை ஒவ்வொரு மாதமும் களப் பணியாளர்கள் கிராமந்தோறும் சென்று அந்த அறிகுறிகள் யாருக்காவது தென்படுமேயானால் அவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிப்பதற்கான பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் தாலுகா மருத்துவமனைக்கு Ambulance இல்லையென்று சொன்னார். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஏறக்குறைய 167 வட்டார மருத்துவமனைகளுக்கும் Ambulance வாங்கிக் கொடுத்துவிட்டோம். ஆனால் மன்னார்குடி மருத்துவமனையில் இல்லை என்று சொல்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று கண்டறிந்து ஓரிரு தினங்களில் உண்மையிலேயே Ambulance இல்லையென்று சொன்னால், அங்கே வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 665, திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**665—**

### கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***3185—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் ஒன்றியம், நாச்சியார்பட்டி, இராஜகோபாலபுரம் ஆகிய கிராமங்களில் நீர் ஆதாரத்தை ஆய்வு செய்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த அரசு பரிசீலனை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[2000 மே 17

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவில்லிப்புத்தூர் ஒன்றியம், நாச்சியார்பட்டி மற்றும் இராஜகோபாலபுரம் ஆகிய கிராமங்களில் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு தற்போது ஊராட்சி வசம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 9-55

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் 2000-2001 ஆண்டில் திருவில்லிப்புத்தூர் நகருக்கு 17 கோடி ரூபாய் செலவில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டமும், எனது தொகுதியில் உள்ள வத்திராயிருப்பு பேரூராட்சிக்கு ரூ.5 கோடி செலவில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டமும், நிறைவேற்றிக் கொடுத்த உள்ளாட்சித் துறை அமைச்சருக்கும், இந்த அரசுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய கேள்வியானது, திருவில்லிப்புத்தூர், ஒன்றியம் மல்லிபுத்தூர், பெருமாள்தேவன்பட்டி போன்ற இன்னும் சில இடங்களில், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டியாகி விட்டன. ஆனால் குடிநீர் ஆதாரம் கண்டுபிடிக்காமல், Bore-well போட்டுவிட்டு தண்ணீர் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, அரசு விரைவாக, குடிநீர் ஆதாரம் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும், திருவில்லிப்புத்தூர் ஒன்றியத்தில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மூலக் கேள்வி திருவில்லிப்புத்தூர் ஒன்றியம், நாச்சியார்பட்டி, இராஜகோபாலபுரம் ஆகிய கிராமங்களில் குடிநீர்த் திட்டத்தை ஆய்வு செய்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த அரசு பரிசீலனை செய்யுமா என்பதுதான். இந்த இரண்டுக்கும் ஆய்வு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நடந்து முடிந்து, ஊராட்சிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டு விட்டன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 666, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



2000 மே 17]

**666—**

**பள்ளிக் கட்டடம்**

***16911—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூரில் இராமநாதபுரம் மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் பள்ளிக் கட்டடம் பத்து ஆண்டுகளுக்கு முன்பு ரூ.10 இலட்சம் செலவில் கட்டப்பட்டது. அது பழுதடைந்து ஆபத்தான நிலையிலுள்ளதால் அதை இடிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூரிலுள்ள இராமநாதபுரம் மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பழுதடைந்து, ஆபத்தான நிலையில் இருந்த கூடுதல் பள்ளிக் கட்டடம் இடித்து அகற்றப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி ஏறத்தாழ 1½ ஆண்டுகளுக்கு முன்பாகக் கேட்கப்பட்டது. நான் கேட்ட சில நாட்களிலேயே அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு அந்தக் கட்டடத்தை இடிக்கச் சொல்லிவிட்டார்கள். துறையில் இருந்து பதில் வர மட்டும் ஏறத்தாழ 1 ஆண்டு காலம் ஆகி இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரிசைப்படி கேள்விகள் எடுக்கப்படுகின்றன. என் துறைக் கேள்விகளுக்கு மட்டும் இங்கே பதில் அளிப்பது இல்லை. அனைத்துக் கேள்விகளையும் வடிகட்டி எவை எவை தேவையோ அவற்றை வரிசைப்படி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தான் இந்தக் கேள்வி இங்கே வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2000 மே 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. லட்சுமணன் இங்கே சொன்ன கருத்து நியாயமான கருத்து. ஏராளமான அமைச்சர் பெருமக்கள் தங்கள் விடையை அளிக்கும்போது திருத்திய விடையை அளிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. காரணம் வினா கொடுத்த காலத்திற்கும் விடை அளிக்கின்ற காலத்திற்கும் இடைவெளி மிக அதிகமாகிவிட்டது. ஆகவே, நம்முடைய விதிகளின்படி உள்ள, குறிப்பிட்ட நாட்களுக்குள்ளே பதில் வரவேண்டும் என்பதை மீண்டும் அரசுக்கு, தலைமைச் செயலருக்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே முக்கியமான பிரச்சினை என்னவென்று சொன்னால் 10 இலட்சம் ரூபாய் என்பது பொதுமக்கள் வரிப்பணம். ஏதோ இயற்கைச் சீற்றத்தால் இந்தக் கட்டடம் இடிந்துபோகவில்லை. இந்தக் கட்டடத்தை மேற்பார்வையிட்டிருக்க வேண்டிய Engineer-கள், சரியாக மேற்பார்வையிடாததன் காரணமாக இந்தக் கட்டடமானது பழுதுபட்டு இடிக்கப்பட்டிருக்கிறது. பொதுமக்கள் வரிப்பணத்தை இவ்வாறு கொஞ்சம்கூட கவனமில்லாமல் செலவிடுவதற்கு காரணமாக இருந்திருக்கிற அந்த Engineer-கள்மீது அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்திருக்கிறதா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டடம் ஆபத்தான நிலையில் இருக்கிறது, இடிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். ஆகவே, அதன் அடிப்படையில், நானும் அவரும் நேராக பேசிக் கொண்டிருந்தபோது, தொலைபேசி மூலம் மாநகராட்சியை தொடர்புகொண்டு அப்படிப்பட்ட விவரத்தைக் கேட்டறிந்து, அவரிடத்தில் இருந்து புகார் பெற்று, இங்கிருந்து உத்தரவிட்டு, அதற்கு மீண்டும் செலவழிக்காமல், பொதுப் பணித் துறையின் மேற்பார்வையின்கீழ் இந்தக் கட்டடம் இடிக்கப்பட வேண்டுமென்று கேட்டிருந்தோம். அதன் அடிப்படையில் செய்திருக்கிறார்கள். காலத்திற்கேற்ப சரியானபடி கட்டடத்தைக் கட்டுகின்ற முறை நீண்ட நெடிய காலமாக இல்லாமல் இருந்திருக்கிறது என்ற தகவல் இப்போது தெரியவருகிறது. இதுசம்பந்தமான விசாரணை தொடரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 667, திரு. ச. அழகுவேலு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.



2000 மே 17]

**667—**

**நெடுஞ்சாலைகளாக மாற்றுதல்**

***25911—திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழுள்ள சாலைகளை நெடுஞ்சாலைத் துறை சாலைகளாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உள்ள சாலைகளை நெடுஞ்சாலைத் துறை சாலைகளாக மாற்றி அரசாணை நிலை எண் 156, வேளாண்மை, நாள் 30-4-1999-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

*முற்பகல் 10-00*

**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய பதில் மிகச் சிறப்பாக அமைந்திருந்தாலும், இந்த ஆணையை நெடுஞ்சாலைத் துறையிலே இருக்கக்கூடிய தலைமைப் பொறியாளர்கள், ஏதோ சாக்குப் போக்கு சொல்வதைப்போல, கரும்பு சாலை வளர்ச்சித் திட்டத்திலே ஒரு சாலை அமைக்க வேண்டுமென்று நான் கேட்டபோது, இதே ஆணையை நான் அவர்களிடத்திலே குறிப்பிட்டுக் காட்டினேன். கரும்பு சாலை வளர்ச்சித் திட்ட சாலைகளையெல்லாம் நெடுஞ்சாலைத் துறை எடுத்துக்கொண்டு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. தயவுசெய்து இந்த ஆணையை நீங்கள் ஏற்றுக்கொண்டு கரும்பு சாலை வளர்ச்சித் திட்டத்திலே ஒரு பாலத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டபோது, அவர்கள் சாக்குப் போக்கு சொல்வதைப்போல மறுக்கின்றார்கள். அதன்காரணமாகத்தான் இந்த வினா எழுப்பப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 668, திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

[2000 மே 17

**668—**

## வேளாண்மை விரிவாக்க மையம்

***30861 திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம், தொகுதி, இரும்புலிக்குறிச்சியில் வேளாண்மை விரிவாக்க மையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்படாத அல்லது சட்டமன்றப் பேரவையில் இதுவரை அறிவிக்கப்படாத புதிய திட்டங்களுக்கு இந்த நிதியாண்டில் ஒப்புதல் அளிக்க தடையாணை உள்ளதால், பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, இரும்புலிக்குறிச்சியில் வேளாண்மை விரிவாக்க மையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் பெறப்பட்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட இயலாத நிலையில் உள்ளது.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆண்டிமடம் தொகுதியிலே, செந்துறை ஒன்றியத்திலே இரும்புலிக்குறிச்சி பகுதியிலே மிக முக்கியமாக விவசாயிகள் மானாவாரிப் பயிர்களையும், முந்திரி போன்ற பயிர்களையும் பயிரிட்டுக்கொண்டிருக்கின்றார்கள். பொதுவாகவே, வேளாண்மை விரிவாக்க மையங்களின் மூலமாக வழங்கப்படுகின்ற சம்பா நெல் விதைகள் போன்றவை தரமற்று இருப்பதாகவும் விவசாயிகள் கூறுகிறார்கள். அதேபோல, பூச்சிமருந்து விசைத் தெளிப்பான் கருவிகள் போதுமான அளவிற்குக் கிடைக்கப் பெறவில்லை என்றும் கூறுகிறார்கள். எனவே, இவற்றையெல்லாம் சரி செய்வதற்கு, எதிர்காலத்திலாவது பரிசீலனை செய்து, இரும்புலிக் குறிச்சியிலே வேளாண்மை விரிவாக்க மையம் ஒன்றை உருவாக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 850 வேளாண்மை விரிவாக்க மையங்கள் இயங்கி வருகின்றன. 1989-ல் மூன்றாவது முறையாக திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, நான்



2000 மே 17]

வேளாண்மைத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த அந்தநேரத்தில், நம்முடைய முதலமைச்சரிடத்தில் புதிதாக 100 வேளாண்மை விரிவாக்க மையங்கள் தொடங்கப்பட வேண்டும்; அது விவசாயிகளுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று எடுத்துச்சொல்லி, அவர்களும் அனுமதித்து, அதற்கான நடவடிக்கை எடுத்து, தொடங்கக்கூடிய நேரத்திலே, திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைக்கப்பட்டது. அதற்குப் பின்னர், 5 ஆண்டுக்காலம், அந்த 100 வேளாண்மைக் கிடங்குகளும் தொடங்கப்படவில்லை. இப்போது மீண்டும் 1996-ல் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள், விவசாயிகள் ஆகியோரெல்லாம் எடுத்து வைத்த கோரிக்கைகளின் அடிப்படையில் அந்த இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, 100 வேளாண்மைக் கிடங்குகளும் ஆங்காங்கே தொடங்கப்பட்டு, அதற்குரிய பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஒரு வேளாண்மைக் கிடங்கு தொடங்கப்பட வேண்டுமானால், குறைந்தது 15 கிலோமீட்டர் தூரத்திற்கு மேலே இடைவெளி இருந்தால்தான் தொடங்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. இப்போதுள்ள நிதிநிலையைக் கருத்திலேகொண்டால் மேலும் தொடங்குவதற்கான வாய்ப்பு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதைப்போல, அப்படி ஒன்றும் அந்தப் பகுதியிலே விதைநெல் தரம் இல்லாத முறையிலே வழங்கப்படுவதாகவோ, பூச்சி மருந்துகள் கிடைக்கவில்லை என்ற புகாரோ இதுவரை அரசாங்கத்திற்கு வரவில்லை. அப்படி இருக்குமேயானால், அவர் எழுதித் தந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 669, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**669—**

## விரைவுப் பேருந்து

***26223—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர்-சென்னை அரசு விரைவுப் பேருந்து நிறுத்தப்பட்டது ஏன்?

*(ஆ) மீண்டும் எப்போது இயக்கப்படும்?*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருப்பூர்-சென்னை வழித்தடத்தில் இயக்கப்பட்ட அரசு விரைவுப்பேருந்து எண் 470 குறைந்த வருவாய் ஈட்டியதன் காரணமாக 1-11-1998 முதல் நிறுத்தப்பட்டது.

(ஆ) வருவாய் இழப்பு காரணமாக நிறுத்தப்பட்ட வழித்தடத்தை மீண்டும் இயக்கத் திட்டம் ஏதும் இல்லை.

முற்பகல் 10-05

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் ஒரு மிகப் பெரிய Commercial Centre என்ற முறையில், அங்கிருந்து சென்னைக்கு வருவதற்குரிய அவசியமும் தேவையும் அதிகரித்து வருகின்றன. அதற்குரிய பயணிகளும் அதிகமாகத்தான் இருக்கிறார்கள். விரைவுப்பேருந்து நட்டத்தில் இயங்கிய காரணத்தினால், நிறுத்தப்பட்டுவிட்டது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு ஒரு மாற்று ஏற்பாடாக வேறு வழிகளில் ஏற்பாடு செய்து, Tiruppur to Chennai பேருந்து வாய்ப்பாக இருக்கும் என்பதை உறுதிப்படுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஈரோடு போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக தடம் எண் 407-ஜே, 407-கே ஆகிய 2 பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. அவற்றிலே அடர்வும் அதிகமாக இருக்கிறது, வருமானமும் அதிகமாக வந்து கொண்டிருக்கிறது. 100 சதவிகிதம், 103 சதவிகிதம் என்று 2 பேருந்துகளிலுமே அடர்வுகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப்போல, Two-seaters வைக்கக்கூடிய அதே ஈரோடு போக்குவரத்துக் கழகத்தின் மூலமாகவே பேருந்துகள் இயக்குவதற்கு, விரைவில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 670, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.





**670—**

**சுற்றுப்புறச் சூழல்**

***32429—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கழிவுநீர் மற்றும் மழைநீர்க் கால்வாய்கள் இல்லாத பகுதிகளில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அடுக்குமாடி கட்டடங்களுக்கு அனுமதி அளிப்பதால் சுற்றுப்புறச் சூழல் கெடுவது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அனுமதி அளிக்கப்படுவதில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதியிலே இருக்கிற கோவிலம்பாக்கம், நன்மங்கலம், செம்பாக்கம் போன்ற இயற்கை எழில் கொஞ்சும் கிராமப் பகுதிகளிலேகூட, இப்போது பல அடுக்குமாடிக் கட்டடங்கள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதனால், அப்பகுதிகளில் வாழ்கிற மக்கள் சுகாதாரக் கேட்டினால், உள்ளபடியே துன்புறுவது கவலையாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் அதற்கான Committee கூடுகிறபோது, இதை ஆலோசனையாக எடுத்துச் சொல்லி, விசாரணை செய்யச் செய்து, அப்படிக் கட்டுகிற அடுக்குமாடிக் கட்டட உரிமையாளர்கள், மழைநீர், கழிவுநீர் செல்வதற்குரிய கால்வாய்களை, அவர்கள் செலவிலேயே கட்டிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, மாநகர எல்லைக்குள்ளேதான் multi-storeyed buildings என்று சொல்லப்படுகிற பலமாடிக் கட்டடங்கள்

[2000 மே 17

அமைக்கப்படுகின்றன. 4 மாடிக்கு மேலே இருக்கிற கட்டடங்கள் அனைத்தும் பலமாடிக் கட்டடங்கள் என்று வகுக்கப்பட்டுள்ளன. அவை, மாநகராட்சி எல்லைக்குள்ளே இருக்கிற பகுதிகளில் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன. புறநகர்ப் பகுதிகளிலே 4 மாடிக்கு மேலே இருக்கிற கட்டடங்கள் அனுமதிக்கப்படுவதில்லை. அப்படி 4 மாடிக் கட்டடத்திற்குக் கீழே, 2 மாடியிலே இருந்து 4 மாடி வரை இருக்கிற கட்டடங்கள் சிறப்புக் கட்டடங்கள் (special buildings) என்று வரையறுக்கப்பட்டு, அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. அவர்களுக்கு அதுபோன்ற சுகாதார வசதிகள் இருக்கிறதா என்று பார்த்துத்தான் வழங்குகிறார்கள். அப்படி மாண்புமிகு உறுப்பினர், எந்தப் பகுதியிலேயும் சுகாதார வசதிக்குக் கேடாக அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டினால், அதுகுறித்து, நிச்சயமாக இந்தத் துறை நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 671, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**671—**

### உதவித் தொகைகள்

***24299—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது திருக்கோயில்களுக்கு வழங்கப்படும் தஸ்திக் மற்றும் மோகினித் தொகை போன்ற ஈட்டுத் தொகைகள் நிர்ணயம் செய்யப்பட்டு மிக நீண்ட காலமாகிறது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தற்கால நிலவரப்படி அவற்றை உயர்த்தித் தர கோரிக்கை வரப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2000 மே 17]

(அ) ஆம்.

(ஆ) திருக்கோயில்களுக்கு வழங்கப்படும், நில எடுப்பு ஈட்டுத் தொகை என்கிற தஸ்திக், மோகினி கழிவு உதவித் தொகைகளை உயர்த்தி வழங்குவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25 ஆண்டுகளுக்கு முன்பாக திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கு அரசு மிக மிகக் குறைந்த விலை நிர்ணயம் செய்திருக்கின்ற அந்த நிலையை, மாற்றி, இப்போதைய நிலவரப்படி கணக்கீடு செய்து, அந்தத் திருக்கோயில்களினுடைய அபிவிருத்தி வேலைகளைச் செய்வதற்கு ஏற்றவகையிலே, பரிசீலனையில் இருப்பதாகக் கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த நிதியாண்டிலேயே அந்த முடிவை எடுத்து, அந்தத் திருக்கோயில்களுக்கு நியாயமாகச் சேர வேண்டிய தொகையை வழங்கி, திருக்கோயில்களினுடைய திட்டங்களை விரைவாகச் செயல்படுத்துவதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நில எடுப்பு ஈட்டுத் தொகை என்பது, தனிப்பட்ட பல்வேறு கோயில்களுக்குப் பெரிய உதவியாக இருக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை. எனவேதான், கருத்துருவை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். வெகுவிரைவில் முடிவு எடுக்கப்பட்டு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 672, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**672—**

### கோயிலைச் சீரமைத்தல்

***29327—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், திருவேள்விக்குடி கிராமத்திலுள்ள அருள்மிகு மணவாளேஸ்வரஸ்வாமி திருக்கோயில் வெளி மதிற்சுவர் இடிந்தும், சிதைந்தும் பாதுகாப்பற்ற நிலையிலுமுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பாதுகாப்புக் கருதி சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம், அறியும்.

(ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், திருவேள்விக்குடி அருள்மிகு மணவாளேஸ்வரர் சுவாமி திருக்கோயிலின் தற்போது இடிந்தும் சிதைந்தும் உள்ள வெளி மதிற்சுவர் செப்பனிடும் பணியினை இத்திருக்கோயிலுக்கு அமைக்கப்பட்டுள்ள திருப்பணிக் குழு மூலம் தக்க நிதியாதாரம் திரட்டி, தேவையெனில் நிதியுதவி வழங்கி, முதற்கட்டப் பணியாக மேற்கொள்வது குறித்து, அடுத்த நிதியாண்டில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள இத்துறை உத்தேசித்துள்ளது.

முற்பகல் 10-10

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் திருப்பணிக் குழு அமைத்து இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், இன்னும் திருப்பணி செய்யக்கூடிய அளவிற்கு ஒரு நிலைமை அந்தத் திருக்கோயிலுக்கு உருவாகவில்லை என்பதைப் பணிவோடு தெரிவித்து, துறையின் சார்பிலேதான் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. மேலும், இந்த ஆலயத்தைப் பொறுத்தவரையில் ஒரு ஐதீகம் என்னவென்றால், திருமணஞ்சேரிக்கு மணமாகாதவர்கள் சென்று அங்கு வழிபட்டால் மணமாகக்கூடிய வல்லமைபெற்ற கோயில் என்று ஒரு வரலாறு உண்டு. அந்தக் கடவுளுக்கு திருமணம் ஆனபோது, வேள்வி நடந்த ஊர் அந்த ஊர். எனவே, திருவேள்விக்குடி என்று பெயர் பெற்றது. எனவே, திருமணஞ்சேரி சிறப்புப் பெற்று, திருவேள்விக்குடி சிறப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே, அதை ஈடு செய்யக்கூடிய அளவிற்கு துறையின் மூலமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகின்றேன்.



**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, நம்முடைய உறுப்பினர்கள் கேள்வி கேட்கிறபோது, திருப்பணி செய்ய வேண்டும், அரசு உதவி செய்ய வேண்டும் என்றெல்லாம் சொல்கிறார்களே தவிர, அந்தக் கோயிலுக்கு என்ன நிலம் இருக்கிறது, அது என்ன நிலையில் இருக்கிறது, வருவாய் வருகிறதா என்பதையும் கொஞ்சம் கவனத்திலே கொண்டு, அவர்களும் எங்களுக்குத் துணை செய்வார்களானால், நிச்சயமாக இதற்குத் திருப்பணி செய்வது எளிதாக இருக்கும். குறிப்பாக, அவர் கூறுகின்ற இந்த திருவேள்விக்குடி என்ற ஊரிலே இருக்கிற கோயிலுக்கு இப்போது வருவாய் 14,692 ரூபாய்தான், ஆனால், இந்தக் கோயிலுக்கு இருக்கிற சொத்து, 57 ஏக்கர், 22 செண்ட் நன்செய் நிலம், 23 ஏக்கர், 31 செண்ட் புன்செய் நிலம். இதிலே ஒரு கட்டடமும், 58 மனைகளும் உள்ளன. ஆனால் வருவாய் மட்டும் சுமார் 14,000 ரூபாய்தான் வருகிறது. இது ஏன் என்பது எல்லோருக்கும் விளங்கி இருக்கும் என்று கருதுகின்றேன். மாண்புமிகு உறுப்பினருக்கும் விளங்கி இருக்கும். எனவே, இவ்வளவு பெரிய நன்செய் நிலங்களும், புன்செய் நிலங்களும் இருக்கிறபோது, அவற்றிலிருந்து ஏன் வருவாய் வரவில்லை, வருவாய் வராதபோது, இப்படி ஒவ்வொன்றிற்கும் அரசே எப்படி பணத்தைக் கொடுத்து ஈடுசெய்ய முடியும் என்பதை அவரும் சிந்திக்க வேண்டும். என்றாலும், திருவேள்விக்குடியின் சிறப்பைக் கருதி ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 673, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்பட்டது.

வினா எண் 674, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**674—**

### கணினி பயிற்சித் திட்டம்

***30326—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக நடத்தப்படும் கணினி பயிற்சித் திட்டம் பெரியார் பல்கலைக்கழகத்திலும் செயல்படுத்தப்பட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 2000-2001 ஆம் நிதியாண்டில், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு கணினிப் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்படும்பொழுது, பெரியார் பல்கலைக் கழகத்துடனும் கலந்து ஆலோசிக்கப்பட்டு, அப்பல்கலைக்கழகமும் இத்திட்டத்தில் பங்கு பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையின் மூலமாகச் செயல்படுத்தப்படும் தகவல் தொடர்புத் திட்டம், ஆண்டு ஒன்றுக்கு 5,000 மாணவர்களுக்கு மட்டும்தான் என்று உச்சவரம்பு இருக்கிறது. அந்த உச்சவரம்பை அதிகப்படுத்துவதுடன் அவர்கள் நல்ல தரமான கணினிக் கல்வியைப் பெற உதவித் தொகையையும் அதிகப்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நிறுவனம் மூலமாக 250 பட்டதாரிகளுக்கு மட்டும் அளிக்கப்பட்டு வந்த கணினிப் பயிற்சியானது, 1997-98 ஆம் ஆண்டிலிருந்து, ஆண்டுதோறும் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 1,000 பட்டதாரிகளுக்கு, தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் மூலமாக பயிற்சி அளிக்கப்படுகிறது. நடப்பு நிதியாண்டில் 500 பட்டதாரிகளுக்கும் கணினியில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும். தகவல் தொழில்நுட்பத் துறையில் வரும் ஆண்டுகளில் பெருமளவில் வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்பதால் மேற்கொண்டும் 5,000 நபர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது. ஆக மொத்தம் 6,500 நபர்களுக்கு நடப்பு நிதியாண்டில் கணினிப் பயிற்சி அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 675, திரு. எஸ்.எஸ். மணி நாடார், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.





**675—**

### சாத்தான்குளத்தில் தொழிற்பேட்டை

***30930—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக உள்ள சாத்தான்குளம் ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைத்துத் தரும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதியிலே, படித்த இளைஞர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். தொழிலில் மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கின்றது. அங்கே இரண்டு வகையான தாதுப்பொருட்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. ஒன்று, சிமெண்ட் ஆலை தொடங்குவதற்குத் தேவையான கற்கள் நிறைய அங்கே கிடைக்கின்றன. இன்னொன்று, அங்கே கடல் பகுதியிலே அதிகமாக தேறிக் காடுகள் இருக்கின்றன. மத்திய தொழில் துறை அமைச்சர் மாண்புமிகு முரசொலி மாறன் அவர்கள்கூட 4 மாதங்களுக்கு முன்னாலே ஓர் அறிக்கையினை வெளியிட்டு இருந்தார்கள். அதாவது சாத்தான்குளம் தொகுதியிலே தேறி மணல்களைப் பயன்படுத்தி, நல்ல தொழிற்கூடம் ஒன்று உருவாக்கப்படும் என்று சொல்லியிருந்தார்கள். அந்தத் தொழில் கூடம் எப்போது உருவாகும், எந்த இடத்திலே உருவாகும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, அங்கே தொழில் தொடங்குவதற்குரிய மூலப்பொருள் கிடைத்தால் தொழில் முனைவோர் முன்வந்தால், நிச்சயமாக, அரசு செய்ய வேண்டிய உதவிகள் அத்தனையும் செய்யத் தயாராக இருக்கின்றது. அதேசமயத்திலே, துறையினுடைய கிளை மேலாளர் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையினுடைய அடிப்படையிலே, பெரியகுளம் கிராமம், சாத்தான்குளம் தாலுகாவிலுள்ள நிலங்களைக் கையகப்படுத்தி, அங்கே தொழில்பேட்டை அமைப்பதற்காக அரசுக்கு குறிப்பு அனுப்பி, அங்கே இருக்கின்ற நிலங்கள் எல்லாம் தேர்வு செய்யப்பட்ட பின்னர், அங்கே இருக்கின்ற தொழில் முனைவோர்கள் ஆர்வம் காட்டாத காரணத்தால், தற்சமயம் அங்கே தொழில்கூடங்கள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பின்தங்கிய பகுதியான இராமநாதபுரத்திலே கிடைக்கின்ற கனிமங்களைக் கொண்டு அங்கே புதிய ஆலைகள் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, அவருடைய தொகுதியிலே வள்ளியூரிலே ஒரு தொழில்பேட்டை அமைப்பதற்கு, அடிக்கல் நாட்டப்பட்டு, அந்தப் பணிகள் தொடங்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் வேறு ஒரு தகவலைச் சொல்லி ஒரு துணை வினா கேட்க வேண்டுமென்று கேட்டார். நான் அனுமதி கொடுத்தேன். நீண்டநாள் மருத்துவமனையிலேயிருந்து, இன்றுதான் சட்டமன்றத்திற்கு திரு. மணி நாடார் வந்திருக்கிறார். அவருக்கு வாழ்த்தைத் தெரிவிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அவருக்கு என்னுடைய வாழ்த்துகள்.

வினா எண் 676, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.



**676—**

## பாப்பாரப்பட்டியில் தொழிற்பேட்டை

***31193—திரு ஜி.கே. மணி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மிகவும் பின்தங்கியுள்ளதால், பாப்பாரப்பட்டியில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டியில் தொழிற்பேட்டை அமைப்பதற்குரிய தொழில் முனைவோர்கள் முன்வர வாய்ப்பு இல்லை என்பது தெரிய வந்துள்ளதால் தற்போது தொழிற்பேட்டை அமைக்கக்கூடிய வாய்ப்பு இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐரோப்பாவின் நோயாளி துருக்கி என்பார்கள். அதேபோல, இந்தியத் திருநாட்டிலே தமிழகத்திலே, குறிப்பாக தருமபுரி மாவட்டம்தான் மிகவும் பின்தங்கிய தொகுதி. அதிலும் என்னுடைய பெண்ணாகரம் தொகுதி படுத்த படுக்கையிலே இருக்கக்கூடிய நோயாளியைப் போல, மிகவும் பின்தங்கிய பகுதியாக இருந்து கொண்டிருக்கிறது. இங்கேயுள்ள சிறு விவசாயிகள் மற்றும் கூலித் தொழிலாளர்கள் எல்லாம், கல் உடைப்பதற்காக, Granite கற்கள், ஜல்லிக் கல் உடைப்பதற்காக அண்டை மாநிலத்திற்கும், நெல், கரும்பு அறுவடை செய்வதற்கு திருச்சி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது துணை வினாவா? நீங்கள் ஒவ்வொரு தடவையும் வினாவைக் கேட்கச் சொன்னால், சொற்பொழிவு ஆற்றுகிறீர்கள். இதை நான் அனுமதிக்க முடியாது. சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அது மிகவும் பின்தங்கிய பகுதியாக இருந்துகொண்டிருக்கிறது. அங்கே, படித்த இளைஞர்கள் எல்லாம் வேலையில்லா திண்டாட்டத்தினாலே, திசை மாறி செல்லக்கூடிய நிலை எல்லாம் இருந்து கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்திலே, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற அந்தக் கோட்பாட்டிற்கு ஏற்ப, நல்லாட்சி செய்து கொண்டிருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே நானும் தொடர்ந்து பலமுறை வலியுறுத்தி வந்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு அதனை ஏற்று, அங்கே தொழில்பேட்டை வழங்குவதாகக்கூட சொல்லி இருந்தார்கள். நான்கு ஆண்டு காலமாக நம்முடைய துறையினுடைய அமைச்சர் அவர்களிடத்திலே கேட்ட நேரத்திலும் வாய்ப்பு அளிப்பதாகச் சொன்னார்கள். இந்த நல்ல தருணத்திலே அந்தப் பகுதியிலே தொழில் உருவாவதற்கு வாய்ப்பு இருக்கிறது. தேசிய நெடுஞ்சாலை, மின்சாரம், அகல இரயில்பாதை எல்லாம் அருகிலே இருக்கின்ற காரணத்தினாலே, அந்தச் சூழ்நிலைகளையெல்லாம் கருத்தில்கொண்டு, அந்தப் பின்தங்கிய—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். நீங்கள் சொற்பொழிவு ஆற்றுகிறீர்கள், உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லிவிட்டீர்கள். அமைச்சர் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) எல்லாம் சொல்லிவிட்டீர்களே, பிறகு என்ன?

**திரு. ஜி.கே. மணி:** பின்தங்கிய பகுதியினுடைய முன்னேற்றத்திற்கு, நடப்பாண்டிலே தொழிற்பேட்டைகளைத் தொடங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல, தருமபுரி மாவட்டத்திலே 24 தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. அதிலே ஏற்கெனவே, முந்தைய ஆட்சிக் காலத்திலே, தருமபுரியிலேயும், ஊத்தங்கரையிலேயும் அறிவித்துவிட்டுச் சென்ற தொழிற்பேட்டைகளை பாதி கட்டியும், பாதி கட்டாமலும் விட்டுவிட்டுச் சென்ற அந்தத் தொழிற்பேட்டைகளை இப்போது முழுமையடைச் செய்து, அவற்றை, விற்பனை செய்வதிலே ஏற்பட்ட பல சிரமங்கள், பலமுறை அறிவிக்கப்பட்டு, விலைகள் குறைக்கப்பட்டு இன்னும் ஒரு தொழில்கூடம்கூட விற்கமுடியவில்லை. ஆனால், அதேசமயத்திலே,





மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் முன்வந்து, தொழில் முனைவோர்கள் தயாராக இருந்தால், நிச்சயமாக, அவர்கள் சொல்லியிருந்த காலகட்டத்திலே, அந்தத் தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கு அரசு முன்வரும்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தருமபுரி மாவட்டத்திற்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்? (குறுக்கீடு) சரி கேளுங்கள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 1989 ஆம ஆண்டு முதலமைச்சராக இருந்தபோதே, எனது தொகுதியிலே 413 ஏக்கர் எடுத்தார்கள். அப்படி எடுத்து, அதற்கு இப்போது தண்ணீர் கொடுத்து, சாலை போட்டுக் கொடுத்தார்கள். ஆனால், அங்கே யாராவது தனிப்பட்டவர்கள் தொழில் தொடங்க வேண்டுமென்று வந்தால் ஒரு ஏக்கர் நிலம் 5 இலட்சம் ரூபாய் என்று சொல்கிறார்கள். ஆகையினால் யாரும் வந்து நிலத்தை வாங்கி தொழில் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, தயவுசெய்து, முதல்வர் அவர்களும், ஊரகத் தொழில் துறை அமைச்சர் மாண்புமிகு பெரியசாமி அவர்களும் விரைவிலே அதுகுறித்து ஆராய்ச்சி செய்து அங்கு ஏதாவது தொழில் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, நம்முடைய முதல்வர் அவர்கள் 1989-90ஆம் ஆண்டில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்பேட்டையை நிலக்கோட்டையில் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, நிலக்கோட்டை நீதிமன்றத்தினுடைய திறப்பு விழாவிலே அறிவித்து, உடனுக்குடன் ஆணையிட்டார்கள். அதைத் தொடர்ந்து, அதற்குரிய பணிகள் தொடங்கப்பட்டன. பணிகள் தொடங்கப்பட்டு, திரும்ப இந்த ஆட்சி வந்த பிறகு அந்தப் பணிகள் இப்போது முடிக்கப்பட்டிருக்கின்றன. TACID மூலமாக எடுக்கப்பட்ட 400 ஏக்கர் நிலத்திலே சிறு தொழிலுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற நிலம் 75 ஏக்கர். சிறு தொழில் துறை மூலமாக அங்கே இருக்கக்கூடிய கூடங்களை விற்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 677, திரு. செங்கை சிவம், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**677—**

**பார்வையற்றவர்களை நியமித்தல்**

***24538—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு அச்சகங்களில் புத்தகம் கட்டும் பணியில் பார்வையற்றவர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன். பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகள் 12-3-1999 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் சந்தித்து தங்களது கோரிக்கைகளை முன் வைத்தனர். அப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களிடம் புத்தகம் கட்டும் பயிற்சி முடித்த 14 பார்வையற்றவர்கள் 7 அரசு அச்சகங்களில் தற்காலிகப் பணி நியமனம் செய்யப்படுவார்கள் என்று அறிவித்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக நேர்காணலுக்கு அழைக்கப்பட்ட புத்தகம் கட்டுனர் பயிற்சி முடித்த 40 கண் பார்வையற்றவர்களில் 14 பேருக்கு 10-3-2000 அன்று அரசு அச்சகங்களில் இளநிலை புத்தகம் கட்டுனர் பணி வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்ற அதேநேரத்தில், கார்கில் போரிலே உயிர் துறந்த படைவீரர்கள் குடும்பங்களுக்கு எவ்வளவோ சலுகைகள் அளித்து வாழ்வளித்துக் கொண்டிருக்கிற நம்முடைய கலைஞர் அவர்கள் முன்னாள் படைவீரர்களுக்கு



இத்துறையிலே முன்னுரிமை அளித்து சிறப்பு நியமனம் செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்பு அளிக்கப்படுவதைப்போல, இந்தத் துறையிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை அடிப்படையிலே, குறிப்பாக நலிவுற்ற பிரிவினருக்கு வேலைவாய்ப்பை வழங்கி வருகிறார்கள். அதேபோன்று, முன்னாள் படைவீரர்கள் (இராணுவத்திலே இருந்து ஓய்வுபெற்றவர்கள்) 30 பேருக்கு இந்தத் துறையின் மூலம் கலைஞர் அவர்களுடைய அன்புக் கட்டளைக்கு இணங்க வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 678, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**678—**

**மாதாகோட்டையில் கால்நடை மருத்துவமனை**

***29306—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், மாதாகோட்டை ஊராட்சியில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதாகோட்டை கிராமம் தஞ்சை நகரிலிருந்து 5 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. இனாத்துக்காம்பட்டி, துலுக்கம்பட்டி, வஸ்தாசாவடி, மாப்பிள்ளைநாயக்கன்பட்டி ஆகிய பல்வேறு கிராமங்கள் இதைச் சூழ்ந்து இருக்கின்றன. நகரத்தை ஒட்டி இருக்கின்ற இடங்களிலே தாய்மார்கள் பசுமாடுகளை வாங்கி, நல்லபடியாக வளர்த்து பால்

கறக்கிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் ஒரு கால்நடை துணை மருத்துவ நிலையத்தையாவது அரசு ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், மாதாகோட்டை ஊராட்சியில் கால்நடை மருந்தகமோ அல்லது கால்நடை கிளை நிலையமோ ஏதும் இல்லை என்பது உண்மைதான். மாதாகோட்டை கிராமத்திற்கு அருகில் 5 கிலோமீட்டர் தூரத்தில் வல்லம் கால்நடை மருந்தகமும், 2 கிலோமீட்டர் தூரத்தில் நாஞ்சிக்கோட்டை கால்நடை கிளை நிலையமும் தற்போது செயல்பட்டு வருகின்றன. மேற்படி கால்நடைக் கிளை நிலையங்கள் மூலம் அப்பகுதி கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அந்தப் பகுதி மக்கள் தங்கள் கால்நடைகளுக்குத் தேவையான சிகிச்சை வசதியை மேற்குறிப்பிட்ட கால்நடை மையங்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மாதாகோட்டை கிராமத்தில் கால்நடை மருந்தகமே இல்லாத சூழ்நிலையில் அங்கு முதன்முதலாகக் கால்நடை மருத்துவமனையை அமைக்க வாய்ப்பு ஏதும் இல்லை. என்றாலும்கூட, எதிர்வரும் ஆண்டுகளில் நிதி நிலையையும், தகுதியையும் கருத்தில்கொண்டு பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில், செஞ்சேரிமலையில், மலையடிபாளையத்தில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் தொகுதியைப்பற்றிக் கேட்டால், பதில் சொல்வதற்கு அமைச்சரிடம் தகவல் இருக்க வேண்டுமல்லவா?

**திரு. ப. மோகன் கந்தசாமி:** கால்நடை மருந்தகம் பற்றித்தான் கேட்கப்போகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கால்நடை மருந்தகம் பற்றித்தான் நானும் சொல்லுகிறேன். மூலவினா தஞ்சை மாவட்டம் மருந்தகம் பற்றியது. ஆனால் துணைக் கேள்வி உங்கள் தொகுதியைப்பற்றிக் கேட்கிறீர்கள். சரி, கேளுங்கள்.

*முற்பகல் 10-25*

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலையடிபாளயத்திலே கால்நடை பகுதி நேர மருத்துவமனை



ஒன்று இருக்கிறது. அங்கே மருத்துவர்கள் சரியாக வருவதில்லை. சுற்று வட்டாரத்தில் ஏராளமான கிராமங்கள் இருக்கின்றன. அங்கே மிகப் பெரிய புகழ்பெற்ற கோயில் இருக்கிறது. ஆகவே அந்த மருத்துவமனையை முழு நேர மருத்துவமனையாக ஆக்கினால் அங்கே வருகின்ற கிராம மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். பொதுவாக கிராமத்திலே 'ஆடு மேய்த்தாற் போலவும் இருக்கும்; அண்ணனுக்குப் பொண்ணு பார்த்தாற் போலவும் இருக்கும்; என்று சொல்வார்கள். ஆகவே அங்கு வந்து மாடுகளுக்குச் சிகிச்சை செய்துகொண்டு, அப்படியே மலை மேலே ஏறி முருகனை தரிசிப்பதற்கும் ஏதுவாக இருக்கும். எனவே, அந்தப் பகுதி நேர மருத்துவமனையை முழு நேர மருத்துவமனையாக ஆக்கித் தர அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பகுதி நேர மருத்துவமனைகளுக்கு கால்நடை உதவி மருத்துவர்களோ, மருத்துவர்களோ செல்வதில்லை. பகுதி நேர மருத்துவமனைகள், கிளை நிலையங்கள், பார்வைக் கிளை நிலையங்களில் எல்லாம் கால்நடை ஆய்வாளர்கள் நிலை 1, 2 என்ற அடிப்படையிலேதான் பணியாற்றுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதியிலே ஏராளமான கால்நடைகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த சிறப்புக் கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு முழுவதும் உள்ள, அனைத்துப் பகுதிகளிலும் உள்ள கால்நடைகளுக்கு எல்லாம் சிகிச்சை முகாம்கள் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, அதன் மூலமும் அங்கு சிகிச்சை அளிக்க வாய்ப்பு இருக்கிறது. எதிர்காலத்திலே அவர் குறிப்பிட்ட அந்த இடத்தைப்பற்றி, நிதி நிலைமை, தகுதியின் அடிப்படையிலே பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 679, திரு. சீ.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**679—**

**வேலாயுதம்பாளையத்தில் கால்நடை மருத்துவமனை**

***31011—திரு. சீ. வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 17

(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம், வேலாயுதம்பாளையத்தில் புதிய கால்நடை மருத்துவமனை திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியத்தில் வேலாயுதம்பாளையத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும். வேலாயுதம்பாளையத்திலிருந்து வடமதுரைக்குச் சுமார் 10 கிலோமீட்டர் தூரம் இருக்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் நிறைய கால்நடைகள் வைத்திருக்கிறார்கள். விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள். அமைச்சரவர்கள் மீண்டும் பரிசிலனை செய்து அங்கு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர வேண்டும். இல்லையென்றால், துணை நிலையமாவது அமைத்துத் தர அமைச்சரவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வேலாயுதம்பாளையம் கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்குக் கால்நடை மருந்தகமோ அல்லது கால்நடை கிளை நிலையமோ இல்லை. எனினும், வடமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் வடமதுரை, அய்யலூர், ஆகிய இரண்டு இடங்களில் கால்நடைக் மருந்தகங்களும், பாடியூர், காணப்பாடி, தென்னப்பட்டி, வள்ளிபொம்மன்பட்டி ஆகிய நான்கு இடங்களில் கால்நடைக் கிளை நிலையங்களும் அவற்றுக்கு முறையே குளத்தூர், வா.சித்தூர், ஆண்டிப்பட்டி, வேல்வார்கோட்டை ஆகிய நான்கு இடங்களில் பார்வை கிளை நிலையங்களும் கால்நடைகளின் சிகிச்சைப் பணிகளைத் தற்போது மேற்கொண்டு வருகின்றன. வினாவில் குறிப்பிடப்படுகின்ற வேலாயுதம்பாளையம் கிராமத்தைத் தலைமையிடமாகக்கொண்டு, ஒரு நடமாடும் கால்நடை மருந்தகம் வாரத்தில் மூன்று நாட்கள் தற்போது



2000 மே 17]

செயல்பட்டு, அக்கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் சிகிச்சைத் தேவைகளை மேற்கொண்டு வருகின்றது. வேலாயுதம்பாளையம் கிராமத்தில் நடமாடும் கால்நடை மருந்தகம் செயல்பட்டுவருவதாலும், மேற்படி கிராமத்தில் கால்நடை மருந்தகமே இல்லாத நிலையில், முதன்முதலாகக் கால்நடை மருத்துவமனை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமானால் 40 கால்நடைகளுக்குக் குறையாமல் சிகிச்சைக்கு வர வேண்டும். அந்த நிலைகள், தகுதி, நிதி நிலைமை அடிப்படையில், எதிர்காலத்தில் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. சண்முகம்.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலை காரணமாக எந்த ஒரு மருத்துவமனையையும் நிலை உயர்த்துவதோ அல்லது புதியதாக ஆரம்பிப்பதற்கான வாய்ப்போ இல்லை என்றுதான் அமைச்சரவர்கள் இந்த ஆண்டு முழுவதும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். சிறப்புக் கால்நடை பாதுகாப்புத் திட்ட சிகிச்சையின் மூலமாகப் பயனடையலாம் என்றும் சொல்கிறார்கள். ஒவ்வோர் ஒன்றியத்திலும் ஒரே ஒரு கிராமத்தில் மட்டும்தான் அது மாதம் ஒரு முறை நடத்தப்படுகிறது. குறைந்தபட்சம் இந்த முகாம்களையாவது ஒவ்வோர் ஒன்றியத்திலும் வாரம் ஒரு முகாம் நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்புக் கால்நடை பாதுகாப்புத் திட்ட சிகிச்சை முகாம்கள் ஊராட்சி ஒன்றியங்கள் முழுவதும், ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலேயும் மாதந்தோறும், ஆண்டு முழுவதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. தொலைதூர கிராமங்களில் கால்நடை மருந்தகமோ அல்லது மருத்துவமனையோ இல்லாத பகுதிகளில் இருக்கின்ற கால்நடைகளுக்கு, அவற்றின் சிகிச்சைத் தேவைகளை நிறைவு செய்கின்ற முறையிலேதான் இந்தத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இதற்காக சுமார் ரூ.2½ கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஆண்டு முழுவதும் தொடர்ந்து இது நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 680. திரு. க. மணிவர்மா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

[2000 மே 17

**680—**

## திருவண்ணாமலையில் விடுதி

***15897—திரு க. மணிவர்மா:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையில் சுற்றுலாத்துறை மூலம் உணவு மற்றும் தங்கும் விடுதி தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலையில் மத்திய அரசு நிதி உதவியுடன் உணவகத்துடன் கூடிய தங்கும் விடுதி ஒன்று கட்டப்பட உள்ளது.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலைக்கு பல மாநிலங்களிலிருந்து தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்களும், சுற்றுலாப் பயணிகளும் வருகை தருகின்றார்கள். அதுமட்டுமல்லாமல், ஆண்டுதோறும் தொடர்ந்து ஆயிரக்கணக்கான வெளிநாட்டினரும் திருவண்ணாமலைக்கு வருகை தருகின்றார்கள். அவர்கள் அங்கேயே தங்குகிறார்கள். சிறந்த முறையிலே உயர்தர ஹோட்டலும் நவீன முறையிலே தங்குவதற்குண்டான விடுதியும் அரசு சார்பிலே கட்டுவதற்குண்டான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தாலும், அது விரைவாக நடைபெறாததற்கு என்ன காரணம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் விரைவாகக் கட்டி முடிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலைக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு, பக்தர்களுக்கு வசதியாக யாத்ரி நிவாஸ் என்ற திட்டத்தில் தங்கும் விடுதிக் கட்டடம் கட்டுவதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு சுற்றுலாத் துறைக்கு மாற்றப்பட்டது. இத்திட்டத்திற்கு, மத்திய அரசின் நிதி உதவி 39.10 இலட்சம் ரூபாயும், மாநில அரசு நிதியாக 5 இலட்சம் ரூபாயும் மொத்தம் 44.10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி, கட்டுவதற்கான திட்டங்கள் தீட்டப்படுகின்ற நேரத்தில், அங்கு வருகின்ற பக்தர்கள் சார்பாக நீதிமன்றத்திலே ஒரு தடை உத்தரவு வாங்கப்பட்டு அந்தத் தடை உத்தரவை நீக்கக்கூடிய அளவுக்கு துறை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தடை உத்தரவு நீக்கப்பட்டவுடன் கட்டுகின்ற பணி ஆரம்பிக்கப்படும்.



2000 மே 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.பி. சிங்காரவேலு.

**திரு. வி.பி. சிங்காரவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வால்பாறை தொகுதி கடந்த ஆண்டு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால் சுற்றுலாஸ்தலமாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அது இந்திய சுற்றுலா வரைபடத்திலும், தமிழ்நாடு சுற்றுலா வரைபடத்திலும் இடம் பெற்றிருக்கிறது. அப்படிப்பட்ட என்னுடைய வால்பாறை தொகுதியில் டாப்ஸ்லிப், ஆழியாறு அணை, சோலையாறு அணை, நீராறு அணை, சின்னக்கல்லாறு அணை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் கேளுங்கள். கேள்வியைக் கேட்காமல் நீங்கள் வரிசையாக பட்டியல் படித்துக்கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. வி.பி. சிங்காரவேலு:** அப்படி பல்வேறு அணைகள் இருக்கின்றன. அதைப்போல அங்கே குரங்கு அருவி என்ற ஒரு சிறப்பான அருவி இருக்கிறது. நம்முடைய மீன் வளத் துறையின் சார்பிலும் இப்பொழுது அங்கே மீன் வளர்ச்சி அருங்காட்சியகம் அமைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட வால்பாறை சுற்றுலா மையத்திலே நம்முடைய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் individual cottages என்று சொல்லக்கூடிய இல்லங்கள் நம்முடைய சுற்றுலாப் பயணிகள் தங்கக்கூடிய அளவிற்கு அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையைப் பொறுத்தமட்டில் அங்கு அதிகமாக சுற்றுலாப் பயணிகள் கடந்த 4 ஆண்டுகளாக வருகை தந்துகொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய ஆர்வத்தின் அடிப்படையில் அவரது கோரிக்கை வருங்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2000 மே 17

4—

## பள்ளிக் கட்டடப் பணி

**வினா 24556—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* அரசுப் பள்ளிகளில் கட்டடம் கட்டும்பொழுது ஒரு வகுப்பறை மற்றும் இரண்டு வகுப்பறைகளுக்கென தனித்தனி பிளாக்காக கட்டடம் கட்டுவதால் பள்ளிக்குத் தேவையான வெற்றிடங்கள் குறைவதைத் தவிர்க்க பின்வரும் காலங்களில் இரண்டு மாடிக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஏதுவாக அஸ்திவாரப் பணிகளை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* அரசுப் பள்ளிகளில் தற்பொழுது கட்டடங்கள் பொதுப் பணித் துறை மூலம் பள்ளியிலுள்ள இடவசதி மற்றும் மண்தன்மையினை ஆராய்ந்து வருங்காலத்தில் ஏற்படும் கட்டட விஸ்தரிப்புகளைக் கருத்தில் கொண்டும், குறைந்தபட்சம் இருமாடிகளை ஏற்கும் வண்ணமும் வடிவமைக்கப்பட்டு, அரசின் ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

5—

## உறுதித்தன்மை சான்றிதழ்

**வினா 31691—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தனியார் பள்ளிக் கட்டடங்களின் உறுதித்தன்மை சான்றிதழ் தனியார் பொறியியல் வல்லுநர்களிடமிருந்து வாங்குவதற்கு அனுமதி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?



2000 மே 17]

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தனியார் பள்ளிக் கட்டடங்களின் உறுதித் தன்மை சான்றிதழ் மாவட்ட ஆட்சித் தலைவர் பட்டியலில் இடம் பெற்றுள்ள உரிமம் பெற்ற தனியார் பொறியியல் வல்லுநர்களிடமிருந்து வாங்குவதற்கு அரசாணை (நிலை) எண் 393 பள்ளிக் கல்வி, நாள் 11-9-1997-ல் அரசு வழிவகை செய்துள்ளது.

6—

## வருங்கால வைப்பு நிதி

**வினா 31835—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் அல்லாத பிறபணியாளர்களுக்கும், வருங்கால வைப்பு நிதி பிடித்தம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆமெனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தமிழ்நாட்டிலுள்ள மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பிற பணியாளர்களுக்கும் வருங்கால வைப்பு நிதி பிடித்தம் செய்யப்படுவது ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது.

7—

## நூலகத்திற்குக் கட்டடம்

**வினா 32231—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருநெல்வேலி மாவட்டம் சுந்தரபாண்டியபுரம் பொது நூலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* புதிய கட்டடம் எப்போது கட்டப்படும்?

[2000 மே 17

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுந்தரபாண்டியபுரம் பொது நூலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டத் தேவையான நிலம் பெறப்படவில்லை. நிலம் இலவசமாகப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) காலிமனை கிடைக்கப்பெற்றதும் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

8—

**படப்பிரிவு**

**வினா 13805—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை வட்ட மருத்துவமனையில் 300 எம்.ஏ. ஊடுகதிர் படப்பிரிவு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை வட்ட மருத்துவமனையில் தற்பொழுது 50 எம்.ஏ. திறனுடைய ஊடுகதிர் படப்பிரிவு (X-Ray Unit) சிறப்பான முறையில் இயங்கி வருகிறது. 300 எம்.ஏ. ஊடுகதிர் படப்பிரிவு அமைப்பதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

9—

**மின் அலுவலகம்**

**வினா–13913 திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 17]

(அ) திருநெல்வேலி மாவட்டம் குற்றாலம் பகுதியில் மின்சார வாரிய அலுவலகம் அமைக்கத் தேவையான இடத்தை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் பகுதியில் மின்சார வாரிய அலுவலகம் அமைக்கத் தேவையான இடத்தினை குற்றாலம் பேரூராட்சியிடமிருந்து பெறுவதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் தேவையான நடவடிக்கை எடுத்து வருகிறது.

10—

**மருத்துவமனை**

**வினா 23775—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குற்றாலத்தில் உள்ள பேரூராட்சி மருந்தகத்தை அரசு மருத்துவமனையாக மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குற்றாலம் பேரூராட்சி மருந்தகத்தை அரசு மருத்துமனையாக மாற்றியமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

11—

**கட்டட வசதி**

**வினா 23777—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் ஓமியோபதி வெளி நோயாளி பிரிவு கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**12—**

**மின் வட்டம்**

வினா 23786—**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மின் விநியோக வட்டத்தை இரண்டாகப் பிரித்து தென்காசியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மின் விநியோக வட்டத்தை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**13—**

**மின் மருத்துவமனை**

**வினா 23794—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தமிழ்நாடு மின்சார வாரிய அனைத்து மின் விநியோக வட்ட தலைமை இடங்களிலும் மின் வாரிய மருத்துவமனைகள் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு மின்வாரியத்தில் மொத்தம் 29 இடங்களில் மின் வாரிய மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன. நிதி வசதியின்மை காரணமாக அனைத்து மின் பகிர்மான வட்ட தலைமையிடங்களிலும் மருத்துவமனை அமைக்க தற்சமயம் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**14—**

**குடிநீர் வசதி**

**வினா 23951—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சா் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி மாவட்ட தலைமை மருத்துவமனை புதிய கட்டட வளாகத்தில் சாலை வசதி, வடிகால் வசதி மற்றும் குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி அரசு தலைமை மருத்துவமனை புதிய கட்டட வளாகத்தில் பொதுப் பணித் துறையினர் மூலம் சாலை வசதி, வடிகால் வசதி மற்றும் குடிநீர் வசதி ஆகியவை செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

[2000 மே 17

15—

### மருத்துவமனை

**வினா 23972—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையை பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனையாக மாற்றம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி அரசு தலைமை மருத்துவமனையை பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனையாக மாற்றும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

16—

### மருத்துவமனையை விரிவுபடுத்துதல்

**வினா 29002—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை வட்ட எல்லை விரிவுப்படுத்தப்பட்டு உள்ளதால் வட்ட மருத்துவமனையை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**



2000 மே 17]

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

17—

### சுற்றுச்சுவர்

**வினா 29023—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்ட மருத்துவமனை வளாகத்திற்கு சுற்றுச்சுவர் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை அரசு மருத்துவமனையில் முன்பக்கம் மட்டும் சுற்றுச்சுவர் உள்ளது. இதர மூன்று பக்கங்களில் சுற்றுச்சுவர் இல்லை. இந்த மருத்துவமனையில் இதர மூன்று பக்கங்களிலும் சுற்றுச்சுவர் அமைப்பது சம்பந்தமாக கருத்துரு இனிவரும் காலங்களில் பகுதி-2 திட்டத்தின்கீழ் பரிசீலிக்கப்படும்.

18—

### சித்த மருத்துவமனை

**வினா 29025—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் சித்த மருத்துவமனை தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் சித்த மருத்துவப்பிரிவு தொடங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* இக்கேள்விக்கு இடமில்லை.

19—

**மின்மாற்றி**

**வினா 32067—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருநெல்வேலி மாவட்டம், அரியப்புரம் ஊராட்சி, நாடாக்கண்ணுபட்டியில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* விரைவில் நிறைவேற்றப்படும்.

20—

**படுக்கை வசதி**

**வினா 32074—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ)* திருநெல்வேலி மாவட்டம், அரியப்புரத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள மகப்பேறு பிரிவில் 10 படுக்கை வசதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருநெல்வேலி மாவட்டம், அரியப்புரத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒப்பளிக்கப்பட்ட ஆறு படுக்கை வசதிகள் உள்ளன. இந்த நிலையத்தில் படுக்கை வசதிகள் போதுமான அளவில் உள்ளதால், தற்போது கூடுதல் படுக்கைகள் ஏற்படுத்த சாத்தியக்கூறுகளில்லை.

21—

**ஆலய நிலங்களுக்கு விதிவிலக்கு**

**வினா 24528—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டத்தின் ஆய்வு வரம்பிலிருந்து ஆலய நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* இக்கேள்வி எழவில்லை.

**22—**

**உபரி நிலங்கள்**

**வினா 25370—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் உபரி நிலங்கள் ஏதுவும் கையகப்படுத்தப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தென்காசி சட்டப் பேரவை தொகுதிக்கு உள்ளடங்கிய 13 கிராமங்களில் 155.89 ஏக்கர் உபரி நிலங்கள் நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் 16 தனிநபர்களிடமிருந்து கையகப்படுத்தப்பட்டுள்ளன.

**23—**

**வருவாய் கிராமங்கள்**

**வினா 25373—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், பாட்டாக்குறிச்சி, திருச்சிற்றம்பலம், சுந்தரபாண்டியபுரம் வருவாய் கிராமங்களை தென்காசி பிர்காவுடன் இணைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.



**24—**

**குறுவட்டத்துடன் இணைத்தல்**

**வினா 29815—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், திருச்சிற்றம்பலம், பாட்டாக்குறிச்சி ஊராட்சி, சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சி பகுதியை தென்காசி குறுவட்டத்துடன் இணைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**25—**

**கணிப்பொறிமயமாக்குதல்**

**வினா 32018—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்திலுள்ள அனைத்து வட்டங்களிலும் உள்ள நிலப் பதிவுருக்களை கணிப்பொறிமயமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நிலப்பதிவுருக்களை கணினிமயமாக்கும் பணி, தற்போது மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகிறது. இப்பணி விரைவில் முடிக்கப்படும்.

**26—**

**வருவாய் கிராமம்**

**வினா 32072—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், அரியப்பபுரம் கிராமத்தை 'தனி வருவாய் கிராமம்' ஆகப் பிரித்து செயல்பட அரசின் அனுமதி எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

அரியப்பபுரம் கிராமத்தை தனி வருவாய் கிராமமாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**27—**

**நில மாற்றம்**

**வினா 32398—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்ட சுரண்டை 2-வது கிராமத்தில் சர்வே எண் 962/1-ல் உள்ள 0.98 ஏக்கர் நிலத்தை நில மாற்றம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை கிராமம் புல எண் 962 நத்தம் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் புதிய உட்பிரிவு புல எண் 962/5-ல் 0.20 சென்ட் நிலம் தீயணைப்பு நிலையம் அமைக்க தீயணைப்புத் துறைக்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறைகள் ஜி4/63924/99, நாள் 3-1-2000-ன்படி முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.





**28—**

**நீர்தேக்கத் தொட்டி**

**வினா 14658—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், கல்லூரணி கிராமம், பனையடிப்பட்டியில் கட்டப்பட்டுள்ள நீர்த்தேக்கத் தொட்டிக்கு குடிநீர் வழங்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், குடிநீர் வழங்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தற்போது பனையடிப்பட்டியில் உள்ள நீர்த்தேக்கத் தொட்டிக்கு பரியூர் சத்திரம் அருகில் அமைக்கப்பட்ட ஆழ்துளைக் கிணற்றிலிருந்து நீரேற்றப்பட்டு, தினசரி 30,000 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**29—**

**கருத்தாய்வுக் கூடம்**

**வினா 21719—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் குழு கூட்டங்கள் நடத்துவதற்கு ஏதுவாக அனைத்து வசதிகளுடன் கூடிய (Conference Hall) கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

[2000 மே 17

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நடப்பு நிதி ஆண்டிற்குள் பணி முடிக்கப்படும்.

**30—**

**குற்றாலத்தில் அரங்குகள்**

**வினா 22129—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் பேரூராட்சியில் ஏழை, எளிய மக்கள் தங்க வசதியாக சாமான்களை பத்திரப்படுத்த வசதியாக லாக்கருடன்கூடிய அரங்குகள் கட்டி குறைந்த தினசரி வாடகையில் பாய், தலையணை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குற்றாலம் பேரூராட்சியில் ஏழை, எளிய மக்கள் தங்க வசதியாக, சாமான்களை பத்திரப்படுத்த இரண்டு தளங்கள் கொண்ட லாக்கருடன்கூடிய அறைகள் மற்றும் படுக்கைக் கூடம் அடங்கிய 'அருவி இல்லம்' ஒன்று நிறுவப்பட்டு, பேரூராட்சியால் தற்போது பராமரிக்கப்பட்டு வருகின்றது.

**31—**

**புதிய குடிநீர்த் திட்டம்**

**வினா 22247—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 17]

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழ்ப்பாவூர் ஒன்றியம், சடையப்பபுரம் கிராமத்தில் குடிநீர் உவர் நீராக இருப்பதும், மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்து இருப்பதும் அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அங்கு புதிய குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழ்ப்பாவூர் ஒன்றியம், சடையப்பபுரம் கிராமத்தில் ஊராட்சி ஒன்றியத்தால் 1978 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்ட குடிநீர்த் திட்டத்தின் திறந்தவெளி கிணற்றின் நீராதாரம் நாளடைவில் உவர் நீராக மாறிவிட்டது. மேற்காணும் கிராமத்தில் உள்ள மேல்நிலைத் நீர்த்தேக்கத்தொட்டியில் தற்போது கசிவு ஏற்பட்டுள்ளது.

(ஆ) 1999-2000 ஆம் ஆண்டில் சடையப்பபுரம் கிராமத்தில் புதிய குடிநீர்த் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

**32—**

**குடிநீர் வசதி**

**வினா 22249—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், மேலப்பாவூர் ஊராட்சியை தாமிரபரணி குடிநீர்த் திட்டத்தில் சேர்த்து குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்று நீரை நீராதாரமாகக் கொண்ட தென்காசி நகராட்சி குடிநீர் அபிவிருத்தி

[2000 மே 17

திட்டத்தில் கீழப்பாவூர் ஒன்றியத்திலுள்ள மேலப்பாவூர் ஊராட்சி சேர்க்கப்படவில்லை. கடையம் மற்றும் கீழப்பாவூர் ஒன்றியங்களிலுள்ள கிராம மக்களுக்கு தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக்குடிநீர்த் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் மேலப்பாவூர் ஊராட்சி சேர்க்கப்பட்டுள்ளது.

(ஆ) மேற்கூறிய கூட்டுக் குடிநீர்த் திட்ட ஆய்வுப் பணிகள் நடப்பு நிதி ஆண்டில் (1999-2000) முடிக்கப்பட்டு திட்ட முன்னோடி வாரிய ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன் பணிகள் தொடங்கப்படும்.

**33—**

**குடிநீர் வழங்கல்**

**வினா 24790—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை நகராட்சி, புதூர், மேலகரம், இலஞ்சி, குற்றாலம் பேரூராட்சிகள், வல்லம், சுமைதீர்த்தபுரம், காசிமேஜர்புரம், பிரானூர் ஊராட்சிகளுக்கு தாமிரபரணி நதியிலிருந்து குடிநீர் வழங்க கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு செங்கோட்டை நகராட்சி, மேலகரம் பேரூராட்சி மற்றும் 3 பேரூராட்சிகள் பயனுறும் வகையில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் முழுவதும் முடிக்கப்பட்டு ரூ.22.75 கோடிக்கு திட்ட முன்னோடி தயாரிக்கப்பட்டு, மண்டல தொழில் நுட்பக் குழுவில் விவாதிக்கப்பட்டு, சில திருத்தங்கள் செய்யப்படவுள்ளன. திருத்தங்கள் செய்த பிறகு, வாரியம் மற்றும் அரசின் ஒப்புதல் பெற்று திட்டப் பணிகள் தொடங்கப்பட உள்ளன. 2002 ஆம் ஆண்டின்



2000 மே 17]

மத்தியில் இத்திட்டத்தை செயலுக்குக் கொண்டு வர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**34—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

**வினா 24793—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி மேலகரம் கூட்டுக் குடிநீர்த் திட்ட, கோடைகால நீர்த்தேக்கத்தின் கொள்ளளவைப் பெருக்கும் பொருட்டு மண் திட்டுகளை ஒவ்வொரு வருடமும் ஒரு குறிப்பிட்ட அளவு எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி மேலகரம் கூட்டுக் குடிநீர்த் திட்ட, கோடைகால நீர்த்தேக்கத்தின் கொள்ளளவைப் பெருக்கும் பொருட்டு ஒவ்வொரு நிதியாண்டிலும், அந்தத் திட்டத்தின் வருடாந்திர பராமரிப்பு மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒவ்வொரு வருடமும் ஒரு குறிப்பிட்ட அளவு மண் திட்டுகள் அகற்றப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையில் கடந்த 1998-99ஆம் ஆண்டில் ரூ.3,48,000/- நிதி ஒதுக்கீடு செய்து மண் திட்டுகள் அகற்றப்பட்டன.

(ஆ) 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.1,00,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது கோடைகால நீர்த்தேக்கத்தில் சேறு அதிகமாக உள்ளதால் கடந்த பிப்ரவரி, மார்ச் மாதங்களில் மேற்கண்ட பணி செய்யப்பட்டது. அத்துடன் ஒவ்வொரு வருடமும் மேற்படி திட்டத்திற்கான வருடாந்திர பராமரிப்பு மதிப்பீட்டில் மேற்கண்ட பணிக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மண் திட்டுகள் அகற்றும் பணி படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

[2000 மே 17

35—

## கடைகள்

**வினா 29848—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை நகராட்சி, வட்டாட்சியர் அலுவலகம் எதிர்புரம் காலியாகவுள்ள இடத்தில் செங்கோட்டை நகராட்சி மூலமாக ஐ.யு.டி.பி. திட்டத்தின்கீழ் கடைகள் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை நகராட்சிப் பகுதியில் கடைகள் கட்டுவதற்கு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நிதியுதவி கிடைக்காததால், அத்திட்டத்தைச் செயல்படுத்த இயலவில்லை.

36—

## புதிய குடிநீர்த் திட்டம்

**வினா 29962—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், திப்பணம்பட்டி ஊராட்சிக்கு புதிய குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**



2000 மே 17]

(அ) மற்றும் (ஆ) திப்பணம்பட்டி ஊராட்சியில் மொத்தம் 8 குடியிருப்புகள் அடங்கியுள்ளன. அவற்றில் 5 குடியிருப்புகளுக்கு (திப்பணம்பட்டி, ஆரியங்காவூர், இராமநாதபுரம், வன்னிய சுந்தரபுரம், சென்னாத்தி புதுக்குளம்) நடப்பு நிதியாண்டில் (1999-2000) நீராதாரம் தோற்றுவிக்கப்பட்டு, போதிய நீராதாரம் கிடைக்கப் பெற்றபின் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு திட்டம் நிறைவேற்றப்படும்.

37—

## கிணறு

**வினா 31020—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி பேருந்து நிலையத்திலுள்ள பொதுமக்கள் பயன்படுத்தி வந்த கிணறு தற்பொழுது மூடப்பட்டுவிட்டதை அரசு அறியுமா?

(ஆ) கிணற்றை மூடுவதற்கு அரசிடம் முன் அனுமதி பெறப்பட்டதா?

(இ) அதைப் பற்றிய விவரமென்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) குறிப்பிட்ட கிணறு நீர் ஊற்று இன்றி பல வருடங்களாக பொதுமக்களின் உபயோகத்தில் இல்லாமல் கிணற்றின் கட்டுமானங்கள் தானாகவே தூர்ந்துபோய்விட்டன. எனவே, அதற்கு அருகிலேயே தனியாக ஓர் ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டு, தற்பொழுது பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

38—

## குடிநீர்த் திட்டம்

**வினா 30112—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், பூவனூர் கிராமத்திற்குப் புதிய குடிநீர்த் திட்டம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம் திப்பணம்பட்டி ஊராட்சியைச் சார்ந்த பூவனூர் கிராமத்தின் மக்கள் தொகை 1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 1,300 ஆகும். இக்கிராமத்திற்கு இரண்டு ஆழ்குழாய்க் கிணறுகளை நீராதாரமாகக்கொண்டு 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, பகிர்மானக் குழாய் மற்றும் பொது நல்லி அமைப்புடன் கூடிய குடிநீர்த் திட்டம் 1989-90 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டு பயனில் உள்ளது இத்திட்டம் ஊராட்சி மன்றத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் தற்போது மாவட்ட ஊராட்சி நிர்வாக நிதியின்கீழ் இக்கிராமத்தின் ஒரு பகுதியாகிய வீரபுத்திர நாடானூரில் ஒரு தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி 7,500 லிட்டர் கொள்ளளவில் கட்டப்பட்டு திறந்த வெளிக் கிணற்றிலிருந்து நீர் ஏற்றப்பட்டு பயனுக்குப் கொண்டு வரப்பட்டுள்ளது. இக்கிராமத்திற்குப் புதிய குடிநீர்த் திட்டம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**39—**

## சாலையைச் சீர்செய்தல்

**வினா 30912—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி நகராட்சி, மவுண்ட் ரோடு சாலை மிகவும் பழுதடைந்திருப்பதால், அவ்வழியாக ஒரு வழிப்பாதையில் பேருந்துகள் இயக்க முடியாமல் இருப்பது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைச் சீர்செய்ய நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா?



(இ) எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) தென்காசி நகராட்சி மவுண்ட்ரோடு சாலையில் தார்தளம் அமைக்கும் பணி முடிவு பெற்றுவிட்டது.

**40—**

## பூங்காவை நவீனப்படுத்துதல்

**வினா 33621—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை முத்துசாமி பூங்காவை நவீனப்படுத்தி சுற்றுலாப் பயணிகளைக் கவர அரசு முயற்சிகள் மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை நகராட்சிப் பகுதியில் முத்துசாமி பூங்காவை முழுமையாக நவீனப்படுத்தத் தேவையான நிதி வசதி நகராட்சியிடம் இல்லாததால், நிதி நிலைக்கு ஏற்ப அவ்வப்போது பராமரிப்புப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

**41—**

## நகராட்சி எல்லை

**வினா 33932—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* செங்கோட்டை நகராட்சி எல்லையை விரிவுபடுத்துவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* இக்கேள்விக்கு இடமில்லை.

**42—**

**வேளாண்மை பண்ணை**

**வினா 32545—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், வடகரை கிராமத்தில் உள்ள தென்னை நாற்றுப் பண்ணை மற்றும் எண்ணெய் வித்துப் பண்ணை ஆகியவற்றை செங்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* திருநெல்வேலி மாவட்டம், வடகரை பகுதியில் இரண்டு தென்னை நாற்றுப் பண்ணைகள் இயங்கி வருகின்றன. ஒன்று வடகரை கிராமத்தில் வேளாண்மைத் துறை வசம் உள்ள தென்னை நாற்றுப் பண்ணையாகும். மற்றொன்று வடகரை கிராமத்தில் குத்தகை நிலத்தில் இயங்கி வந்த எண்ணெய்வித்துப் பண்ணையுடன் கூடிய தென்னை நாற்றுப் பண்ணையாகும். இதில், தென்னை நாற்றுப் பண்ணை



செங்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் செயல்பட வேளாண்மை இயக்குநரால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

*(ஆ)* பண்ணையின் கட்டுப்பாட்டினை மாற்றும் செயல் திட்டம் விரைவில் முடிக்கப்படும்.

**43—**

**கூடுதல் வசதி**

**வினா 25421—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* குற்றாலம் சர்க்கியூட் உறவுஸில் கூடுதலாக அறை கட்டி விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* குற்றாலம் சர்க்கியூட் உறவுஸில் கூடுதலாக அறைகள் கட்டி விரிவுபடுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

**44—**

**ரப்பர் கழகம்**

**வினா 26287—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* அரசு ரப்பர் கழகம் *1997-98* ஆம் ஆண்டு நட்டத்தில் இயங்கியுள்ளது குறித்து அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2000 மே 17

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) 1997-98 ஆம் ஆண்டைய கணக்குகள்படி ரூ.352.54 இலட்சம் நட்டம் ஏற்பட்டுள்ளது.*

**45—**

**கிராம்பு தோட்டம்**

**வினா 26288—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 1997-98 ஆம் ஆண்டில் அரசு ரப்பர் கழகத்திற்குச் சொந்தமான கிராம்பு தோட்டங்களில் காய்ந்த கிராம்பு, மிளகு, கிராம்பு இலை மற்றும் காம்புகள் சேகரிக்க நிர்ணயம் செய்யப்பட்ட இலக்கு எட்டப்பட்டதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம். நல்லமிளகு தவிர, பிறவற்றின் நிர்ணயம் செய்யப்பட்ட இலக்கு எட்டப்பட்டுவிட்டது.*

*(ஆ)*

| | 1997-98-ல் உற்பத்தி குறியீடு கி.கி. | 1997-98-ல் மகசூல் கி.கி. |
|---|---|---|
| கிராம்பு | 1,000 | 1,530 |
| கிராம்பு காம்பு | 500 | 548 |
| கிராம்பு இலை | 4,000 | 6,315 |
| நல்லமிளகு | 500 | 471 |



2000 மே 17]

**46—**

**தாவரங்கள் பயிரிடுதல்**

**வினா 27477—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள வனப் பகுதியில் பருவ காலங்களில் மழை பெய்தால் சில மணி நேரங்களில் முற்றிலும் தண்ணீர் வடிந்து விடுவதைத் தடுக்க ஆடாதோடா மற்றும் வெட்டிவேர் போன்ற செடி, கொடிகளை வனப் பகுதியில் பயிரிடவும், தீ பரவுவதைத் தடுக்கும் தாவரங்களை ஆங்காங்கே பயிரிடவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) குற்றாலம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள வனப் பகுதியில் ஆடாதோடா மற்றும் வெட்டிவேர் நடப்படுவதில்லை. இருப்பினும், அக்காப்புக் காடுகளில் பல்வகை மரங்களை நடுவதோடு நீர்வளப் பாதுகாப்புப் பணிகளும் தடுப்பு அணைகளும் கட்டி மழை நீர் விரைவாக வடிவது தடுக்கப்படுகிறது. தீயினைத் தடுப்பதற்கு ஒவ்வோர் ஆண்டும் தீ தடுப்புக்கோடு வெட்டப்படுகிறது. தீ பரவும் காலங்களில் நெருப்பை அணைக்க தினக் கூலி அடிப்படையில் காவலர்களை அமர்த்தி கிராம மக்களின் துணையுடன் தீ பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.*

**47—**

**கூடுதல் அறைகள்**

**வினா 32192—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் வன ஓய்வு இல்லத்தில் கூடுதலாக அறைகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நிதி ஒதுக்கீடு கிடைக்கும்பட்சத்தில் 2000-2001-ல் கூடுதல் அறைகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**48—**

**மரங்களைப் பாதுகாத்தல்**

**வினா 32197—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டா நிலங்களில் தோதகத்தி (ரோஸ் வுட்) மரங்களை வளர்த்து அவற்றின் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் அவற்றுக்கு தடையாக நிற்கும் விதிகளைத் தளர்த்தி அத்தகைய அபூர்வ மரங்கள் அழியாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பட்டா நிலங்களில் தோதகத்தி (ரோஸ் வுட்) மரங்களை வளர்க்கவும், அவற்றின் உற்பத்தியைப் பெருக்கவும் விதிகளில் எவ்வித தடைகளும் இல்லை. இத்தகைய அபூர்வ மரங்கள் அழியாமல் காத்திட 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு தோதகத்தி இன வகை மரங்கள் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டு, அம்மரங்கள் அழியாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.



**49—**

**உயிரியல் நூலகம்**

**வினா 32198—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில், கல்கத்தாவில் உள்ளதைப்போல ஓர் உயிரியல் நூலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கல்கத்தாவில் உள்ளது போல் சென்னையில் உயிரியல் நூலகம் அமைப்பது சம்பந்தமான செயற்குறிப்பு, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை மற்றும் நிதித் துறை ஆகியவற்றின் ஒப்புதலோடு மத்திய அரசிற்கு 6-1-1997 ஆம் நாளன்று அனுப்பப்பட்டது. இதுகாறும் இக்கருத்துரு குறித்து மத்திய அரசிடமிருந்து 100% நிதியுதவி கிடைக்கப்பெறாததால் சென்னையில் உயிரியல் நூலகம் அமைக்க இயலவில்லை.

**50—**

**வனப் பரப்பளவு**

**வினா 32498—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) National Remote Sensing Agency எடுத்துள்ள Satellite data-ன்படி தமிழகத்தில் 1991 ஆம் ஆண்டு 13.62 சதவிகிதமாக இருந்த வனப் பரப்பளவு 13.10 சதவிகிதமாக 1997 ஆம் ஆண்டு குறைந்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைச் சீர் செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை —

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம். மைய அரசின் வனப் பரப்பு கணக்கெடுப்பு அறிக்கையில் 1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு செய்கையில் வனப் பகுதியில்லாத 721 ச.கி.மீ. தேயிலை தோட்டப் பகுதியையும் சேர்த்து தமிழ்நாட்டில் வனப் பரப்பு மொத்தமாக 7,713 சதுர கிலோ மீட்டர் என்றும், இது தமிழகத்தின் மொத்த நிலப் பரப்பில் 13.62 சதவிகிதம் என்றும் தெரிவித்தது. இந்த 721 சதுர கி.மீ. பரப்பளவை நீக்கிப் பார்த்தால் 1991 ஆம் ஆண்டில் வனப்பரப்பு 13.06 சதவிகிதம் மட்டும் என்பதை அறியலாம். 1997 ஆம் ஆண்டில் வனப்பகுதியில்லாத தேயிலைத் தோட்டப் பகுதியினை நீக்கியபின் தமிழகத்தின் வனப் பரப்பு 17,064 சதுர கிலோமீட்டராக உள்ளது. இது தமிழ்நாட்டில் மொத்த நிலப்பரப்புடன் ஒப்பிடுகையில் 13.12 சதவிகிதமாக உள்ளது. எனவே 1991 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1997-ல் 0.06 சதவிகிதம் வனப் பரப்பு அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டில் வனப் பரப்பை அதிகரிக்க சமுதாய நிலங்களில் காடு வளர்ப்புத் திட்டங்களை அமல்படுத்துதல், சுவீடன் நாட்டு நிதி உதவியுடன் "சமூகக் காடுகள் வளர்ப்பு திட்டம்", உலக வங்கி உதவியுடன் "தமிழ்நாடு வேளாண் வளர்ச்சி திட்டம்", ஜப்பான் நாட்டு நிதி உதவியுடன் "தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்டம்" ஆகிய திட்டங்கள் மூலம் தமிழ்நாட்டில் வன வளத்தைப் பாதுகாத்துப் பெருக்கிட தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.*

## பதினெட்டாவது பட்டியல்

### நூலகம்

1—

**வினா 4360—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை அரசு நூலகத்திற்கு ஒரு நிரந்தர நூலகரும், உதவிப் பணியாளரும் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நியமிக்கப்படுவார்கள்?*

விடை —

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை கிளை நூலகத்திற்கு 3-ம் நிலை நூலகர் பணியிடம் ஒன்றும், அலுவலக உதவியாளர் பணியிடம் ஒன்றும் நிரந்தரப் பணியிடமாக அனுமதிக்கப்பட்டுள்ளன.*





*2. நாங்குநேரி கிளை நூலகர் வயது முதிர்வின் காரணமாக 31-1-1996 அன்று ஓய்வு பெற்றதால் அப்பணியிடம் காலியாக இருந்தது. அப்பணியிடத்திற்கு செங்கோட்டை கிளை நூலகர் மாறுதலில் சென்று 7-7-1996-ல் பணியில் சேர்ந்தார்—எனவே, செங்கோட்டை கிளை நூலகர் பணியிடம் 7-7-1996 முதல் 24-4-1997 வரை காலியாக இருந்தது. பின்னர் 25-4-1997 முதல் இப்பணியிடம் நிரப்பப்பட்டுள்ளது.*

*3. செங்கோட்டை கிளை நூலகத்திலுள்ள அலுவலக உதவியாளர் வயது முதிர்வு காரணமாக ஓய்வில் சென்றதால் அப்பணியிடம் 1-6-1996 முதல் காலியாக உள்ளது. இப்பணியிடம் அரசால் நிர்ணயிக்கப்பட்ட அலகின்படி கூடுதல் பணியிடமாகக்* (excess post) *கருதப்படுவதால் இதனை நிரப்ப இயலாது.*

### தனி இயக்குநரகம்

**வினா 6226—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்குத் தனியாக இயக்குநரகம் ஏற்படுத்த அரசு அமைத்த இரேயான் குழுவின் பரிந்துரை அரசுக்கு வரப்பெற்றுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) மெட்ரிகுலேஷன் பள்ளிகளை ஒழுங்குபடுத்திக் கண்காணிக்கும் பொருட்டு இப்பள்ளிகளுக்கெனத் தனியாக ஓர் இயக்குநரகத்தை ஏற்படுத்துவது குறித்து ஆராய்ந்து பரிந்துரையை அளிக்குமாறு அமைக்கப்பட்ட திரு. ஜே.ஏ. இரேயான் தலைமையிலான குழு தனது பரிந்துரையை அரசுக்கு 24-11-1995-ல் அளித்துள்ளது. அரசு இதனை ஆராய்ந்து மெட்ரிகுலேஷன் பள்ளிகளைக் கவனிப்பதற்கெனத் தனியாகப் பள்ளிக் கல்வி இயக்குநரகத்தில் ஓர் இணை இயக்குநர் பதவியை ஏற்படுத்தி 23-6-1998-ல் ஆணை பிறப்பித்துள்ளது.*

3—

### பருத்தி மகசூல்

**வினா 23112—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தாலுகா மற்றும் ஆலங்குளம் வி.கே. புதூர் தாலுகாக்களில் பருத்தி மகசூல் மிகவும் குறைந்து வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், மகசூலை அதிகரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* மகசூலை அதிகரிக்க அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது:

*(1)* தீவிர பருத்தி பெருக்கத் திட்டத்தின்கீழ், பருத்தி சாகுபடி பற்றிய தொழில்நுட்பங்கள் பயிற்சி தென்காசி வட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது.

*(2)* பருத்திச் சான்று மற்றும் தரமான விதைகள் ஆண்டுதோறும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.

*(3)* தென்காசி, ஆலங்குளம், வீரகேரளம்புதூர் ஆகிய 3 வட்டங்களில் செயல் விளக்கங்கள் நடத்தப்படுகின்றன. ஒரு செயல் விளக்கத்திற்கு ரூ.15,000 மானியம் அளிக்கப்பட்டு, ஒவ்வொரு தொழில்நுட்பச் செயல் விளக்கத்தின்போதும், சுற்றுப்புற விவசாயிகளையும் ஈடுபடுத்தி, வயல் விழாக்களும் நடத்தப்படுகின்றன.

*(4)* பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு பற்றியும், நன்மை தரும் பூச்சிகள் பற்றியும் விவசாயிகளுக்குத் தெரியப்படுத்தப்படுகிறது. பூச்சி நோய் மேலாண்மை பற்றிய பயிற்சியும் வயல்வெளியில் நடத்தப்படுகிறது.



*(5)* பருத்தி சாகுபடி செய்யும் பருவத்திற்கு முன்பும், பருத்தி சாகுபடி செய்யும் காலங்களிலும் தொழில்நுட்பங்கள் வானொலி, நாளிதழ்கள் பயிற்சிக் கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் மூலமாக விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படுகின்றது.

4—

### வித்துப் பண்ணை

**வினா 23113—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தாலுகா, மேலகரம் அரசு வித்துப் பண்ணை 8 வருட காலமாக இயங்காமல் இருப்பது பற்றி அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், எண்ணெய்ப் பனை (Oil Palm) அல்லது தென்னை நாற்றுப் பண்ணையாக அதனை மாற்றம் செய்து இயங்க வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், மேலகரம் அரசு விதைப் பண்ணை தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்ததால் 1990-91 முதல் இப்பண்ணையில் சாகுபடி மேற்கொள்ளப்படவில்லை.

*(ஆ)* இப்பண்ணையில் மீண்டும் புத்துயிர்ப்புப் பணிகள் மேற்கொள்ள கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இவ்விதைப் பண்ணையை எண்ணெய்ப் பனை அல்லது தென்னை நாற்றுப் பண்ணையாக மாற்றம் செய்வதற்கான திட்டம் இல்லை.

5—

### விதைப் பண்ணை

**வினா 24199—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 17

*(அ) திருநெல்வேலி மாவட்டம், ஆயிரம்பேரி அருகே 35 ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ள மேலகரம் அரசு விதைப் பண்ணை கடந்த 10 ஆண்டு காலமாகச் செயல்படாமல் உள்ளது பற்றி அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அந்த விதை உற்பத்தி செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

*(இ) எப்போது செயல்படும்?*

*விடை—*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) மற்றும் (இ) இப்பண்ணையைத் தொடர்ந்து நடத்தக்கூடிய வாய்ப்புகள் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பண்ணைச் சீரமைப்பு மற்றும் சாகுபடிப் பணிகள் மேற்கொள்ள செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.*

6—

**விவசாய டிராக்டர்கள்**

**வினா 33857—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 'தாய்' நிறுவனத்தினர் குறிப்பிட்ட சில நிறுவனங்களைச் சார்ந்த டிராக்டர்களையே விவசாயிகள் வாங்கிட வற்புறுத்துவது குறித்து அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவசாயிகள் விரும்பும் டிராக்டர்களை நேரடியாக டீலர்கள் மூலம் வாங்கி மானியப் பயனைப்பெற அரசு வழிவகை செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*



2000 மே 17]

*(ஆ) நேரடியாக டீலர்கள் மூலம் விவசாயிகள் டிராக்டர் வாங்க வாய்ப்பில்லை.*

7—

**மகசூல் நெல் இரகங்கள்**

**வினா 33870—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விவசாயிகளுக்கு அதிக மகசூல் தரக்கூடிய நெல் இரகங்களை வேளாண்மை விரிவாக்க மையத்தின் மூலம் தேவையான அளவு வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?*

*விடை—*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) விவசாயிகளுக்கு அதிக மகசூல் தரக்கூடிய நெல் இரகங்கள் வேளாண்மை விரிவாக்க மையத்தின் மூலம் தேவையான அளவு வழங்கப்பட்டு வருகிறது.*

*(ஆ) வினா எழவில்லை.*

8—

**மூலிகைப் பண்ணை**

**வினா 23575—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் மூலிகைப் பண்ணை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2000 மே 17

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ) பெங்களூரை மையமாகக் கொண்டுள்ள "மரபுவழி உள்ளூர் மருத்துவ மூலிகை முறைகளுக்குப் புத்துயிரூட்டும் நிறுவனம்"* (Foundation for Revitalisation of Local Health Traditions—FRLHT) *மூலம் "டானிடா" நிதியுதவியைப் பயன்படுத்தி குற்றாலம் வனச் சரகத்தில் உள்ள 200 எக்டேர் பரப்பளவில் மூலிகைச் செடிகள் பாதுகாப்புப் பகுதி திட்டத்தின்கீழ் ஏற்கெனவே மூலிகை/மருத்துவச் செடிகள் வளர்க்கப்பட்டும் பராமரிக்கப்பட்டும் வருகின்றன.*

*(ஆ) கேள்வி எழவில்லை.*

**9—**

**தடுப்புச் சுவர்**

**வினா 23956—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை உபகோட்டம், செங்கோட்டை—கொல்லம் சாலையில் மலைச் சாலையில் ஆபத்தான இடங்களில் தடுப்புச் சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) கேள்வி எழவில்லை.*

**10—**

**பாலம் விரிவுபடுத்துதல்**

**வினா 25466—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2000 மே 17]

*(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி உதவிக் கோட்டம், சுரண்டை பேருந்து நிலையத்திலிருந்து பாவூர்சத்திரம்—செங்கோட்டைச் சாலையை இணைக்கும் பாலம் மிகவும் குறுகியதாகவும், பழுதடைந்தும் இருப்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அப்பாலத்தை விரிவுபடுத்தி, புதிதாகக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(இ) இப்பணிகள் எப்போது நிறைவேற்றப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) மற்றும் (இ) கேள்வி எழவில்லை.*

**11—**

**சாலையை அகலப்படுத்துதல்**

**வினா 25467—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி நகரம், தூத்துக்குடி—கொல்லம் சாலையில் கி.மீ.105/6, 105/10 வரையிலான பகுதியில் குறுகிய சாலையை அகலப்படுத்த நில ஆர்ஜிதம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் :**

*(அ) இல்லை.*

*(ஆ) கேள்வி எழவில்லை.*

**12—**

### சாலையைச் சீரமைத்தல்

**வினா 25474—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசியிலிருந்து ஆயிரப்பேரி வழியாகப் பழைய குற்றாலம் செல்லும் சாலையைச் சீரமைத்து புதிய தார்ச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நடப்பு நிதியாண்டில் நிதிநிலைமைக்கேற்ப இப்பகுதிகள் சீர் செய்யப்படும்.

**13—**

### பாலம் அகலப்படுத்துதல்

**வினா 29040—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை, காமராஜர் சாலையில் சாம்பவர்வடகரை, பாவூர்சத்திரம் பிரியும் இடத்தில் இடிந்துள்ள பாலத்தை அகலப்படுத்திக் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் :**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



**14—**

### பாலம் கட்டுதல்

**வினா 32075—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பாவூர்சத்திரம்-கடையம் நெடுஞ்சாலையில் மருதனியூர் அருகில் பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பாலம் கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசின் நிதிவளம், பணியின் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு இனிவரும் ஆண்டுகளில் இப்பணியினை பகுதி-2 திட்டத்தில் மேற்கொள்ள பரிசீலிக்கப்படும்.

**15—**

### குமாரகோயில் தேர் ஓட்டம்

**வினா 9997—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றியம், இலஞ்சி பேரூராட்சி, குமாரகோயில் தேரை ஓட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி ஒன்றியம் இலஞ்சி பேரூராட்சி அருள்மிகு குமாரகோயிலுக்குச் சொந்தமாக இரண்டு மரத் தேர்கள் உள்ளன. இதில் பெரிய மரத் தேர் 20-10-1994 அன்று நள்ளிரவு தீப்பிடித்து எரிந்துவிட்டது. எரிந்துவிட்ட தேருக்குப் பதிலாக புதியதாக தேர் செய்வதற்கு மதிப்பீடு தயாரிக்கவும், திருப்பணிக் குழு அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மற்றொரு சிறிய மரத் தேர் தகர தடுப்புகளைக் கொண்டு உரிய மறைப்புகள் செய்து பாதுகாப்பாக வைக்கப்பட்டு நல்ல நிலையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மேற்படி திருக்கோயிலில் ஒவ்வோர் ஆண்டும் சித்திரை மாதத்தில் நடைபெறும் சித்திரைப் பெருந்திருவிழா, பத்துநாள் திருவிழா நாட்களில் ஒன்பதாம் திருவிழா நாளன்று தேரோட்டம் நடைபெறுகிறது. கடந்த சித்திரைத் திருநாளில் 13-4-1999-ல் தேரோட்டம் சிறப்பாக நடந்தது. இந்த ஆண்டும் சித்திரை மாதம் தேரோட்டம் நடைபெறும்.

16—

### வணிக அங்காடி

**வினா 12033—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி அருள்மிகு காசிவிஸ்வநாதர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் வணிக அங்காடி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் சுயநிதி திட்டத்தின் மூலம் வணிக வளாகம் கட்டுவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.



17—

### சித்திரங்கள், ஓவியங்கள் பராமரித்தல்

**வினா 29056—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், அருள்மிகு குற்றாலநாதர் திருக்கோயில், சித்திரச் சபையில் மூலிகைகளால் தீட்டப்பட்ட பழங்காலத்து ஓவியங்கள் நல்லமுறையில் பராமரிக்கப்படாததால் சித்திரங்கள் பொலிவின்றி காணப்படுவது குறித்து அரசு அறியுமா?

(ஆ) சித்திரங்களை பாதுகாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சித்திரச்சபையின் மேற்கூரை பழுதடைந்துள்ளதால் நீர் ஒழுக்கு ஏற்பட்டு மழைநீர் மேற்படி சித்திரங்களின்மீது வழிந்து பொலிவிழந்து காணப்படுகிறது. நீர் ஒழுக்கைத் தடுக்கவும், சித்திரங்களைப் பாதுகாக்கவும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

18—

### இசைக் கல்லூரி

**வினா 33420—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் இசைக் கல்லூரி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2000 மே 17

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* தற்போது திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் இசைக் கல்லூரி அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

**19—**

### அயோடின் உப்பு

**வினா 27602—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பொது விநியோகமுறை திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக குடும்ப அட்டைதாரர்களுக்கு அயோடின் கலந்த உப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தமிழ்நாடு உப்புக் கழகத்தால் தயாரிக்கப்படும் அயோடின் கலந்த உப்பு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் கொள்முதல் செய்யப்பட்டு 10-11-1998 முதல் பொது விநியோகமுறையின்கீழ் நியாயவிலைக் கடைகளின் மூலம் கிலோ ஒன்றுக்கு (பிளாஸ்டிக் உறைகளில் அடைக்கப்பட்டது) ரூ. 2.50 வீதம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அயோடின் குறைவினால் வரக்கூடிய கழுத்துக்கழலை நோய் அதிகமாகக் காணப்படும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இத்திட்டம் முதல் கட்டமாக செயல்படுத்தப்பட்டது. பின்னர் நீலகிரி, கோயம்புத்தூர், சேலம், கரூர், பெரம்பலூர், நாமக்கல் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.



2000 மே 17]

**20—**

### கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

**வினா 30350—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை திருநெல்வேலி மாவட்டத்திற்கு விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* திருநெல்வேலி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

**21—**

### கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள்

**வினா 31606—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கூட்டுறவுச் சங்கங்களில் போலி உறுப்பினர்களைக் களைந்து சங்கம் திறம்பட இயங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) 1996-ல் தொடக்க கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டபோது கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டிலுள்ள தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களில் 10-8-1996 வரையில் 5,03,113 போலி உறுப்பினர்கள் களையப்பட்டனர்.

**22—**

**அமுதம் சிறப்பங்காடி**

**வினா 31833—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை நகரில் இயங்கி வந்த அமுதம் சிறப்பங்காடி மீண்டும் இயங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டையில் இயங்கி வந்த அமுதம் சிறப்பங்காடி தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்ததால் அதனை மூடிவிட உத்தரவிடப்பட்டது. ஆகவே இதனை மீண்டும் இயங்க வைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**23—**

**நியாயவிலைக் கடை**

**வினா 32537—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி வட்டம், கீழவெள்ளக்கால் ஊராட்சி, துவரங்காடு கிராமத்தில் பகுதிநேர நியாயவிலைக் கடை தொடங்க ஆவன செய்யப்படுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், வெள்ளக்கால் ஊராட்சி, துவரங்காடு கிராமத்தைச் சேர்ந்த 249 குடும்ப அட்டைகள் கீழவெள்ளக்கால் கிராம நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. வெள்ளக்கால் நியாயவிலைக் கடையில் மொத்தம் 578 குடும்ப அட்டைகள் உள்ளன. துவரங்காடு கிராமத்திற்கும், தாய் நியாயவிலைக் கடை உள்ள கீழவெள்ளக்கால் கிராமத்திற்குமிடையே 1.5 கிலோ மீட்டர் தூரமே இருப்பதாலும், மேலும், கீழவெள்ளக்கால் நியாயவிலைக் கடையின் கட்டுப்பாட்டில் ஏற்கெனவே ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடை 374 குடும்ப அட்டைகளுடன் இராஜபாண்டி கிராமத்தில் இயங்கி வருவதாலும், துவரங்காட்டில் மற்றொரு பகுதிநேர நியாயவிலைக் கடையோ அல்லது முழுநேர நியாயவிலைக் கடையோ அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**24—**

**குழந்தை தொழிலாளர் பள்ளி**

**வினா 23943—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் குழந்தைத் தொழிலாளர் பள்ளி அமைக்க மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் குழந்தைத் தொழிலாளர்களுக்கு தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின்கீழ் 50 சிறப்புப் பள்ளிகள் அமைக்க, மைய அரசு தனது 27-9-1999 நாளிட்ட தொழிலாளர் அமைச்சக கடித எண் 27020/20/டப்ளியூ.12 மூலம் அனுமதி வழங்கியுள்ளது. அதில் தென்காசியில் இரண்டு குழந்தைத் தொழிலாளர் பள்ளிகளும் அடங்கும்.

25—

### பஞ்சாலை தொழிலாளர் ஓய்வூதியம்

**வினா 25384—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பீடி, போக்குவரத்து மற்றும் பஞ்சாலை தொழிலாளர்கள் ஓய்வூதிய தொகையைப் பெற அனைத்து தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலும் அஞ்சல் அலுவலக கிளைகளிலும் கணக்குகள் தொடங்க அனுமதி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், 1995-ன்படி தற்போது தமிழ்நாட்டில் முன்னிலையில் உள்ள இந்தியன் வங்கி, பாரத வங்கி மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கிகள் மூலமாக ஓய்வூதியம் வழங்கப்படுவதோடு மட்டுமல்லாமல், அஞ்சல் அலுவலகங்கள் மூலமாக ஓய்வூதியம் வழங்கப்படுவதற்கும் மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

26—

### முத்திரை புதுப்பித்தல் அலுவலகம்

**வினா 25482—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை மற்றும் சுற்றுப்புறங்களிலுள்ள கிராம மக்கள் பயன்பெறும் வகையில் சுரண்டையில் (எடை அளவு) முத்திரை புதுப்பிக்கும் அலுவலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?



விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டையில் எடை அளவு முத்திரை புதுப்பிக்கும் அலுவலகம் அமைக்க அரசுக்கு உத்தேசம் இல்லை.

(ஆ) எழாது.

27—

### ஓய்வு இல்லம் விரிவுபடுத்துதல்

**வினா 29079—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் திரு.வி.க தொழிலாளர் ஓய்வு இல்லத்தில் இடநெருக்கடியைப் போக்க ஓய்வு இல்லத்தை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் திரு.வி.க. தொழிலாளர் ஓய்வு இல்லத்தை விரிவுபடுத்த அரசுக்கு உத்தேசம் இல்லை.

(ஆ) எழாது.

28—

### தொழிலாளர் நல வாரியத் திட்டங்கள்

**வினா 29080—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 17

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில், தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்மூலம் 1998-99 ஆம் நிதியாண்டில் என்னென்ன திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன?

(ஆ) பயன்பெற்றோர் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில், தொழிலாளர் நல வாரியம் மூலமாக 1998-99 ஆம் ஆண்டில் 18 நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

(ஆ) இத்திட்டங்கள் மூலம் 361 நபர்கள் பயனடைந்துள்ளார்கள்.

29—

**தையல் பயிற்சி நிலையம்**

**வினா 29081—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் தொழிலாளர் நல வாரியம் மூலமாக தையல் பயிற்சி நிலையம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் மூலமாக ஒரு தொழிலாளர் நல மையம் திறக்க வேண்டுமென்றால் தோராயமாக ஒரு வருடத்திற்கு பணியாளர் சம்பளம், கட்டட வாடகை உட்பட நிகழும் மற்றும் நிகழாச் செலவினமாக ரூ. 3,63,000 ஏற்படுகிறது. தென்காசியை பொறுத்தமட்டில் குறைந்த அளவிலான அதாவது தொழிலாளர் நல நிதி செலுத்தும் நிறுவனங்கள் 58 உள்ளன. இதில் மொத்தம் 566 தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். இதன் மூலமாக வாரியத்திற்கு தொழிலாளர்கள் நல நிதியாக ஆண்டு ஒன்றுக்கு மொத்தம் ரூ. 8,490 பெறப்படுகிறது. மேலும் வாரியத்தில் தற்போதுள்ள நிதிப் பற்றாக்குறையினை கருத்தில்கொண்டு மேற்படி தென்காசியில் தொழிலாளர் நல மையம் தொடருவது குறித்து வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்டு முடிவெடுக்கப்படும்.



30—

**தொழிற்பயிற்சி தொழில்நுட்பப் பயிலகம் அமைத்தல்**

**வினா 29082—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டையில் தொழிற்பயிற்சி மையம் (ஐ.டி.ஐ.) மற்றும் தொழில் நுட்பப் பயிலகம் (பாலிடெக்னிக்) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) பதில் எழாது.

31—

**பரிந்துரைகள் மீது நடவடிக்கை**

**வினா 30060—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அக்குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் உள்ள விவசாயத் தொழிலாளர்களின் நலனுக்கான திட்டங்களை பரிந்துரை செய்யும்பொருட்டு முன்னாள் நிலச்சீரமைப்பு ஆணையர் மற்றும் இயக்குநர் திரு. பி. கோலப்பன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழு தனது அறிக்கையை அரசுக்கு 17-2-1998-ல் சமர்ப்பித்தது.

(ஆ) திரு. கோலப்பன் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள 43 பரிந்துரைகளில் விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தை திருத்தியமைக்கக் கோரும் முதல் பரிந்துரையை அரசு ஏற்று முதன்மை ஆணை வெளியிட்டுள்ளது. கோலப்பன் குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ள மற்ற 42 பரிந்துரைகளை நன்கு பரிசீலனை செய்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க அரசு அலுவலர்கள் அளவில் உயர்மட்டக் குழு ஒன்று அமைக்க முடிவெடுக்கப்பட்டு, செயலர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அவர்கள் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி உயர்மட்டக் குழு மூன்று முறை கூடி 42 பரிந்துரைகளையும் விவாதித்துள்ளது. விவாதித்த விவரங்கள் அடங்கிய இடைக்கால அறிக்கை உறுப்பினர்களுக்கு சுற்றனுப்பப்பட்டுள்ளது. மீண்டும் உயர்மட்டக்குழு கூடி விவசாயத் தொழிலாளர்களுக்கு நல வாரியம் அமைக்க மேற்கொள்ள வேண்டிய பூர்வாங்க நடவடிக்கைகளைப் பற்றி இறுதி முடிவெடுக்கும்.

**32—**

### தொழிற்பிரிவுகள் தொடங்குதல்

**வினா 31996—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு தொழிற் பயிற்சி மையங்களில் அந்தப் பகுதியில் இருக்கின்ற தொழிற்சாலைகளுக்கேற்ப தொழிற்பிரிவுகள் தொடங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது இயங்கிவரும் அனைத்து அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்றுவிக்கப்படும் தொழிற்பிரிவுகள் அனைத்தும் அந்தந்த இடத்திலுள்ள தொழிற்சாலைகளின் தேவைக்கேற்ப தொடங்கப்பட்ட தொழிற்பிரிவுகள் ஆகும்.

(ஆ) பதில் எழாது.

**33—**

### அரசு தொழிற்பயிற்சி நிலையம்

**வினா 31997—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்க தனியார் எவரும் முன்வராத பின்தங்கிய ஊராட்சி ஒன்றியங்களில் அரசே தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்க நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அதற்கான காலக்குறியீடு ஏதும் நிர்ணயிக்கவில்லை.

**34—**

### பரிந்துரைகள் அமலாக்கம்

**வினா எண் 31998—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண் தொழிலாளர் பிரச்சினையை ஆராய அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை அமல்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(ஆ) எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேளாண் தொழிலாளர் பிரச்சினையை ஆராய அமைக்கப்பட்ட கோலப்பன் குழுவின் 43 பரிந்துரைகளில் விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியத்தை திருத்தியமைக்கக் கோரும் முதல் பரிந்துரையை அரசு ஏற்று முதன்மை ஆணை வெளியிட்டுள்ளது. மீதமுள்ள 42 பரிந்துரைகளை அமல்படுத்த அப்பரிந்துரையை நன்கு பரிசீலனை செய்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க, அரசு அலுவலர்கள் அளவில் உயர்மட்டக்குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. அதன் அறிக்கை பெறப்பட்டபின் இறுதி முடிவெடுக்கப்படும்.

**35—**

### நீதிமன்ற புதிய கட்டடம்

**வினா 32047—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசியிலுள்ள அனைத்து நீதிமன்றங்களும் ஒரே வளாகத்தில் இயங்குகின்ற வகையில் புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான நிலத்தை ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**36—**

### கிளை சிறைச்சாலை

**வினா 32048—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி கிளை சிறைச்சாலைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**37—**

### நீதித்துறை பெருந்திட்டம்

**வினா 32799—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீதித்துறையின் தேவைக்கேற்ப ஒரு பெருந்திட்டத்தை (Master Plan) உயர்நீதிமன்றம் தயாரித்து அரசுக்கு அனுப்பியுள்ளதா?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1997ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், சென்னை உயர்நீதிமன்ற பதிவாளர் அவர்கள் ரூ.53.84 கோடிக்கான பெருந்திட்டத்தை (Master Plan) அரசுக்கு அனுப்பினார். அரசு அதனை பரிசீலனை செய்து, அப்பெருந்திட்டத்தை ஆண்டு வாரியாகவும், முன்னுரிமை அடிப்படையிலும் மற்றும் நிதி இலக்கு மற்றும் செயல் இலக்குடனும் சரிப்படுத்தி தயாரித்து அனுப்புமாறு உயர்நீதிமன்ற பதிவாளரைக் கேட்டுக்கொண்டது. அதன்படி, உயர்நீதிமன்ற பதிவாளர் மீண்டும் 24-11-1998ல் ரூ.68.07 கோடிக்கான பெருந்திட்டத்தை அரசுக்கு அனுப்பினார். அரசு, அவற்றை சரிப்படுத்தி, ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அவற்றிற்கு நிதி உதவி வழங்க மத்திய அரசுக்கு அனுப்பியது. ஆனால் திட்டக்குழு இத்திட்டங்களுக்கு மேலும் நிதி உதவி வழங்க

இயலாது என தெரிவித்து விட்டது. எனவே, நீதிமன்ற கட்டடங்கள் உள்பட நீதிமன்ற உள்கட்டுமான வளர்ச்சிக்கென, ரூ.82 கோடிக்கான திட்டங்கள் பதினோராவது நிதிக்குழுவின் நிதி ஒதுக்கீடு கோரி அனுப்பப்பட்டுள்ளது.

**38—**

### இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா 21721—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், சீர்மரபினருக்கு பல ஆண்டுகள் விண்ணப்பித்தும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படாததை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது பட்டா வழங்கப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டத்தில் 1997-98 ஆம் ஆண்டில் 76 சீர்மரபினர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேலும் 4.22 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் கிரயம் பெற்று, சீர்மரபினர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா விரைவில் வழங்கப்படும்.

**39—**

### "டாப்செட்கோ" கடன் வசதி

**வினா 22946—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி நகராட்சி, ரயில் நிலையத்துக்கு அருகே வசித்துவரும் நரிக்குறவர் சமுதாயத்தினருக்குத் தொழில் தொடங்க "டாப்செட்கோ" மூலம் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி நகராட்சி பகுதியில் வசிக்கும் நரிக்குறவர்கள் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தில் கடன் கேட்டு விண்ணப்பம் எதுவும் நிலுவையில் இல்லை. மேலும், திருநெல்வேலி மாவட்டம், தென்காசி நகராட்சியின் அருகே வசிக்கும் நரிக்குறவர்கள் வங்கிகளின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு கடன் பெற தகுதிகள் அனைத்தும் இருப்பின் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை அணுகி, தேவையான கடன் உதவிகளை இக்கழகம் மூலம் பெறலாம்.

**40—**

### "டாப்செட்கோ" கடன் உதவி

**வினா 22947—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மாவட்ட கூர்ந்தாய்வு குழுவால் பரிந்துரை செய்யப்படும் "டாப்செட்கோ" கடனுதவி விண்ணப்பங்களை கடன் வழங்க முன்வரும் வங்கியுடன் "டாப்செட்கோ" உடன்படிக்கைக் குறிப்பு ஏற்படுத்தி கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக கடனுதவி விண்ணப்பங்கள் அந்தந்த மாவட்ட கூர்ந்தாய்வு குழுவினரால் பரிசீலனை செய்யப்பட்டு தகுதியுடைய மனுதாரரின் விவரங்கள் அடங்கிய படிவம் வங்கிக்கு அனுப்பப்படுகிறது. தற்காலிக ஒப்பளிப்பு ஆணையில் ஒப்பமிட்டு அனுப்பும் வங்கிகளுக்கு பணப் பட்டுவாடா பத்து நாட்களுக்குள் செய்யப்படுகிறது.

41—

### வீட்டு வசதி வாரிய அலுவலகம்

**வினா எண் 10887—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி, சுரண்டையில் வீட்டு வசதி வாரிய அலுவலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி, சேரன்மகாதேவி, தென்காசி ஆகிய நகரங்களை உள்ளடக்கி கோட்ட அலுவலகம் திருநெல்வேலியில் உள்ளது. தென்காசியில் ஓர் உதவி செயற் பொறியாளர் அலுவலகம் செயல்பட்டு வருகின்றது. எனவே சுரண்டையில் வீட்டு வசதி வாரிய அலுவலகம் அமைக்கும் அவசியம் தற்போது இல்லை.

42—

### அரசு அலுவலர்களுக்கு வாடகைக் குடியிருப்பு

**வினா 31632—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் அரசு அலுவலர்களுக்கு வாடகைக் குடியிருப்புகளை போதுமான அளவில் கட்டிக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புக்கான தேவையிருந்து அதற்கான நிலமும் ஒதுக்கீடு செய்து, தக்க கருத்துரு மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்டால், அதுகுறித்து பரிசீலிக்கப்படும்.



43—

### செஸ்காட் நிறுவனம்

**வினா 29064—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில பொறியியல் மற்றும் பயன்நோக்கு நிறுவனம் (செஸ்காட்) தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இலாபகரமாக இயக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) செஸ்காட் நிறுவன செயல்பாடு குறித்து ஆய்வு செய்த வல்லுநர்கள் குழு இந்நிறுவனம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருவதால் இந்நிறுவனத்தை மூடிவிடலாம் என்று பரிந்துரை செய்துள்ளது. இதுகுறித்து விரைவில் ஆணைகள் வெளியிடப்படும்.

44—

### கைடுலைன் மதிப்பு

**வினா 32023—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சார்-பதிவகங்களில் கைடுலைன் மதிப்புகளை பொதுமக்கள் பார்வைக்கு வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைப்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) பொதுமக்கள் வழிகாட்டி மதிப்பை தெரிந்துகொள்ள வழிகாட்டிப் பதிவேடுகள் சார்-பதிவகங்களில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

(ஆ) திட்டம் ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**45—**

**தொழிற்பேட்டை**

**வினா 32046—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதியில் தொழிற்பேட்டை அமைத்து சிறுதொழில்களை ஊக்கப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதியில் தொழிற்பேட்டை தொடங்க தற்போது வாய்ப்பில்லை.

**46—**

**பத்திரப் பதிவு**

**வினா 32052—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பத்திரப் பதிவு கட்டணம் அதிகமாக உள்ளதால் பிற மாநிலங்களுக்குச் சென்று பதிவு செய்யப்படுவது குறித்து அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) எப்போது நிறைவேற்றப்படும்?



விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) பிற மாநிலங்களில் தமிழக சொத்துக்கள் பதிவு செய்யப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

(ஆ) மேற்கண்ட செயலைத் தடுக்கும் பொருட்டு பதிவுச் சட்டம், *1908*, பிரிவு *28* திருத்தம் செய்யப்பட்டு தமிழக சொத்துக்கள் வெளி மாநிலங்களில் பதிவு செய்யப்படின் அவை செல்லத்தக்கதல்ல எனச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

(இ) தற்போது இது நடைமுறையில் உள்ளது.

**47—**

**அரசு பொருட்காட்சி**

**வினா 32622—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலியில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் அரசு பொருட்காட்சியை ஆண்டுதோறும் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இது குறித்து செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**48—**

**பழங்குடியினர் சான்றிதழ்**

**வினா 21587—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டத்தில் வசிக்கும் காட்டுநாயக்கன் மற்றும் கனியன் சமுதாயத்தினருக்கு பழங்குடியினர் சான்றிதழ் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டத்தில் வசிக்கும் காட்டுநாயக்கன் மற்றும் கனியன் சமுதாயத்தினர் சாதிச்சான்று வேண்டி மனு செய்துகொண்டால் முழுமையான விசாரணைகளுக்குப் பின்னர், உண்மையிலேயே அவர்கள் அந்த சாதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வந்தால் அவர்களுக்கு உரிய சாதிச்சான்றுகள் வழங்கப்படும்.

**49—**

### காகித அலகு தொழில் பிரிவு

**வினா 26424—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கதர்த் தொழில் வாரியம் மூலம் நடத்தப்படும் கைமுறை காகித அலகு தொழில் பிரிவும், மண்பாண்ட தொழில் பிரிவும் பின்னடைவு ஏற்பட்டு நட்டம் அடைந்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது இலாபகரமாக இயங்கிட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கைமுறை காகித அலகுகள் இலாபகரமாக இயங்கிட அவ்வலகுகளால் தயார் செய்யப்படும் கைமுறை காகிதங்களை அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்ய அனைத்து நடவடிக்கைகளும் வாரியத்தால் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், நீதிமன்றத்தின் தீர்ப்ட



மற்றும் தீர்ப்பாணைகளை தட்டச்சு செய்வதற்கு கைமுறை காகித அலகில் தயார் செய்யப்படும் கனமான தாள்கள் 200 ரீம்கள் ஆண்டுதோறும் கொள்முதல் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் வாரியத்தால் எடுக்கப்பட்டுள்ளன. தற்போது விருத்தாச்சலம் பீங்கான் அலகிற்கு அரசின் ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் டிரைசம் நிதியாக ரூ.3.00 இலட்சம் மானியத் தொகை பெறப்பட்டு அவ்வலகினை நவீனமயப்படுத்தி, அலகிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை கொள்முதல் செய்து உற்பத்தி விற்பனையை பெருக்குவதற்கு வாரியம் அனைத்து முயற்சிகளையும் செய்து வருகிறது.

**50—**

### மண்டல துணை இயக்குநர் அலுவலகம்

**வினா 31635—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மண்டல துணை இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலியைத் தலைமையகமாகக் கொண்ட மண்டல துணை இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்தும் கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

## பத்தொன்பதாவது பட்டியல்

### தொடக்கப் பள்ளிக்கு வசதிகள்

**1—**

**வினா 23450—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம், தவணை அரசு தொடக்கப் பள்ளிக்கு கழிப்பிட வசதி செய்து கொடுக்கவும், மாலை நேர வகுப்புகள் நடைபெறுவதால் மின்வசதி ஏற்படுத்திக் கொடுக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம், தவணை அரசு தொடக்கப்பள்ளியில் கழிப்பறை வசதி/ மின்வசதி செய்து கொடுக்க போதிய நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தினால் சட்டமன்ற உறுப்பினர்/பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து இதனை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். இப்பள்ளியில் மாலைநேர வகுப்புகள் நடத்துவதற்கு அரசு விதிகள் ஏதும் இல்லை. இப்பள்ளிக்கு மின்வசதி செய்து கொடுப்பது சம்பந்தமாக நிதி வசதி பெறப்பட்டவுடன் மின்வசதி ஏற்படுத்திக் கொடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**2—**

### ஆரம்பப் பள்ளிக்கு வசதிகள்

**வினா 24574—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம் தொகுதி, அம்பத்தூர், கள்ளிக்குப்பம் பகுதியில் இயங்கிவரும் ஆரம்பப் பள்ளிக்கு அடிப்படை வசதிகள், ஆசிரியர்கள் நியமனம் ஆகியவை செய்து தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இப்பள்ளியில் மாணவர்கள் பதிவு 232, மாணாக்கர்கள் வருகை எண்ணிக்கை 186 ஆகும். இப்பள்ளிக்கு ஒரு தலைமை ஆசிரியர் மற்றும் 4 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதில் தற்போது ஒரு தலைமை ஆசிரியர் மற்றும் 3 இடைநிலை ஆசிரியர்கள் பணிபுரிகின்றார்கள். 1 இடைநிலை ஆசிரியர் பணியிடம் காலியாக உள்ளது. புதிய ஆசிரியர்கள் நியமனம் செய்யும்போது இக்காலிப் பணியிடம் விரைவில் பூர்த்தி செய்யப்படும். அம்பத்தூர் நகராட்சியில் ஓர் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு பள்ளிக்கு குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. கழிப்பிட வசதிகள் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. பள்ளிக்குப் போதுமான கட்டட வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பள்ளிக்குப் போதுமான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.



**3—**

### நடுநிலைப் பள்ளியாக உயர்த்துதல்

**வினா 30114—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை நகராட்சி, கச்சேரி காம்பவுண்ட் அரசு தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது உயர்த்தப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை நகராட்சி, கச்சேரி காம்பவுண்ட் அரசு தொடக்கப் பள்ளி, அரசாணை எண் 182, பள்ளிக் கல்வித் துறை, நாள் 17-6-1999-ன்படி 1999-2000 கல்வியாண்டில் நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**4—**

### உதவிக் கல்வி அதிகாரி அலுவலகம்

**வினா 30380—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் தனியார் கட்டடத்தில் இயங்கி வரும் உதவிக் கல்வி அதிகாரி (Assistant Education Officer) அலுவலகத்திற்குச் சொந்தமான கட்டடம் கட்டிக்கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

உதவித் தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு அரசு நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் சொந்தக் கட்டடம் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உதவித் தொடக்கக் கல்வி அலுவலகம் கட்டுவதற்கு 5 சென்ட் புறம்போக்கு நிலமோ அல்லது பட்டா நிலமோ தொடக்கக் கல்வித் துறைக்கு

தானமாக மாற்றித்தரப்பட வேண்டும். இந்நிலம் போக்குவரத்து வசதிகள் உள்ள இடமாக இருக்க வேண்டும். பெண்ணாகரம் உதவித் தொடக்கக் கல்வி அலுவலகம் கட்ட நிலம் இதுகாறும் கிடைக்கப்பெறவில்லை.

5—

**கூடுதலாக ஆசிரியர் நியமனம்**

**வினா 32813—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், கொல்லங்கரை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் *1* முதல் *5* வகுப்புகள் இருந்தும் *4* ஆசிரியர்கள் மட்டும் பணிபுரிவதால் கூடுதலாக ஓர் ஆசிரியர் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கொல்லங்கரை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் *4* ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். *31-7-1999*-ன்படி மாணவர் பதிவு மற்றும் வருகைப் பதிவு விவரம் வருமாறு

| வகுப்பு | பதிவு | வருகை |
|---|---|---|
| *1* | *26* | *22* |
| *2* | *38* | *32* |
| *3* | *48* | *38* |
| *4* | *30* | *27* |
| *5* | *23* | *22* |
| | ***165*** | ***141*** |

அரசாணை எண் *525*, நாள் *29-12-1997*-ன்படி *4* ஆசிரியர் பணிபுரிய மட்டுமே தகுதி உள்ளது என்பதால் கூடுதலாக ஆசிரியர் நியமனம் செய்யப்படவில்லை. வரும் கல்வியாண்டில், அரசாணை எண் *525*, நாள் *29-12-1997*-ன்படி மாணவர் வருகை அதிகரிக்குமானால் இப்பள்ளிக்கு கூடுதலாக ஆசிரியர் நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



6—

**மின் செலவு**

**வினா 27957—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தெரு விளக்குகளுக்கு ஆகும் மின் செலவை தனியார் நிறுவனங்கள் ஏற்பதாக கோரிக்கை ஏதும் அரசிற்கு வரப்பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தெரு விளக்குகளுக்கு ஆகும் மின் செலவை தனியார் நிறுவனங்கள் ஏற்பது குறித்து கோரிக்கை எதுவும் அரசிற்கு பெறப்படவில்லை.

7—

**மின் அழுத்தம் சரிசெய்தல்**

**வினா 31899—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கோட்ட கவுண்டம்பட்டி ஊராட்சியில் மின் அழுத்தம் மிகக் குறைவாக இருப்பதால் விளக்குகள் எரியாமல் இருப்பதை சரி செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கோட்ட கவுண்டம்பட்டி ஊராட்சியில் மின் அழுத்தம் குறைவாக இருந்த ஒருமுனை இரு கம்பி மின்பாதையை மும்முனை *4* கம்பி பாதையாக மாற்றி அமைத்து மின்அழுத்த குறை (low voltage) நிவர்த்தி செய்யப்பட்டு விட்டது.

[2000 மே 17

8—

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா 32299—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், மீனவ கிராமங்களான கூட்டப்புளி பெருமணல், இடிந்தகரை, உவரி, கூத்தங்குளம், கூட்டப் பனை, பெரியதாழை, கூடுதாழை ஆகியவற்றில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மத்திய அரசின் வரையறையின்படி ராதாபுரம் ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்கு (107405) ஏற்ப, 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால், தற்போது, மேற்படி மீனவ கிராமங்களுக்காகப் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகளில்லை.*

*(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.*

9—

## மின் உற்பத்தி

**வினா 33006—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் அணை மற்றும் சுரங்க மின் நிலையம் மூலம் எவ்வளவு மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது?*

*(ஆ) 1999 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நீர்மட்டம் குறைவால் மின் உற்பத்தி எவ்வளவு மெகாவாட் பாதிக்கப்பட்டுள்ளது?*

*(இ) இந்த நிலை மீண்டும் வராமல் இருக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?*



2000 மே 17]

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மேட்டூர் அணை மற்றும் சுரங்க மின் நிலையம் மூலம் ஏப்ரல் 1999 முதல் டிசம்பர் 1999 வரை உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம் வருமாறு:-*

| மாதம் | மேட்டூர் அணை மின் நிலையம் | மேட்டூர் சுரங்க மின் நிலையம் |
|---|---|---|
| ஏப்ரல் 1999 | 16.1 மெ.வா. | 0 மெ.வா. |
| மே 1999 | 17.1 மெ.வா. | 0 மெ.வா. |
| ஜூன் 1999 | 17.8 மெ.வா. | 43 மெ.வா. |
| ஜூலை 1999 | 24.3 மெ.வா. | 143 மெ.வா. |
| ஆகஸ்ட் 1999 | 33.3 மெ.வா. | 182 மெ.வா. |
| செப்டம்பர் 1999 | 18.2 மெ.வா. | 121 மெ.வா. |
| அக்டோபர் 1999 | 13.7 மெ.வா. | 90 மெ.வா. |
| நவம்பர் 1999 | 32.5 மெ.வா. | 207 மெ.வா. |
| டிசம்பர் 1999 | 31 மெ.வா. | 152 மெ.வா. |

*(ஆ) கடந்த செப்டம்பர் 1999 ஆம் ஆண்டு நீர்மட்டம் குறைந்ததால் செப்டம்பர் மாதத்தில் 240 மெகாவாட்டுக்கு, 139.2 மெகாவாட்டும், அக்டோபரில் 183.7 மெகாவாட்டும், டிசம்பரில் 183 மெகாவாட்டும் மட்டுமே உற்பத்தி செய்ய முடிந்தது.*

*(இ) தமிழ்நாட்டிற்கு காவிரியிலிருந்து வரவேண்டிய நீரினை பெறுவதற்கு அரசு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது.*

10—

## மின்தடை குறைக்க நடவடிக்கை

**வினா 33008—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாட்டில் மின் கடத்திகளில் ஏற்படும் பழுதினால் நிகழும் மின்சாரத் தடையை வெகுவாகக் குறைக்க மின்வாரியம் எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் மின் கடத்திகளில் ஏற்படும் பழுதினால் நிகழும் மின்சாரத் தடையைக் குறைக்க, மின் கடத்திகள் முறையாக சுற்றுக்காவல் (patrolling) செய்யப்பட்டு வருகின்றது. மேலும் தேவைப்படும் இடங்களில் சிறிய அளவு மின் கடத்திகள் பெரிய அளவு (higher size) மின் கடத்திகளாக மாற்றப்பட்டு மின்தடை ஏற்படாமல் பார்த்துக்கொள்ளப்படுகின்றது.

11—

**நீரிழிவு நோயைக் குணப்படுத்துதல்**

**வினா 33567—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழ்நாட்டில் அதிகமான மக்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது அரசுக்குத் தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களை குணப்படுத்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* பொதுவாக அரசு மருத்துவமனைக்கு சிகிச்சை பெற வரும் நோயாளிகளின் மொத்த எண்ணிக்கையில் சொற்ப பிரிவினரே நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

*(ஆ)* மருத்துவமனைகளைப் பொறுத்தமட்டில் ஈரோடு, வேலூர், கடலூர், நாகர்கோவில், நாகப்பட்டினம், தருமபுரி மற்றும் திருப்பூர் ஆகிய ஏழு இடங்களில் நீரிழிவு நோய் சிகிச்சைப் பிரிவு செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட இடங்கள் நீங்கலாக, ஏனைய இடங்களில் மேற்கண்ட நோய் கண்டறியப்பட்டு தக்க சிகிச்சை அளிக்கப்படுகிறது. நோயின் தன்மையைப் பொறுத்து மேல் சிகிச்சைக்கு அருகாமையில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு நோயாளிகள் அனுப்பப்படுகின்றனர். தற்போது சிறப்பாகச் செயல்பட்டுவரும் 'வருமுன் காப்போம்' திட்ட முகாம்-ன் மூலம், இத்தகைய நோய்கள் உடனுக்குடன் கண்டறியப்பட்டு அறிவுரையும், தக்க சிகிச்சையும் மருத்துவர்களால் அளிக்கப்படுகிறது.





12—

**மின் கட்டணம் வசூல் செய்தல்**

**வினா 33629—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இரண்டு மாதங்களுக்கொரு முறை வசூல் செய்யப்படும் மின் கட்டணத்தை மாதம் ஒருமுறை வசூலிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தற்போதைக்கு எந்தவித மாற்றமும் இல்லை. இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை மின் கட்டணம் வசூல் செய்யும் முறையே அமலில் உள்ளது.

13—

**ஒய்வு பெற்றவர்களுக்குச் சலுகை**

**வினா 16188—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நகராட்சிகளிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு அரசால் அளிக்கப்படும் சலுகைகள் முறையாகக் கிடைப்பதில்லை என்பதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், அதைக் களைய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நகராட்சிகளிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு அரசால் அளிக்கப்படும் சலுகைகள் பெரும்பாலான நகராட்சிகளில் முறையாகக் கிடைக்கின்றன. நிதிப் பற்றாக்குறையுள்ள சில நகராட்சிகளில், அவற்றின் நிதி நிலைமையைப் பொறுத்து ஓய்வு பெற்றவர்களுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள் பகுதியாக அல்லது தாமதமாகக் கிடைக்கின்றன.

(ஆ) அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும் நேர்வுகளில், தொடர்புடைய நகராட்சி ஆணையரைத் தொடர்பு கொண்டும், தக்க அறிவுரை வழங்கியும் அவ்வப்போது நிலைமை சீர் செய்யப்பட்டு வருகிறது.

**14—**

**புதிய பாலம்**

**வினா 22570—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நபார்டு உதவியுடன் தமிழ்நாட்டில் எங்கெங்கு புதியதாகப் பாலம் கட்டும் பணி தொடங்கப்பட உள்ளன?

(ஆ) ஆம் எனில், திண்டுக்கல்லில் புதியதாகப் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நபார்டு உதவியுடன் தமிழ்நாட்டில் கடலூர் நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், திருச்சி, திருநெல்வேலி மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் பாலம் அமைக்கும் பணி தொடங்கப்பட உள்ளன. திண்டுக்கல் மாவட்டத்தில் நபார்டு திட்டம் மூலம் புதியதாக பாலம் கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.



**15—**

**முழுநேர எழுத்தர்**

**வினா 23188—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஊராட்சிப் பணிகள் குறித்த ஏடுகள் பராமரிப்பிற்கு மாநில அரசு ஒரு முழுநேர எழுத்தரை நியமிக்க உத்தேசித்து உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிராம ஊராட்சிகளில் கூடுதலாக ஏற்பட்டுள்ள பொறுப்புகளையும் கருத்தில்கொண்டு ரூபாய் மூன்று இலட்சத்திற்கும் கூடுதலாகச் சொந்த வருவாய் ஆதாரம் உள்ள வசதியான நிலை-I ஊராட்சிகளுக்கு வரும் மொத்த சொந்த வருவாய் ஆதாரத்தில் பத்து விழுக்காடுக்கு சம்பளச் செலவினம் மிகாமல் தொகுப்பு ஊதிய அடிப்படையில் முழுநேர ஊராட்சி எழுத்தரை நியமித்துக் கொள்ள அனுமதியளித்து அரசாணை (நிலை) எண் 122. ஊரக வளர்ச்சித் துறை, நாள் 6-7-1999-ல் அரசு ஆணையிட்டுள்ளது.

**16—**

**முழுநேர மருத்துவர்கள்**

**வினா 28679—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் காலமுறை ஏற்ற சம்பளத்தில் பணிபுரியும் ஊரக மருத்துவர்களை முழுநேரம் பணிபுரிய அரசு ஆணையிடுமா?.

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

[2000 மே 17

(அ) மற்றும் (ஆ) காலமுறை ஊதியம் அளிக்கப்பட்டுள்ள ஊரக மருத்துவ அலுவலர்களின் பணி முழுநேரப் பணி என்றும், அவர்களின் பணி நேரம், முழுநேர மருத்துவமனைகளில் உள்ளதைப்போல், காலை 7-30 மணி முதல் 10-30 மணி வரையும், மாலை 3-00 மணி முதல் 5-00 மணி வரை என்றும் ஏற்கெனவே ஆணையிடப்பட்டு தற்பொழுது நடைமுறையில் உள்ளது.

17—

**சாலை செப்பனிடல்**

**வினா 29165—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகருக்குள் பெரும்பகுதி வார்டு ரோடுகள் பாழ்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) எப்போது சாலைகள் செப்பனிட்டு அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகராட்சிப் பகுதியில் சாலைகள் அமைப்பதற்கும், பராமரிப்பிற்கும் தமிழ்நாடு நகரமைப்பு உள் கட்டமைப்பு நிதி மையத்தின் மூலமாக உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.167.74 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் பொது நிதியில் ரூ.28.45 இலட்சம் அனுமதிக்கப்பட்டு அதில் சாலைப் பணிகள் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

18—

**அலுவலர்கள் குடியிருப்பு பழுதுபார்த்தல்**

**வினா 30427—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, தாமஸ் மலை ஒன்றியத்தில் உள்ள அலுவலர்கள் குடியிருப்பு பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?



2000 மே 17]

(ஆ) ஆம் எனில், தலைமையிடத்தில் அதிகாரிகள் தங்க என்ன நடவடிக்கை அரசு எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, தாமஸ் மலை ஒன்றிய வளாகத்தில் உள்ள 6 குடியிருப்புகள் 30 ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்ட ஓட்டு வீடுகளாகும். இவைகளை இடித்துவிட்டு புதிதாகக் குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ.30.00 இலட்சம் செலவு ஆகும். ஊராட்சி ஒன்றியத்தில் இவற்றைக் கட்டுவதற்குப் போதிய நிதி வசதி இல்லை.

19—

**கழிப்பிட வசதி**

**வினா 30691—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், புதூர் பேரூராட்சி, கதிரவன் காலனியில் பெண்களுக்குப் பொதுக் கழிப்பிட வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) புதூர் பேரூராட்சியில், கதிரவன் காலனியில் கழிப்பிடம் அமைப்பதை அப்பகுதிப் பொதுமக்கள் ஆட்சேபித்ததன் காரணத்தால் கழிப்பிடம் அமைக்கப்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

20—

**பாதாளச் சாக்கடைத் திட்டம்**

**வினா 30914—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி நகராட்சிப் பகுதியிலுள்ள கழிவுநீர் சிற்றாற்றில் கலக்காமல் தடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(இ) எப்போது பணி நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) தென்காசி நகராட்சிப் பகுதியிலுள்ள கழிவுநீர் சிற்றாற்றில் கலக்காமல் தடுக்கப் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். ஆனால் தென்காசி நகராட்சிப் பகுதியில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**21—**

**நிழற்குடை அமைத்தல்**

**வினா 31324—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட வான்ராயன்பட்டிப் பிரிவில் நிழற்குடை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட வான்ராயன்பட்டிப் பிரிவில் நிழற்குடை அமைத்துத் தரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



**22—**

**வடிகால் கட்டுதல்**

**வினா 31357—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, வடமதுரை பேரூராட்சிக்குட்பட்ட சித்தப்பட்டிபுதூருக்கு அருகாமையில் சாக்கடை நீர் தேங்கி அப்பகுதி அசுத்தமாக உள்ளதால் சாக்கடை நீரை வெளியேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வடமதுரை பேரூராட்சிக்குட்பட்ட சித்தப்பட்டிபுதூருக்கு அருகாமையில் இருந்த சாக்கடை நீர், பேரூராட்சித் துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு முழுவதுமாக அகற்றப்பட்டு அப்பகுதி தூய்மைப்படுத்தப்பட்டு வருகிறது. தொடர்ந்து நீர் தேங்காதவாறு இருப்பதற்கு *2000-2001* ஆம் நிதி ஆண்டில் வடிகால் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**23—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா 31464—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஊராட்சி ஒன்றியம், தென்னாத்தூர் ஊராட்சியில் முளப்பட்டு, வேலங்காடு, வரதராஜபுரம் ஆகிய கிராமங்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஊராட்சி ஒன்றியம், தென்னாத்தூர் ஊராட்சியில் முளப்பட்டு, வேலங்காடு, வரதராஜபுரம் ஆகிய குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த 1999-2000 நிதியாண்டில் முதல் கட்டமாக நீராதாரப் பணிகள் முடிக்கப்பட்டவுடன், இதர பணிகளான மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டுதல், நீரேற்று குழாய் மற்றும் பகிர்மானக் குழாய்கள் பதித்தல் ஆகிய பணிகள் யாவும் வரும் நடப்பு நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, குடிநீர்த் திட்டம் இக்குடியிருப்புகளுக்கு நிறைவேற்றப்படும்.

**24—**

**சமுதாயக் கூடம் அமைத்தல்**

**வினா 31862—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை பேரூராட்சி, சித்தூருக்கு சமுதாயக் கூடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2000-2001-ல் கட்டட நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

**25—**

**கூடுதல் கட்டடம்**

**வினா 32763—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுமார் 37 ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் தற்பொழுது போதிய இடவசதி இல்லாததால் கூடுதல் கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்டும் பணிகள் பகுதி-2 திட்டத்தில் எடுத்துச் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால், தற்பொழுது 2000-2001 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டப் பணிகள் முடிவு செய்யப்பட்ட நிலையில், தேவைப்படின் 2001-2002 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் நிதி நிலைக்கேற்ப கட்டடம் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**26—**

**பொறியாளரை நியமித்தல்**

**வினா 34625—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சியில் பொறியாளர் இல்லாததால் நகராட்சிக்குப் பொறியாளரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகராட்சியில் திரு. ஆர். செந்தில்குமார் என்பவர் நகராட்சிப் பொறியாளர் நிலை-3 ஆக 21-2-2000 முதல் பணியில் உள்ளார். மேலும் திரு. என். புகழேந்தி, உதவிப் பொறியாளராக 12-1-2000 முதல் பணிபுரிந்து வருகின்றார். இந்நிலையில் எடப்பாடி நகராட்சியில் பொறியாளர் பணியிடம் ஏதும் காலியாக இல்லை.

**27—**

**வழக்கறிஞர்களை அமர்த்துதல்**

**வினா 26290—திரு. டி. மணி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் வனத் துறைக்குச் சொந்தமான பகுதிகளை தனியார்கள் ஆக்கிரமித்து நீதிமன்றங்களுக்குச் செல்வதால், அவ்வழக்குகளை விசாரிக்க வழக்கறிஞர்களை அமர்த்த வனத் துறை நடவடிக்கை எடுத்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டத்தில் வனத் துறைக்குச் சொந்தமான பகுதிகளை தனியார் ஆக்கிரமித்து அது தொடர்பான 48 வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன.

1982 ஆம் ஆண்டு வரை வன வழக்குகளை அரசு வழக்கறிஞரே கவனித்து வந்தார். பின்னர் வனத் துறைக்காக அரசு சிறப்பு வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வந்துள்ளனர்.

1. 1983 - 1990 - திரு. பி. பழனி
2. 1991 - 1992 - திரு. லட்சுமிகாந்தன்
3. 1993 - 1997 - திரு. எஸ்.பி. ஜட்டின்ராஜ்
4. 1997 ஜூன் முதல் - திரு. ஆர். மகேஸ்வரன்

**28—**

### பட்டா வழங்குதல்

**வினா 32826—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், நடுப்பட்டி ஊராட்சி, காமராஜ் நகர் வனத் துறைப் பகுதியில் வசிக்கும் குடும்பங்களுக்குப் பட்டா வழங்கப்படாததால் மின்சாரம், தண்ணீர் போன்ற வசதிகள் மறுக்கப்படுவதால் அவர்களுக்குப் பட்டா வழங்க அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**





சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், நடுப்பட்டி ஊராட்சி, காமராஜர் நகர் பகுதியானது குண்டக்கல் மற்றும் மனுகொண்டமலை காப்புக் காடுகளுக்கு 20 மீட்டர் அப்பால் உள்ள வருவாய்த் துறையின் பொறுப்பிலுள்ள அரசு புறம்போக்கு தரிசு நில ஆக்கிரமிப்புப் பகுதியாகும். மேற்படி வருவாய்த் துறை நிலத்தில் சுமார் 2.255 எக்டேர் பரப்பில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு 100 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதில் சுமார் 80 வீடுகளுக்கு மின் இணைப்பும் வழங்கப்பட்டுள்ளன. காப்பு வனப் பகுதி எல்லையை ஒட்டி அருகாமையிலுள்ள வருவாய்த் துறை புறம்போக்கு நிலத்திலுள்ள ஆக்கிரமிப்புப் பகுதிகளுக்குப் பட்டா வழங்குவது முறையாகாது. மேலும் அரசு நிலையாணை (Board Standing Order) எண் 38 (iii)-ன்படி காப்பு வன எல்லையை ஒட்டி 40 மீட்டர் முதல் 60 மீட்டர் வரை உள்ள இடங்களில் பட்டாக்கள் ஏதும் வழங்கக் கூடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதால் பட்டா எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை.

**29—**

### அண்ணா உயிரியல் பூங்கா

**வினா 34839—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99 ஆம் ஆண்டில் சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு எவ்வளவு பேர் வருகை புரிந்தனர்?

(ஆ) இதன்மூலம் அரசுக்கு எவ்வளவு வருமானம் கிடைத்தது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) 1998-99 ஆம் ஆண்டில் சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு வருகை தந்த பார்வையாளர்கள் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| பெரியவர்கள் எண்ணிக்கை | 5,59,189 |
| சிறியவர்கள் எண்ணிக்கை | 95,408 |
| பள்ளி மாணவர்கள் எண்ணிக்கை | 20,927 |

(ஆ) இதன் மூலம் அரசுக்குக் கிடைத்த வருமானம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| வ எண் | இனம் | | தொகை |
|---|---|---|---|
| 1. | நுழைவு வாயில் கட்டணம் | ரூ. | 33,14,839 |
| 2. | புகைப்படம் எடுக்கக் கட்டணம் | ரூ. | 1,35,940 |
| 3. | மின்கல ஊர்தியைப் பயன்படுத்துவோரிடமிருந்து வசூலிக்கப்பட்ட கட்டணம் | ரூ. | 3,28,584 |
| 4. | இதர வகை | ரூ. | 7,955 |
| | மொத்தம் | ரூ. | **37,87,318** |

**30—**

## புதிய பேருந்து

**வினா 26206—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பிள்ளையூருக்கு வரும் அரசு நகரப் பேருந்து தடம் எண் 68 அடிக்கடி பழுதுபட்டுவிடுகிறது. நகரப் பேருந்து தடம் எண் 68-க்குப் பதிலாக புதிய பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர்-பிள்ளையூர் தடத்தில் இதற்கு முன் இயங்கிக் கொண்டிருந்த டி.என்.49, என் 0237 என்ற பேருந்திற்குப் பதிலாக டி.என் 49 என் 0581 என்ற நல்ல நிலையிலுள்ள பேருந்து 1-11-1999 முதல் இயக்கப்பட்டு வருகிறது.

**31—**

## பேருந்து பழுதுபார்த்தல்

**வினா 26266—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி (மதுரை கோட்டம்-2) நிறுவனத்தில் உதிரி பாகங்கள் இல்லாமல் பல பேருந்துகள் இயங்காத நிலையில் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைச் சீர் செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 30-5-1999 அன்றைய நிலவரப்படி 194 பேருந்துகள் தகுதிச் சான்றிதழ் புதுப்பிக்கும் பணி, கண்டு பழுதுபார்க்கும் பணி, டயர், ஸ்பிரிங், பாட்டரி, ரேடியேட்டர் மற்றும் புதுப்பிக்கப்பட்ட சாமான்கள் கழிவு செய்யப்பட்டுவிட்டன. 5-8-1999 முதல் 1-10-1999 வரை 91 புதிய பேருந்துகள் பழைய பேருந்துகளுக்குப் பதிலாக இயக்கப்பட்டு வருகின்றன. மீதமுள்ள பேருந்துகளை இயக்குவதற்குத் தேவையான டயர், ஸ்பிரிங், பாட்டரி, ரேடியேட்டர் மற்றும் புதுப்பிக்கப்பட்ட யூனிட்டுகளுக்குத் தேவையான உதிரி பாகங்கள் ஆகியவை அரசிடமிருந்து பெறப்பட்ட நிதி உதவி மூலம் படிப்படியாகக் கொள்முதல் செய்யப்பட்டு பழுதுகள் சரிசெய்யப்பட்டு 7-8-1999 முதல் அனைத்துப் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன.

**32—**

## பேருந்துகளை இயக்குதல்

**வினா 30047—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-2) திருநெல்வேலியைச் சார்ந்த தடம் எண் 70, 72சி ஆகிய திருச்செந்தூர்-நாகர்கோவில் வரை இயக்கப்படும் பேருந்துகள் விஜயாபதி, கூத்தன்குளி ஆகிய மீனவக் கிராமங்களின் வழியாக இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி தடம் எண் 70சி மற்றும் 72 ஆகியவற்றில் இயக்கப்பட்டு வரும் திருச்செந்தூர்—நாகர்கோவில் புறநகர்ப் பேருந்துகளை கோரிக்கையில் கேட்டுள்ளபடி விஜயாபதி மற்றும் கூத்தன்குளி ஆகிய கிராமங்கள் வழியாக இயக்கும்பொழுது வழித்தடத்தின் தூரம் சுமார் 11.00 கி.மீ. அதிகரிப்பதனால் ஏற்படும் கூடுதல் பயணக் கட்டணம், கூடுதல் பயண நேரம், கால அட்டவணை மாற்றம் ஆகியவற்றால் பொது மக்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டு பிரச்சினைகள் எழும். மேலும், விஜயாபதி மற்றும் கூத்தன்குளி ஆகிய கிராமங்களுக்குத் தற்போது 20-க்கும் மேற்பட்ட சுற்றுகள் பேருந்து வசதிகள் இருக்கின்றன. எனவே, தடம் எண் 70சி மற்றும் 72 ஆகியவற்றில் இயக்கப்பட்டு வரும் பேருந்துகளை விஜயாபதி, கூத்தன்குளி ஆகிய கிராமங்கள் வழியாகத் திருப்பி இயக்கச் சாத்தியக்கூறு இல்லை.

**33—**

### புறநகர்ப் பேருந்து

**வினா 31462—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசியிலிருந்து பொன்னூர் கீழ்புத்தூர், தேசூர், வடக்குப்பட்டு செஞ்சி வழியாக திருவண்ணாமலைக்கு புறநகர்ப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வந்தவாசியிலிருந்து திருவண்ணாமலைக்கு பகுதி வாரியாக போதிய அளவு பேருந்து வசதி உள்ளதால் கோரிக்கை வழித் தடத்தில் புறநகர்ப் பேருந்து இயக்க தேவை எழவில்லை.

**34—**

### நகரப் பேருந்து மீண்டும் இயக்குதல்

**வினா 32693—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையத்தில் இருந்து ரெட்டிப்பாளையம், கறம்பை, கல்விராயன்பேட்டை, சித்திரக்குடி வழியாக பூதலூர் வரை ஏற்கெனவே இயங்கி வந்த நகரப் பேருந்து தடம் எண் 65-ஐ மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தடம் எண் 65 நகரப் பேருந்து போதிய மக்கள் பயன்பாடின்மையால், மே 1995-ல் நிறுத்தப்பட்டது. தற்போது கோரிக்கை தடத்தின் பகுதிகளில் கீழ்க்காணும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

| தடம் எண் | வழித்தடம் | நடைகள் |
| --- | --- | --- |
| ஏ 43 | தஞ்சாவூர்-ரெட்டிப்பாளையம்-சிவகாமிபுரம்-வண்ணாரப்பேட்டை | 12 |
| ஏ 7 | தஞ்சாவூர்-ரெட்டிப்பாளையம் சிவகாமிபுரம்-வண்ணாரப்பேட்டை | 2 |
| ஏ 50 | 1) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, வல்லம், ஆலக்குடி, கல்விராயன்பேட்டை, பூதலூர் | 10 |
| | 2) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, ஆலக்குடி, சித்திரக்குடி | 2 |
| 475 சி | தஞ்சாவூர், கள்ளப்பெரம்பூர், பூதலூர், திருக்காட்டுப்பள்ளி | 6 |
| 476, 476பி மற்றும் 476 சி | கந்தவர்க்கோட்டை-திருக்காட்டுப்பள்ளி (வழி) பூதலூர் | 36 |
| ஏ 23 | திருக்காட்டுப்பள்ளி, பூதலூர், செங்கிப்பட்டி | 17 |

எனவே, கோரியுள்ளவாறு தடம் எண் 65-ஐ மீண்டும் இயக்கத் தேவை எழவில்லை.

35—

## புதிய பேருந்து

**வினா 33140—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளியிலிருந்து செங்கிப்பட்டிக்கு அய்யாசாமிப்பட்டி, மருதகுடி, மாதுரான் புதுக்கோட்டை, செல்லப்பன்பேட்டை ஆகிய ஊர்களின் வழியாக புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கைத் தடத்தில் குடியிருப்பு இல்லாத பகுதியாக செல்லப்பன் பேட்டை பிரிவு சாலை-செல்லப்பன்பேட்டை வரையிலான 2 கி.மீ. தவிர அனைத்துப் பகுதிகளும், பகுதி பகுதியாக தேவையான பேருந்து வசதிகள் பெற்றிருப்பதால் கோரிக்கைத் தடத்தில் புதிய பேருந்து இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

36—

## சாலை செப்பனிடல்

**வினா 28727—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான பருத்திக்கோட்டையிலிருந்து பருத்தியப்பர்கோவில் வரை உள்ள சாலை பழுதடைந்துள்ளதை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இவ்வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது கீழ்க்காணும் இரண்டு சாலைகளாகும்:





1. பருத்திக்கோட்டை-வாண்டயாயிருப்பு சாலை கி.மீ.0/0-2/4

2. மாணவாளர் குடியிருப்பு சாலை கி.மீ.0/0-1/4 இவ்விரு சாலைகளையும் மேம்படுத்த ரூ.15 இலட்சம் தேவைப்படும்.

இச்சாலைகளில் ஏற்படும் பழுதுகளை அவ்வப்போது சீர்செய்யவும், வாகனப் போக்குவரத்து தங்கு தடையின்றி செல்லவும் தக்க நடவடிக்கை எடுக்க தஞ்சாவூர் நெடுஞ்சாலை கோட்டப் பொறியாளருக்கு நெடுஞ்சாலைத் துறையின் தலைமைப் பொறியாளரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

37—

## உட்கோட்டப் பொறியாளர் அலுவலகம்

**வினா 29041—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டையில் நெடுஞ்சாலை ஊரகப் பணித் துறை உட்கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி நெடுஞ்சாலை ஊரகப் பணி எல்லையில் சுரண்டை அமைந்துள்ளது. மேலும் தென்காசி வருவாய் வட்ட எல்லையில் ஏற்கெனவே தென்காசி (நெடுஞ்சாலை ஊரகப்பணி) உட்கோட்டம் செயல்பட்டு வருவதால் சுரண்டையில் (நெடுஞ்சாலை ஊரகப் பணி) உட்கோட்ட அலுவலகம் அமைக்க இயலாது.

38—

## கோயில் நிலங்கள்

**வினா 13860—திரு. ச. இராஜரெட்டி:** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தளி கிராமத்தில் உள்ள காசிவிசுவநாத ஆலய மானிய நிலத்தை தளியில் சுகாதார நிலையம் கட்டிக் கொடுக்க மாறுதல் செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) தொட்ட உப்பனூர் தரப்பிலுள்ள ஆதிநாராயணசுவாமி கோயில் நிலங்கள் வழக்கு பூசாரிகளுக்கு சாதகமாக உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். தருமபுரி மாவட்டம் தளி அருள்மிகு காசிவிசுவநாதசுவாமி ஆலயத்திற்குச் சொந்தமாக 5.39.0 ஹெக்டேர் நிலங்கள் உள்ளன. அந்நிலத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டத் தேவையான நிலம் எவ்வளவு என்ற விவரத்துடன் இத்துறையினால் நிர்ணயிக்கப்படும் விலையினை செலுத்த சம்மதம் தெரிவித்து மேற்படி நிலத்தினை விற்பனைக்குக் கேட்டு, கோரிக்கைகள் ஏதும் வரப்பெற்றால் பரிசீலிக்கப்படும்.

(ஆ) தொட்ட உப்பனூர் தரப்பிலுள்ள ஆதிநாராயணசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை அர்ச்சகர்களே தொடர்ந்து சாகுபடி செய்து வருவதால் முன்னாள் அறங்காவலர் இந்நிலங்களை பொது ஏலத்தில்விட முயற்சி மேற்கொண்டுள்ளதை எதிர்த்து அர்ச்சகர்கள் கிருஷ்ணகிரி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு 12/89 தாக்கல் செய்த வழக்கு தென்கனிக்கோட்டை மாவட்ட முன்சீப் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு 18/96 என்ற எண்ணில், 17-07-1996-ல் மனுதாரர் ஆஜராகாததால் மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. பூசாரிகளுக்கு சாதகமாகத் தீர்ப்பு ஏதும் வழங்கப்படவில்லை.

**39—**

### கோயில் நிலங்கள்

**வினா 29927—திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், தேவிகாபுரம் பெரியநாயகி அம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் எத்தனை ஏக்கர் உள்ளன?





(ஆ) யார், யார் ஆக்கிரமித்துள்ளனர்?

(இ) அவைகளை மீட்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், தேவிகாபுரம் அருள்மிகு பெரியநாயகி அம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமாக ஈயக் கொளத்தூர் கிராமத்தில் சர்வே எண் 11/2-ல் 0.77 ஏக்கர் மற்றும் சர்வே எண் 5/3-ல் 0.80 ஏக்கர் நிலம், ஆக கூடுதல் 1.57 ஏக்கர் நன்செய் நிலங்கள் மட்டும் உள்ளன.

(ஆ) இந்நிலங்களில் ஆக்கிரமிப்பு ஏதும் இலலை. இந்நிலங்கள் பசலி 1407-க்கு ரூ.2,272-க்கு சாகுபடி உரிமத்திற்குப் பொது ஏலத்தில் விடப்பட்டுள்ளன.

(இ) இவ்வினா எழாது.

**40—**

### நியாயவிலைக் கடை

**வினா 12128—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, கொங்குப்பட்டியில் தாசனூர் கிராமத்தில் தனியே ஒரு நியாயவிலைக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், கொங்குப்பட்டி கிராம அங்காடி 639 குடும்ப அட்டைகளுடன் மணியக்காரனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்பட்டு வருகிறது. தாசனூர், மோட்டூர், புட்டாகவுண்டனூர் மேற்குத்திகாடு, புதுரெட்டியூர்,

தாண்டாகவுண்டனூர், பெரியகவுண்டனூர் ஆகிய கிராமங்களின் பொதுமக்கள் கொங்குப்பட்டி நியாயவிலைக் கடையில் உணவு பொருட்கள் பெற்று வருகின்றனர். கொங்குப்பட்டி கிராம அங்காடியைப் பிரித்து தாசனூர் பகுதியைச் சேர்ந்த 145 குடும்ப அட்டைகளுடன் பகுதி நேர நியாயவிலைக் கடை திறக்க தற்போதுள்ள விதிகளின்படி வாய்ப்பில்லை. மேலும் குப்பிநாயக்கனூர் மற்றும் அதன் அருகாமையிலுள்ள குடும்ப அட்டைகளை இணைத்து குப்பிநாயக்கனூர் என்னுமிடத்தில் 210 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடையை தொடங்கிட 7-1-2000 அன்று சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி அளித்துள்ளார்.

**41—**

## நியாயவிலைக் கடை தொடங்குதல்

**வினா 20430—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகர் வார்டு எண் 13 மற்றும் 14 வார்டு எண் 1 முண்டாச்சியூர், எடப்பாடி தொகுதி மகுடஞ்சாவடி ஒன்றியம், கண்டர்குலமாணிக்கம், ஆண்டிப்பட்டி ஆகிய இடங்களில் நியாயவிலைக் கடைகள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி பொன்னி கடை எண் 3-ல் 796 குடும்ப அட்டைகள் உள்ளன. இக்கடையில் எடப்பாடி 15-வது வார்டின் 76 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இக்கடைக்கும் எடப்பாடி 13-வது வார்டுக்கும் இடையே ½ கி.மீ. தூரமே உள்ளதால் அரசு விதிகளின்படி 13-வது வார்டில் பகுதி நேர நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எடப்பாடி பொன்னி கடை எண் 2-ல் 787 குடும்ப அட்டைகள் உள்ளன. எடப்பாடி 14-வது வார்டில் 94 குடும்ப அட்டைகள் உள்ளன. எடப்பாடி 14-வது வார்டிற்கும் எடப்பாடி பொன்னி கடை எண் 2-க்கும் இடையே ¾ கி.மீ. தூரமே உள்ளதால்



14-வது வார்டில் பகுதி நேர நியாயவிலைக் கடை திறக்க சாத்தியக் கூறுகள் இல்லை. எடப்பாடி பொன்னி கடை எண் 16-ல் 786 குடும்ப அட்டைகள் உள்ளன. அவற்றில் எடப்பாடி, வார்டு எண் 1-ல் 208 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. எடப்பாடி வார்டு எண் 1-க்கும் எடப்பாடி பொன்னி கடை எண் 16-க்கும் இடையே 1 கி.மீ. தூரமே உள்ளதால் அரசு விதிகளின்படி பகுதி நேர நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

எடப்பாடி பொன்னி கடை எண் 10-ல் 1,402 குடும்ப அட்டைகள் உள்ளன. முண்டாச்சியூர் 141 குடும்ப அட்டைகளும், முண்டாச்சியூர் காட்டு வளவு பகுதியில் 10. குடும்ப அட்டைகளும், மொத்தம் 151 குடும்ப அட்டைகள் மட்டும் உள்ளன. முண்டாச்சியூர் கிராமத்திற்கு சரியான போக்குவரத்து வசதி இல்லாமையாலும், பகுதி நேர நியாயவிலைக் கடைக்கு இலவசக் கட்டடம் கிடைக்காமையாலும் மற்றும் குடும்ப அட்டைகள் 200-க்கும் குறைவாக உள்ளதாலும், முண்டாச்சியூர் காட்டு வளவு கிராமத்தில் பகுதி நேர நியாயவிலைக் கடை தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை. கண்டர்குலமாணிக்கம் நியாயவிலைக் கடையைச் சேர்ந்த ஆண்டிப்பட்டியில் 295 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதி நேர நியாயவிலைக் கடை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**42—**

## விருது வழங்குதல்

**வினா 20487—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு கூட்டுறவுத் துறையில் பணியாற்றும் சிறந்த பணியாளர்கள், அலுவலர்களுக்கு டாக்டர் கலைஞர் பெயரில் விருது வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பரிசீலனை செய்யலாம். சிறந்த கூட்டுறவாளரைத் தேர்ந்தெடுத்து சிறப்பு மாண்புமிகு கலைஞர் விருது என்ற பெயரில்

[2000 மே 17

வழங்கலாம். ஒவ்வொரு கூட்டுறவுத் துறையையும் இதில் தேர்ந்தெடுக்கலாம்.

**43—**

**கூட்டுறவு ரேஷன் கடைகள்**

**வினா 20800—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருப்பூர் வளர்மதி கூட்டுறவு ரேஷன் கடைகளுக்கான ரேஷன் பொருள் தேவையில் நூறு சதவீதம் சப்ளை செய்வதில்லை என்பதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், அதன் காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருப்பூர் வளர்மதி கூட்டுறவு நியாயவிலைக் கடைகளுக்கு மண்ணெண்ணெய் தவிர மற்ற அத்தியாவசியப் பொருட்கள் குறைவாக நுகர்வு செய்யப்பட்டிருப்பது அரசுக்குத் தெரிய வந்துள்ளது. இதற்கான காரணத்தை அறிந்து உரிய நடவடிக்கை மேற்கொண்டு பொது விநியோகத் திட்டம் சீராக நடைபெறவும், அதற்குத் தகுந்தாற்போல் அத்தியாவசியப் பொருட்களின் நுகர்வினை மேற்கொள்ளவும் நுகர்வுப் பணியில் தொய்வு ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவும் கோயம்புத்தூர் மண்டல இணைப் பதிவாளருக்குத் தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**44—**

**கூடுதல் நியாயவிலைக் கடைகள்**

**வினா 30237—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 17]

*(அ)* திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், உவரி இடிந்தகரை கிராமங்களில் கூடுதல் நியாயவிலைக் கடைகள் அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம் உவரி கிராமம் மற்றும் இடிந்தகரை கிராமம் ஐஸ்பிளான்ட் அருகில் பகுதி நேர நியாயவிலைக் கடைகள் திறப்பதற்கு 4-1-2000 மற்றும் 11-1-2000 நாளிட்ட கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசாணைகளில் தக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**45—**

**நியாய விலைக் கடை அமைத்தல்**

**வினா 32719—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், திருநல்லூர் ஊராட்சியில் ஆண்டியத்தெரு, சதுர்காடு ஆகிய பகுதிகளில் நியாய விலைக் கடை ஒன்று அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், திருநல்லூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்ட திருநல்லூர் அங்காடியில் 429 குடும்ப அட்டைகள் உள்ளன என்றும் இவற்றில் சதுர்க்காடு ஆண்டியத்தெருவில் உள்ள 220 குடும்ப அட்டைகளைப் பிரித்து சதுர்க்காடு ஆண்டியத்தெருவில் பகுதி நேரக் கடை தொடங்க தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது.

46—

## நியாயவிலைக் கடைக்குக் கட்டடம்

**வினா 33108—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டத்தில் அனைத்து நியாய விலை அங்காடிகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டத்தில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் 843 முழுநேர அங்காடிகளும், 132 பகுதி நேர அங்காடிகளும், 2 மகளிர் அங்காடிகளும் ஆக மொத்தம் 977 அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் முழுநேர அங்காடிகளில் 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆம் ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களில் 228 அங்காடிகளுக்கு கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. மேலும் 1999-2000 ஆண்டில் 116 இடங்கள் ஊரக வளர்ச்சி முகமையால் தெரிவு செய்யப்பட்டு சொந்தக் கட்டடம் கட்டப்படும். மேலும் இதர அங்காடிகளுக்கு சொந்தக் கட்டடம் படிப்படியாக வரும் ஆண்டுகளில் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

47—

## பட்டதாரி ஆசிரியர்களுக்கு முன்னுரிமை

**வினா 31121—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவல் துறையில் பட்டதாரிகளுக்கு பதவி உயர்வில் முன்னுரிமை வழங்குவதுபோல் சிறைத் துறை பட்டதாரி பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை அமல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**



(அ) மற்றும் (ஆ) காவல் துறையில் பட்டதாரி காவலர்களுக்குப் பதவி உயர்வில் முன்னுரிமை வழங்குவதுபோல் சிறைத் துறையில் பட்டதாரி காவலர்களுக்குப் பதவி உயர்வில் முன்னுரிமை வழங்க விதிகளில் வழிவகை ஏதும் செய்யப்படவில்லை.

48—

## பஞ்சாலையில் வேலைவாய்ப்பு

**வினா 12870—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் புதிதாகத் தோன்றிய பஞ்சாலைகள் எத்தனை?

(ஆ) அவற்றில் வேலைவாய்ப்புப் பெற்றோர் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் புதிதாகத் தோன்றிய பஞ்சாலைகளின் எண்ணிக்கை மொத்தம் 1,103 ஆகும். அவை பின்வருமாறு:

| | |
|---|---|
| 1. சிறிய ஆலைகள் | 703 |
| 2. பெரிய ஆலைகள் | 384 |
| 3. ஏற்றுமதி பிரிவுகள் | 16 |
| மொத்தம் | 1103 |

(ஆ) மேற்கண்ட ஆலைகளினால் வேலைவாய்ப்புப் பெற்றோர் உத்தேசமாக 72,500 பேர்கள் ஆவர்.

49—

## இலவச வேட்டி, சேலை

**வினா 32684—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99 ஆம் ஆண்டு ஏழை, வறியவர்களுக்கு இலவச வேட்டி, சேலை எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) வழங்கப்பட்ட வேட்டி, சேலை போதுமானதாக இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) 1998-99 ஆம் ஆண்டிற்கான இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் பொங்கல் 1999-க்கு மொத்தம் 77.10 இலட்சம் சேலைகளும், 70.42 இலட்சம் வேட்டிகளும் ஏழையெளிய மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) மற்றும் (இ) ஒவ்வோர் ஆண்டும் இலவச வேட்டி, சேலை திட்டத்தின்கீழ் வழங்கப்பட வேண்டிய வேட்டி, சேலைகளின் எண்ணிக்கை, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்படும் விவரங்களின் அடிப்படையில், முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் தேவைப்பட்டியலின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு, அதன்படி உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு, பயனாளிகளுக்கு வழங்குவதற்காக வருவாய்த் துறையினரிடம் ஒப்படைக்கப்படுகிறது.

**50—**

**மாணவ/மாணவியர் விடுதி தொடங்குதல்**

**வினா 29955—திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கண்டமங்கலம் ஒன்றியத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான மாணவர் விடுதியோ அல்லது மாணவியர் விடுதியோ இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஏதாவது ஒரு விடுதி தொடங்க அரசு முன்வருமா?



விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியத்தில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்/மாணவியர் விடுதிகள் இயங்கவில்லை. மேலும், விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியத்தில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்/மாணவியர் விடுதி திறப்பதுகுறித்து செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் இல்லை.

## இருபதாவது பட்டியல்

**1—**

**புதிய கழிப்பிட வசதி**

**வினா 32092—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர்கள் கழிப்பிடத்தைப் பழுதுபார்த்துச் செப்பனிட்டும், மாணவர்களுக்கு புதிய கழிப்பிட வசதி செய்து தரவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் அரசு மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் கழிப்பிடத்தைப் பழுதுபார்த்தல் மற்றும் மாணவர்களுக்கு புதிய கழிவறை வசதி செய்து தருதல் ஆகிய பணிகளுக்காக இவ்வாண்டு அரசின் நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே, சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இப்பணியை மேற்கொள்ள இயலுமா என தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினரின் இசைவு பெறப்படின், இப்பள்ளிக்குக் கழிப்பறைக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2—

## சைக்கிள் நிறுத்துமிடம் கட்டுதல்

**வினா 32177—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் ஆண்கள் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு சைக்கிள் நிறுத்துமிடம் ஒன்று கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் ஆண்கள் அரசு மேல்நிலைப் பள்ளியில் சைக்கிள் நிறுத்துமிடம் அமைப்பது சார்பாக இவ்வாண்டு இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே, சட்டமன்ற/ பாராளுமன்ற உறுப்பினர்களின் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் இவ்வசதியை செய்து கொடுக்க இயலுமா என தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட சட்டமன்ற/ பாராளுமன்ற உறுப்பினரின் இசைவு பெறப்படின், இப்பள்ளிக்கு சைக்கிள் நிறுத்துமிடம் கட்டிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3—

## கழிப்பிட வசதி

**வினா 32579—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கருக்காடிப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு தனித் தனி கழிப்பிட வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசாணை நிலை எண் 222, பள்ளிக் கல்வி, நாள் 11-6-1998 இல் தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கருக்காடிப்பட்டி அரசு



மேல்நிலைப் பள்ளிக்கு கழிப்பறை வசதி செய்துதர ஆணையிடப்பட்டு, தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களால் பணிகள் முடிக்கப்பட்டு, பள்ளியின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

4—

## கோளரங்கு நிறுவுதல்

**வினா 33638—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர், அரசுக்குச் சொந்தமான நிலத்தில் கோளரங்கு எப்பொழுது நிறுவப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தற்பொழுது கோவை மண்டல அறிவியல் மையம் அமைப்பதற்கென 5.2 ஏக்கர் பரப்பளவில் கோவை மாநகராட்சிக்குட்பட்ட மையப்பகுதியில் வெரைட்டி ஹால் சாலை மற்றும் அவினாசி சாலையில் அமைந்துள்ள மேம்பாலத்தின் அருகே சர்வே எண் 126-ல் அமைந்துள்ள நிலம் இத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டு, இதற்காக கோவை மாநகராட்சி மன்றம் 25-10-1999 அன்று தீர்மானம் எண் 181-ன் மூலம் மேற்கூறிய நிலத்தினை இலவசமாக இம்மையத்திற்கு அளிப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இம்மையத்திற்கு நிலமாற்றம் செய்திட உரிய கருத்துரு, கோவை மாநகராட்சி ஆணையரால் அனுப்பி வைக்கப்பட்டு அரசின் ஆய்வில் உள்ளது. நிலமாற்று ஆணை வெளியிடப்பட்டவுடன் கோளரங்கம் அமைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5—

## பல்கலைக்கழகத்தில் ஐ.ஏ.எஸ். தேர்வுப்பாடம்

**வினா 12794—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் ஐ.ஏ.எஸ். தேர்வுக்குரிய பாடங்களைச் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2000 மே 17

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இல்லை.

6—

**விவரத் தொகுப்பு**

**வினா 22658—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு மாவட்டத்தின் முழு விவரங்களடங்கிய 'விவரத் தொகுப்பு' வெளியிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

ஆம். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் முழு விவரங்களடங்கிய விவரத் தொகுப்பு வெளியிடும் பணி தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் நடைபெற்று வருகிறது.

மாவட்ட விவரச் சுவடிகள் ஒருகால அட்டவணைப்படி தயாரிக்கப்படுகின்றன. ஒரு மாவட்ட விவரச் சுவடி தயாரிக்க ஒன்றரை முதல் இரண்டு ஆண்டுகள் ஆகும் என்று கணக்கிட்டு, அதன் அடிப்படையில் கால அட்டவணை தயாரிக்கப்பட்டு, அரசின் ஒப்புதல் பெறப்படுகிறது. அதன் பின்னர், அட்டவணைப்படி, திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இதுவரை 13 மாவட்டங்களுக்கான விவரச் சுவடிகள் வெளியிடப்பட்டுள்ளன. 3 மாவட்டங்களுக்கான விவரச் சுவடிகள் விரைவில் வெளியிடப்படவுள்ளன. 6 மாவட்டங்களுக்கான விவரச் சுவடிகள் கால அட்டவணைப்படி தயாரிக்கப்படவுள்ளன.

7—

**கணினி வைத்துக்கொள்ள கட்டடம்**

**வினா 22966—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பாவூர்சத்திரம், த.பி.சொ. அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பொதுமக்கள் நன்கொடையாக



2000 மே 17]

வழங்கியுள்ள கணினிகளை நிறுவுவதற்குத் தேவையான கட்டட வசதிகளை செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாராளுமன்ற/சட்டமன்ற உறுப்பினர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் பள்ளிகளில் வசதிகள் செய்து கொடுப்பதற்கென அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த ஒதுக்கீட்டிலிருந்து இத்திட்டத்தின்கீழ் மேற்கண்ட ஊர்/தொகுதி பாராளுமன்ற/சட்டமன்ற உறுப்பினர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இப்பள்ளிக்கு கணினியை வைத்துக்கொள்ள தனியாக அறை ஒன்றினைக் கட்ட நடவடிக்கை எடுக்கும்படி திருநெல்வேலி மாவட்ட ஆட்சியருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

8—

**நூலகம்**

**வினா 31696—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், ஆர். புதுக்கோட்டை ஊராட்சி, புதுக்கோட்டைக்கு நூலகம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொது நூலகச் சட்டத்தின்படி 1000 மக்கள்தொகை உள்ள கிராமங்களில் பகுதிநேர நூலகம் திறக்க வழிவகை உள்ளது. வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், ஆர். புதுக்கோட்டை ஊராட்சியின் மக்கள் தொகை 2500 ஆகும். எனவே, இந்த கிராமத்தில் ஒரு பகுதிநேர நூலகம் திறக்க வழிவகையுள்ளது. ஆனால், நூலகம் திறக்க அவ்வூர் மக்களிடமிருந்து

[2000 மே 17

கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை. ஆர்.புதுக்கோட்டை ஊராட்சிக்கு 17 கிலோ மீட்டர் தொலைவில் குஜிலியம்பாறையில் ஒரு கிளை நூலகமும், 18 கிலோ மீட்டர் தொலைவில் எரியோட்டில் ஒரு கிளை நூலகமும் மற்றும் 7 கிலோ மீட்டர் தொலைவில் கோவிலூர் கிராமத்தில் பகுதிநேர நூலகமும் செயல்படுகின்றன. இருந்தபோதிலும், நூலகம் திறக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளை அவ்வூர் மக்கள் நிறைவு செய்வார்களேயானால், அவ்வூரில் ஒரு பகுதிநேர நூலகம் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(1) நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

(2) பின்னர் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை, நூலக ஆணைக் குழு பெயருக்குப் பத்திரப்பதிவு செய்து தருதல் வேண்டும்.

(3) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(4) ரூ.2000 மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

(5) ரூ. 1000 தொகை செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

9—

**புதிய நூலகம்**

**வினா 31701—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஒன்றியம், வெல்லப்பட்டி ஊராட்சி அச்சனம்பட்டிக்கு புதிய நூலகம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொது நூலகச் சட்டத்தின்படி 1000 மக்கள்தொகைக்கு மேல் உள்ள பகுதிகளில் பகுதிநேர நூலகம் திறக்க



2000 மே 17]

வழிவகை உள்ளது. வேடசந்தூர் ஒன்றியம், வெல்லப்பட்டி ஊராட்சி, அச்சனம்பட்டி கிராமத்தின் மக்கள்தொகை சுமார் 3200 ஆகும். எனவே, மக்கள்தொகை அளவில் இவ்வூரில் பகுதிநேர நூலகம் திறக்க வழிவகையுள்ளது. ஆனால், அக்கிராமப் பொது மக்களிடமிருந்து நூலகம் திறக்க வேண்டி எந்த ஒரு கோரிக்கையும் பெறப்படவில்லை. அச்சனம்பட்டி கிராமத்திற்கு அருகில் 4 கிலோ மீட்டர் தூரத்தில் கோவிலூர் என்ற இடத்தில் பகுதிநேர நூலகமும், 8 கிலோ மீட்டர் தூரத்தில் எரியோடு என்ற கிராமத்தில் கிளை நூலகமும் செயல்படுகின்றன. அச்சனம்பட்டி கிராம பொதுமக்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்வார்களேயானால் அவ்வூரில் ஒரு பகுதிநேர நூலகம் திறக்க வழி வகையுள்ளது.

(1) நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

(2) எதிர்காலத்தில் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை, நூலக ஆணைக் குழு பெயருக்குப் பத்திரப் பதிவு செய்து தருதல் வேண்டும்.

(3) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(4) ரூ.2000 மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

(5) ரூ. 1000 தொகை செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

10—

**உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டட வசதி**

**வினா 31739—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், புல்லுக்காட்டுவலசை அரசு உயர்நிலைப் பள்ளிக்கு மேலும் 4 கூடுதல் வகுப்பறைகள் கட்டித்தரவும், மாணவர்களுக்கு கழிப்பிடக் கட்டடம் கட்டித்தரவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

[2000 மே 17

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், புல்லுக்காட்டுவலசை அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறை மற்றும் கழிப்பிட வசதி செய்துதர, இவ்வாண்டு இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே, சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து இத்தகைய பணிகளுக்கு நிதி ஒதுக்கத் தொடர்புடைய சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகுமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

11—

**புதிய கட்டுமானப் பணிகள்**

**வினா 33627—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் புதிய கட்டுமானப் பணிகள் எப்போது நிறைவுபெறும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

முதற்பகுதி கட்டுமானப் பணிகள் ஜூலை 2000 க்குள் முடிவுறும்.

12—

**மாதிரிப் பல்கலைக்கழகம்**

**வினா 33639—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் ஒரு மாதிரிப் பல்கலைக்கழகம் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இல்லை.



2000 மே 17]

13—

**நூலகத்திற்கு புதிய நூல்கள்**

**வினா 34290—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரில் உள்ள கிளை நூலகத்தில் 1999 ஆம் ஆண்டு எவ்வளவு மதிப்புள்ள தரமுள்ள புதிய நூல்களை அரசு வழங்கியுள்ளது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரில் உள்ள கிளை நூலகத்தில் 1999 ஆம் ஆண்டு ரூபாய் இருபத்து எழாயிரத்து இருநூற்று ஐம்பது (ரூ.27,250) மதிப்புள்ள 1,159 தரமுள்ள புதிய தமிழ் நூல்களை அரசு வாங்கி வழங்கியுள்ளது.

14—

**மருத்துவக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு**

**வினா 27200—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவக் கல்லூரிகளில் தமிழிசை மாணவர்கள் இடம் ஒதுக்கித்தரக் கோரி அரசிடம் விண்ணப்பித்துள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1998-99 ஆம் கல்வியாண்டில் திரு. சிவசங்கரன் என்பவர் தமிழறிஞர்களின் குழந்தைகளுக்கான சிறப்பு ஒதுக்கீட்டின்கீழ் இசைத் தமிழுக்குத் தொண்டாற்றியவர் என்ற முறையில் மருத்துவக் கல்லூரிகளில் ஓர் இடம் ஒதுக்கித்தர விண்ணப்பித்திருந்தார். ஆனால் அரசின் கொள்கைப்படி, மருத்துவப் படிப்பிற்கு தமிழ்மொழி

வளர்ச்சிக்குப் பாடுபட்ட பெற்றோர்களின் குழந்தைகள் மட்டுமே விண்ணப்பித்திருந்தால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். எனவே, இவரது விண்ணப்பம் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இதன் விவரம் மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டது. மேலும், விண்ணப்பதாரர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது.

**15—**

### போலியோ தடுப்பு முகாம்

**வினா 33270—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதிக்குள் போலியோ தடுப்பு முகாம் எத்தனை இடங்களில் நடைபெற்றது?

(ஆ) அவற்றை யார் யார் தொடங்கி வைத்தனர்?

(இ) அவற்றால் பயனடைந்த குழந்தைகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் தொகுதிக்குள் 163 இடங்களில் போலியோ தடுப்பு முகாம்கள் நடைபெற்றன.

(ஆ) போலியோ சொட்டு மருந்து முகாம்களை அடையாளபூர்வமாக தொடங்கி வைத்தவர்கள் விவரம் வருமாறு:-

| முகாம் தேதி | மையம் | தொடங்கி வைத்தவர் |
|---|---|---|
| 1. 24-10-1999 | டிஎஸ்.கந்தசாமி செட்டியார், மகப்பேறு இல்லம் திருப்பூர் | திரு. க. செல்வராஜ், நகர்மன்றத் தலைவர், திருப்பூர் நகராட்சி. |
| 2. 21-11-1999 | சந்திரகாவி நகராட்சி தொடக்கப் பள்ளி, திருப்பூர். | திரு. தி. பால்சாமி, ஆணையாளர், திருப்பூர் நகராட்சி. |



| முகாம் தேதி | மையம் | தொடங்கி வைத்தவர் |
|---|---|---|
| 3. 19-12-1999 | சந்திரகாவி நகராட்சி தொடக்கப் பள்ளி மற்றும் டிஎஸ். கந்தசாமி செட்டியார் மகப்பேறு இல்லம், திருப்பூர். | திருமதி பால்சாமி, ஆணையாளர், திருப்பூர் நகராட்சி. |
| 4. 23-1-2000 | சந்திரகாவி நகராட்சி தொடக்கப் பள்ளி மற்றும் டிஎஸ். கந்தசாமி செட்டியார் மகப்பேறு இல்லம், திருப்பூர். | திருமதி பால்சாமி ஆணையாளர், திருப்பூர் நகராட்சி. |

(இ) மேலே குறிப்பிட்டுள்ள நாட்களில் போலியோ முகாம்கள் நடத்தியதின்மூலம் மொத்தம் 65,043 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

**16—**

### போலியோ பாதிப்பு

**வினா 34880—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1999-2000 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் போலியோவால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் எத்தனை பேர் என்று கண்டறியப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

1999-2000-ல் பிப்ரவரி முடிய போலியோவினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மொத்தம் 27.

**17—**

### வீட்டுமனைப் பட்டா

**வினா 28501—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 17

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கஞ்சல்நத்தம் ஊராட்சி, ஏரியூர், ஈச்சம்பாடி, கூர்க்கம்பட்டிதண்டா, பட்டக்காரன்கொட்டாய் ஆகிய கிராமங்களில் புறம்போக்கு நிலங்களில் வீடுகட்டி வாழும் ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கஞ்சல்நத்தம் உள்வட்டம், ஏரியூர், ஈச்சம்பாடி, கார்ச்சம்பட்டி மற்றும் பட்டக்காரன்கொட்டாய் ஆகிய கிராமங்களில் உள்ள புறம்போக்கு நிலங்கள் முறையே பாட்டை, பாரஸ்ட் பங்களா, வாரி மற்றும் அனாதீனம் என்ற வகைபாட்டினைக் கொண்டது. இந்த அரசு புறம்போக்கு நிலங்களில் மொத்தம் 57 குடும்பங்கள் வீடுகட்டி வசித்து வருகின்றனர். இவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்து நில வகைபாடு செய்ய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நில வகைப் பாடு மாற்றம் செய்யப்பட்ட பின்னர் 57 குடும்பங்களுக்கும் தகுதியின் அடிப்படையில், விதிமுறைகளின்படி வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

**18—**

### வெகுமதி

**வினா 30376—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், 1992 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ளத்தின்போது ஆற்றில் அடித்துச் சென்ற பலரை காப்பாற்ற பெருமுயற்சி எடுத்த நித்திரவிளை உதவி ஆய்வாளர் மற்றும் மார்த்தாண்டம் ஆய்வாளர் ஆகியோர்க்கு அரசு எந்த வெகுமதியும் அளிக்கவில்லை என்பதை அறியுமா?

(ஆ) வெகுமதி வழங்குமா?



2000 மே 17]

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் 1992 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின்போது நித்திரவிளை உதவி ஆய்வாளர் மற்றும் மார்த்தாண்டம் ஆய்வாளர் ஆகியோர் விபத்திலிருந்து யாரையும் காப்பாற்றியதாக தகவல் ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**19—**

### குடி தண்ணீர் இணைப்பு

**வினா 25197—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, கப்பியறை பேரூராட்சி, பனங்குழியில் ஏற்கெனவே போடப்பட்ட குழாயில் குடி தண்ணீர் இணைப்பு வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பனங்குழியில் ஏற்கெனவே போடப்பட்ட குழாயில் குடிநீர் இணைப்பு வழங்க பனங்குழி அம்மன்கோயில் அருகில் உள்ள பேரூராட்சிக்குச் சொந்தமான கிணற்றின் அருகில் பம்ப் அறை கட்டி 5 குதிரை வேக நீர்மூழ்கி மின்மோட்டார் பொருத்தி 300 மீட்டர் பைப் லைன் அமைத்து ஏற்கெனவே போடப்பட்டுள்ள பைப் லைனுடன் இணைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவுற்றதும் பத்மநாபபுரம் தொகுதி கப்பியறை பேரூராட்சி பனங்குழியில் ஏற்கெனவே போடப்பட்ட குழாயில் குடிநீர் இணைப்பு வழங்கப்படும்.

**20—**

### கிராமங்களுக்கு குடிநீர் வசதி

**வினா 30107—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், குபேரப்பட்டணம் கிராமத்திற்கு புதிய குடிநீர் திட்டத்தைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், குலராமநல்லூர் ஊராட்சியைச் சார்ந்த குபேரப்பட்டணம் குடியிருப்பு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டு குடிநீர் வழங்குவதற்கென திட்ட மதிப்பீடு சுமார் ரூ.6.98 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் (1999-2000) இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டு வரப்படும்.

**21—**

### மக்கள் பிரதிநிதிகளுக்கு அதிகாரம்

**வினா 33889—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி ஆகியவற்றுக்கு மற்ற மாநிலங்களைப்போல் அதிகாரம் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



(ஆ) இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பதினொன்றாவது அட்டவணையில், மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு 29 பொருள்களில் பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி இரண்டு கட்டமாக மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளன.

**22—**

### நீர்வடிப்பகுதி திட்டம்

**வினா 24207—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில மற்றும் மாவட்ட அளவில் நீர்வடிப்பகுதி எந்த அடிப்படையில் தெரிவு செய்யப்படுகிறது?

(ஆ) இத்திட்டத்தின்கீழ் என்னென்ன முக்கிய பணிகள் செயல்படுத்தப்படுகின்றன?

(இ) இந்த ஆண்டு இத்திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட நிதி மற்றும் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் வேளாண்மைத் துறையின்கீழ் செயல்படுத்தப்படும் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தில் நீர்வடிப்பகுதிகள் தெரிந்தெடுப்பதில் கீழ்க்காணும் நெறிமுறைகள் பின்பற்றப்படுகின்றன:-

(அ) பெருமளவு குடிநீர் பற்றாக்குறை உடைய நீர்வடிப்பகுதி.

(ஆ) ஆதிதிராவிடர்/பழங்குடியினரைச் சேர்ந்த பெருமளவு மக்கள் சார்ந்துள்ள நீர்வடிப்பகுதி.

(இ) பெருமளவு தரிசு நிலங்களையுடைய நீர்வடிப்பகுதி.

(ஈ) பெருமளவு பொது நிலங்களையுடைய நீர்வடிப்பகுதி.

(உ) நிர்ணயிக்கப்பட்ட குறைந்த அளவு ஊதியங்களைவிட கணிசமான அளவிற்கு குறைவான ஊதியங்கள் வழங்கப்படுகிற நீர்வடிப்பகுதி.

(ஊ) ஏற்கெனவே மேம்படுத்தப்பட்டுள்ள/மேம்படுத்துவதற்குத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள நீர்வடிப்பகுதியை அடுத்துள்ள இன்னொரு நீர்வடிப்பகுதி.

ஒவ்வொரு நீர்வடிப்பகுதியும் தோராயமாக 500 எக்டேர் நிலப்பரப்பு கொண்டதாகவும் தேர்வு செய்யப்படுகிறது.

(ஆ) வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டத்தில், மண்வளம் மற்றும் நீர்வளம் ஆகியவற்றை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. உதாரணமாக தடுப்பணைகள், கசிவுநீர்க் குட்டைகள், கால்நடைக் குட்டை கட்டுதல், நீர்வரத்து வாய்க்கால் மற்றும் குளங்கள் சீரமைத்தல், தாவர வரப்பு, மண்வரப்பு, கல்வரப்பு, படிவரப்பு போன்றவை மண் அரிமானத்தைத் தடுக்க அமைக்கப்படுகின்றன. காடுகள் வளர்த்தல், பழத்தோட்டங்கள், விறகுமரத் தோட்டங்கள் ஏற்படுத்துதல், செயல்முறை விளக்கப் பயிற்சி போன்ற பணிகளும் செயல்படுத்தப்படுகின்றன. மேலும், ஒவ்வொரு நீர்வடிப்பகுதிக்கும் துறைமுகப் பணிகளாக அந்நீர்வடிவப்பகுதி பயனாளிகள் விரும்பும் பணிகள் ரூ.80,000-க்கு மிகாமல் செயல்படுத்தப்படுகின்றன. உதாரணமாக, பேருந்து நிறுத்துமிடம், பள்ளிக்கூட சுற்றுச்சுவர் கட்டுதல், நூல்நிலையம் அமைத்தல் போன்ற பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

(இ) 1999-2000 ஆம் ஆண்டிற்கு இதுவரை ரூ.103.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ள இத்திட்டத்திற்கு இதுவரை ரூ.1186.99 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத் தொகை, நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்ட பணிகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டதாலும், சில மாவட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு மத்திய/மாநில அரசுகளால் செய்யப்பட்டதாலும், நிலுவையில் இருந்த தொகையையும் சேர்த்து செய்யப்பட்டதாகும்.

23—

### விதைகள்

**வினா 24874—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டத்தில் தரமற்ற, முளைப்புத்திறன் இல்லாத விதைகள் விவசாயக் கிடங்குகள் மூலம் வழங்கப்பட்டதாக புகார் ஏதேனும் வந்துள்ளதா?



(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திரு. அ. வை. தட்சிணாமூர்த்தி என்பவர் கூறிய புகார் மீது மேற்கொண்ட விசாரணையில் நாற்றங்காலில் விதைகள் நல்ல முளைப்புத்திறன் உள்ளதாகவும், இப்புகார் உண்மைக்குப் புறம்பானது எனவும் தெரிய வந்துள்ளது. மேலும் இவ்விதைகளைப் பெற்றுச்சென்ற இதர விவசாயிகளிடமிருந்து புகார் ஏதும் பெறப்படவில்லை. நல்ல முளைப்புத்திறன் உள்ளதாக சில விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

24—

### சம்பா பயிர் பயிரிடப்பட்ட விவரம்

**வினா 24881—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-1999 ஆம் ஆண்டு திருவாரூரில் எத்தனை லட்சம் எக்டேரில் சம்பா பயிர் பயிரிடப்பட்டது?

(ஆ) தாளடிப் பயிர்கள் எவ்வளவு ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 1998-1999 ஆம் ஆண்டு திருவாரூர் மாவட்டத்தில் சுமார் 1.112 லட்சம் எக்டேரில் (2.747 லட்சம் ஏக்கர்) சம்பா நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டது.

(ஆ) சுமார் 0.276 லட்சம் எக்டேரில் (0.682 லட்சம் ஏக்கர்) தாளடி நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டது.

[2000 மே 17

25—

### இலவச தானிய விதைகள் வழங்குதல்

**வினா 30363—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு கரும்பு விதை மற்றும் ஏனைய தானிய விதைகளை இலவசமாக வழங்க அரசு நடப்பாண்டில் நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

கரும்பு விதை மற்றும் ஏனைய தானிய விதைகளை இலவசமாக விவசாயிகளுக்கு வழங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

26—

### கரும்பு விவசாய செலவுகள்

**வினா 31203—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குட்பட்ட கரும்பு விவசாயிகளுக்கு வெட்டுக்கூலி, கரும்பு ஏற்றிச் செல்லும் வாகன வாடகை உட்பட எல்லாச் செலவுகளையும் சர்க்கரை ஆலையே ஏற்றுக்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குட்பட்ட கரும்பு விவசாயிகளுக்கு வெட்டுக்கூலி, கரும்பு ஏற்றிச் செல்லும் வாகன வாடகை உட்பட எல்லாச் செலவுகளையும் சர்க்கரை ஆலையே ஏற்கத்தக்க சாத்தியக்கூறுகள் இல்லை.



2000 மே 17]

27—

### கரும்பு அபிவிருத்தி திட்டம்

**வினா 33853—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் கரும்பு அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் சுமார் 3,500 எக்டேரில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. மாநில அரசின் கரும்பு அபிவிருத்தி திட்டத்தில் கீழ்கண்ட இனங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

1. தரமான கரும்பு கரணைகளை நடுதல்.
2. தக்க சமயத்தில் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்தல்.
3. தேவைக்கு ஏற்ப உரம் இடுதல்.
4. கரும்பு நிருபண தளைகள் அமைத்தல்.

இதற்கென தனியாக நிதி ஒதுக்கீடு இல்லை.

2. தமிழ்நாட்டில் மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் "கரும்பு சாகுபடியை அடிப்படையாகக் கொண்ட பயிர் வளர்ப்பில் நிலையான வளர்ச்சிக்கான திட்டம்" காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, கடலூர், தருமபுரி, கோயம்புத்தூர், மதுரை, தேனி மற்றும் விருதுநகர் ஆகிய 10 மாவட்டங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

3. இத்திட்டத்தினை தமிழ்நாட்டில் பிற மாவட்டங்களிலும் செயல்படுத்த மத்திய அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளது. அனுமதி பெற்றவுடன் பிற மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

28—

### டிராக்டர்கள் வழங்குதல்

**வினா 33866—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* விவசாயிகள் வங்கி காசோலையை 'தாய்' நிறுவனத்தில் ஒப்படைத்து பல மாதங்கள் கழிந்த பின்னரே அவர்களுக்கு டிராக்டர்கள் காலதாமதமாக வழங்கப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

*(ஆ)* அதன் காரணமாக விவசாயிகளின் பங்குத் தொகைக்கான வட்டி விரயமாவதோடு அவ்வப்போது ஏற்படும் விலை வித்தியாசத்தில் பாதிக்கப்படாமல் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* இக்கேள்விக்கு இடமில்லை.

29—

### நீர்பிடிப்பு ஆதாரப் பணி

**வினா 34393—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* 1998-99-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிய தமிழகத்தில் நீர்பிடிப்பு ஆதாரப்பணிக்காக எத்தனை பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன? இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

*(ஆ)* சேலம் மாவட்டத்தில் நீர்பிடிப்பு/ஆதாரப்பணி எத்தனை பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன? எவ்வளவு தொகை செலவிடப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**



*(அ)* தமிழகத்தில் நீர்பிடிப்பு ஆதாரப் பணிக்காக ஊரக வளர்ச்சி பணிகளின்கீழ் 1998-99-ஆம் ஆண்டு 62 கசிவுநீர்க் குட்டைகள் ரூ.118.88 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. சிறுபாசன ஏரிகள், ஊருணிகள், கிராமக் குளங்கள் போன்ற 5528 நீர்சேகரிப்புப் பணிகள் ரூ.7226.90 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன. மண்வளப் பாதுகாப்புப் பணிகள் திட்ட உயர வரப்புப் பணிகளில் ரூ.1602.28 இலட்சம் செலவில் 89660 எக்டேர் பரப்பளவு பயனடையுமாறு மேற்கொள்ளப்பட்டுள்ளன (மொத்த செலவுத் தொகை ரூ.8948.06 இலட்சம்).

*(ஆ)* சேலம் மாவட்டத்தில் 1998-99 ஆம் ஆண்டு 8 புதிய கசிவுநீர்க் குட்டைகள் ரூ.13.70 இலட்சத்தில் அமைக்கப்பட்டுள்ளன. சிறுபாசன ஏரிகள், ஊருணிகள், கிராமக் குளங்கள் போன்ற 72 நீர் சேகரிப்புப் பணிகள் ரூ.135.86 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன. மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் சமஉயர வரப்பு அமைக்கும் பணிகள் ரூ.61.24 இலட்சம் செலவில் 3772 எக்டேர் பரப்பளவு பயனடையும்படி மேற்கொள்ளப்பட்டுள்ளன (மொத்த செலவுத் தொகை ரூ.210.80 இலட்சம்).

30—

### ஆமணக்கு உற்பத்தியை பெருக்குதல்

**வினா 35358—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஆமணக்குப் பயிரை தனிப் பயிராக பயிரிட்டு உற்பத்தியைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஆமணக்குப் பயிரைத் தனிப்பயிராக பயிரிட திட்டமிடப்பட்டு அதற்குத் தேவையான அதிக மகசூல் தரக்கூடிய வீரிய ஒட்டுரக விதைகள் விநியோகம், வேளாண் பல்கலைக் கழக உதவியுடன் செய்யப்படுகிறது. இப்பயிரை விவசாயிகள் பயிரிட சிறுதளைகள் மூலமாக விவசாயிகளுக்குச் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்படுகிறது. மேலும், அனைத்து மாவட்டங்களிலும் ஆமணக்குப்

பயிரைத் தனிப் பயிராக சாகுபடி செய்ய பரிந்துரைக்கப்பட்டு வீரிய ஒட்டுரக விதைகள் சிறுதளை (மினிசிட்) பைகளாக விவசாயிகளுக்கு விநியோகம் செய்திடவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

31—

### போக்குவரத்து இடையூறு

**வினா 22964—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி மற்றும் சுற்றுப்புறங்களில் போக்குவரத்துக்கு இடையூறு செய்யும் வகையிலும், ஆபத்தை விளைவிக்கக்கூடிய வகையிலும் கதவைத் திறந்து கொண்டு செல்லும் வாகனங்களை (வேன்களில்) கட்டுப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி மற்றும் சுற்றுப்புறங்களில் வேன்களில் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு போனதாக எப்.ஐ.ஆர். வழக்குகள் இரண்டு பேர்மீது கு.எ.37/99 பிரிவு 283 ஐ.பி.சி. போடப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்று வருங்காலத்தில் ஏற்படாமல் கவனித்துக்கொள்ள எச்சரிப்பு வழங்கப்பட்டுள்ளது.

32—

### புதிய பேருந்துகள்

**வினா 26267—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகிற பழைய பேருந்துகள் அனைத்தையும் மாற்றி புதிய பேருந்துகள் விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**



(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் 959 பேருந்துகளில் 353 பேருந்துகள் மூன்று வருடங்கள் கடந்ததாகும். மூன்று வருடங்கள் கடந்த பேருந்துகள் மாற்றப்பட வேண்டும் என்று அரசு ஆணை இருப்பினும் தற்போது நிதிப் பற்றாக்குறையால் பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகள் இயக்க இயலாத நிலை உள்ளது. 1999-2000-க்கான நிதியாண்டில் அரசு விரைவுப் போக்குவரத்தில் பிப்ரவரி 8 ஆம் தேதிவரை 138 புதிய பேருந்துகள் கோட்டம் 1-லும், 15 பேருந்துகள் கோட்டம் 2-லும் தடத்தில் விடப்பட்டுள்ளன.

33—

### புதிய வழித்தடங்கள்

**வினா 31332—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டையிலிருந்து பாண்டிச்சேரி, சேலம், இராமநாதபுரம், தஞ்சாவூர், வேலூர் ஆகிய இடங்களுக்கு புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

34—

### கேரள மாநிலத்திற்கு புதிய வழித்தடங்கள்

**வினா 31333—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டையிலிருந்து திருவனந்தபுரம், கொல்லம் போன்ற கேரள மாநில இடங்களுக்கு புதிய வழித்தடங்கள் தொடங்கிட அரசு ஆவன செய்யுமா?

[2000 மே 17

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) செங்கோட்டையிலிருந்து திருவனந்தபுரம் மற்றும் கொல்லத்திற்கு பேருந்து இயக்க திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**35—**

**பேருந்துகளை இயக்குதல்**

**வினா 32538—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டையிலிருந்து கேரள மாநிலம் திருவனந்தபுரம், புனலூர், கொல்லம் ஆகிய பகுதிகளுக்கு நேரடி பேருந்து வசதி செய்துதர கேரள மாநிலத்தோடு உடன்படிக்கை செய்து பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை. அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் சுரண்டையிலிருந்து திருவனந்தபுரம், புனலூர், கொல்லம் ஆகிய இடங்களுக்குப் பேருந்து இயக்க திட்டம் ஏதும் இல்லை.

**36—**

**இரும்பு கிராதி**

**வினா 33737—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-செங்கோட்டை—கொல்லம் சாலையில் கி.மீ. 61/300-500 இடத்தில் வாகனங்கள் மோட்டார் வாகன விதி முறைகளுக்குப் புறம்பாக வைக்கோல் சுமை ஏற்றிச் செல்வதைத் தடுக்க சாலையின் குறுக்கே இரும்பு கிராதி அமைக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?



2000 மே 17]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி - செங்கோட்டை - கொல்லம் சாலையில் கி.மீ.61/300-500 இடத்தில் வாகனங்கள் மோட்டார் வாகன விதி முறைகளுக்குப் புறம்பாக வைக்கோல் சுமை ஏற்றிச் செல்வதைத் தடுக்க சாலையின் குறுக்கே இரும்பு கிராதி அமைக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) இப்பணி மேற்கொள்ள, சட்டமன்றத் தொகுதி வளர்ச்சிப் பணி நிதியிலிருந்து நிதி ஒதுக்குமாறு தென்காசி சட்டமன்ற உறுப்பினரிடம் கோரப்பட்டுள்ளது. அந்நிதியுதவி கிடைக்கப் பெற்றவுடன் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

**37—**

**மோட்டல் கட்டுதல்**

**வினா 33848—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி—குற்றாலம் நெடுஞ்சாலையில் தொலைதூரப் பயணிகள் பயன்பெறும் வண்ணம் அரசு சார்பில் 'மோட்டல்' கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**38—**

**கல்வெர்ட் சரிசெய்தல்**

**வினா 25299—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, பெருங்களத்தூர் ஸ்டாண்டர்ட் மோட்டார் நிறுவனம் எதிரில் மலையிலிருந்து வரும் தண்ணீர் செல்லும் பைப் கல்வெர்ட், தேசிய நெடுஞ்சாலை விரிவுபடுத்தப்பட்டபோது உயரமாக வைத்து விட்டதால் தண்ணீர் செல்ல முடியாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வெர்ட் உயரமான நிலையில் இல்லை. சரியான நிலையில் உள்ளது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**39—**

**சாலை விபத்துகளைத் தடுத்தல்**

**வினா 28885—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சி, திருவாக்கவுண்டனூர் மற்றும் கந்தம்பட்டி பகுதியில் தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே அடிக்கடி நிகழும் சாலை விபத்துகளைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

சேலம் மாநகராட்சிப் பகுதியில், திருவாக்கவுண்டனூர் மற்றும் கந்தம்பட்டி ஆகிய இடங்களுக்குட்பட்ட சாலைப் பகுதியான தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல் கி.மீ.199/2 முதல் 207/6 வரையுள்ள சாலையை நான்கு வழிப்பாதையாக அகலப்படுத்தும் பணியானது தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினால் எடுத்துக்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.



**40—**

**குற்றப் புலனாய்வு**

**வினா 35132—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996 ஆம் ஆண்டு முதல் நடப்பு ஆண்டு வரையில் நுகர்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைப்பற்றப்பட்ட பொருள்கள் என்னென்ன?

(ஆ) அவற்றின் மதிப்பு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 1996 ஆம் ஆண்டு முதல் நடப்பு ஆண்டு வரையில் நுகர்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை கீழ்க்காணும் பொருட்களைக் கைப்பற்றியுள்ளது:

பொது விநியோகத் திட்ட அரிசி, வெளிச்சந்தை அரிசி, நெல், மண்ணெண்ணெய், சர்க்கரை, கோதுமை, பாமாயில், பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு-உருளை, சிமென்ட், எரி எண்ணெய், வேர்கடலை பருப்பு, தேங்காய் கொப்பரை, வேர்கடலை, வெல்லம், வெள்ளை மண்ணெண்ணெய், துவரம் பருப்பு, மைசூர் பருப்பு, கலப்படம் செய்யப்பட்ட தேயிலை, வெள்ளை பெட்ரோல், மிளகாய், எள், உரம் மற்றும் இதர வகைகள்.

(ஆ) கைப்பற்றப்பட்ட பொருட்களின் மதிப்பு ஆண்டு வாரியாக பின்வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| 1996 | .. | ரூ. | 3,24,79,329 |
| 1997 | .. | ரூ. | 4,46,92,533 |
| 1998 | .. | ரூ. | 5,40,21,095 |
| 1999 | .. | ரூ. | 9,07,05,766 |
| 2000 (பிப்ரவரி வரை) | .. | ரூ. | 77,57,397 |
| **மொத்தம்** | .. | **ரூ.** | **22,96,56,120** |

[2000 மே 17

41—

## நிவாரணம்

**வினா 28682—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், ஒசூர் எல்கெட் நிறுவனம் என்கிற கம்பெனியின் பணியாளர்களுக்கு 8 மாத காலமாக சம்பளம் வழங்காமலிருப்பது அரசிற்குத் தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், சம்பளம் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* நிதி வசதி இல்லாததால் 1996-97, 1997-98 ஆண்டுகளுக்கான போனஸ் மற்றும் செப்டம்பர் 1998 முதல் சம்பளம் ஆகியவை தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை என தெரிய வருகிறது.

*(ஆ)* தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய லே-ஆப் ஊதியம் குறித்து தொழிற் தகராறுகள் சட்டப்பிரிவு 33 சி (2)-ன்கீழ் கேட்பு மனு தாக்கல் செய்து தொழிலாளர்கள் நிவாரணம் காணலாம்.

42—

## தொழிலாளர் நல வாரியம்

**வினா 31999—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* விவசாயத் தொழிலாளர் நல வாரியம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* விவசாயத் தொழிலாளர் நல வாரியம் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.



2000 மே 17]

*(ஆ)* திரு. கோலப்பன் குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த சாத்தியக்கூறுகளை நன்கு பரிசீலனை செய்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க அரசு அலுவலர்கள் அளவில் உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. விவசாயத் தொழிலாளர்களுக்கு நல வாரியம் அமைக்க வேண்டும் என்ற பரிந்துரையும் உயர்மட்டக் குழுவின் பரிசீலனையில் உள்ளது.

43—

## உதவித் தொகை

**வினா 33489—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விபத்து அல்லாமல் இயற்கை மரணம் அடையும் கட்டடத் தொழிலாளி குடும்பத்திற்கு ரூபாய் ஒரு லட்சம் உதவித்தொகை வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

விபத்து அல்லாமல் இயற்கை மரணம் அடையும் கட்டடத் தொழிலாளி குடும்பத்திற்கு ஒரு லட்சம் உதவித்தொகை வழங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

44—

## பென்ஷன் வழங்குதல்

**வினா 33490—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*55 வயது முடிந்த கட்டடத் தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.1000 பென்ஷன் வழங்க அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலத் திட்டத்தின்கீழ் இதுபோன்று பென்ஷன் வழங்க இடமில்லை என்பதால், தற்போது 55 வயது முடிந்த கட்டடத் தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.1000/- பென்ஷன் வழங்க இயலாது.

**45—**

**குழந்தைகள் கல்விச் செலவு**

**வினா 33495—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கட்டடத் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்விச் செலவினை முழுமையாக வாரியமே ஏற்கும்படி சட்டத் திருத்தம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

கட்டடத் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்விச் செலவினை முழுமையாக வாரியம் ஏற்கும்படி சட்டத் திருத்தம் கொணர வாரியத்தின் தற்போதைய நிதிநிலைமை காரணமாக இயலாது.

**46—**

**கட்டடத் தொழிலாளர்களுக்கு காப்பீடு**

**வினா 33496—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கட்டடத் தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ., வைப்புநிதி, போனஸ், விபத்துக்கான இன்சூரன்ஸ், ஓய்வூதியம் ஆகிய திட்டங்களை அமலாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கட்டடத் தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ., வைப்புநிதி, ஓய்வூதியம் ஆகிய நலத் திட்டங்களை அமல்படுத்துவது குறித்து



நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி விபத்தில் மரணம் அடைந்தாலோ அல்லது ஊனம் அடைந்தாலோ காப்பீட்டுத் தொகை பெறும் வகையில், வாரியச் செலவில் வாரியம் மூலம் கட்டுமானத் தொழிலாளர்கள் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மூலம் காப்பீடு செய்யப்படுகின்றனர். போனஸ் அளிப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**47—**

**ஆவணப் பாதுகாப்பு முறை**

**வினா 32008—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி சார்-பதிவாளர் அலுவலகத்தில் ஆவண பாதுகாப்பு முறையை நவீனப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பதிவுத் துறையில் தற்போது முதல்கட்டமாக கணிப்பொறி மூலம் பொதுமக்களுக்கு வில்லங்கச் சான்று வழங்கும் சேவை சென்னை நகரில் 4 சார் பதிவாளர் அலுவலகங்களில் நடைமுறையில் உள்ளது. இந்தச் சேவை மேலும் 21 அலுவலகங்களுக்கு விரிவுபடுத்தப்படவுள்ளது. இரண்டாம் கட்டமாக 275 சார் பதிவாளர் அலுவலகங்களும் கணினி மயமாக்கப்பட்ட பின்னரே பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் ஆவணங்களை கணிப்பொறி மூலம் நவீனப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படும். அரசின் நிதி நிலைக்கேற்ப இத்திட்டம் படிப்படியாக செயல்படுத்தப்பட உள்ளது. வரிசைக் கிரமப்படி தென்காசி சார் பதிவாளர் அலுவலகமும் கணினிமயமாக்கப்படும்.

48—

### பதிவுத் துறையில் வழிகாட்டி

**வினா 32009—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பதிவுத் துறையில் வழிகாட்டி மதிப்பினைச் சரியாக நிர்ணயம் செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

சொத்துக்களின் வழிகாட்டி மதிப்புகளைச் சரியாக நிர்ணயம் செய்வதற்காக கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் தலைமையின்கீழ், பதிவுத் துறையில், "வழிகாட்டிக் குழு" ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த வழிகாட்டிக் குழு, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பதிவு மாவட்டங்களிலும், குறிப்பிட்ட ஓரிரு இடங்களை நேரில் பார்வையிட்டு, முறைப்படி வழிகாட்டி மதிப்புகளைத் திருத்தி வருகிறது. நகர்ப்புறங்களில் ஆண்டுக்கு ஒரு முறையும் மற்ற இடங்களில் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையும் வழிகாட்டி மதிப்புகள் திருத்தியமைக்கப்படுகின்றன.

வழிகாட்டி மதிப்பினைத் திருத்தும் பணியினை மேலும் செம்மைப்படுத்த, நில நிர்வாக ஆணையர் அலுவலகத்திலுள்ள இணை ஆணையாளரையும் (நில எடுப்பு) மேற்படி வழிகாட்டிக் குழுவில் ஓர் உறுப்பினராக இடம் பெறச் செய்து அண்மையில் ஆணையிடப்பட்டுள்ளது.

49—

### தொழிற்பேட்டை

**வினா 25453—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் சிறிய தொழிற்பேட்டை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?



விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி பகுதியில் தற்சமயம் தொழிற்பேட்டை தொடங்க தகுந்த நிலம் ஏதும் தற்போது தேர்ந்தெடுக்கப்படவில்லை.

மேலும் தகுதியான, ஆர்வமுள்ள தொழில்முனைவோர் 20-க்கும் குறையாமல் சிறு தொழில் தொடங்க ஆயத்தமாக வரும்பட்சத்தில் தகுதியான நிலம் தேர்வு செய்யப்பட்டு தொழிற்பேட்டை அமைக்க முயற்சிக்கலாம்.

50—

### கதர் வாரியம்

**வினா 26425—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர் வாரியக் கட்டுப்பாட்டிலுள்ள மையங்களில் 1997-98 ஆம் ஆண்டில் ஓர் அலகிலிருந்து மற்றொரு அலகிற்கு உள்மாற்றம் செய்யும்போது கணக்கில் கொண்டு வராத பொருள்களின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) கதர் வாரியக் கட்டுப்பாட்டிலுள்ள மையங்களில் 1997-98 ஆம் ஆண்டில் ஓர் அலகிலிருந்து மற்றொரு அலகிற்கு உள்மாற்றம் செய்யும்போது கணக்கில் கொண்டு வராத பொருள்களின் மதிப்பு ரூ.7,62,427.20 ஆகும்.

(ஆ) ரூ. 7,62,427.20 வரவு வைக்கப்படாமல் இருந்தபோதிலும்
பின்னர் சம்பந்தப்பட்ட சார்நிலை அலுவலர்களால் ரூ.4,99,969.50-க்கு நேர்
செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.2,62,457.70-ல் (ரூ.7,62,427.20-4,99,969.50) ரூ.1,37,783-
00 சம்பந்தப்பட்ட சார்நிலை அலுவலர்கள் மீது பொறுப்பு நிர்ணயம்
செய்து வசூல் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகையான ரூ.1,24,674.70—
ஐ செலுத்த வேண்டிய உரிய நபர் தற்காலிகப் பணி நீக்கம்
செய்யப்பட்டுள்ளதால் வசூல் செய்யப்படாமல் நிலுவையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

---

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### திருப்பூரில் கோயில் இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றியது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திருப்பூர் விஸ்வேஸ்வரசுவாமி வீரராகவப்பெருமாள் கோயிலைச் சுற்றியுள்ள வியாபாரிகளது கட்டடங்களை முன் அறிவிப்பு இன்றி இடித்தது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில், திரு. கே. சுப்பராயன் ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கின்றார்கள். அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே திரு. கே. சுப்பராயன் அவர்களை சுருக்கமாகப் பேசுமாறு அழைக்கின்றேன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் வீரராகவப்பெருமாள் கோயிலைச் சுற்றியிருந்த கட்டடங்கள் கடந்த *6-5-2000* அன்று முற்றிலும் சட்ட விரோதமான முறையில் இடிக்கப்பட்டிருக்கின்ற நிகழ்ச்சியை நான் தங்கள் மூலம் மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சட்ட விரோதமான ஆக்கிரமிப்புகள் இருக்குமானால் அவற்றை அப்புறப்படுத்துவதில் மாற்று அபிப்பிராயங்கள் இருக்க முடியாது. ஆனால் அப்புறப்படுத்துவதற்கும் சட்டரீதியான நெறிமுறைகள், வழிமுறைகள் இருக்கின்றன. ஆனால் நான் சொல்கிற இந்த நிகழ்வில் மயிரிழை அளவுகூட சட்டரீதியான நெறிமுறைகள் பின்பற்றப்படவில்லை என்பதை வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த இடத்திலே நான் ஒரு விஷயத்தை மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சமூக வாழ்வில் நக்சலைட்டுகள் இருக்கிறார்கள். நக்சலைட்டுகளின் நோக்கத்தில் நான் நூற்றுக்கு நூறு சதவீதம் உடன்படுகிறேன். அவர்களுடைய அப்பழுக்கற்ற தியாகம், அவர்களுடைய காலடிகள் தொட்டு வணங்கத்தக்க மதிப்புமிக்க தியாகம்தான் என்பதையும் நான் மறுப்பதற்கில்லை. அவர்கள் நோக்கம் நல்லது என்பதனாலேயே அவர்களின் நடைமுறைகளை நாம் அங்கீகரித்துவிட முடியாது. சமூக வாழ்வில் அவர்கள் நினைக்கிற நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள சட்டரீதியாக அனுமதிக்கப்பட்டிருக்கிற ஜனநாயக வரம்பிற்குள் நின்றுதான் தங்கள் செயலை வெளிப்படுத்த வேண்டும் என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட நெறி. எப்படி சமூக வாழ்வில் நக்சலைட்டுகளின் பலாத்கார, வன்முறை நடவடிக்கைகள் கண்டனத்திற்குரியதோ,



அதுபோலவே அரசாங்க அதிகாரிகளின் சட்டவிரோதமோ, நடவடிக்கைகளும் நக்சலிச model-ல் வெளிப்படுவது நல்லதா என்பதைத்தான் நான் இங்கே கேட்க விரும்புகிறேன்.

ஓர் ஆக்கிரமிப்பு அல்லது சட்டவிரோதமான செயல்பாடு சமூக வாழ்வில் நிகழுமானால், நிர்வாகரீதியாக அதை அப்புறப்படுத்துவதற்கு சட்டரீதியான நடைமுறைகளை மாநில அரசு அமலாக்க ஆணையிடுகிறதா அல்லது நக்சலைட்டுகளைப்போல வன்முறையில், பலாத்காரத்தில் அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆணையிட்டிருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

திருப்பூரில் *6* ஆம் தேதி நடைபெற்ற சம்பவத்தை நாம் ஒப்புக்கொள்வோமேயானால், அது நிர்வாக ரீதியில் நடைபெற்ற நக்சலிச ருத்ரதாண்டவம் என்று நான் குற்றம் சாட்டுகிறேன். இத்தகைய சட்ட விரோத நடவடிக்கைகளை நாம் தடுக்கவில்லை என்றால் சமூக வாழ்வில் நக்சலைட்டுகளின் செயல்பாடுகளைத் தடுப்பதற்குரிய தார்மீகத் தகுதியை நாம் இழந்துவிட்டதாகவே நான் கருதுகிறேன். எனவேதான் மாநில அரசுக்கு நான் இங்கே வைக்க விரும்புவது, பல்வேறு வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் இருக்கின்றன. பல்வேறு வழக்குகள் மாவட்ட நீதிமன்றங்களில் இருக்கின்றன. பல்வேறு வழக்குகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் இருக்கின்றன. திருப்பூர் நீதிமன்றங்களிலேயும் பல்வேறு வழக்குகள் இருக்கின்றன. இந்த நிலையில் ஒருசில இனங்களில் stay தரப்பட்டிருக்கிறது.

இன்னும் கொடுமை என்னவென்றால், கோயிலுக்கே சம்பந்தம் இல்லாத பட்டா பூமிகள் தகர்த்து, தரைமட்டம் ஆக்கப்பட்டிருக்கின்றன. ஒரேயொரு உதாரணத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

*85/பி, 45* SF நம்பரில் உள்ள 5½ சென்ட் பூமி, *28-4-1934* ஆம் தேதி தாலுகா கஜானாவில் *1830* ரூபாய் கட்டி revenue ஏலத்தில் எடுக்கப்பட்ட ஒரு நிலம். அரசாங்கத்தின் revenue ஏலத்தில் *1830* ரூபாய் கட்டி எடுக்கப்பட்ட நிலத்திற்கு கே.என். பொன்னுசாமி கவுண்டர் என்பவர் *1-11-1934* அன்று *2100* ரூபாய் கிரயம் பெற்றிருக்கிறார். அந்த இடத்திலேயிருந்த கட்டடத்தை ராட்சத இயந்திரங்களைக் கொண்டு இடித்திருக்கிறார்கள் என்றால் இது கோயில் நிலம் அல்ல. கோயில் நிலம் என்ற பெயரால் அறங்காவலர்கள், மாவட்ட அறங்காவலர் இன்னும் வேறுசிலர் அதில் இணைந்துகொண்டு சில முறைகேடான நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் உத்தியாக, அத்தகைய புத்தி

[திரு. கே. சுப்பராயன்] [2000 மே 17

அவர்களை இயக்கிய காரணத்தினால் முறைகேடான dealing செய்து, அது படியவில்லை என்ற நிலையில் அத்தகைய நிர்பந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பது, ஒரு மாசற்ற நிர்வாகம் நடைபெற வேண்டுமென்று விரும்புகிற நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்களின் நிர்வாகத்தில் இது ஒரு கருப்புப் புள்ளி என்று நான் கருதுகிறேன். எனவேதான் இத்தகைய நிகழ்ச்சி மகிழத்தக்கதல்ல.

இதில் அதிகாரிகள் சொல்லியிருக்கக்கூடும்; அவர்கள் கொடுத்திருப்பார்கள், இது கோயில் நிலம் என்று. நான் இப்போதும் சொல்கிறேன், கோயில் நிலமா, கோயில் நிலம் இல்லையா என்பது நீதிமன்றத்தில் இருக்கிறது. அதில் பல்வேறு நத்தம் புறம்போக்கு நிலக் கட்டடங்களும் இடிக்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், தனியார் பட்டா பூமியிலுள்ள கட்டடங்களும் இடிக்கப்பட்டிருக்கின்றன; நிர்தாட்சண்யமாக இடிக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய முறைகேடுகளில் கீழிருந்து குற்றம் புரிந்த நிர்வாக அலுவலர் கொடுத்த அறிக்கையை மட்டும் மாநில அரசு இங்கே படித்து, பதில் அளிப்பது பொருத்தமல்ல. எனவே, நான் தங்கள் மூலம் கேட்டுக்கொள்ள விரும்புவது, இடித்த முறை சட்ட விரோதமானது, முறைகேடானது என்பதால் இதுகுறித்து விரிவான விசாரணைக்கு, நீதி விசாரணைக்கு உள்ளாக்க வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன். அதோடு அந்த இடம் கோயில் நிலம், ஆக்கிரமிப்பு என்று வந்தாலும்கூட அந்த இடத்தையெல்லாம் demolish செய்துவிட்டு என்ன சொல்கிறார்கள் தெரியுமா? பாதிக்கப்பட்டவர்களில் யார் 10-க்கு 10 இடம் வைத்துக்கொள்ளலாம்; நீங்கள் எங்களோடு ஒத்துழைத்து, ஒப்புக்கொண்டால் வைத்துக்கொள்ளலாம் என்று ஆக்கிரமிப்பு என்று சொல்லி இடிக்கப்பட்டதை அவர்களுக்கே கொடுக்கிறோம் என்று ஏன் கூட்டம் நடத்துகிறார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும்.

*முற்பகல் 10-40*

அதோடு Sub-Collector பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்; Sub-Collector அவர்கள் 5 ஆம் தேதி மாலை 7 மணிக்கு ஒரு Notice கொடுக்கிறார்; அதாவது இந்தப் பட்டாவை cancel செய்கிறோம் என்று. இதற்கு முன்னரேயே பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒரு Notice கொடுத்து உங்கள் பட்டாவை நாங்கள் cancel செய்கிறோம், நீங்கள் 30 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்யலாம் என்று ஒரு Notice எத்தனாம் தேதி கொடுக்கிறார்கள் தெரியுமா? 5-5-2000-ல் கொடுக்கிறார்கள். 6 ஆம் தேதி



2000 மே 17] [திரு. கே. சுப்பராயன்]

சனிக் கிழமை, அடுத்த நாள் ஞாயிறு, சனி - ஞாயிறு leave என்பதால் நீதிமன்றத்திற்குப் போகமுடியாது. எனவே, அரசாங்க அதிகாரி, Sub-Collector எப்படி நடந்து கொண்டார் என்றால் 5 ஆம் தேதி அன்று, 30 நாளில் நீங்கள் மேல்முறையீடு செய்யலாம் என்று ஒரு Notice கொடுத்துவிட்டு, 6 ஆம் தேதி காலை தரைமட்டம் செய்கிறார் என்றால் இவருடைய நடவடிக்கை நக்சலைட் நடவடிக்கையா அல்லது ஜனநாயக நிர்வாக அமைப்புக்குப் பொருத்தமான ஜனநாயக நடவடிக்கையா என்று நான் கேட்க விரும்புகிறேன். மேல்முறையீடு செய்வது என்றால், தரைமட்டம் ஆகிவிட்டது, எப்படி மேல்முறையீடு செய்ய முடியும்? அதுமட்டும் அல்ல, ஒரு Notice-ஐ எவ்வளவு forgery-ஆகக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைச் சொல்கிறேன். இதில் இந்த Notice போட்டு ஒட்டிவிட்டார்கள். இதில் எந்த விவரமும் இல்லை. 'ஒரு முக்கிய அறிவிப்பு' என்று சொல்லிவிட்டு 'கோயில் நிர்வாகத்திற்குரிய பல்லடம் சாலையில் உள்ள கோயில் நிர்வாகத்திற்குச் சொந்தமான இடத்தை நீங்கள் காலி செய்துவிட வேண்டும்; இல்லையென்றால் அப்புறப்படுத்தப்படும்' என்று சொல்லி, நிர்வாகம் 'மொட்டைத்தாத்தன் குட்டையில் விழுந்தான்' என்கிற வகையில் போட்டிருக்கிறார்கள். எனவே இடித்த முறைகளில் முறைகேடு இருக்கிறது. சட்ட விரோதம் இருக்கிறது.

இன்னொன்று, அங்கே இருக்கின்ற நிலத்தின் வகைகளின்மீது பிரச்சினைகள் before court இருக்கிறது. அதுபோக, பக்கா registered பட்டா பூமியில் உள்ள கட்டடங்கள் இடிக்கப்பட்டிருக்கின்றன. எனவே மீண்டும் நான் தாழ்பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன், இந்த மாநில அதிகாரி செய்த நடவடிக்கைக்கு மாநில அரசு, நீதிமன்றத்தின் கண்டனத்திற்கு ஆளாக வேண்டிவரும் என்பதால்தான் நீதி விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். வேறு பல விவரங்கள் இருக்கின்றன. நேரம் அதிகமாகும் என்பதால் நான் சொல்லவில்லை. சில வருடங்களுக்கு முன்னால் போடப்பட்ட ஒரு நபர் கமிஷனே சொல்லியிருக்கிறது, சில வழக்குகள் டெல்லி உச்ச நீதிமன்றத்திலும், சில வழக்குகள் சென்னை உயர் நீதிமன்றத்திலும், கோயம்புத்தூர் மாவட்ட நீதிமன்றத்திலும், திருப்பூர் மாவட்ட முன்சீப் கோர்ட்டிலும் நிலுவையில் இருக்கின்றன. எனவே, இந்தப் பிரச்சினைகளை சிக்கலாக்கும் நிலைகளை மேற்கொள்ளக்கூடாது என்று இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஒரு retired தாசில்தார் survey செய்து கொடுத்த report இருக்கிறது. அந்த report-ல் பல விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. எனவேதான் நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன், இந்த விஷயத்தில்

பாதிக்கப்பட்டவர்களுக்கு மாவட்ட அறங்காவலர் தலைவரும் அந்தக் கோயில் அறங்காவலர் குழுத்தலைவரும் இந்த மாநில அரசின் வெள்ளை உள்ளங்களில் ஒரு கரும்புள்ளி குத்துகின்ற நடவடிக்கைக்குக் கருவிகளாக இருக்கிறார்கள். இத்தகைய நிலைகள் வராமல் தடுப்பதற்கு, உண்மை நிலைமை என்ன, அது எனக்குப் பிரச்சினையே இல்லை, கோயில் நிலமாக இருந்தால் கோயிலுக்குக் கொடுத்துவிடலாம். கோயில் purpose-க்குப் பயன்படுத்தலாம். பட்டா பூமி என்றால் அவர்களுக்கே கொடுக்கலாம். அரசு நிலமென்றால் அரசு என்ன நினைக்கிறதோ அதைச் செய்யலாம். ஆனால் இதில் இடித்த முறை குறித்து நீதி விசாரணை வேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரிலே நடைபெற்ற கடை இடிப்புச் சம்பவம் குறித்து மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே விளக்கமாக எடுத்துப் பேசியிருக்கிறார்கள். இதுகுறித்து என்னிடத்திலே வரப்பட்ட தகவலை முன்பே தங்களிடம் கொடுத்து நீதி விசாரணை வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். அதை ஏற்று இன்று வாய்ப்பு அளித்துள்ளீர்கள். மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. சுப்பராயன் எடுத்துக்காட்டியதைப்போன்று *5-5-2000* வெள்ளி மாலை அங்கே ஒரு Notice ஒட்டப்படுகிறது. அந்த Notice-லே கோயில் நிர்வாகத்திற்கு உரிய பல்லடம் சாலையிலுள்ள கடைகள் கோயில் நிர்வாகத்திற்குத் தேவையாக உள்ளதாலும், போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்கு சாலையை அகலப்படுத்துவதற்காகவும் இந்த இடத்தைக் காலி செய்யுமாறு அறிவிக்கப்படுகிறது. தவறினால் *6-5-2000* அன்று காலை நிர்வாக ரீதியாக அகற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டு ஒரு Notice ஒட்டப்படுகிறது. அதிலே கதவிலக்கமோ அல்லது நேரமோ எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதை இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். நிர்வாகத்தின் சார்பிலே அப்படி அறிவிப்பு செய்யப்பட்டது. அந்த இடத்திலே ஏறத்தாழ 200 வியாபாரிகள், சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக எல்லாத் தொழிலும் செய்யக்கூடியவர்கள் இருக்கிறார்கள். ஒரு தொழில் அல்ல பல்வேறு தொழில்களைச் செய்து வரக்கூடிய, எல்லாத் தொழில் துறைகளையும் சார்ந்த வியாபாரிகளும் அந்த இடத்திலே பல வருடங்களாக இருந்து வியாபாரம் செய்துகொண்டிருக்கிறார்கள்.



குறிப்பாகச் சொல்லப்போனால், அங்கே இருக்கின்ற கே.எம்.பி. என்று சொல்லக்கூடிய ஒரு தனவந்தரிடத்திலே இருந்து *1934* முதல் அந்த இடத்தை வாங்கி, அதிலே நகராட்சியினுடைய அனுமதியைப் பெற்று *3* மாடிக் கட்டடங்கள் கட்டப்பட்டு அதிலே பல கோடிக்கணக்கான ரூபாயை அவர்கள் முதலீடு செய்து, தொழில் செய்து வருகிறார்கள். விற்பனை வரி அலுவலகத்திலே பதிவு செய்திருக்கிறார்கள். அவர்கள் Income Tax Assessee ஆக-வரி செலுத்தக்கூடியவர்களாகவும் இருந்து வருகின்றார்கள். இப்படித் தொழில் செய்து வருபவர்களுடைய தொழில் வளாகத்தை திடீரென்று முன்னறிவிப்பு இல்லாமல், கால அவகாசம் கொடுக்காமல் bulldozer-ஐக் கொண்டு வந்து இடித்து, தரைமட்டமாக்குகின்ற நேரத்திலே அங்கே இருக்கக்கூடிய சாமான்கள், furniture போன்றவற்றை அப்புறப்படுத்தக்கூட கால அவகாசம் கொடுக்காமல் தெருக்களிலே லாரிகளைக் கொண்டு வந்து குப்பையை அள்ளிக் கொட்டுவதைப் போன்று அந்தச் சாமான்களை எல்லாம் எடுத்து அப்புறப்படுத்த வேண்டிய ஒரு துர்பாக்கிய நிலை ஏற்பட்டுவிட்டது. இதனால், அந்த இடத்திலே இருக்கக்கூடிய அந்த வியாபாரப் பெருங்குடி மக்கள் அத்தனைபேர்களும், நல்லாட்சி நடத்தி வருகின்ற கலைஞா அவர்களுடைய ஆட்சியிலே அங்கம் வகிக்கின்ற இந்து சமய அறநிலையத் துறையிலே இருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்களா இப்படி ஓர் உத்தரவு பிறப்பித்தார் என்ற ஒரு கருத்து உருவாகக்கூடிய, வேதனையான சூழ்நிலையை அவர்கள் உருவாக்கிவிட்டார்கள் என்பதை மெத்தப் பணிவன்போடு சொல்லிக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-45*

மக்கள் மத்தியிலே இருக்கக்கூடிய ஒரு கருத்து வேறுபாடு, அரசுக்குக் களங்கம் கற்பிப்பதற்காக, ஆளுகின்ற அரசு நல்லமுறையிலே ஆட்சிபீடத்திலே இருக்கின்ற நேரத்தில் இப்படித் திட்டமிட்டு யாரோ சதிச் செயல்களை உருவாக்கி, ஓர் அவப்பெயரை உருவாக்குவதற்குத் திட்டமிட்டிருக்கிறார்களோ என்று நினைக்கிறேன். அந்த இடத்திலே பாதிக்கப்பட்டிருக்கின்றவர்களுக்காக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒரு நீதி விசாரணையை ஏற்படுத்தி, பாதிக்கப்பட்டு, நஷ்டப்பட்டு இருக்கின்ற வியாபாரப் பெருங்குடி மக்களுக்கு நீதி வழங்கி அவர்களுக்கு ஒரு தொகையைக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டு, பேச்சை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் திருப்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் குறித்து அழுத்தந்திருத்தமாகவும், தங்களுக்கேயுள்ள சொல்வளத்தோடும் சிறப்பாக கருத்துகளை எடுத்துரைத்திருக்கிறார்கள்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் கவனத்தை ஈர்ப்பதற்காகக் கொடுத்த மடலில் "திருப்பூர் வீரராகவப்பெருமாள் கோயிலைச்சுற்றி கடந்த 100 ஆண்டுகளாக இருந்த கடைகளுக்கான, பக்கா ஆவணரீதியான, பத்திரரீதியான உரிமையுடன் கடைகள் நடத்துவோரின், நடத்திவந்தோரின் சுமார் 15 கோடி ரூபாய் மதிப்புள்ள கட்டடங்களை" என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். இதை நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். 100 ஆண்டுகளானாலும், 200 ஆண்டுகளானாலும், அது கோயில் இடம்தான் என்று உறுதி செய்யப்பட்டால் அதை அகற்றுவதில் எப்போதுமே இந்து சமய அறநிலையத் துறை பின்வாங்கியதில்லை. அதற்கு நான்கு எடுத்துக்காட்டுகளைச் சொல்ல முடியும்.

பக்கத்தில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களுடைய தொகுதியைச் சார்ந்த இடம் வீரன்வயல். இது 1789 ஆம் ஆண்டில் பீம்சிங் என்ற குறுநில மன்னனால் இராமேஸ்வரம் கோயிலுக்கு எழுதிவைக்கப்பட்ட நிலம். நீண்டகாலமாக அதுகுறித்து குத்தகைக்காகப் பயிரிடுபவருக்கும், அறநிலையத் துறைக்கும் வழக்குகள் நடைபெற்றன. உச்ச நீதிமன்றத்தில் அறநிலையத் துறைக்குச் சார்பாகத் தீர்ப்பு வழங்கப்பட்டு, பிறகு அது மீட்கப்பட்டிருக்கிறது அல்லது முறைப்படுத்தப்பட்டிருக்கிறது.

அதேபோல், இங்கே திருவல்லிக்கேணியிலே 1971 ஆம் ஆண்டுவரை கோயிலின் பெயரால் இருந்து, முறைப்படி அவர்கள் வாடகையும் செலுத்தி வந்த காலகட்டத்தில், திடீரென்று வேறு தனித் தனிப் பெயரால் இந்த 29 ஆண்டுகாலத்தில் பட்டாக்கள் வழங்கப்பட்டு, எங்களுடைய கவனத்திற்கு வந்து, தஞ்சாவூரில் இருக்கின்ற அமைப்பு அலுவலகம், -- Settlement Office -- திருவல்லிக்கேணியில் இருந்த அத்தனை ஆவணங்களையும் எடுத்து, இறுதியாக இப்போது அந்த 220 மனைகளுக்குமான பட்டாக்கள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டு, கோயில் பெயரால் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது.



அதேபோல், மூன்றாவதாக, காஞ்சிபுரத்தில் இருக்கிற பாச்சியம்மன் கோயிலுக்குச் சொந்தமான இடத்தை - நான் யார் பெயரையும் சுட்டிக் காட்டி, அதை நாகரிகக்குறைவாக்க விரும்பவில்லை - ஏற்கெனவே முன்னாள் அறநிலையத் துறை அமைச்சராக இருந்த ஒருவருடைய மருமகன் தன் பெயரில் பட்டா போட்டுக்கொண்டு, 8,9 இடங்களை அபகரித்து வைத்திருந்தார். இது எங்களுடைய கவனத்திற்கு வந்த பிறகு, அன்றைக்கு இருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இறையன்பு வாயிலாக அந்த அனைத்துப் பட்டாக்களும் ரத்துச் செய்யப்பட்டு, உடைமைகள் கோயிலுக்குச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல கரூர் மாவட்டத்தில், மாயனூர் பக்கத்தில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஒருவர்-எந்தக் கட்சி என்றெல்லாம் நான் குறிப்பிட விரும்பவில்லை. பொதுவாகத்தான் சொல்கிறேன்-இதேபோல் பட்டாக்களை வாங்கியிருந்தார். அதையும் - அன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த திரு. அய்யர் அவர்கள் வாயிலாக அந்த அனைத்துப் பட்டாக்களையும் ரத்து செய்திருக்கிறோம். எனவே, கோயிலின் பெயரால் இருக்கின்ற நிலம், அது கோயில் நிலம்தான் என்று உறுதிசெய்யப்பட்டால், பட்டாக்களை ரத்து செய்வது என்பது தொடர் நடவடிக்கைதான். இந்த நிகழ்ச்சியிலும் அதுதான் நடந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திருப்பூர் வட்டம், திருப்பூர் நகரம் பழைய க.ச.எண் 85/B1(ல்) 1.62 ஏக்கர் நிலத்தில் திருப்பூர் அருள்மிகு விஸ்வேஸ்வரசுவாமி மற்றும் வீரராகவப்பெருமாள் கோயில் அமைந்துள்ளது எனவும், தற்போது கோயில் உள்ள இடம் 0.62 ஏக்கர். ஆக்கிரமிக்கப்பட்டு, பட்டா வாங்கப்பட்ட இடம் 1 ஏக்கர்; தனியார் நபர்களுக்கு எந்தவித ஆதாரமுமின்றி பட்டா கொடுக்கப்பட்டு, வருவாய்க் கணக்கிலேயும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது எனவும், தனியார் பெயரில் உள்ள பட்டாவினை ரத்துச் செய்து திருக்கோயில் பெயருக்குப் பட்டா கொடுத்து உத்தரவுகள் இடும்படி மேற்படி கோயில் நிர்வாக அலுவலர் 3-9-1999 அன்றே சார்-ஆட்சியரிடம் முறையீடு செய்துள்ளார். எனவே, இந்த நிகழ்ச்சி 8 மாதங்களாக நடைபெற்று வருகிறதே தவிர, ஏதோ திடீரென்று காலை விடிந்தவுடன் முடிந்து போகிற நிகழ்ச்சி அல்ல. 8 மாதங்களாக அவர்கள் முயற்சி செய்து, சார்-ஆட்சியர் விசாரணை செய்து முறைப்படி பட்டாக்கள் எல்லாம் வழங்குவதற்கான சூழ்நிலைகள் எப்படி ஏற்பட்டன; எப்படி ரத்துச் செய்யப்பட்டன என்பதற்கான விவரம்தான் இது. எனவே இதற்கான; முயற்சி என்பது 8 மாத காலமாக நடைபெறுவதன் காரணமாக இது திடீரென்று ஏற்பட்ட நிகழ்வு அல்ல என்பதற்காகத்தான் இதைச் சுட்டினேன்.

[முனைவர் மு. தமிழ்க்குடிமகன்] [2000 மே 17

முற்பகல் 10-50

இதன்மீது 31-3-2000, 14-4-2000, 18-4-2000, மற்றும் 25-4-2000 ஆகிய தேதிகளில் விசாரணை செய்யப்பட்டது. அதிலே வெங்கடாசல கவுண்டர், மீனாட்சியம்மாள், அவினாசியப்பன், செந்தில்நாதன், சங்கரப்பன் போன்ற பலர், கிட்டத்தட்ட 10 பேருக்கு மேல் எதிர்மனுதாரர்களாகச் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு அறிவிப்புகள் அனுப்பப்பட்டன. 1913 ஆம் ஆண்டில் தயார் செய்யப்பட்ட 'அ' பதிவேடு (A Register) என்று உங்களுக்குத் தெரியும் 'அ' பதிவேட்டில் திருப்பூர் நகரம், இந்தக் கிராமம் க.ச. எண் 85 B1-ல் 1.62 ஏக்கர் நிலமானது "கோயில் நிலம்", "கோயில் புறம்போக்கு" என்று பதியப்பட்டுள்ளது. 1937 ஆம் ஆண்டு தயார் செய்யப்பட்ட நகர நில அளவையில் உட்பிரிவு செய்யப்பட்டு கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்தக் கணக்குகளில் மெல்ல மெல்லப் பெயர்கள் மாறிக்கொண்டே வருகின்றன. கோயில் நிலம் மெல்ல மெல்லத்தான் மாறும், உங்களுக்குத் தெரியும். அந்தக் கணக்குகளில் நத்தம், கிணறு, கோயில் கடை, கோயில் மடம் என்றுதான் பதிவாகி உள்ளன அந்த ஒவ்வொரு பிரிவு எண்களும். ஆனால் 1989 ஆம் ஆண்டு நடைபெற்ற நகர நில அளவைத் திட்டத்தில் கீழ்க்கண்ட நபர்களுக்குச் சர்க்கார் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருவாய்க் கணக்குகளில் சம்பந்தப்பட்ட நபர்களின் பெயரால் பட்டாக்கள் மாற்றப்பட்டிருக்கின்றன என்று இருக்கிறது. எனவே, 1913-லிருந்து வந்திருக்கிற கோயில் நிலங்கள் மெல்ல மெல்ல கோயில் இடம் என்ற பெயரை இழந்து நத்தமாகி, புறம்போக்காகி, இலவசப் பட்டாக்கள் பெறப்பட்டிருக்கின்றன.

இந்த இலவசப் பட்டாக்கள் பெற்ற யாரும் ஏழைகள் அல்ல. ஏழை எளியவர்கள் யாரும் அதை வாங்கவில்லை. முறைப்படி, அரசு, ஏழை எளியவர்களுக்குக் கொடுத்திருந்தால் அதைக் கோயில் நிர்வாகம் ஏற்றுக்கொண்டு முறைப்படி பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையிலோ ஆதிதிராவிட நலத் துறையிலோ இருந்து உரிய கிரயத்தைப் பெற்றுக்கொண்டு வழங்குகிறது. இப்போதும் இதைச் செய்கிறோம். ஆனால் அதைப் பெற்ற யாவரும் பெரும் புள்ளிகள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதை நான் என்னுடைய தொடராகக்கூடச் சொல்லவில்லை. செய்தித்தாளில் வெளிவந்த செய்தியை அடிப்படையாக வைத்தே சொல்லுகிறேன். அவர்கள் பெரும்புள்ளிகள். அந்தப் பெரும்புள்ளிகளில் 10 பேர்தான் பாதிக்கப்பட்டவர்களே தவிர, வேறு யாரும் பாதிக்கப்பட்டவர்கள் அல்ல. இவர்களுடைய கூற்றுப்படி பார்த்தால், அவர்களுக்கு எப்படி



2000 மே 17] [முனைவர் மு. தமிழ்க்குடிமகன்]

இலவசப் பட்டா கிடைத்தது என்றுதான் எனக்கு விளங்கவில்லை. இடையில் இருக்கிற யாரோ சிலர் நான் முன்னே சொன்னதைப்போல, நிகழ்ச்சிகளை சொன்னதைப்போல, வருவாய்த் துறையைச் சார்ந்தவர்கள், ஓய்வு பெறுகிற காலத்திலோ அல்லது வாய்ப்பான காலத்திலோ பட்டாவை வழங்கிவிட்டுப் போய் விடுகிறார்கள். பிறகு அதைப் போராடி மீட்பதற்குக் கோயில் நிர்வாகம் பெரிய பாடுபட வேண்டியிருக்கிறது. மேலும் இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில் கோயில் நிர்வாகம் மட்டும் இதிலே ஈடுபடவில்லை. வருவாய்த் துறை, நெடுஞ்சாலைத் துறை, உள்ளாட்சித் துறை, இந்து சமய அறநிலையத் துறை ஆகிய 4 துறைகளும் சேர்ந்து, உட்கார்ந்து பேசி முடிவு எடுத்துத்தான் இதைச் செயல்படுத்தியிருக்கிறார்களே தவிர, தனிப்பட்ட விருப்பு, வெறுப்பின் அடிப்படையில் அல்ல என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நத்தம் ஆகவும், கோயில் பட்டாவாகவும் இருந்தது எப்படி துரைசாமி கவுண்டர், அவினாசியப்ப உடையார், ராஜலிங்கம் செட்டியார் ஆகியோருக்கு மாற்றம் செய்யப்பட்டது என்பதை நாம் யூகித்துக் கண்டுபிடித்து விட முடியும். யாரோ ஒருசில வட்டாட்சியர்கள் செய்கிற தவறுகள் காரணமாக இத்தகைய பெரும் விளைவுகள் ஏற்பட்டு விடுகின்றன.

உண்மைகள் கண்டறியப்பட்ட பிறகு, அதுவும் சொத்துப் பதிவேடுகளை முறைப்படுத்துவதற்கு இந்த அரசு கடும் முயற்சி எடுத்து, எல்லா சொத்துப் பதிவேடுகளையும் ஒழுங்காகக் கொண்டு வந்த பிறகு, கோயில் இடங்களுக்குத் தவறான முறையில் பட்டாக்கள் வழங்கப்பட்ட பல நேர்வுகளில் அந்தப் பட்டாக்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்குத்தான் முன்னால் எடுத்துக்காட்டுகள் சொன்னேன்.

31-3-2000 நாளன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர்களின் கடித நகல் எதிர் மனுதாரர்களுக்கு வழங்கப்பட்டது. எதிர் வாத உரையை 14-4-2000 அன்று தாக்கல் செய்யும்படி அறிவுறுத்தப்பட்டது. மீனாட்சியம்மாள், அவினாசியப்பன், செந்தில்நாதன் போன்ற சிலர் 14-4-2000 அன்று எதிர்வாத உரையைத் தாக்கல் செய்துள்ளனர். இது தொடர்பாகப் பலரும் தங்களுடைய பத்திரங்களைத் தாக்கல் செய்துள்ளனர். பத்து அசல் பத்திரங்கள் சரிபார்க்கப்பட்டன. ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டுள்ளபடி திருப்பூர் கிராமத்தில் நடைபெற்ற நகர நல அளவையில் வார்டு எண்.5 பிளாக் எண் 4 179, 202, 203 ஆகியவை நத்தம் என்றும், 205 முதல் சில எண்கள் வரை நத்தம் நாராயணசாமி கவுண்டர், ராமசாமி கவுண்டர் என்றும் பதிவுகள்

மாறியிருக்கின்றன. எனவே, எதிர் மனுதாரர்கள் கொடுத்த பத்திரங்கள் அனைத்தையும் சார்-ஆட்சியரும், வருவாய்த் துறை அலுவலர்களும், மற்ற அலுவலர்களும் பார்வையிட்ட பிறகுதான் இந்த அலுவலகத்தில் பதிவு செய்யும் பத்திரங்களை வைத்து மட்டும்—அவர்கள் தெரிவித்ததை நான் அப்படியே சொல்லுகிறேன்—இவை பழமையானவை என்பதனாலோ, சார்-பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யும் பத்திரங்களை வைத்து மட்டுமே வருவாய்த்துறையில் பட்டா மாறுதல் செய்ய இயலாது. சார்-பதிவாளர் அலுவலகத்திலே, கிராமக் கணக்குகளின் அடிப்படையில் பத்திரம் பதிவு செய்யப்படவில்லை. நிலத்தின் அங்காடி மதிப்பிலே அவரிடம் பத்திரம் பெறப்பட்டிருந்தால் எந்தப் பத்திரமும் பதிவு செய்யலாம். மேற்படி பத்திரங்களின் அடிப்படையில் பட்டா மாறுதல் செய்யும்பொழுது கணக்குகளில் உள்ள பதிவுகள் அடிப்படையில் தகுதியிருந்தால் மட்டுமே பட்டா மாறுதல் செய்யப்படும். இந்த இனத்தில் தகுதியில்லாமல் இருந்ததால்தான் பத்திரங்களின் அடிப்படையில் பட்டா மாறுதல் செய்யப்படவில்லை. எனவே இவை தகுதியில்லாததால் பட்டா மாறுதல் செய்யப்படாதது மாத்திரமல்லாமல் அதற்குப் பிறகு அவர்கள் தந்த 1998-99 ஆகியவை தொடர்பான ஆவணங்கள், சர்க்கார் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட பிற்பட்ட காலத்திற்கு உரியவை. எனவே மேற்படி இரண்டு பத்திரங்களையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவில்லை. அரசு புறம்போக்கு நிலமாக வருவாய்க் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்ததால் நிலம் தொடர்பான பத்திரங்களைப் பரிசீலனைக்கு எடுக்க வேண்டியது இல்லையென்று கருதப்படுகிறது. இந்த அடிப்படையில்தான் பட்டாக்கள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டன.

*முற்பகல் 10-55*

நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், இந்த இடத்தின் உரிமையாளர்கள் வேறு. இந்தக் கட்டடங்களில் வாடகைக்கு இருந்தவர்கள் வேறு 200 பேர். அந்த 200 பேருக்கும் முன் அறிவிப்பு செய்யப்பட்டு அவர்கள் அனைவரும் தங்களுடைய பொருட்களை எடுத்துக் கொண்டிருக்கின்றனர். இதை நான் தனிப்பட்ட முறையில் கூடச் சொல்லவில்லை. செய்தித்தாள்களிலே வந்த செய்திகளை அப்படியே நான் படித்துக் காட்ட விரும்புகிறேன். எனவே, யாருக்கும், எந்தப் பொருளுக்கும் சேதமில்லை. சேதமடைந்தவை கட்டடங்கள் மட்டும்தான். அதுவும் அந்த 10-12 பேருக்கு மட்டும், உறுதியாக நான் சொல்கிறேன். கண்டிப்பாக அவர்கள் ஏழையாளர்கள் அல்ல. ஏழையாளர்கள் என்றால் என்ன என்பது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களுக்குத் தெரியும்.



ஆடையின்றி வாடையில் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்தி
காலது கொண்டு மேலது தழுவி
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும் ஏழையாளன்.

இதிலே ஒவ்வொருவரும் ஒரு கோடி ரூபாய்க்குக் கட்டடம் கட்டிக்கொண்டிருப்பவர்கள். இவர்கள் ஏழையாளர்கள் அல்ல. உங்கள் பார்வையில் அவர்கள் ஏழை என்றால் எங்களுக்கு அர்த்தமே விளங்காமல் போய்விடும். எனவே, அவர்கள் செல்வர்கள். நண்பர் கூட தனவந்தர்கள் என்று குறிப்பிட்டார். முகம்மது இஸ்மாயில் அவர்கள் சொன்ன தொடரிலே, ஒரு சொற்றொடர், தனவந்தர்கள் என்ற தொடர் இருந்தது என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். எனவே இடத்துக்குப் பட்டா வாங்கியவர்கள் ஏழைகள் அல்ல. இன்னும் சொல்லப்போனால், ஒரு கோபுரத்தின் வாசலையே முற்றிலும் மறைத்துவிட்டார்கள். இவ்வளவு காலமும் அந்தக் கோயிலுக்கு மேற்கு வாசல் என்பதே அறவே இல்லாமல் இருந்தது. எனவே கோயில் இடத்தில், மேற்கு வாசலை அறவே அடைத்து, ஆக்கிரமிப்புச் செய்த பட்டாக்களை ரத்துச் செய்ததில் எந்தத் தவறும் கிடையாது.

அதுபோக, அறிவிப்பை அவர்களே படித்துக் காண்பித்தார்கள். பட்டாக்கள் ரத்துச் செய்யப்பட்ட உடனேயே அவர்களுடைய உரிமை இழந்துபோகிறது. நான் மறுக்கவில்லை. வழக்குகள் இருக்கின்றன. இன்னும் இழுத்தடிப்பு நடக்கிறது. ஆனாலும், சார்-ஆட்சியர் அனைவரிடமும் கலந்துபேசி, முடிவெடுத்து அந்த அடிப்படையிலேதான் இவை இடிக்கப்பட்டிருக்கின்றன. இதில் முறைகேடு எதுவும் இல்லை.

இரண்டாவது, அவர்கள் சொன்னதுபோல பாதிக்கப்பட்டவர்கள் வியாபாரிகள் என்று சொன்னால், இந்த வியாபாரிகளுக்கு நன்மை செய்வதற்காக அரசு என்றைக்கும் முன் வருகிறது. அதில் என்றைக்கும் எந்தக் கருத்து வேறுபாடும் கிடையாது. எடுத்துக்காட்டு வேண்டுமென்றால், திருத்துறைப்பூண்டியிலேயே இப்போது ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஏனென்றால் அதை அடிப்படையாகச் சொன்னால்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களுக்கும் சரியாகப் பொருந்தும். திருத்துறைப்பூண்டி, நெல்லையப்பர் கோயில், தூத்துக்குடி, இந்த மூன்றிலும் நம்முடைய கோயில் இடங்களில் முறைப்படியான வணிக வளாகங்கள் அமைத்து ஒரு குறிப்பிட்ட தொகை நன்கொடையும், குறிப்பிட்ட வாடகையும் யார் செலுத்துகிறார்களோ அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அது வழங்கப்படும் என்ற ஒரு

திட்டத்தைத் தீட்டி இப்போது செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம். நிர்வாக அனுமதி அனைவருக்கும் வழங்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே அதே அடிப்படையில் இதே பாதிக்கப்பட்ட வியாபாரிகளுக்கும் செய்யப்படும். நெடுஞ்சாலைத் துறைக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிற இடத்தை அகற்றி, கோயிலுடைய மேற்கு வாசலுக்குக் கீழே அடைத்தார்களே, அந்தப் பகுதியை அகற்றி, வாய்ப்பான இடங்களில், காலியான இடங்களில் புதிய வளாகத்தை அமைத்து மீண்டும் அவர்களுக்குத் தருவதிலே எந்தத் தவறும் கிடையாது. அதிலே எந்த முறைகேடும் கிடையாது. அதிலும் பேரத்திற்கு இடமே கிடையாது. இவர்களாகவே எதுவும் முடிவு செய்யமுடியாது. மேலே வரைக்கும், ஆணையர் வரைக்கும், அரசு வரைக்கும் வந்து முடிவு செய்தபிறகுதான் வழங்கப்பட முடியும். எனவே இதிலே எந்த முறைகேடுக்கும் இடமில்லை.

அதேநேரத்தில் ஒன்றைமட்டும் நான் நினைவூட்ட விரும்புகின்றேன். நண்பர் பேசும்போது ஏதோ பெரிய கிளர்ச்சி ஏற்பட்டுவிட்டது, நக்சலிசம் நடந்துவிட்டது என்றெல்லாம் சொன்னார். இந்தச் சொற்களுக்குப் பொருள் எங்களுக்கும் தெரியும். ஆனால் தினமணி, தினகரன், தினத்தந்தி, தினமலர், தினபூமி ஆகிய *5* இதழ்களும் எழுதிய செய்திகளை மட்டும் நான் சொல்கிறேன். இதில் பாதிக்கப்பட்டவர்கள், வருத்தப்பட்டவர்கள் *10* பேர் என்றால் மகிழ்ச்சி அடைந்தவர்கள் *15* ஆயிரம் பேர் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே அதை அப்படியே படித்துக் காட்டுவது என்னுடைய கடமை. கொஞ்சம் நேரமானாலும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் என்னை மன்னிக்க வேண்டும். ஏனென்றால் இதுபோன்ற நிலைமைகளில் அவர்கள் கடுமையான குற்றச்சாட்டுக்களைச் சுட்டிக்காட்டும்போது.....

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, point of order. இங்கே சொல்கிற கருத்துகள் குறித்து எங்களுக்கு முற்றிலும் மாறுபட்ட கருத்துகள் உண்டு. அதுபற்றி நான் விரிவாகப் போகவிரும்பவில்லை. ஆனால் பத்திரிகைகளில் வருகின்ற செய்திகளை உங்கள் முன்னால் படித்துக்காட்டுகிறேன் என்று சொல்கிறார்கள். பத்திரிகைச் செய்திகளையே முழு ஆதாரமாக எடுத்துக்கொள்ள தாங்கள் அனுமதிப்பதன் மூலம் எதிர்காலத்தில் இதே வழிமுறைகளை நாங்களும் பின்பற்றினால் என்னவாகும் என்பதைத் தயவுசெய்து யோசிக்கவேண்டும். எனவே பத்திரிகைச் செய்திகளை evidence ஆக இங்கே produce செய்வது நல்லதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதி கொடுத்ததாக உங்களுக்கு யார் சொன்னது? நான் அவருக்கு அந்த *5* பத்திரிகைகளின்





பெயர்களைச் சொல்லி, அந்தக் கருத்தைச் சொன்னால் போதும், படிக்க வேண்டாம் என்று சொல்லப்போகிறேன். அதற்குள் நீங்கள் point of order கேட்டிருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பத்திரிகைகளின் பெயர்களை மட்டும் சொல்லி, அவற்றின் மையக் கருத்தை வேண்டுமானால் சொல்லுங்கள்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கும் விதிகள் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள்தான் பேரவைத் தலைவராக இருந்திருக்கிறீர்களே, உங்களுக்கு எப்படி விதி தெரியாமல் இருக்கும்? *(சிரிப்பு)*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பொறுத்தவரை, இந்தப் பத்திரிகைகள் இந்த நிகழ்ச்சிகள்பற்றி எப்படிப் படம் பிடித்திருக்கின்றன என்பதற்காகத்தான் இதைச் சுட்டிக்காட்டுகிறேன். ஆகவே, தனிப்பட்ட முறையில் என்னைப் பற்றிய செய்திகளோ, இன்னொருவர் பற்றிய செய்திகளோ முறைகேடாக அல்லது சரியாகத் தெரிந்துகொள்ளாமல் வருவது என்பது வேறு. அதை ஆதாரமாக வைத்து நான் குற்றம் சாட்டவோ அல்லது குற்றச்சாட்டை மறுக்கவோ இல்லை. ஆனால் ஒருமுகமாக இந்தப் பத்திரிகைகள் அனைத்தும், பொதுமக்கள் அனைவரும் பாராட்டினார்கள். ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டதில் அவர்களுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி. நீண்டநாட்களாக இருந்த இந்த மறைப்பு இப்பொழுதுதான் நமக்கு மேற்கு வாயிலையே காட்டியிருக்கிறது. எனவே, கோயிலை ஆக்கிரமித்துக் கட்டியவர்களுடைய கடைகள் இடிக்கப்பட்டது சரிதான். ஆக்கிரமிப்பை இடித்தவர்களுக்கு எங்களுடைய பாராட்டுகள், வாழ்த்துகள் என்றுதான் அனைத்து இதழ்களும் எழுதியிருக்கின்றன. அதற்காக தனிப்பட்ட முறையில் இதழ்கள், கட்டுரைகள் எழுதவில்லை. செய்தியாகவே வெளியிட்டிருக்கின்றன. அந்தச் செய்திகளுக்கு இடையிலே தங்களுடைய கருத்துகளைச் செருகியிருக்கின்றன. எனவே இது பொதுமக்கள் பாராட்டைப் பெற்று, தலைவருடைய ஆட்சியில் நல்லது நடக்கிறது, ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுகின்றன. கோயில்களுக்கு உரிய உடமைகள் கோயில்களுக்குச் சேர்க்கப்படுகின்றன என்ற உண்மைதான் புலப்படுத்தப்பட்டிருக்கின்றனவே தவிர, நம்முடைய திரு. சுப்பராயன் போன்ற ஒருசிலர் தான் வருத்தப்படுவார்களே தவிர, ஓராயிரம் கோடி பேர் இந்த நிகழ்ச்சியை வரவேற்பார்களே தவிர, மறுக்கமாட்டார்கள். என்று சொல்லி, முடிக்கிறேன். நன்றி வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

(திரு. வை. சிவபுண்ணியம், திரு. ப. மோகன் கந்தசாமி, திரு. கே. சுப்பராயன் ஆகியோர் எழுந்து நின்றனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மூன்று பேர் எழுந்து நிற்கிறீர்களே, (குறுக்கீடுகள்) பேசுகின்ற உறுப்பினர் point of clarification கேட்கிறார், நீங்கள் உட்காருங்கள், (குறுக்கீடுகள்) கோயில் என்றால் எதிர்த்துப் பேச வேண்டுமா? நீங்கள் உட்காருங்கள். திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதில் துரதிருஷ்டவசமானதாகும். (சிரிப்பு) ஆளும் கட்சி உறுப்பினர்கள் கேலியாகச் சிரிக்கக் கூடும். ஆனால் காலங்கள், காலண்டர் காகிதங்கள் இன்றோடு நின்றுவிடுவதில்லை. அதுவும் கிழிபடும். நான் கேட்க விரும்புவது, நான் எழுப்பிய அடிப்படைப் பிரச்சினைக்கே அமைச்சர் பதில் அளிக்கவில்லை. இடிக்கப்பட்டவை வெறும் கட்டடங்கள் அல்ல. Rule of Law இடித்து தரைமட்டமாக்கப்பட்டிருக்கிறது என்று நான் சொன்னேன். நிர்வாகத்தில் தவறான நடைமுறை நடந்தால் இந்த Rule of Law தேவையில்லை. எப்படி வேண்டுமானாலும் தகர்த்து எறிந்துவிடலாம் என்பதை அமைச்சர் நியாயப்படுத்துகிறார். அவர் தனவந்தர்களைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டார். நான் அதுபற்றியெல்லாம் சொன்னால், அமைச்சரும் ஆத்திரப்படக்கூடும். தனவந்தர்களைப் பற்றியும், தனவந்தர்களுக்கு எதிராக நடக்கின்ற போராட்டங்களில் என்ன நடந்தது என்பதெல்லாம் எனக்குத் தெரியும். எனவே வெறும் வார்த்தை ஜாலங்களால் நான் இப்போழுது இதற்குப் பதில் சொல்ல விரும்பவில்லை. எனவே நான் கேட்கும் கேள்வி, Rule of Law-வை இந்த மாநில அரசு கடைப்பிடிக்கிறதா இல்லையா? இந்தச் சம்பவத்தில் Rule of Law புதைக்கப்பட்டுவிட்டது என்பதை நான் குறிப்பிடுகிறேன். இதற்கு அமைச்சர் என்ன பதில் சொல்ல விரும்புகிறார்? இன்னொன்று, 1913-ல் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஆத்திரப்படக் கூடாது. நீங்கள் Rule of Law என்று சொல்கிறீர்கள். அவரும் Rule of Law படிதான் நான்கு துறைகளும் சேர்ந்து நடவடிக்கை எடுத்திருக்கின்றன என்று சொல்கிறார். அதில் உங்களுக்குள் கருத்து வேறுபாடு இருக்கலாம். அது வேறு சமாச்சாரம். ஆகையால் அவர் பதில் சொல்லவில்லை என்று நீங்கள் எப்படி சொல்ல முடியும்?

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான்கு துறைகளில் எடுத்திருக்கலாம். அதுபற்றி நான் ஆட்சேபிக்கவில்லை. இன்னும் பத்து துறைகள் சேர்ந்தாலும் கூட Rule of Law violate ஆகியிருக்கலாம் என்றால் நீதி விசாரணை நடத்தினால் என்ன தவறு?



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அதற்காகச் சொல்லவில்லை. நான் உங்களிடம் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நீங்கள் தனிப்பட்ட முறையில் மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவரும், அந்தக் கோயில் அறங்காவலர் குழுத் தலைவரும் ஏதோ பேரம் பேசி, அவர்களுக்குள் உடன்பாடு ஏற்படாததால் அவர்கள் இதைச் செய்தார்கள் என்று சொல்கிறீர்கள். அமைச்சர், வருவாய்த் துறை, உள்ளாட்சித் துறை, நெடுஞ்சாலைத் துறை என்று எல்லாத் துறைகளும் சேர்ந்து பேசி, Sub-Collector தலைமையிலேதான் இது நடந்தது என்று சொல்கிறார். அப்படியிருக்கும்பொழுது இதிலே அறங்காவலர் பெயரில் குறைசொல்வது எப்படி சரியாக வரும்?

**திரு. கே. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, நான் குறிப்பிட விரும்புவது, அமைச்சர் அவர்கள் 1913-ஐப் பற்றிச் சொன்னார்கள். நான் 1882 ஆம் ஆண்டில் வாங்கிய தஸ்தாவேஜுகளைக் கையில் வைத்திருக்கின்றேன். அவர்கள் இதை இப்படிச் செய்யவில்லை. எனவே, அப்படி கோயில் நிலமென்றால் கோயிலுக்குக் கொடுக்க வேண்டுமென்று நான் சொல்கிறேன். ஆனால் அது கோயில் நிலமா இல்லையா, அதில் பட்டா நிலம் இருந்ததா என்பதைப்பற்றி நீதி விசாரணை வைத்தால் என்ன தவறு வந்துவிடும்? அதில் Rule of Law தகர்க்கப்பட்டிருக்கிறது என்று நான் குறிப்பிடுகிறேன். அதில் பல பொருட்கள் புதைந்துவிட்டன. எனவே, அவற்றை ஒத்துக்கொள்ள வேண்டியதுதானே? அவற்றில் நீதி விசாரணை வைப்பதற்கு மாநில அரசு முன்வரவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்...

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரையும் கலந்துகொண்டு, நான் இந்த அவையிலே தெரிவிப்பது, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் இங்கே கோருவதுபோல, இந்தப் பிரச்சினைக்கு ஒரு நீதி விசாரணை உரிய முறையிலே வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. கவன ஈர்ப்பு

### (அ) ராசிபுரம் பகுதியில் மின் தடங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் அவர்கள் ஓர்

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ராசிபுரம் பகுதியில் கடந்த சில நாட்களாக அடிக்கடி மின்வெட்டு ஏற்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

முற்பகல் *11-05*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களுக்கும் சேர்த்து நான் பதில் சொல்ல விரும்புகின்றேன். ஒரு விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர்கள் துணைக் கேள்வி கேட்பார்களேயானால் பதில் சொல்லத் தயாராக இருக்கின்றேன்.

## அறிக்கை

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின்சார தேவை மின் உற்பத்தியைவிட பொதுவாக மற்ற மாதங்களைக் காட்டிலும் கோடை மாதங்களில் சற்று அதிகமான அளவில் இருக்கும். மேலும் கடந்த ஒரு மாத காலமாகவே அனல் மின் நிலையங்களிலே மின் உற்பத்தி குறைவு ஏற்பட்டதால் தமிழ்நாடு மின் கட்டமைப்பின் நிலையில் மாற்றம் ஏற்பட்டது. மேற்கூறிய காரணங்களினால் 110 கி.வோல்ட் மின் ஊட்டிகளில் சுமை குறைப்பு -- Load Shedding -- செய்யப்பட்டு இருக்கின்றது. இந்த அடிப்படையில் ராசிபுரம் பகுதிக்கு மின்சாரம் supply செய்கின்ற ராசிபுரம் 110 கி. வோல்ட் மின் ஊட்டியில் சுமை குறைப்பு செய்யப்பட்டு வருகின்றது. இதன் காரணமாகத்தான் ராசிபுரம் பகுதியில் ஒரு வார காலமாக மின்சாரம் நிறுத்தப்பட்டு வந்தது. இருப்பினும் முடிந்தவரை மின்தடங்கலைக் குறைப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கும்படி துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் பார்த்தேன். படித்தேன், மிகவும் வருத்தப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிக்கையைப் பார்த்து வருத்தப்படுகிறீர்களா? *(சிரிப்பு)*



**திரு. பி.ஆர். சுந்தரம்:** பார்த்தேன், படித்தேன், படித்ததற்குப் பிறகு, அதில் இருக்கிற கருத்துகளைப் பார்த்த பிறகு வருத்தப்படுகின்றேன். ஏனென்றால், அமைச்சர் அவர்கள் முன்பு மாண்புமிகு சிதம்பரம் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. அழகிரி அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு இதே மாதிரிதான் ஒரு பதிலைக் கூறியிருந்தார்கள். *(குறுக்கீடு)* அங்கே நிலைமை சரியாகிவிட்டது. ஆனால், என்னுடைய தொகுதியில் இன்னும் நிலைமை சரியாகவில்லை என்பதற்காகத்தான் கவன ஈர்ப்பு கொண்டு வந்திருக்கின்றேன். இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பித்து ஒரு வார காலத்திலேயே நான் இதைக் கொடுத்திருந்தேன். இருந்தாலும், இப்போது சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிகின்ற காலத்திலாவது பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி கொடுத்ததற்கு உங்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி உள்நோக்கம் எல்லாம் கற்பித்தீர்கள் என்றால் கடுமையான நடவடிக்கை எடுப்பேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒரு நாள்தான் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேவையில்லாமல் பேசக்கூடாது. விதி 55-ன்கீழ் வந்துள்ள பட்டியலை நீங்களே பார்த்தீர்கள். நேற்றுதான் உங்களுடைய கவன ஈர்ப்புக்கு பதிலே வந்திருக்கிறது. அதற்குப் பிறகு பேசிக்கொண்டே இருந்தால் என்ன அர்த்தம்? நீங்கள் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து எடுப்பேன். ஒழுங்காகப் பேசுங்கள். நீங்களே பட்டியலைப் பார்த்தீர்கள், நேற்றுதான் வந்திருக்கிறது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சருடைய கவனத்திற்கு ராசிபுரம் பகுதியைப் பொறுத்தவரையில் அது விவசாயிகள் நிறைந்த பகுதி. இப்போது கிட்டத்தட்ட 1½ மாத காலமாக காலையில் 11 மணியிலிருந்து 11½ மணி வரையிலும், மாலை 3 மணியிலிருந்து 4 மணி வரையிலும் கட்டாயமாக மின்சாரத்தை நிறுத்திவிடுகிறார்கள். இடையிலே இரண்டு மூன்று தடவை எதிர்பாராதவிதத்திலே மின்சாரம் நிறுத்தப்படுகிறது. எங்களுடைய பகுதியைப் பொறுத்தவரையில் உங்களுக்குத் தெரியாதது அல்ல. அங்கே கிட்டத்தட்ட 600 அடி, 700 அடிவரை ஆழ்துளைக் கிணறுகள் போடப்பட்டு, அதிலிருந்து compressor-கள் வைக்கப்பட்டு, அந்த compressor-களிலிருந்து சிறிது சிறிதாக தண்ணீரை சேமித்து விவசாயிகள் எல்லாம் அந்தத் தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒருசில மணி நேரங்கள் மின்சாரம் தாமதித்தாலும்கூட அந்தத் தண்ணீரை மேலே கொண்டு வந்து பயன்படுத்தாவிட்டால் விவசாயம் செய்வது பாதிக்கப்படுகின்றது.

மின்சாரத் துறை அமைச்சர் தக்க நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்யப்படும் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே நான் உங்களைக் கேட்டுக்கொள்வது, எங்கு எப்படியிருந்தாலும் எங்களுடைய ராசிபுரம் பகுதியிலே எப்படியாவது நீங்கள் 24 மணி நேரமும் மின்சாரம் சீராக இருப்பதற்கு ஆவன செய்வீர்களா எனக் கேட்டு அமர்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே என்ன point of order?

**திரு. ஐ. கணேசன்:** Sir, எங்கு எப்படியிருந்தாலும், தமிழ்நாடு எப்படிக் குட்டிச்சுவரானாலும் பரவாயில்லை, எங்கள் ஊர் மட்டும்தான் நன்றாக இருக்க வேண்டும் என்று சொல்வது நியாயமானதா? பேரவைத் தலைவர் இதை ஒத்துக்கொள்கிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது சும்மா உதாரணத்திற்குப் பேசுவது, உட்காருங்கள்.

**திரு. ஐ. கணேசன்**: உதாரணத்திற்குக்கூட ஒருவரை தாக்கிப் பேசக் கூடாது. எங்களுக்கு சீர்படுத்திக் கொடுங்கள் என்று, சிதம்பரம் பற்றி சொன்னது மாதிரி, சொல்லலாம். எங்கள் ஊர் விவசாயிகள் நிறைந்த ஊர். அதேபோல Powerloom நிறைந்த ஊர். ஒரு நாளைக்கு 10 மணி நேரத்திற்கு மேல் current cut ஆகிறது. நாங்களும் கொடுத்திருக்கிறோம். அதை எடுக்கவில்லை. Special-ஆக நீங்கள் அவருக்கு எடுத்திருக்கிறீர்கள். பாராட்டுதல்கள். அவர்போல, நாங்கள் வருத்தப்படவில்லை, ஆனால், எல்லாவற்றையும் மட்டம்தட்டி.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்னைப் பாராட்டுகிறீர்கள். நான் எடுக்கவேயில்லை, கடைசி நாள்தான் எடுத்தேன், பரவாயில்லை என்கிறார் அவர்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஐ. கணேசன் இவ்வளவு ஆத்திரப்படக்கூடாது. நான் அவருடைய எடப்பாடி தொகுதிக்கு மின்சாரம் கொடுக்க வேண்டாம்; அந்த எடப்பாடி தொகுதிக்கு மின்சாரத்தை நிறுத்திவிட்டு, என்னுடைய ராசிபுரத்திற்குக் கொடுங்கள் என்று சொல்லவில்லை. நீங்கள் தனிக் கவனம் செலுத்தி ராசிபுரம் தொகுதிக்கு.......



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குச் சொல்கிற அந்த அதிகாரம் கிடையாது. நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் பேசும்போது, இப்படித்தான் சிதம்பரம் தொகுதிக்கு அழகிரிக்கு வாக்குறுதி தந்தீர்கள் என்று சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அழகிரிக்கு நன்றாகத் தெரியும். அந்த மாவட்டம் முழுவதுமே load shedding நீக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் இந்தக் கவன ஈர்ப்புக்கு அறிவிப்பு கொடுத்தது ஏப்ரல் மாதத்தில். 19-4-2000-லிருந்து ஒரு வாரம் தமிழ்நாட்டிலே ஏறக்குறைய 210 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய 3 பிரிவுகள் எதிர்பாராதவிதமாக பழுதடைந்தன. எனவே, ஒருவார காலம் அவசர அவசரமாக இரவு பகல் என்று பாராமல், அங்கே இருக்கக்கூடிய பொறியாளர்கள் அதைச் சரி செய்தார்கள். அதற்குப் பிறகு இப்போது 630 மெகாவாட் செயல்பட்டு, இப்போது மின்சார வாரியத்திற்கு மின்சாரத்தை வழங்கிக் கொண்டிருக்கிறது.

*முற்பகல் 11-10*

மாண்புமிகு உறுப்பினருக்கு மட்டுமல்ல, இந்தக் கோடைக்காலம் வந்தாலே, எப்போதும் நமக்கு இது ஒரு பிரச்சினைதான். ஏனென்றால், நீர் மின்நிலையங்களே செயல்படுவதில்லை. எந்த நீர் மின்நிலையத்திலேயும் தண்ணீர் கிடையாது. இப்போது மேட்டூரிலே நீர் திறந்து விட்டால், 300 மெகாவாட் நமக்கு வரும். குந்தாவிலே நீர் இருந்தால், ஏறக்குறைய 500 மெகாவாட் நமக்கு மின்சாரம் கிடைக்கும். இப்படி எல்லா நீர் மின்நிலையங்களும் கோடைக் காலத்திலே மூடி விட்டிருக்கின்ற நேரத்தில், அனல் மின்நிலையங்களை மட்டும் நம்பித்தான் நாம் மின்சாரத்தை உற்பத்தி செய்து அனைவருக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டியிருக்கிறது. இருந்தாலும்கூட, எந்தத் தொகுதியிலேயும் இப்படிப்பட்ட ஒரு பிரச்சினை இருக்கக்கூடாது என்று மின்சார வாரியமும் கருதுகிறது. முதலமைச்சரும் கருதுகிறார். நானும் கருதுகிறேன். எனவே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன், தமிழ்நாட்டிலே காலையிலே அரை மணி நேரமும், பகலிலே ஒரு மணி நேரமும், மாலை நேரத்திலே load shedding இருந்தது உண்மை. அவை எல்லாம் நேற்றுமுன்தினம் முதற்கொண்டு அகற்றப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டிலே இனிமேல் load shedding

இருக்காது. ஏனென்றால், மழை பெய்கிற அறிகுறியும் இருந்து கொண்டிருக்கிறது. கூடுதலாக 300 மெகாவாட் மின்சாரம் நமக்கு அனல் மின்நிலையங்களிலேயிருந்து கிடைத்துக் கொண்டிருக்கிறது. எனவே எல்லாத் தொகுதிகளுக்கும், எல்லா விவசாயிகளுக்கும் மின்சாரம் கிடைக்கக்கூடிய ஏற்பாட்டை மின்சார வாரியம் செய்யும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, point of order அல்லது ஏதோ clarification கேட்க வேண்டும் என்றீர்களே, உங்களுக்காகத் தனியாக எடுத்துக் கொள்ளவில்லை. உங்களுக்கும் சேர்த்துப் பதில் சொல்கிறேன் என்று அமைச்சர் சொன்னார்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதை, கோடைக்காலத்திலே மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது என்பதை, நான் உணர்கிறேன்; மறுக்கவில்லை. ஆனால் கோடைக்காலத்தில் மட்டுமல்ல. தொடர்ந்து திருவாரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம் பகுதிகளிலே எந்த நேரத்திலேயும் இதுபோன்ற மின்சாரத் தட்டுப்பாடு இருப்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குப் பல தடவை நான் கொண்டு சென்றிருக்கிறேன். எந்த நேரத்திலே மின்சாரம் போகும் என்று கூற முடியாது. அதுவும் இந்தக் கோடைக்காலத்திலே மின்சாரம் போன பின்னால், எந்த நேரத்திலே மின்சாரம் வரும் என்றே தெரியவில்லை. அதேமாதிரி, தஞ்சாவூரிலே தொலைபேசி மூலம் கேட்டால், மின்சாரம் இருக்கிறது என்கிறார்கள். நாகப்பட்டினத்திலே, திருவாரூரிலே மற்றப் பகுதிகளிலே கிடையாது. நகரப் பகுதிகளுக்கு மட்டும் பல line-களை cut பண்ணிக் கொடுத்து அப்படி ஒரு சிரமத்திற்கு உள்ளாக்குகிறார்கள். இதனாலே பல்வேறு விளைவுகள் வருகின்றன. அதனால் சொல்கிறேன். கிராமப்புறங்களிலே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் தண்ணீரை மேலே கொண்டுபோய் நிரப்பமுடியாத அளவுக்குப் பெரும் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அதனாலே, குட்டைகளிலே இருக்கக்கூடிய குளங்களிலே இருக்கக்கூடிய, சுத்தமில்லாத தண்ணீரைச் சாப்பிடுவதன் மூலமாக, காலரா, தொற்றுநோய் போன்ற பிரச்சினைகளும் அந்த மாவட்டத்திலே தொடர்ந்து இன்னும் வந்து கொண்டிருக்கின்றன. அநேகமாக இப்படிப்பட்ட நிலையிலிருந்து விடுபடுவதற்கு சீரான மின்சார விநியோகத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவதுபோல, ஏப்ரல் இரண்டாவது வாரத்தில், அந்த ஒருவார காலத்தில் சேலம் மாவட்டத்திலே கிட்டத்தட்ட 20 transformers ஒரே நேரத்தில் வெடித்துச் சிதறிவிட்டன என்ற ஒரு பத்திரிகைச் செய்தி வந்தது. அது உண்மையா பொய்யா என்று தெரியாது. அப்படி ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்திருந்தால், அந்த transformers மீண்டும் இயங்க ஆரம்பித்து விட்டனவா, அல்லது புதிதாக வைத்து விட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே 20 transformers வெடித்திருந்தால் மாவட்டம் முழுவதும் இருளாகத்தான் இருந்திருக்கும். ஒரே ஒரு feeder-லே மின் கசிவு ஏற்பட்டது. அதை உடனடியாக இரவோடு இரவாக சரிசெய்துவிட்டார்கள். எனவே, அந்தச் செய்தி உண்மையல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் தெரிவித்ததைப்போல, கிராமப் பகுதிகளிலே, சில இடங்களிலே இந்தக் குறைபாடுகள் இருந்தது உண்மை. இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த முறை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டம் நடத்தியபோதே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் சொல்லியிருந்தோம். எங்கெங்கே மக்களுக்குக் குடிநீர் வழங்க வேண்டுமோ, அங்கேயெல்லாம் முறையாக மின்சாரம் கிடைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யும்போது மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அதைக் கண்காணிக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கின்றோம். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் சொன்னதை மின்சார வாரியத்திற்கு எடுத்துச்சொல்லி, எந்தக் குறைபாடும் வராத அளவுக்கு கண்காணிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(ஆ) ஒட்டன்சத்திரம் நல்லதங்காள் ஆற்றின் குறுக்கே அணை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சக்ரபாணி அவர்கள் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஒட்டன்சத்திரம் தொகுதி நல்லதங்காள் ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கு ஆய்வுப் பணி முடிவுற்றும், பணிகள் தொடங்கப்படாதது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கமாக இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில், விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டது என்று சொல்வோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிகையை தங்கள் அனுமதியுடன் நான் திரும்பப் பெறுகிறேன். காரணம், அதிலே ஒரு சிறு தவறு நிகழ்ந்துவிட்டது. நல்லதங்காள் ஓடையின் குறுக்கே அணை கட்டப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொத்தாம் பொதுவிலே கேட்டுவிட்டார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணம், அவர் குறிப்பாக விழைவது ஒட்டன்சத்திரம் தொகுதியில், கொந்தையம் பகுதியில் நல்லதங்காள் ஓடையில் அணை கட்டப்படுமா என்பதுதான். ஆனால், ஏற்கெனவே நல்லதங்காள் ஓடையிலே—வெள்ளக்கோவில் தொகுதியிலே—ஈஸ்வரன்கோவில் பக்கத்திலே ஓர் அணை கட்டிக் கொண்டிருக்கிறோம். எனவே, நல்லதங்காள் ஓடையிலே அணை கட்டப்படுமா என்று கேட்டதால்,. அங்கே கட்டிக் கொண்டிருக்கிறோம் என்ற விவரத்தை இலாகாவினர் கொடுத்து இருக்கிறார்கள். அதனால் அவர்கள் மீதும் தப்பு இல்லை; மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணத்திலும் தப்பு இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விளக்கத்திற்காகச் சொல்கிறேன். ஒட்டன்சத்திரம் தொகுதியில், நல்லதங்காள் ஓடையில், கொந்தையம் பகுதியில் ஓர் அணை கட்டப்பட வேண்டும் என்பது அந்த மக்களுடைய விருப்பம். காரணம், அந்தப் பகுதி மக்கள் குடிநீருக்காகவும்,



விவசாயத்திற்காகவும் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். நானே நேரிலே சென்று பார்த்தேன். பிறகு பொதுப் பணித் துறையினர்—திட்ட உருவாக்கம்—Plan Formation செய்வதற்காக Chief Engineer அங்கு சென்று பார்த்து அணை கட்டுவதற்குரிய இடங்களைத் தேர்ந்தெடுத்து, மதிப்பீடுகளைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். மதிப்பீட்டினுடைய அறிக்கை மீது மாவட்ட ஆட்சித் தலைவருடைய opinion வாங்க வேண்டும். பிறகு, நில நிர்வாக ஆணையரிடமிருந்து அவருடைய கருத்தைப் பெற வேண்டும். அதைப் பெற்றதற்குப் பிறகு, அது அரசினுடைய பரிசீலனைக்கு வரும். பிறகு, அரசு அதுகுறித்து கவனிக்கும். எது எப்படி இருந்தாலும், அந்தப் பகுதியிலே ஓர் அணை கட்டப்பட வேண்டும் என்பதில் அரசுக்கு மாறுபட்ட கருத்து இல்லை என்பதை மட்டும் திட்டவட்டமாக மாண்புமிகு உறுப்பினருக்கும், அந்த அணையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற அந்தத் தொகுதி வாழ் பெருமக்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு நான் அனுமதி கொடுக்கவில்லை. (குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்கவில்லை. (குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்கவில்லை என்கிறேன்; உட்காருங்கள். (குறுக்கீடு) நிச்சயமாக நான் அதற்கு அனுமதி கொடுக்கவில்லை; உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதி கொடுக்க முடியாது. (குறுக்கீடு) அனுமதி கொடுக்க முடியாது. (குறுக்கீடு) பரவாயில்லை, உட்காருங்கள்.

(திரு. மு. அப்பாவு தொடர்ந்து நின்று கொண்டிருந்தார்.)

நீங்கள் நின்று கொண்டிருந்தால் வெளியேற்றுவேன். (குறுக்கீடு) திரு. அப்பாவு அவையை விட்டு வெளியேற வேண்டும்.

திரு. மு. அப்பாவு இருக்கையில் அமர்ந்து விட்டார்.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1999-2000 ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எழுபத்திரண்டாவது முதல் இருநூற்று எண்பதாவது வரையிலான ஒன்பது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. வ. வேலுசாமி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1999-2000 ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்தேழாவது முதல் நூற்று முப்பத்திரண்டாவது வரையிலான ஆறு அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (இ) சட்டவிதிகள் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ஏ. ராசேந்திரன், சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1999-2000 ஆண்டிற்கான சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் பதினேழாவது, பதினெட்டாவது மற்றும் பத்தொன்பதாவது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஈ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. ரவி அருணன், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1999-2000 ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்தாறாவது முதல் ஐம்பத்து மூன்றாவது வரையிலான எட்டு அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.



## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[2000 மே 17

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு.* மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2000 மே 17] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஈ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு.* மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[2000 மே 17

முற்பகல் 11-20

**(உ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2000 ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2000* ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(ஊ) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.*



2000 மே 17]

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2000* ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

*மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(எ) பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2000 ஆண்டு பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2000* ஆண்டு பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

*மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. அறிவிப்புகள்

### (அ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1989-90—(ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1989-90 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause 1 of Article 205, read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, M. Fathima Beevi, Governor of Tamil Nadu hereby recommend to the Tamil Nadu Legislative Assembly to make grants for the Demands in respect of the amounts spent on certain services and purposes during the financial year 1989-90 in excess of the amounts authorised or granted for those services and purposes and for that year."

## 7. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1989-90, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1989-90 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1989-90 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 16-5-2000 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில்





குறிப்பிடப்பட்டுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை, 1989-90 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்படுகிறது.

### *நிறைவேற்றப்பெற்ற 1989-90 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்*

(ரூபாய்)

| கோரிக்கை | அ. வருவாய்க் கணக்கில் செலவு | |
|---|---|---|
| 2 | மாநில ஆயத் தீர்வைத் துறை | 1,25,24,081 |
| 6 | பத்திரப் பதிவு | 86,64,402 |
| 8 | தேர்தல்கள் | 1,03,28,008 |
| 14 | சிறைச்சாலைகள் | 2,23,277 |
| 15 | காவல் துறை | 5,53,506 |
| 21 | மீனளம் | 54,23,623 |
| 29 | தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் | 27,41,814 |
| 31 | பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் | 1,91,67,850 |
| 37 | பொதுப் பணிகள்-கட்டடங்கள் | 1,74,57,083 |
| 38 | பொதுப் பணிகள்-பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும் | 57,22,225 |
| 46 | இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 1,68,14,371 |
| | மொத்தம்—அ. வருவாய்க் கணக்கில் செலவு | **9,96,20,240** |

**ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு**

| | | |
|---|---|---|
| 53 | பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு | 1,63,91,363 |
| | மொத்தம்-ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச்செலவு | 1,63,91,363 |
| | பெருமொத்தம் | 11,60,11,603 |

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2000 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு 2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2000), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2000) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்குகின்றது. 12 உறுப்பினர்கள் பேச இருக்கின்றார்கள். கண்டிப்பாக எந்த உறுப்பினருக்கும் 10 நிமிடத்திற்கு மேல் பேச அனுமதி அளிக்க முடியாது. முதலில் மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் பேசுவார்கள். மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு கேட்க வேண்டிய கேள்வியும் அவருடைய பேச்சிலே அமையும் என்று சொல்லி, திரு. ஞானசேகரன் அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

[2000 மே 17

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு குறித்த விவாதத்திலே கலந்துகொள்கிற வாய்ப்பை வழங்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே பல மானியக் கோரிக்கைகள் குறித்து தனித்தனியாக இந்த அவையிலே விவாதித்து இருக்கிறோம். இந்த விவாதத்தில் இன்னும் சில முக்கியமான கருத்துகளை, விடுபட்டுப்போன கருத்துகளை அரசினுடைய கவனத்திற்கு எடுத்து வைத்து, என்னென்ன குறைகள் இந்த நிருவாகத்திலே இருக்கின்றன என்பதை முதல்வருடைய பார்வைக்குக் கொண்டு வருவதற்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

முற்பகல் 11-25

பொதுவாக ஓர் அரசு என்பது பொதுமக்களுக்கு பொதுவான ஒன்றாகச் செயல்பட வேண்டும். சில நேரங்களில் அங்கேயிருக்கக்கூடிய அதிகாரிகள் கட்சிக் கண்ணோட்டத்தோடு நடந்துகொள்கிறார்கள் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டை நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய வேலூர் நகராட்சியில் மிக நேர்மையாகச் செயல்பட்டு வந்த, ஒரு tea-யைகூட மற்றவர்கள் காசிலிருந்து குடிக்காமல் தான் மற்றவர்களுக்கு tea வாங்கிக் கொடுக்கக்கூடிய ஒரு நல்ல Market Superintendent-ஐ மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அங்கிருக்கக்கூடிய நகராட்சி ஆணையர், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய Councillor bus stand-ல் ஆக்கிரமித்து கடை வைத்திருந்தார் என்பதற்காக, அதை எடுத்த ஒரே காரணத்திற்காக அவரைப் பழிவாங்கி மாறுதல் செய்திருக்கக்கூடிய ஒரு நிகழ்வை நான் இந்த அவைக்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை நான் மாண்புமிகு முதல்வரிடம் கூட மனுவாகக் கூடத் தந்திருக்கிறேன். நியாயமாகச் செயல்படக்கூடிய அதிகாரிக்கு நீங்கள் பாராட்டுத் தெரிவிக்க வேண்டும், அவர்களை ஊக்கப்படுத்த வேண்டுமேயொழிய, அதற்கு மாறாக இவர்கள் அவரைக் கொண்டுபோய் இப்படிச் செய்வது என்பது மிகவும் வேதனையான ஒரு செய்தி. அப்படிப்பட்ட செய்தியை நான் இந்த அவையில் கூட ஏற்கெனவே எடுத்து...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற அந்த அதிகாரி எத்தனை ஆண்டுகாலமாக அந்த நகராட்சியிலே பணியாற்றுகிறார்?



2000 மே 17]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் ஆலந்தூர் நகராட்சி, தாம்பரம் நகராட்சி என்று பல நகராட்சிகளில் பணியாற்றிவிட்டு சமீபத்தில் மாறுதல் செய்யப்பட்டு அங்கே போனவர்தான். தொடர்ந்து அதே நகராட்சியிலே 32 ஆண்டுகாலமாக பணியாற்றியவர்கள்கூட இருந்துகொண்டிருக்கிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்று சொன்னால் நேர்மையாகச் செயல்பட்ட . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரொம்ப வேகமாகப் பேசாதீர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அங்கே இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய Councillor கடையை எடுத்ததற்காகப் பழிவாங்குவது என்பது என்ன செயல்? அவர் நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணையும் பெற்று இருக்கிறார். நீதிக்குத் தலை வணங்குகிறோம் என்று சொல்கிற இந்தத் திராவிட முன்னேற்றக் கழக அரசு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தடையாணை நீதிமன்றத்திலிருந்து பெற்றால் அதைப்பற்றி நீங்கள் இங்கே பேசலாமா?

**திரு. சி. ஞானசேகரன்:** அதைச் செயல்படுத்தவில்லையே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியென்றால் contempt of Court போடச் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீதிமன்றத்தினுடைய ஆணையை எந்த அரசும் பின்பற்றவில்லை என்றால் contempt of Court உடனே போடலாம். அந்தக் கருத்தை அவருக்குச் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போடலாம் என்பது வேறு. ஆனால் நீதிக்கு இந்த அரசு தலை வணங்குகிறதா, இல்லையா என்பதை நான் தங்கள் வாயிலாக நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே ஒரு stay வாங்கியிருந்தும்கூட அவரைப் பணியிலே சேருவதற்குக்கூட அனுமதிக்காமல் இருப்பதுதான் வேதனையான செய்தி. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதிலே தலையிட்டு நிச்சயமாக நீதியை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவருடைய நேர்மையிலே எங்காவது ஒரு inch அளவுக்கு உங்களுக்குச் சந்தேகம் இருக்குமானால் தூக்கி அடியுங்கள், வேலை நீக்கம்கூடச் செய்யுங்கள்.

[2000 மே 17

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, முதலில் திரு. ஞானசேகரன் அவர்கள் இதைப் பற்றிய பரிந்துரையை என்னிடத்திலே கொடுத்தார். அதைப்பற்றி நான் விசாரித்துக் கொண்டிருக்கும்போதே அதை இப்போது அரசியலாக ஆக்கிவிட்டார். அப்படி ஆக்கிவிட்ட காரணத்தால் இனிமேல் அதுபற்றி யோசித்துத்தான் செய்ய வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடக்கக்கூடிய நிகழ்வுகளை, குறைகளை நான் முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறபோது, இது அரசியல் ஆக்கப்படுகிறது என்று வேறுவிதமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிந்தனை செய்கிறார்கள் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குக் கவலை இருக்கிறது, இல்லை என்பதல்ல. நீங்கள், முதலமைச்சர் அவர்கள் சொன்னது மாதிரி, ஒரு பரிந்துரையை முதலமைச்சரிடம் கொடுத்திருக்கிறீர்கள். இப்போது வந்து அவையில் ஒரு Councillor கடையை எடுத்துவிட்டார் என்று சொன்னாலும் பரவாயில்லை, ஆளுங்கட்சி Councillor கடையை எடுத்து விட்டதனால் இந்த நடவடிக்கை என்றால், அப்புறம் நீங்கள் அதை அரசியல் ஆக்குகிறீர்கள் என்பதுதானே அர்த்தம்? அரசியல் பிரச்சினையை நீங்கள் எப்படி முதலமைச்சரிடம் தனிப்பட்ட முறையிலே கொடுக்கிறீர்கள், நேரடியாகப் பேச வேண்டியதுதானே?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வரும் பொதுவானவர்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லையென்று நான் சொல்லவில்லை. அதனால்தான் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** முதலிலே கொடுத்திருக்கிறேன். அதே Market Superintendent-ஐ திராவிட முன்னேற்றக் கழக councillor வந்து, கொன்றுவிடுவேன் என்று சொன்னதாலே ஒரு case கொடுத்திருக்கிறார்கள். அந்த case குறித்துப் பேரணி நடத்தியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் யாரோ ஒரு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் கடையை அந்தக் குறிப்பிட்ட நபர் காலி செய்தார்.



2000 மே 17] [திரு. துரைமுருகன்]

அதற்காகத்தான் மாற்றினார்கள் என்று motive ஆகச் சொல்கிறார். அந்தக் கடைக்காரர் வந்து இங்கே அதற்கு மறுப்பு சொல்வதற்கு வாய்ப்பில்லை. ஆனால், நான் திருப்பிச் சொல்கிறேன். ஒரு கடையைக் காலி செய்தார் என்பதற்காக அல்ல, அவர் மாற்றப்பட்டது. அவர் ஊழல் பெருச்சாளி என்பதற்காக மாற்றப்பட்டார் என்று நான் சொல்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன ஊழல் செய்தார் என்பதை அமைச்சர் அவர்கள் இங்கே அவைக்குத் தெரிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அவர் கடையைக் காலி செய்ததற்காகத்தான் மாற்றினார்கள் என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? அதை அவர் சொல்ல வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி ஆணையர் ஏற்கெனவே ஓர் அறிக்கை கொடுத்திருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த வெங்கட்ராமன் என்கிற Councillor அந்த இடத்திலே ஆக்கிரமித்து கடைகளை வைத்துக் கொண்டிருப்பதை ஏற்கெனவே ஆணையர் அறிக்கை தந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்லித்தான் அங்கே சென்றது. இதுகூடத் தெரியாமல் ஓர் அமைச்சர் இருந்து கொண்டு எங்களை ஆதாரம் கேட்பது மிக வேதனையாக இருக்கிறது.

முற்பகல் *11-30*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அதற்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை. அவர் எடுத்தது சட்டப்படியாக இருந்தாலும், அதை திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொள்ளும். ஆனால், பலரிடத்திலேயிருந்து அந்த அதிகாரி பணம் வாங்கிக் கொண்டு பல்வேறு தில்லு முல்லுகளைச் செய்துகொண்டு இருந்தார். இன்னும் சொல்லப் போனால் நகராட்சிக்குள்ளே உட்கார்ந்து சில விரும்பத்தகாத செயல்களைச் செய்து கொண்டிருந்தார் என்பதற்காகத்தான் அவர் மாற்றப்பட்டு இருக்கிறார். இதுகூடத் தெரியாமல் அந்தச் சட்டமன்ற உறுப்பினர் பேசுவதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இரண்டு பேரும் வேகமாகப் பேச வேண்டாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** அமைச்சர் தப்பிவிடக் கூடாது. இதற்கு முன்னதாக memo கொடுத்து இருக்கிறீர்களா? நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். உங்களுக்கு ஆகவில்லையென்றால் பழி தீர்த்து விடுகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, வேகமாகப் பேச வேண்டும், பேச வேண்டும் என்று எதிர்பார்த்து அவ்வாறு இல்லாமல் தென்றல் வீசிய காரணத்தால் சபையில் கடைசி நாளாவது கொஞ்சம் சூடாகப் பேசலாம் என்று ஞானசேகரன் அவர்கள் தேவையில்லாமல் வம்பு வளர்க்கிறார். இது தேவையா என்பதை அவரே யோசித்துப் பார்க்க வேண்டும். என்னிடத்திலே பரிந்துரை கொடுத்தார். நான் கவனிப்பதாகச் சொல்லி அதுபற்றி விசாரித்துக் கொண்டிருக்கிறேன். அதற்குள்ளாக அதை எந்த அளவுக்கு அரசியலாக்கிவிட்டார் என்பது அவருடைய மனசாட்சிக்கே நன்றாகத் தெரியும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேர்மைக்கு சோதனை வந்துவிடக் கூடாது என்ற காரணத்தினால் தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஒன்று சொல்கிறேன், உங்களுக்கு. நீங்கள் ரொம்பப் பொறுப்பான சட்டமன்ற உறுப்பினர், கட்சிக் கொறடா. நீங்கள் ஒரு முன்மாதிரியாக எல்லாவற்றிற்கும் இருக்க வேண்டும். இப்போது எடுத்ததற்கெல்லாம் ஏதோ உங்கள் பேரில் குற்றச்சாட்டு சொன்னதைப்போல் எதற்காக நீங்கள் வேகப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? முதலமைச்சரிடம் கொடுத்து இருக்கிறீர்கள். அவர் கவனிக்கிறேன் என்று கூறியிருக்கிறார். இதுபோல் குறுக்கீடு இருந்தால் உரையை 10 நிமிடத்திலே எங்கே முடிக்கப் போகிறீர்கள்? நீங்கள் 1 மணி நேரம் பேசிக் கொண்டிருப்பீர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அதெல்லாம் ஒன்றுமில்லை.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் என்னிடத்திலே நேரில் கேட்டார். கும்பகோணத்தில் ஒரு செய்தி பற்றிச் சொன்னார். 3½ வருடமாக அங்கே ஒரு D.S.P.



இருக்கிறார். அவரை உடனே மாற்ற வேண்டும் என்றார். இவர் எத்தனை வருடமாக அங்கே பணியாற்றுகிறார் என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் இந்த அவைக்குச் சொன்னால் நன்றாக இருக்கும்.

**திரு. சி. ஞானசேகரன்:** சபையிலே நான் சொல்லியிருக்கிறேன். இப்போது recent-ஆக ஆலந்தூர் நகராட்சியிலே இருந்து போனவர். அதற்கு முன்னாடி இருந்த வரலாறு வேறு.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்க ஊழியர்கள் பொதுவாக 3 ஆண்டுகள் இருந்தால் மாற்றுவது என்பது இயற்கை. அதுவும் இல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் சொல்லுகின்ற அந்த அதிகாரி 15 ஆண்டுகளுக்கு மேலே அதே வேலூர் நகராட்சியிலே பணியாற்றி இருக்கிறார். பிறகு வேறு ஓர் ஊருக்கு மாற்றப்படுகிறார். மறுபடியும் வருகிறார். நான் சொல்வது ஏறக்குறைய 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் பணியாற்றக்கூடிய இந்த அரசாங்கத்தில் ஓர் ஊழியரை மாற்றுவது ஒரு பெரிய பிரச்சினையா? அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் விளக்க வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டுக்கொள்வதெல்லாம், நீங்கள் சாதாரணமாக யாரையாவது எங்காவது மாற்றுங்கள். ஆனால் இந்த ஒரு காரணத்தைக் காட்டி மாற்றுவதுதான் வேதனையாக இருக்கிறது என்பதைத்தான் பதியவைக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** இந்தக் காரணத்தைக் காட்டாமல் அவர் செய்த வேறு முறைகேடுகளையெல்லாம் இந்த அரசுக்கு அந்த Commissioner தெரிவித்து அதன்பேரில்தான் மாற்றப்பட்டிருக்கிறார். அவர் குறிப்பிடுவது அந்தக் காரணமே இது அல்ல.

**திரு. சி. ஞானசேகரன்:** அப்படியென்றால் அந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய Councillor கைது செய்யப்படுவது, வழக்குப் பதிவு செய்யப்படுவது குறித்து நகராட்சிகள் எல்லாம் பேரணி நடத்தியும் அங்கிருக்கின்ற காவல் துறை S.P.-யும் மற்றவர்களும் கைதே செய்யாமல் விட்டுவிடுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கும் இதற்கும் என்ன தொடர்பு? Transfer பற்றிக் கூறுங்கள்.

[2000 மே 17

**திரு. சி. ஞானசேகரன்:** அதாவது அரசியலாக எதையும் நடத்தாதீர்கள். பொதுவாக நடந்துகொள்ளுங்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களுக்கு ஒரு நீதியை வழங்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அதிகாரி relieve ஆனதற்குப் பிறகு அவர் Tribunal-க்குச் சென்று மறுபடியும் அதற்கு stay வாங்கியிருப்பதாக உறுப்பினர்தான் என்னிடம் தகவல் சொன்னார். அவர் relieve ஆன பிறகு எப்படி stay பெற்றார் என்பது ஒரு பிரச்சினை. நீதிமன்றத்திலே அந்தப் பிரச்சினை இருக்கின்றபோது இங்கே விவாதிப்பது நல்லதல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** நீங்களாக ஒரு relieving order உங்கள் office-ல் போட்டால்கூட அது relieving order-க்குச் சமமாகாது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, முதல்வர் அவர்கள்தான் நீதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள். உங்களுக்குக் கொடுத்த நேரம் எவ்வளவு? 10 நிமிடம்.

**திரு. சி. ஞானசேகரன்:** குறுக்கீடே சரியாகப் போயிற்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், 5 பேர் குறுக்கிடுவதுபோல் பேசிக்கொண்டே இருந்தால் நான் பொறுப்பா?

**திரு. சி. ஞானசேகரன்:** அனைத்துமே, நான் சொல்வது எல்லாம் உங்களுக்கு.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்பதற்காக முதல்வர் அவர்களின் கவனத்திற்கு நல்லதற்காகச் சொல்கிறேன். எதிலும் பொதுவாக நடந்துகொள்ள வேண்டும் என்றுதான் கேட்கிறேன். ஏன் இப்படி சிலவற்றில் கட்சிமாச்சர்யம்? அது இல்லாமல் நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். எங்களுக்காகத் தனி முதல்வரா இருக்கிறார் நாட்டில்? இவர்தான் எங்களுக்கு முதலமைச்சர். நீங்கள் எங்களுக்குப் பொதுவாக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது என்ன தனி முதல்வர்?



2000 மே 17]

**திரு. சி. ஞானசேகரன்:** இவை அத்தனையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து V.A.O.pension. 1996ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பழைய V.A.O.-களுக்கு சிறப்பு ஓய்வூதியம் கொடுத்திருக்கிறார்கள். 793 ரூபாய் மாதம் ஒன்றுக்கு இவர்களுக்குக் கிடைக்கிறது. ஆனால் ஏற்கெனவே அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றதன்பேரில் 12-11-1993 ஆம் தேதி மாநிலத் தீர்ப்பாயம் அவர்களை அரசு ஊழியர்களாகக் கருத வேண்டும் என்று ஒரு தீர்ப்பு கூறியிருக்கிறது. மாநில அரசு ஊழியர்களாக அவர்களை ஏற்றுக்கொண்டு 793 ரூபாய் சிறப்பு ஓய்வூதியத்தை மாற்றி முறைப்படியான ஓய்வூதியம் வழங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்தால் அந்தப் பழைய V.A.O.-கள் நிச்சயமாக நன்றி உடையவர்களாக இருப்பார்கள் என்பதற்காக நான் இந்தக் கருத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-35

இந்த அவையிலே நான் சந்தன வீரப்பன் விவகாரம் குறித்து ஏற்கெனவே பேசினேன். ஆனால், ஏனோ பதிலே இல்லை. வீரப்பனைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு எவ்வளவு செலவிடப்பட்டிருக்கிறது? எப்போது பிடிக்கப் போகின்றீர்கள் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்காவது பதிலுரையில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சித்தா, யுனானி போன்ற மருத்துவ முறைகளில் எல்லாம் புதியன கண்டுபிடித்து சமுதாயப் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய டாக்டர்களுக்கு சரியான பாதுகாப்பு இல்லையென்று நான் இந்த அவையிலே பலமுறை கூறியிருக்கிறேன். அதிலேயும் குறிப்பாக வாணியம்பாடியில் உள்ள டாக்டர் அக்பர் கவுஸ், காசினிக் கீரையை வைத்துக்கொண்டு சிறுநீரகம் affect ஆகின்றபோது kidney transplantation இல்லாமல் காசினிக் கீரையைக் கொண்டே அதைக் குணப்படுத்த முடியும் என்றெல்லாம் வரலாறு படைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு நாம் ஓர் அங்கீகாரம் வழங்க வேண்டும். அரசு இதுபோன்ற சிறந்த சித்தா டாக்டர்களுக்கும், யுனானி டாக்டர்களுக்கும் அங்கீகாரம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யாவிட்டால் யாராவது நோய் முற்றிப்போய் அவர்களிடம் வந்து, இறந்துவிட்டால், உடனடியாக அவர்களை எல்லாம் சமுதாயத்தில் பழி தீர்க்கக்கூடிய ஒரு நிலை வந்துவிடுகிறது. எனவே,

[திரு. சி. ஞானசேகரன்] [2000 மே 17

அவர்களுக்கு ஓர் அங்கீகாரத்தைக் கொடுத்தால்தான், இங்கே இருக்கக்கூடிய சித்தா டாக்டர்களும் மற்றவர்களும் பாதுகாப்போடு இருக்க முடியும் என்பதை நான் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, மணல் திருட்டு பற்றி நேற்றுகூட மாண்புமிகு உறுப்பினர் செல்லக்குமார் பேசினார். எங்களுடைய பகுதியில் பாலாறு பற்றிச் சொன்னால் நிறைய மணல் திருட்டு நடைபெறுகிறது. இந்த மணல் திருட்டு காரணமாக நீராதாரம் கெட்டுவிடுகிறது. சில இடங்களில் ஆக்கிரமிப்புகள் இருந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், *1996, 1997* ஆம் ஆண்டுகளிலே பல இடங்களிலே ஆக்கிரமிப்புகளை எடுத்தார்கள். ஆனால் இப்போது திடீரென்று ஆம்பூர், வாணியம்பாடி பகுதிகளில் கொடையாஞ்சிவரை சென்ற ஆக்கிரமிப்பு அகற்றும் பணி பிறகு ஏனோ நின்றுவிட்டது. இப்போது ஆறே தெரியாத அளவுக்கு சில இடங்களில், குறிப்பாக கொடையாஞ்சியில் ஆக்கிரமிப்பு இருந்துகொண்டிருக்கிறது. இதற்காக, பாலாற்று மணல் திருடுவதைத் தடுப்பதுடன் மற்ற பகுதிகளில் இருக்கக்கூடிய ஆறுகளில் ஏற்படக்கூடிய மணல் திருட்டுகள் எல்லாவற்றையும் தடுப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது P.W.D.-ன் கீழே வருகிறதா அல்லது Revenue Department-ன் கீழே வருகிறதா என்று சில நேரங்களில் போராடி விட்டுவிடுகிறார்கள். கடைசியில் எந்த Department நடவடிக்கை எடுப்பது என்று தெரியாமல் அவரவர்கள் ஆங்காங்கே எடுத்துக்கொண்டு போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மணல் திருட்டைத் தடுப்பதற்கு அரசு ஒரு நல்ல முயற்சியை எடுத்து, அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, மெரினா கடற்கரையைப் பற்றி நான் இங்கே ஏற்கெனவே பேசினேன். உலகத்திலேயே அழகான கடற்கரை மெரினா கடற்கரை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துக்கொள்ள வேண்டும். மெரினா அவ்வளவு முக்கியமான பிரச்சினை அல்ல, வேறு ஏதாவது பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** முடித்துவிடுகிறேன். இப்போது மெரினாவில் ஆக்கிரமிப்புகள் இருந்துகொண்டிருக்கின்றன. அழகாக இருக்க வேண்டிய beach இப்போது அழகில்லாமல், பொலிவில்லாமல் இருந்து



2000 மே 17] [திரு. சி. ஞானசேகரன்]

கொண்டிருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய, platform-ல் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கெல்லாம் நீங்கள் மாற்று இடத்தைக் கொடுத்து, beach-ஐ அழகுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று பலமுறை வற்புறுத்தி வந்துகொண்டிருக்கிறோம். உங்களது ஆட்சியோ முடியப்போகிற ஒரு நேரம். இப்போது கொடுக்காவிட்டால், வேறு எப்போது நீங்கள் கொடுப்பீர்கள்? கடைசியிலே, தேர்தல் காலத்திலே நீங்கள் கொடுத்துவிட்டு, நாங்கள் கொடுத்துவிட்டோம் என்று சொன்னால் மக்கள் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஏனென்றால் இப்போது விவசாயிகள், விவசாயக் கடனால் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகி, நசிந்துபோய் கடனிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் பலபேர் செத்துக்கொண்டிருப்பதற்கு இந்த அரசு காரணமாக இருந்து விடக்கூடாது. உரிய நேரத்தில், காலத்தே பயிர் செய்வது போல, காலத்தே நீங்கள் உதவி செய்ய வேண்டும். கரும்புக்கு, டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்போம் என்று சொன்னீர்கள். இப்போது Appropriation Bill-க்கு பதில் உரை சொல்லுகிறபோதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு செய்ய வேண்டும். விவசாயிகளை கடனிலிருந்து மீட்பதற்கு, விவசாயக் கடன்களை முழுமையாகத் தள்ளுபடி செய்யாவிட்டாலும்கூட, வட்டியையாவது தள்ளுபடி செய்து நீங்கள் இங்கே அறிவிப்பு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அரிசி, gas, kerosene போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலையை மத்திய அரசு உயர்த்தினாலும்கூட, மத்திய அரசில் அங்கம் வகித்துக்கொண்டிருக்கக்கூடிய, திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த அவையின் மூலமாக ஒரு தீர்மானத்தைப் போட்டாவது மத்திய அரசை நிர்பந்திக்க வேண்டும். Gas, kerosene போன்ற பொருட்களின் விலை உயர்வைத் தாங்க முடியாமல் தமிழ்நாட்டு மக்கள் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள். ஆகவே, முதல்வர் அவர்கள் ஒரு தீர்மானத்தை இந்த அவையின் மூலமாகக் கொண்டுவந்து மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று நான் மீண்டும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Tender, contract போன்ற முறைகளிலே transparency-ஐ கடைபிடிப்பதாக இந்த அரசு சொல்லிக் கொண்டிருந்தாலும்கூட

'கைப்புண் பார்க்க கண்ணாடியும் வேண்டுமா?' என்பார்கள். எந்த இடத்தில் பார்த்தாலும், Municipal contract ஆக இருந்தாலும் சரி, அல்லது P.W.D. contract ஆக இருந்தாலும் சரி highways contract ஆக இருந்தாலும் சரி அல்லது குடிநீர் வடிகால் வாரிய contract ஆக இருந்தாலும் சரி, ஒவ்வொருவரும் அங்கே syndicate அமைத்துக்கொண்டு, குறிப்பாக ஆளுங்கட்சிக்காரர்களின் சொந்தக்காரர்கள் நிறையபேர் அந்த இடங்களிலே இருந்துகொண்டு, contract-களை எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். சட்டப்படி அது உங்களுக்குச் சரியாக இருக்கலாம். சட்டப்படி சரியாக இருந்தாலும், பின்னணியில் என்ன நடக்கிறது, திரைமறைவில் என்ன நடக்கிறது என்பது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அரசுக்கும தெரியாதது அல்ல.

*முற்பகல் 11-40*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்**: *மாண்புமிகு தலைவர் அவர்களே, சட்டப்படி சரியாக இருக்கலாம்; பின்னணியிலே என்ன நடக்கிறதோ என்று சொல்லி, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் அந்தப் பின்னணியிலே இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். உலகம் முழுவதும் பின்னணியிலே எல்லாக் கட்சிகளும் இருக்கின்றன. பின்னணியிலே இல்லாத கட்சியே கிடையாது. இடம் வேண்டுமானால் வேறாக இருக்கலாமே தவிர, கட்சியைச் சேராதவர்கள் பின்னணியிலே இருக்கத் தேவை இல்லை. (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அடுத்து, திரு. குத்தாலம் பி. கல்யாணம். (குறுக்கீடு) முடித்துவிட்டீர்கள். நீங்கள் பேசிக்கொண்டே இருந்தால் எப்படி? (குறுக்கீடு) என்ன புதிதாகச் சொல்லப் போகிறீர்கள்? சீக்கிரம் பேசி முடியுங்கள்.*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நதிகளை தேசியமயமாக்க வேண்டுமென்ற கருத்தை இங்கே வலியுறுத்துகிறேன். காவிரி ஆற்றுத் தண்ணீரை வேலூருக்குக் கொண்டு வருவதற்கு, 320 கோடி ரூபாயிலே நீங்கள் ஒரு திட்டத்தை நிறைவேற்றினால்தான் எங்கள் வேலூருக்குத் தண்ணீர் கிடைக்கும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குக்கூட* contract-*தான் விட வேண்டும்.*





**திரு. சி. ஞானசேகரன்:** அதை நீங்கள் contract-ல் விட்டாலும்கூட, பின்னணியில் எதுவும் இல்லாமல், நியாயமான முறையில் நடக்கக்கூடிய ஒரு contractor-டம் கொடுத்தால்...... (மணியடிக்கப்பெற்றது) இதோ முடித்துவிடுகிறேன். வேலூருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு வழக்கறிஞர். நாட்டு நடப்பு உங்களுக்கு நன்றாகத் தெரியும். Tender-லே எல்லாம் syndicate form பண்ணுவதிலே, கட்சியெல்லாம் ஒன்றும் கிடையாது. இது நாடறிந்த உண்மை. இதை எதற்குத் தேவையில்லாமல் அரசியல் ஆக்குகிறீர்கள்? நான்கு contractors ஒன்று சேர்ந்து, ஒரு syndicate form பண்ணுவதை எப்படி அரசாங்கம் தடுக்க முடியும்? Minimum price வைத்துக் கொள்கிறோம். அவர்கள் 4 பேரோ, 10 பேரோ, 20 பேரோ சேர்ந்து பேசுகிறார்கள். இதிலே ஏன் அரசியலைப் புகுத்துகிறீர்கள்? எல்லாக் கட்சிக்காரர்களும் அதிலே இருக்கிறார்கள். இத்துடன் உங்கள் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலபேர் சுமோ காரிலே அடியாட்களோடு சேர்ந்து வந்து மிரட்டுகிறார்கள் என்பதை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேலூரில் ஒரு பல்கலைக்கழகத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமைத்துத் தர வேண்டும். வேலூரிலே Medical College, Law College எல்லாம் கொடுத்ததற்கு நன்றி. அதேபோல, சத்துவாச்சாரியிலே ஒரு Traffic Police Station-ஐ நான் கேட்டிருக்கிறேன். Sales Tax-லே சிட்டா நூலுக்குக் கொடுக்கக்கூடிய 2 சதவிகித வரியை நீங்கள் ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Additional Tax சம்பந்தமாக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு கருத்தைச் சொல்வதற்கு அனுமதி கொடுத்தால் 15 கருத்துகளைப் பேசக்கூடாது. (குறுக்கீடு) உட்காருங்கள், நீங்கள். இனிமேல் பேச இருப்பவர்களுக்கெல்லாம் 7 நிமிடங்கள்தான். முதலமைச்சர் அவர்கள் 12-45, 12-50-க்காவது பதில் சொல்ல தொடங்க வேண்டும். திரு. குத்தாலம் பி. கல்யாணம், பேசுங்கள்.

***திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000 ஆண்டிற்கான நிதியொதுக்கச் சட்டமுன்வடிவில் கருத்துகளை எடுத்துவைக்க வாய்ப்பு வழங்கிய தங்களுக்கு முதலில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

"They love him;

They hate him;

But, they can't do without him."

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்களை உள்ளார்ந்த நோக்கத்தோடு ஏற்றுக்கொள்கிறார்களோ இல்லையோ, வாழ்த்துகிறார்களோ இல்லையோ இப்போது எல்லோருடைய காரியமும் அவர் இல்லையென்றால் இல்லை என்கிற அளவுக்கு தமிழகத்து நிர்வாகத்தைச் செம்மையாக நடத்திக் கொண்டிருக்கிற ஒரு முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி)*

*நான் இன்னும்கூடச் சொல்கிறேன். "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்" என்கிற சிலப்பதிகார வரிகள், இப்போது நடைமுறைக்கு வந்து கொண்டிருக்கிற நேரம்.* 'C.B.I. *விசாரணை வேண்டுமென்று கேட்டபோது,* 'C.B.I. *என்ன வானத்திலேயிருந்து குதித்து வந்ததா?' என்று ஒரு நேரத்திலே சொன்னார்கள்.* "Whatever the C.B.I. says, is not gospel's truth" *என்று சொன்னார்கள்.* "Devil quoting the scriptures" *என்பார்களே, அதுபோல, 'சாத்தான் வேதம் ஓதுவதைப்போல' சொன்னவர்கள் எல்லாம் இப்போது நீதிமன்றத்தினுடைய நெடிய படிக்கட்டுகளிலே ஏறி இறங்கி வருகிறார்கள். அந்த நீதிமன்றத்தின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற சில தீர்ப்புகள் என்றுகூட அல்ல; கண்டுபிடிப்புகளை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். நீதிமன்றம் அவர்களுக்கு தந்திருக்கிற சான்று, ஒரு சட்டவிரோத ஆணைக்கு சட்டத் திருத்தம் கொண்டு வந்து, சட்ட அங்கீகாரம் கொடுக்கப்பட்டது. இதன்மூலம் ஆவணங்களைத் திருத்திய சதி நடந்துள்ளது. கூட்டு சதி, லஞ்ச ஊழல், ஆவணங்களைத் திருத்தியது குறித்த இந்த ரம்மியமான வழக்கில்*—Pleasant Stay Hotel *வழக்கில்—நீதிமன்றம் சொல்லியிருக்கிற கருத்து—(மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் பேசும்போதுதான் நேரத்தைக் குறைக்கிறீர்கள். நாங்கள் எப்போதாவது பேசுகிறோம். அதிலே சொல்லப்பட்டு இருப்பது—முதலமைச்சர் என்ற உயர்ந்த பதவியிலே இருந்தவர், தகுதியை விட்டு கீழே இறங்கியிருக்கிறார் என்று அந்த வழக்கிலே, அவர்களைச் சேர்த்தது தவறு என்று எந்த நீதிமன்றமும் சொல்லவில்லை. மாறாக, வழக்கிலேயிருந்து விடுவித்ததுதான் செல்லாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் இன்னும்கூட சொல்ல விரும்புவது,*





*ஊழல் புரிந்தவர்கள் எவ்வளவு உயரத்திலே இருந்தாலும், அவர்கள் சாமானியர்களாக நடத்தப்படக்கூடிய அளவுக்கு இப்போது நீதி நிர்வாகம் நடைபெற்று வருகிறது.*

*முற்பகல் 11-50*

*காவல் துறை மானியத்தினை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வைக்கின்றபோது, குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதிலும் தமிழ்நாடு உயர்ந்த நிலையிலே உள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நீதி பரிபாலனத்திலே ஒன்று சொல்லப்படுவது உண்டு. "ஆயிரம் குற்றவாளிகள் தப்பிக்கலாம், ஆனால் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக் கூடாது" என்று. ஆனால், புரட்சிகரமான தீர்ப்புகளை வழங்கிய, புரட்சிகரமான நீதியரசர் வி.ஆர். கிருஷ்ணய்யர் அவர்கள் குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டால் சமுதாயம் தண்டிக்கப்படும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார். எனவே குற்றவாளிகளைத் தண்டிக்க இந்த அரசு எடுக்கிற நடவடிக்கைகளை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் ஒருமுறை இந்த மாமன்றத்திலே பேசுகிறபோது, அழகான ஒரு சொற்றொடரைச் சொன்னார். அந்தச் சொற்றொடரை நான் வழிமொழியக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு பேயைப் பற்றிக் குறிப்பிட்டார். அவர் சொன்னார்:* "Don't create a Ghost and then try to destroy it". *ஒரு பேயை உருவாக்கிவிட்டு, அந்தப் பேயை அழிக்கக்கூடிய நடவடிக்கையை எடுப்பதைவிட, பேயை வளர விடாமல் தடுப்பது நல்லது என்ற யோசனையைச் சொன்ன மாண்புமிகு ஞானசேகரன் அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்.*

*இன்னும்கூட ஒரேயொரு செய்தி. 'தினமணி' பத்திரிகையிலே 11-5-2000 அன்று வந்த தலையங்கச் செய்தியில், அமெரிக்க நாட்டின் அதிபராக இருக்கும், பில் கிளிண்டன், தான் பதவியிலேயிருந்து ஓய்வு பெற்றதற்குப் பிறகு, தன்னுடைய வாழ்க்கை ஜீவனத்தை எப்படி நடத்துவது என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறார் என்ற செய்தியைச் சொல்கிறபோது, அந்தப் பத்திரிகை தலையங்கத்திலே அரசியல் தொழிலில் அமோக வசூல், கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே நடந்தது, அதன் விளைவாக அடுக்கடுக்கான ஊழல் குற்றச்சாட்டுகள் என்று இன்னொரு செய்தியும் சொல்லப்பட்டிருந்தது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு கருத்தைச் சொல்லி, நான் முடித்துக்கொள்கிறேன், நீங்கள் மணி அடிக்க வேண்டிய அவசியமில்லை. எதிர்காலத்திலே இப்படிப்பட்ட இமல்டாக்களும், அரசியல் பூலான்தேவிகளும் தலையெடுக்காமல் செய்கிற ஒரு நல்ல நிர்வாகத்தை நடத்தி வருகிற இந்த அரசையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் பாராட்டுகிறேன். இவர்கள் எல்லாம் எப்படிப்பட்டவர்கள் என்பதை, Womens Era என்கின்ற பெண்களுடைய முன்னேற்றத்திற்காகவே தொடங்கப்பட்டிருக்கிற ஒரு பத்திரிகையில் வந்திருக்கிற செய்தியைச் சொல்ல விரும்புகிறேன்.

Womens Era, New Delhi, March 4. "The `X' political party supremo `Y' has proved herself to be one of the most unscrupulous and corrupt politicians. She is ready to do anything to satisfy her ego and whims. The wealth amazed by `Y' during her rule of the State is fabulous. No Chief Minister with his known source of income can ever be imagined to be that rich. There are dozens of cases against her. Everyone knows that she is guilty of all the crimes with which she has been charged". In my speech, X denotes the A.I.A.D.M.K., Y denotes Ms. Jayalalitha.

Thank you very much.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவை ஆய்வு செய்கிற இந்த வேளையில், ஒருசில கருத்துகளைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த சில வாரங்களாக பல்வேறு மானியக் கோரிக்கைகள் விவாதிக்கப்பட்டு நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம் நடைபெற்று, அதற்கு முன்பாக ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது விவாதம் நடைபெற்று, எல்லா வகையிலும் விவாதிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்ட பணிகளுக்கு நிதியை எடுத்துச் செலவழிக்கின்ற சட்டமுன்வடிவின்மீது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே, சொல்லப்பட்ட சில கருத்துகளை வலியுறுத்திக்கொள்ளவும் அல்லது விடுபட்டுப்போன சில கருத்துகளைத் தெரிவிப்பதற்கும், இதை ஒரு வாய்ப்பாகக் கருதி, ஒருசில வார்த்தைகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.



பொது விற்பனை வரி மானியம் மீதான விவாதம் நடைபெற்றபோது, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்கினார்கள். அப்படி பதிலுரை வழங்குகிறபோது, சில வரி விலக்குகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்ற செய்தியையும் எடுத்துச்சொன்னார்கள். குறிப்பாக, மானாமதுரை மண்பாண்டத் தொழிலாளர்கள் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம், தனக்கு விதிக்கப்பட்டிருக்கிற சேவைக் கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தது. அந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11-55*

அதைப்போல, cycle seat cover உற்பத்தியாளர்கள், மாநிலம் முழுவதும் எடுத்துக் கொண்டாலும், மிக சிறிய அளவிலேயே, எண்ணிக்கையில் இருப்பார்கள். இவர்கள் விற்பனை செய்யக்கூடிய seat cover-களுக்கு விற்பனை வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த விற்பனைக்கு வரியை முழுமையாக விலக்கு அளித்து, அந்தப் பொருட்கள் விற்பனைக்கு ஊக்கம் ஊட்ட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, கழிவுப் பஞ்சுமீதான விற்பனை வரியைக் குறைக்க வேண்டுமென்று, நீண்டகாலமாக அது தொடர்புடைய தொழில் முதலீட்டாளர்கள் கோரிக்கை வைத்து வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதுகுறித்து, பரிவோடு பரிசீலிப்பதாக கூறியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே கழிவுப் பஞ்சுமீதான விற்பனை வரியை, 4 சதவிகிதமாகக் குறைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் விநியோகிப்பதற்காகவும், பாசனத் திட்டத்திற்காகவும் பெரிதும் பயன்படுத்தப்படக்கூடிய P.V.C. pipe-களுக்கான விற்பனை வரி மிக அதிக அளவில், மற்ற மாநிலங்களைக் காட்டிலும் கூடுதலாக இருக்கிறது. அதனுடைய விற்பனை வரியை 4 சதவிகிதமாகக் குறைக்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சமீபத்திலே நம்முடைய அரசு வீட்டுமனைப் பட்டா வழங்கக்கூடிய ஒரு நல்ல திட்டத்தை அறிவித்தது. 10 ஆண்டு காலம் அனுபவத்தில் இருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதாக அறிவித்தது. அதற்கான அரசாணையும் வெளியிடப்பட்டிருக்கிறது. இதிலே இருக்கிற ஒரு சிரமத்தை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு மீண்டும் கொண்டு வர விரும்புகிறேன். நிலப் பட்டா வழங்குகிறபோது, கிரயப் பட்டாவாக வழங்குகிற ஒரு நடைமுறை பின்பற்றப்படுகிறது. கிரயப் பட்டா பெற வேண்டுமென்றால், அரசு வழிகாட்டி விலை மதிப்பு என்ற அடிப்படையில் பல்லாயிரக்கணக்கான ரூபாயை கிரயமாகச் செலுத்தி அந்தக் கிரய அடிப்படையிலே, நகரத்திலே வீட்டுமனைப் பட்டா பெறலாம் என்ற நடைமுறை பின்பற்றப்படுகிறது. இந்த நடைமுறையின் காரணமாக, நிலமற்ற, வீடற்ற, எந்த வசதியுமற்ற ஏழை மக்கள், நகர்புறத்து ஏழை மக்கள் பயனடைய முடியவில்லை. எனவே, அரசின் நோக்கம் நிறைவேறவும், ஏழைகள் பயனடையவும், எந்தவிதமான கட்டணமும் இல்லாமல் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தென்மாவட்டங்கள் உள்ளிட்ட தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் வறட்சி அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக, குடிநீர்ப் பஞ்சம் கொஞ்சம், கொஞ்சமாக அதிகரித்து வருகிறது. வருகிற காலத்திலே, தென்மேற்குப் பருவ மழையும், நாம் எதிர்பார்த்த அளவிற்கோ அல்லது ஆண்டுதோறும் கிடைக்கின்ற இயல்பான அளவிற்கோ கிடைக்காது என்று வானிலையியலாளர்கள் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். இந்த எச்சரிக்கை குறித்து, தமிழ்நாடு அரசு மிகுந்த முன்உணர்வோடு, அதனைக் கருதிப் பார்த்து, உடனடியாக, முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கையிலே ஈடுபட வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இராஜஸ்தானிலும், குஜராத்திலும், ஒரிசாவிலும் இப்படி முன்னெச்சரிக்கை நடவடிக்கை, தடுப்பு நடவடிக்கை எடுக்காத காரணத்தினாலே, ஒருசில மாதங்களுக்கு முன்பு, ஒரிசாவில் பெருவெள்ளம் பாதித்தது. இப்போது அதே ஒரிசாவிலே கடுமையான வறட்சி பாதித்து இருக்கிறது, இதுபோன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பதிலே அந்த மாநில அரசுகள் எல்லாம் தவறியதன் காரணமாகத்தான் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது என்பதைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு அரசு வருகிற காலத்திலே குடிநீர்ப் பஞ்சம் எந்தக் கிராமத்திலும் ஏற்படாத அளவிற்கு, முன்கூட்டியே பல





திட்டங்களை வகுத்து இருந்தாலும், இன்னும் முனைப்போடு செயல்பட வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

நாளைய மறுநாள், (19-ந் தேதி) நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாட்டின் தலைநகருக்குச் செல்ல இருக்கிறார்கள். நதிநீர் பிரச்சினை தொடர்பான பல்வேறு கோரிக்கைகள்மீது மத்திய அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கவும், பிரதம அமைச்சருடைய கவனத்தை ஈர்க்கவும், நேரடியான பேச்சுவார்த்தைக்குமாகச் செல்கிறார்கள். அந்தப் பேச்சுவார்த்தையிலே தென்னக நதிநீர் இணைப்பு குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, முல்லை-பெரியாறு பிரச்சினைக்கு ஒரு சுமூகத் தீர்வுக்கும், தமிழ்நாட்டின் சார்பாக முயற்சி எடுக்க வேண்டும். காவிரி நதி நீர் பிரச்சினையில் குறிப்பாக கவனம் செலுத்தப்பட்டாலும், வருகிற ஜூன் மாதம் 12 ஆம் தேதி, காவிரியிலே தண்ணீர் திறக்கப்பட்டு, டெல்டா பகுதியிலே, விவசாயப் பணி மேற்கொள்ளப்படும் என்ற எதிர்பார்ப்போடு தஞ்சை மாவட்ட விவசாயிகள் அனைவரும் எதிர்பார்க்கிறார்கள். அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றக்கூடிய அளவில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காரியங்களை ஆற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பல்வேறு துறைகளிலும், பல்வேறு திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தத் திட்டப் பணிகளை மக்களுடைய ஒத்துழைப்போடும், ஈடுபாட்டுடனும் மேற்கொள்கிறபோதுதான், பணிகள் மிகச் சரியாகவும், முறைகேடுகள் இல்லாமலும் தரம் வாய்ந்த முறையிலும் அமையும். அந்த அடிப்படையில் ஆந்திர மாநிலத்தில் காவல் துறைக்கு என்று ஒரு கண்காணிப்புக் குழு, மருத்துவத் துறைக்கு என்று ஒரு கண்காணிப்புக் குழு, கல்வித் துறைக்கு என்று ஒரு கண்காணிப்புக் குழு, மாவட்ட அளவிலே, கிராமத் தலைவர்களைத் தலைமையாகக் கொண்டு அமைத்து இருக்கிறார்கள். அந்த அனுபவத்தை, தமிழ்நாட்டிலும் கருதிப் பார்க்கலாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டில், இப்போது, R.S.S. என்கிற அமைப்பு பல்வேறு இடங்களில் தங்களுடைய நடவடிக்கையை விரிவாக எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. மத அடிப்படை வாதத்தை, குறிப்பாக, பெரும்பான்மை மதத்தை அடிப்படை வாதம்

என்ற அடிப்படையிலே, வெறியூட்டுகிற ஒரு கலாச்சாரத்தை, இந்த அமைப்பு பின்பற்றி வருகிறது. இந்த அமைப்பினுடைய நடவடிக்கையை தாராளப்படுத்துவது நம்முடைய நாட்டிற்கு எதிர்காலத்திலே பெரும் தீங்கு விளைவிக்கும் என்ற கருத்தை நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம். தமிழகத்திலே பல்வேறு இடங்களில் இதற்குத் தாராள அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த *10* ஆம் தேதி திராவிடர் கழகத்தைச் சார்ந்தவர்கள், அனைத்து சாதியைச் சார்ந்தவர்களும் அர்ச்சகர்களாக ஆக்கப்பட வேண்டுமென்று ஆலய நுழைவாயிலில் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அப்போது சுசீந்திரத்திலே திராவிடர் கழகத்தினுடைய மாவட்டச் செயலாளரும், அவருடைய குழந்தையும் தாக்கப்பட்ட சம்பவம் நடைபெற்றிருக்கிறது. அது தொடர்புடைய குற்றவாளிகளை உடனடியாகக் கைது செய்து தண்டிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் *12-00*

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூரிலே R.S.S. முகாம் போட்டு, அமைதியாக இருக்கின்ற ஊரிலே பதட்டத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. சர்வ மதத்தைச் சார்ந்தவர்களும் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே முறையீடு செய்திருக்கிறார்கள். இருந்தாலும், இப்படிப்பட்ட நடவடிக்கைகளை கடந்தகால பிதுரார்ஜித பாரம்பரியத்தோடு நாம் தடுத்திடவும், தணிக்கவும் முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, சிறு தொழில் துறை குறித்து ஒன்று. நாட்டின் பெரும் தொழில் குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, முன்மொழிந்த மானியத்தில் வெறும் ரூ.*14,000*/-தான் அடையாள ஒதுக்கீடாக, முதலீட்டிற்காக, மூலதனச் செலவிற்காகக் கோரியிருந்தார்கள் என்பதைக் கருத்தில்கொள்கிறபோது, இந்தச் சிறு தொழிலுக்காக நாம் எவ்வளவு தூரம் கவனம் செலுத்த வேண்டுமென்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். உற்பத்தி ஒதுக்கீடு, கொள்முதல் ஒதுக்கீடு, கொள்முதல் முன்னுரிமை, விலை முன்னுரிமை போன்ற சலுகைகளை சிறு தொழிலுக்காக வழங்கி, அதை ஊக்கப்படுத்த வேண்டும். மூலதன அடர்வு, தொழில் உழைப்பாளர்களுடைய வேலைவாய்ப்பிற்கு பெரிய அளவிற்கு வாய்ப்பு அளிப்பதில்லை. இதனால் எதிர்காலத்திலே சமூகப் பதட்டம் ஏற்படுவதற்கும் வாய்ப்பு உண்டு என்பதையும் கருத்திலே கொள்ள வேண்டும்.



கடைசியாக, தொகுதி சம்பந்தமாக ஒருசில கோரிக்கைகளை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். பெருந்துறை தொகுதியிலே, பெருந்துறையிலே பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைக்க, வரும் ஜூலை மாதம் *1* ஆம் தேதி அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வர இருக்கிறார்கள். தொகுதி மக்களின் சார்பாக நான் இப்போதே அவரை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சார்பு நீதிமன்றம் ஒன்று பெருந்துறையில் அமைக்கப்பட வேண்டுமென்பது நீண்டநாள் கோரிக்கையாக இருக்கிறது. நிதிப் பற்றாக்குறையின் காரணமாக சட்டத் துறை தடுமாறுகிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதிலே கருணைகொண்டு, சார்பு நீதிமன்றம் அமைய வாய்ப்பளிக்க வேண்டும், வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் அத்திக்கடவு திட்டம். அதிலே கடைசியாக ஓர் ஆய்வு அறிக்கை கைக்குக் கிடைக்கப்பெற்றவுடன், அது நிறைவேற்றப்படும் என்று இந்த அவையிலே உறுதி சொல்லியிருக்கின்றார்கள். அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு தவணைத் தொகை, மானியத் தொகை கிடைக்கப்பெறாமல் இருக்கிறது. நிராகரிக்கப்பட்ட நிலையிலே இருக்கிற அந்தத் தொகை கிடைக்கப்பெறாததன் காரணமாக, குறிப்பாக ஈரோடு மாவட்ட நெசவாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கடந்த சில ஆண்டுகளாக போனஸ்கூட கொடுக்க முடியாத நிலை பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தொகையை வழங்குவது குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, *2000* ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறுகிறேன். நான்காம் முறையாக தமிழகத்தினுடைய முதல்வராகப் பொறுப்பேற்ற தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் இந்த மாமன்றத்திலே நிதிநிலைப் அறிக்கை மூலமாக நிதியைப் பங்கிடும்போது, தமிழகத்தினுடைய வணக்கத்திற்குரிய மாநகர மேயர் அவர்களையும், பாட்டாளி வர்க்கத்தினுடைய என்னையும் அழைத்து உங்களுக்கான நிதியைப் பங்கிட்டுத் தருகிறேன் என்று பங்கிட்டுக் கொடுத்தார்கள். அந்தப்,

[திரு. ப. கோவிந்தன்] [2000 மே 17

பங்கீட்டின்போது அவருக்கு ஒரு பங்கை வழங்கிவிட்டு கிராமப்புறங்களிலே வாழ்கின்ற பாட்டாளிகளுக்கு ஒரு பங்கை வழங்கினார். அப்போது இந்தப் பாட்டாளிகளாக இருக்கின்ற நாங்கள் ஏழ்மை முகத்தோடு, அவருடைய முகத்தை உற்றுநோக்கி எங்களுடைய வறுமையைப் பாருங்கள் என்று கேட்ட நிலையைப் பார்த்து, உங்களுடைய நிலையைப் புரிந்து நான் உங்களுக்கு அதிகப்படியான நிதியை ஒதுக்கி, உங்களுக்கு மன நிம்மதியை அளிக்கின்றேன் என்று வாரி வழங்கிய வள்ளலாகத் திகழ்கிறார் நம்முடைய முதல்வர் அவர்கள்.

*பிற்பகல் 12-05*

மூன்று முறை அவர் முதலமைச்சராக இருந்தபோது கிராமப்புறத்திற்கு, கிராமப்புற மக்களுக்கு போதுமான சலுகைகளை சரியாக வழங்கவில்லை என்ற ஓர் ஆதங்கம் இருந்துகொண்டிருந்தது. நகர்ப்புறத்திற்கு மட்டும்தான் அதிகப்படியான நிதியை ஒதுக்குகின்றார் என்ற ஒரு ஆதங்கம் கிராமப்புறத்து மக்களிடையே இருந்துகொண்டிருந்தது. இந்த முறை அந்த ஆதங்கத்தைப் போக்கி பெருமகிழ்ச்சி உண்டு பண்ணியிருக்கின்றார். நகர்ப்புறத்தைப்போல கிராமப்புறத்து மக்களுக்கும் மேம்பாட்டுத் திட்டத்தை வழங்கி பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாத கிராமமே இல்லை என்ற ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இந்த 4 ஆண்டு காலத்திலே நகர்ப்புறத்திலே இருக்கின்றவர்களுக்கு வீட்டு இணைப்பு குடிநீருக்கு வழங்குவதைப்போல கிராமப்புறத்திலே வாழ்கின்ற மக்களுக்கும் வீட்டு இணைப்பு குடிநீரை தந்திருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல், நகர்ப்புறத்திலே வாழ்கின்ற மக்களுக்கு concrete road-கள் இருக்கின்றன. கிராமப்புறத்து மக்களுக்கு மட்டும் அது இல்லை என்ற குறையை மாற்றி இப்போது கிராமப்புறத்திலே வீதிகளுக்கு concrete சாலைகளை அமைத்துக் கொடுத்து இருக்கின்றார்கள். இப்படி பல, எண்ணற்ற திட்டங்களை இந்த 4 ஆண்டு காலத்திலே கிராமப்புறத்திற்கு செய்து கிராமப்புறத்து மக்களிடையே பெரும் நன்மதிப்பையும், நற்பெயரையும் பெற்று இப்போது தமிழகத்தினுடைய ஆட்சியை சீரோடும் சிறப்போடும் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள் நம்முடைய முதல்வர் அவர்கள். இன்றும் நம்முடைய கிராமப்புறத்திலே ஒருசில குறைபாடுகள் இருந்துகொண்டிருக்கின்றன. அந்தக் குறைபாட்டையும் நீங்கள் நிவர்த்தி செய்வீர்கள் என்று சொன்னால், நம் கிராமப்புறத்து மக்களுடைய வாழ்நாள் முழுவதிலுமே அவர்களுடைய உள்ளத்திலே நீங்கள் நிரந்தரமாகக் குடியிருப்பீர்கள் என்பதை நான். கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2000 மே 17] [திரு. ப. கோவிந்தன்]

கிராமப்புறத்தினுடைய சாலைகள் மட்டும் இன்னும் மேம்பாடு செய்யப்படாத நிலை இருக்கிறது. குடிநீர், பள்ளிக் கட்டடங்கள், வீதி, சாக்கடை வசதிகள், உலர் கழிப்பிடங்கள் இப்படி பல, எண்ணற்ற நல்ல திட்டங்களை செய்து கொடுத்துக் கொண்டிருக்கின்றீர்கள். ஆனால் கிராமப்புறத்தில் உள்ள சாலைகள் இன்னும் சரியாக செப்பனிடப்படாத நிலையில், மேம்பாடு செய்யப்படாத நிலையில் இருக்கின்றன. அந்த நிலையை நீங்கள் மாற்றி அமைப்பீர்களானால் இன்னும் நல்லதோர் சிறப்பான செயல்பாடாக இருக்கும் என்பதை மனதார கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல எங்களுடைய மாவட்டத்தின் அருகில் இருக்கின்ற தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த எங்களுடைய பாட்டாளி வர்க்கங்களை, கர்நாடகத்திற்கு ஒட்டினாற்போல் இருக்கின்ற கிராமப்புறத்தில் வாழ்கின்ற மக்களை எல்லாம், சந்தன வீரப்பனை கண்ணால் பார்த்ததுகூட இல்லாத பாமர மக்களை, விசாரணை என்ற பெயரிலே அழைத்துச்சென்று, கர்நாடகத்தில் உள்ள காவல் துறையினர் குண்டர் சட்டத்திலே சேர்த்து அவர்கள் 7½ ஆண்டு காலமாக சிறைவாசத்திலே இருக்கிறார்கள். அந்த அப்பாவி மக்களை மீட்டு, அவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டுமாய் உங்களை மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தாரமங்கலம் தொகுதியிலே மின் அழுத்தம் குறைவாக இருக்கின்ற மல்லிகுண்டம் 110 கே.வி. மின் நிலையத்திற்கும் தாரமங்கலம் 110 கே.வி. மின் நிலையத்திற்கும் நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்கள் மின் அழுத்தம் சீராக இருக்க ஆவன செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பாப்பம்பாடியிலே ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த ஊராட்சி ஒன்றியத்தினுடைய நிதிநிலை காரணமாக 6, 7 ஆண்டுகளாக அங்கே மருத்துவர்கள் இல்லாத ஒரு நிலை ஏற்பட்டு, மருத்துவமனையும் இயங்காத ஒரு நிலை இருக்கிறது. அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவர்களை நியமிக்க வேண்டுமாய் உங்களை மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தாரமங்கலத்தில் அரசுப் போக்குவரத்துப் பணிமனை தொடங்கப்பட்டிருக்கிறது. பணிமனை வேலைகள் நடந்துகொண்டு இருக்கின்றன. அந்தப் பணியிலே தேக்க நிலை ஏற்பட்டு பணிமனையைத் தொடங்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதற்கு உடனடியாக

நிதி ஆதாரம் ஒதுக்கி பணிமனையினுடைய வேலையை விரைவில் முடிக்க வேண்டுமாய் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவிலே பேச அனுமதித்த உங்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்போது நாம் பேசிக் கொண்டிருக்கிற இந்த விவாதம்தான் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரினுடைய கடைசி விவாதமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். குளிர்கால கூட்டத்தொடர் நடைபெறப் போகிறதோ அல்லது அதற்கு முன்பாக அதிரடித் தேர்தல் நடத்துவீர்களோ என்னவோ எங்களுக்குத் தெரியாது. நீங்கள் எப்போது தேர்தல் நடத்தினாலும் அடுத்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக் கட்டிலிலே ஏறும், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் முதல்வராக வருவார்கள் என்று இந்த அவையில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-10

இங்கே பேசிய குத்தாலம் பி. கல்யாணம் போன்றவர்கள் எல்லாம் தனி நீதிமன்றங்களைப் பற்றியெல்லாம் எடுத்துக் கூறினார்கள். நான் இப்போது இந்த அவையிலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன், விஞ்ஞானரீதியாக நீங்கள் செய்த ஊழல்கள், தற்போது செய்து கொண்டிருக்கிற ஊழல்களெல்லாம், எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் முதல்வராக அடுத்த ஆண்டு வந்ததற்குப் பிறகு, இந்தத் தனி நீதிமன்றங்கள் அப்போதும் இருக்கும், அந்தத் தனி நீதிமன்றங்கள் மட்டும் இல்லாமல், தனிச்சிறைச்சாலைகளும் உங்களுக்குத் தனியாக நிறுவப்படும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

அடுத்தபடியாக, இப்போது ஆட்சிப் பொறுப்பேற்று 4-வது ஆண்டு முடிந்து 5-வது ஆண்டு தொடக்கத்திலே இருக்கின்றீர்கள். முழுப் பக்க விளம்பரங்களையெல்லாம் கொடுத்திருக்கிறீர்கள். அவை அனைத்தும் விளம்பரங்களாகத்தான் இருக்கின்றனவேயொழிய, உருப்படியாக எதுவும் இந்த 4 ஆண்டுகளில் நீங்கள் செய்ததாக எங்களுக்குத் தெரியவில்லை.



நான் இந்த மாமன்றத்திலே முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். முதல் ஆண்டிலே 234 சட்டமன்றத் தொகுதிகளும் என்னுடைய தொகுதி என்று நீங்கள் பேசினீர்கள். எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் . . .

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, 50 இலட்சம் ரூபாய் சட்டமன்ற உறுப்பினர் திட்ட நிதி என்று கொடுக்கிறோமே, அதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் ஒழுங்காகப் பயன்படுத்துகிறாரா? பயன்படுத்துவார்கள் என்று கருதுகின்றேன். எல்லோரும் பயன்படுத்துகிறார்கள். அவையெல்லாம்கூட உருப்படியான காரியத்திலே சேரவில்லையா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த 50 இலட்ச ரூபாய் நிதியை என்னுடைய தொகுதியில் ஒழுங்காகத்தான் செலவிட்டுக் கொண்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, அது ஓர் உருப்படியான காரியம்தானே? இந்த அரசில் உருப்படியான காரியமே நடக்கவில்லை என்று சொன்னால், அது எப்படிப் பொருத்தமாக இருக்க முடியும்? (சிரிப்பு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது ஒன்றுதான் உருப்படியான காரியம் என்று (சிரிப்பு) நான் இந்த மாமன்றத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே . . .

**திரு. பி.ஆர். சுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, திரு. கணேசன் அவர்களை allow பண்ணினீர்கள் என்றால் எனக்கு நீங்கள் கூடுதல் time கொடுக்க வேண்டும்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நண்பர் சுந்தரம் அவர்கள், இந்த ஆட்சியிலே உருப்படியான காரியம் இல்லை என்று சொன்னார். ஆனால், அவருடைய மனச்சாட்சிக்கே இதை விட்டுவிட நான் தயாராக இருக்கின்றேன். இருப்பினும், காலையிலே 234 சட்டமன்ற உறுப்பினர்களைத் தவிர என்னுடைய தொகுதியிலே மட்டும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மின்சாரக் குறையே இல்லாமல் எப்படியாவது தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டாரே, அதை எந்தக் காரணத்திற்காகக் கேட்டார் என்பதனை அவர் இங்கே விளக்க வேண்டும்.

[2000 மே 17

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தொகுதியின் சார்பாக வாதிடுவது உறுப்பினருடைய உரிமை. அதைக் கொடுப்பது அரசினுடைய கடமை. அவர் மின்சாரத் துறை அமைச்சர் என்றால், அவர் இந்தத் தமிழ் நாட்டிற்கே மின்சாரத் துறை அமைச்சர். ஆகவே, ஒன்றைவிட்டு ஒன்றை தயவுசெய்து கணேசன் அவர்கள் பேச வேண்டாம். முதலமைச்சர் அவர்கள் நான் 234 சட்டமன்ற உறுப்பினர்களையும் சரியாகப் பாவிப்பேன் என்று கூறினார்கள். நான் இங்கே தெரிவிக்கின்றேன். எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே என்னுடைய தொகுதி புறக்கணிக்கப்பட்டிருக்கின்றது; புறக்கணிக்கப்படக் கூடாது என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் ஒவ்வொரு முறையும் இங்கே கூறியிருக்கின்றேன். இங்கே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடமும் பேசியிருக்கிறேன். இப்போது ஆரம்ப சுகாதார நிலையத்தை ஆரம்பிப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அதற்கு இன்னும் நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. அதை உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, ராசிபுரத்தில் *by-pass* road பிரச்சினை என்பது மிகப் பெரிய பிரச்சினை. அதைக் கடந்த 4 ஆண்டுகளாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதற்கு நிலம் இன்னும் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. அந்த நிலத்திற்குப் பணம் ஒதுக்கப்படவில்லை. ஆகவே, அதை compulsory என்ற அந்த விதத்திலேயாவது நில ஆர்ஜிதம் செய்து by-pass road அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

அடுத்து, வெண்ணந்தூர் ஒன்றியத்திலே, மணிமுத்தாறு ஆற்றினுடைய குறுக்கே ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இல்லாத காரணத்தால் முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு விட்டுவிடுகின்றேன். வெண்ணந்தூர் ஒன்றியத்தில், மணிமுத்தாறு ஆற்றின் குறுக்கே ஒரு பெரிய பாலம் கிட்டத்தட்ட 5, 6 ஆண்டுகளாகக் கட்டப்படாமல் இருக்கிறது. ஆகவே, அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

சேலத்திலே இயங்கி வருகின்ற கூட்டுறவு ஸ்தாபனமான SAGOSERVE. நிறுவனத்திற்கு கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய்க்கும் அதிகமாக additional sales tax இருக்கின்றது. அந்த வரியைக் குறைப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும்.



2000 மே 17] [திரு. பி.ஆர். சுந்தரம்]

பிற்பகல் 12-15

சேலம் உருக்காலை பற்றி பலமுறை பேசியாகிவிட்டது. அந்த உருக்காலை பற்றி ஒரு வரி தீர்மானத்தைத்தான் எழுதி அனுப்பி இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லியிலே பிரதமர் வாஜ்பேயி அவர்களைச் சந்தித்துப் பேசும்போது சேலம் உருக்காலை தனியாருக்குச் செல்லும் திட்டத்தை மாற்றியமைத்து ஏற்கெனவே இருப்பதுபோல மீண்டும் உற்பத்தியைத் தொடங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, வரி விதிப்பைப் பொறுத்தவரையில் கொப்பரைத் தேங்காய்க்கு வரி விதிக்கப்பட்டிருப்பதைப் பார்த்து விவசாயிகள் மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை 3 சதவிகிதத்திலிருந்து 1 சதவிகிதமாக சென்ற ஆண்டு குறைத்ததாக நினைவு இருக்கிறது. அது பற்றி சரியாக எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் கொப்பரைத் தேங்காய்க்கு முழுமையாக வரி விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

அடுத்தபடியாக, இந்த அவையிலே பல முறை விவாதித்துவிட்டோம். நீங்கள் திருச்சி மாநாட்டிலே கூறினீர்களோ அல்லது தேர்தல் வாக்குறுதி கொடுத்தீர்களோ எங்களுக்குத் தெரியாது, கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1000 ரூபாய் கொடுக்கப்படும் என்று நீங்கள் கூறியது இந்த அவையிலே கிட்டத்தட்ட பல முறை விவாதிக்கப்பட்டு அதற்கு நீங்கள் எங்களை 5 ஆண்டுகள் ஆளவிடுங்கள், அப்போது நாங்கள் கொடுக்கின்றோம் என்று கூறி, இப்போது 4 ஆண்டுகள் முடிந்து 5-வது ஆண்டு ஆரம்பித்துக் கிட்டத்தட்ட 2, 3 நாட்கள் ஆகிவிட்டன. நீங்கள் இன்றைக்கு அதைப் பற்றிச் சொல்வீர்கள் என்று நினைக்கின்றோம். நான் பேசியபோது, 5 ஆண்டுகள் எங்களை முழுமையாக ஆளவிடுங்கள் என்று கூறினீர்கள். ஆளை விடுங்கள் என்று உங்களுக்கே உரித்தான பாணியிலே இப்போது பேசுகிறீர்கள். உங்களுக்கு உரித்தான பாணியிலேயே நானும் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். உங்களை—ஆளை விட்டுவிடுகின்றோம். ஆனால் இதே சூழ்நிலை நீடித்தால் உங்களை ஆளவிடமாட்டோம், நாங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, விவசாயிகளாக இருந்தாலும் சரி, நீங்கள் சொன்ன சொல்லை, வாக்குறுதியைக் காப்பாற்றாவிட்டால் உங்களை நாங்கள் ஆளவிட மாட்டோம், ஆளவிடமாட்டோம் என்று இந்தப் பேரவையிலே நான் மீண்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்தபடியாக, சத்துணவுப் பணியாளர்களை பற்றி இங்கே பேசினோம். அவர்களை எல்லாம் நிரந்தரமாக்க முடியாது என்று கூறியிருக்கிறீர்கள். நிரந்தரமாக்குவதற்கு கிட்டத்தட்ட 271 கோடி ரூபாய் தேவை என்று கூறியிருக்கிறீர்கள். அப்படி நீங்கள் அவர்களை நிரந்தரமாக்க முடியாவிட்டாலும் அவர்களுடைய சம்பளத்தையாவது உயர்த்தி அவர்கள் கேட்கின்ற கோரிக்கைகளை நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, உங்களுடைய திட்டங்கள்—சமத்துவபுரம் என்று கூறினீர்கள். உழவர் சந்தை என்று கூறினீர்கள், சமத்துவபுரத்தைப் பொறுத்தவரையில், இப்போது உங்களால் ஆரம்பிக்கப்பட்ட அந்தத் திட்டத்திற்கே 2000 கோடி ரூபாய் நீங்கள் ஒதுக்கியிருக்கிறீர்கள் என்றால், அந்த ஒழுகுகின்ற வீட்டிற்கு நீங்கள் அவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கிறீர்கள் என்றால், அந்த சமத்துவபுர வீடுகள் எந்த நிலையிலே இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும்.

பாலங்கள்பற்றி எல்லாம் கூறியிருக்கிறீர்கள். பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அண்மையிலேகூட முதலமைச்சர் அவர்கள் பாலங்கள் கட்டுவதிலே நாங்கள் பணத்தை மிச்சம் செய்துவிட்டோம் என்று கூறியிருக்கிறார்கள். கிராமத்திலே மாவுக்கேற்ற தோசை என்று கூறுவார்கள். அப்படித்தான் இந்தப் பாலங்கள் கட்டியிருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. பத்திரிகைகள் எல்லாம் படம் பிடித்துக் காட்டியிருக்கின்றன. பாலம் போட்ட 2, 3 நாட்களிலேயே குண்டும், குழியுமாக ஆகி இருக்கிறது, தார்கள் எல்லாம் பெயர்ந்துவிட்டன என்று தினமணி பத்திரிகை முதல் பக்கத்திலேயே செய்தி வெளியிட்டிருக்கிறது. எனவேதான் நீங்கள் பாலம் கட்டிய விதத்திலே குறை இருக்கிறது என்றேன். நீங்கள் கட்டிய பாலங்கள் எப்படி மோசமான நிலையிலே இருக்கின்றன என்பதற்கு இது ஒரு சாட்சி. (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகின்றேன்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று கூறியிருக்கிறீர்கள். நான் ஒன்றை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றேன். அண்ணா சமாதிக்கு அருகிலே ஒரு சுரங்கப்பாதை இப்போது கட்டி முடிக்கப்பட்டு உள்ளது. அங்கே Corporation of Chennai, Pedestrian subway என்று எழுதப்பட்டிருக்கிறது. அதிலேகூட நீங்கள் நடைபாதை, சுரங்கப்பாதை என்று எழுதக்கூடாதா? நீங்கள் எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்கிறீர்கள். எப்போது நீங்கள் முழுமையாக அதை நடைமுறைப்படுத்தப்போகிறீர்கள் என்று நான் கேட்கிறேன்.





இறுதியாக, விடுதலைப் புலிகள் நடமாட்டம் தமிழகத்திலே இப்போது அதிகமாகிவிட்டது. விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டும் என்ற எண்ணம் உண்மையிலேயே உங்களுக்கு இருக்குமானால், அவர்களை ஆதரிக்கக்கூடாது என்ற எண்ணம் உண்மையிலேயே இருக்குமானால்—இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டும் என்று நீட்டிப்புக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய ஆட்சிக் காலத்திலே, 1993-1995-லே இரண்டு முறை அந்த விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டும் என்று மத்திய அரசுக்கு எழுதி கேட்டிருக்கிறார்கள்.—இந்த அரசு வந்ததற்குப் பிறகு சென்ற ஞாயிற்றுக்கிழமை அன்று மத்திய அரசு தடையை நீட்டித்து இருக்கிறது—இதுபற்றி தமிழக முதல்வர் அவர்கள் அவர்களுக்குக் கடிதம் எழுதினீர்களா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** எழுதினோமா, இல்லையா என்பதைத் தெரிந்து கொண்டாவது பேசுங்கள். ஒன்றும் விஷயம் தெரியாமல் அதிகமாகப் பேச ஆரம்பித்துவிட்டீர்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதைத்தான் கேட்கிறேன். மாண்புமிகு தலைவர் அவர்களே ...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அதை Parliament-லே உங்கள் ஆட்கள் எல்லாம் இருக்கிறார்கள் இல்லையா, அவர்களை விட்டுக் கேட்கச் சொல்லுங்கள். அவர்கள் கேட்டால்தான் அவர்களும், இவரும் சேர்ந்து இனிமேல் தோட்டத்திற்குப் போகமுடியும். கேட்காவிட்டால் தோட்டம் பக்கமே போக முடியாது. (சிரிப்பு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** விடுதலைப் புலிகள் சமாச்சாரத்திலே ஒன்றும் ரகசியம் இல்லை. நீங்கள் எழுதி அனுப்பினீர்களா இல்லையா? அதைத்தான் நான் கேட்டேன்.

இறுதியாக, நேற்றைக்கு இடஒதுக்கீடு பிரச்சினையைப் பொறுத்தவரையில் இரண்டு மணி நேரம் விவாதம் நடத்தினீர்கள். இடஒதுக்கீடு பிரச்சினையில் காமராஜர் காலத்திலேயிருந்து, எம்.ஜி.ஆர். காலத்திலேயிருந்து—பெரியார்—எல்லாம் பேசினீர்கள். ஆனால் ஒன்றை நீங்கள் மறந்து விட்டீர்கள். 1991 ஆம் ஆண்டு இந்த அவையிலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அதை டெல்லிக்கு அனுப்பி, இரண்டு அவைகளிலேயும் அது நிறைவேற்றப்பட்டு, அது ஜனாதிபதியினுடைய ஒப்புதலைப் பெற்று ஒன்பதாவது அட்டவணையில் சேர்த்தது எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே.

பிற்பகல் 12-20

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** ஒன்பதாவது அட்டவணையில் சேர்த்த பிறகு, இவ்வளவும் செய்துவிட்டு, கடைசியாக கீழே போட்டு உடைத்தது மாதிரி,

நந்தவனத்தில் ஓர் ஆண்டி,
அவன் நாலாறு மாதமாய் குயவனை வேண்டி,
கொண்டு வந்தான் ஒரு தோண்டி,
அதைக் கூத்தாடி, கூத்தாடி போட்டுடைத்தாண்டி

என்கிறாற்போல் கடைசியிலே Supreme Court-லே இந்தமாதிரி ஒன்பதாவது அட்டவணையிலே சேர்க்கப்பட்டிருக்கிற செய்தியை தமிழக அரசின் சார்பாக அப்போது இருந்த ஜெயலலிதா அரசு சொல்லத் தவறிவிட்டது. அதனாலேதான் இவ்வளவு சங்கடங்களும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் நான்கு வருடங்கள் இருந்தீர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கிய நேரம் முடிந்துவிட்டது. அடுத்து, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று சில முக்கியமான பிரச்சினைகளைப்பற்றி அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சமூக நலப் பாதுகாப்புத் திட்டம் என்ற முறையில் தமிழக அரசு 54 தொகுதிகளிலே இருக்கிற தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நல வாரியத்தை அமைத்தது. அதை நாங்கள் எல்லாம் வரவேற்கிறோம். அதற்காக பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். ஆனால், அந்த நல வாரியங்கள் சரிவரச் செயல்பட வேண்டுமானால், அரசினுடைய contribution அதிலே இருக்க வேண்டும். ஆனால், இன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிற நல வாரிய Notification-ஐப் பார்த்தால் அதிலே அரசினுடைய contribution என்பது இல்லை. இந்த நல வாரியங்களை அமைப்பது சம்பந்தமாக Labour Department Officials கேரள மாநிலத்திற்குப் போய் விரிவான ஆராய்ச்சிகளை நடத்தி, அறிக்கை கொடுத்திருக்க வேண்டும்.



1996 ஆம் வருடத்திலே கேரள மாநிலத்திலே சமூக நலப் பாதுகாப்புத் திட்டம் என்று அறிவிக்கப்பட்ட நேரத்திலே அவர்களுடைய Planning Board தயாரித்த திட்டங்களில் அரசினுடைய contribution என்ற ஒன்று இருக்கிறது. தொழிலாளி 20 ரூபாய் கொடுத்தால், அரசு 1 ரூபாயோ, 2 ரூபாயோ அல்லது தொழிலுக்குத் தொழில் தகுந்த முறையிலே கொடுக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாரியங்களை அமைக்கிறபோது Employer, Employee, Government contribution கொடுக்கப்பட வேண்டும் என்பது முறை. ஆனால், எல்லா வாரிய அமைப்புகளிலேயும் அது இல்லை. தேவைப்பட்டால் பிரச்சினைகளின் தன்மை அறிந்து அரசு அந்த வாரியத்திற்கு Contribution வழங்கும் என்பதைத்தான் இந்த வாரியத்தைக் கொண்டுவருகிறபோதே சொல்லியிருக்கிறோம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஆனால் இப்போது கொடுக்கப்பட்டிருக்கிற அரசு Notification-லே அது தெளிவாக இல்லை. ஆகவேதான், இப்போது எந்த வாரியத்திலே அரசு contribution என்பதைப் பொறுத்த அளவிலே அது தெளிவாக இல்லை என்ற காரணத்திற்காகத்தான் இந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்தேன். அரசு அதைப் பரிசீலிக்கும் என்றும், அது கொடுக்கப்படும் என்றும் சொன்னதற்கு நன்றி. எனவே, அதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

அதேபோல் இன்னும் ஒன்றை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்த அளவிலே அவர்களுக்காக தோட்டத் தொழிலாளர்கள் நலச் சட்டம் என்ற ஒரு சட்டம் இருக்கிறது. 25 ஏக்கருக்கு மேலே உள்ள தோட்டங்களிலே வேலை செய்கிற தொழிலாளர்களுக்குத்தான் அந்தப் பாதுகாப்பு இருக்கின்றது. அவர்களுக்கு இலவசமாக மருந்து கிடைக்கிறது. அதேபோல் பாதுகாப்புக்காக கம்பளி போன்றவை எல்லாம் கிடைக்கின்றன. ஆனால், 25 ஏக்கருக்குக் கீழே உள்ள தோட்டங்கள் நிறைய இருக்கின்றன. அந்தத் தோட்டங்களிலே வேலை செய்கிற தொழிலாளர்கள் பெரிய தோட்டங்களிலே வேலை செய்யும் தொழிலாளர்களைப் போலத்தான் இவர்களும் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, இவர்களுக்கும் இந்த வசதிகள் கிடைக்கக்கூடிய முறையிலே, நான் என்ன சுட்டிக்காட்ட

விரும்புகிறேன் என்றால், இவர்களையும் அதில் சேர்த்து, இவர்களையும் நல வாரியத்திலே ஓர் அமைப்பாக இணைத்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். ஏனென்றால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது நடைமுறையில் சட்டத்தில் இருக்கக்கூடிய சில பிரிவுகளைக்கூட இல்லாததுபோல் பேசி, சில காரியங்கள் நடைபெறாததுபோல் பேசுவதை அமைச்சர் என்ற முறையிலே மறுப்பது என்னுடைய கடமை. இப்போது Labour Plantation Act-லே இவ்வளவு ஏக்கருக்கு மேல் இருந்தால் சட்டம் பொருந்தும். இவ்வளவு ஏக்கருக்குக் கீழே இருந்தால் பொருந்தாது என்று இருக்கிறது. ஆனால், notification மூலமாக இவற்றை நாங்கள் அறிவிக்கை செய்து சட்டத்தைத் திருத்த வைத்திருக்கிறோம்.

*பிற்பகல் 12-25*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சொன்னதைப்போல எல்லா area-க்களையும் அந்தமாதிரி எடுக்க முடியாது. ஐந்து ஏக்கருக்குக் கீழேயிருக்கின்ற தோட்டங்களை அந்தமாதிரி notification-லேயும் கொண்டுவர முடியாது. ஆகவே, அப்படிப்பட்ட தோட்டங்களிலே வேலை செய்கிறவர்கள் தொழிலாளர் நல வாரிய விதி 54-லே, விதி 55-லே சேர்க்கப்பட வேண்டுமென்பதுதான் நான் சொல்வது.

தனியார் மருத்துவமனைகளிலே இப்போது ஏராளமான ஊழியர்கள் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். நர்சுகள் என்ற முறையிலேயும், அதேபோன்று மற்ற ஊழியர்கள் என்ற முறையிலேயும் ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வாழ்க்கைப் பாதுகாப்பும் இல்லை. வேலைப் பாதுகாப்பும் இல்லை; ஆகவே அவர்களும் நல வாரியத்திலே ஓர் அமைப்பு என்ற முறையிலே சேர்க்கப்பட வேண்டும் அல்லது அவர்களுக்கு என்று தனியாக நல வாரியம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று தொழில்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் இப்போது Sugar Industry-ஐப் பொறுத்தவரையில், ஒரு settlement போடப்பட்டிருக்கிறது. அந்த settlement-லே அவர்கள் probationers என்ற முறையிலே பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்களுக்கு settlement benefit கொடுக்காத ஒரு நிலையிருக்கிறது. ஆகவே Sugar Commissioner-ம், Labour



Commissioner-ம் இணைந்து அதை கவனித்து அந்தத் தொழிலாளிகளுக்குக் கொடுப்பதற்கான ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து B & C Mill ஒரு மிக முக்கியமான ஆலை. அந்த ஆலை இப்போது நலிவடைந்த ஓர் ஆலையாக இருந்துகொண்டிருக்கிறது. அந்த ஆலையிலே இருக்கிற நிலைமைகளை முதல்வரவர்கள் கண்டறிந்து அதில் தலையிட்டு, நிர்வாகத்தோடு கலந்துகொண்டு, நல்லமுறையிலே ஆலை செயலாற்றக்கூடிய முறையிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று ஒன்றிரண்டைச் சுட்டிக்காட்ட விரும்புவது, Self-financing Engineering Colleges-ஐப் பொறுத்த அளவிலே, ஞாயிற்றுக்கிழமை Hindu பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரத்தின் வரம்பை மீறி, 400 இடங்களில் கூடுதலாக unauthorised ஆக admit பண்ணப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் வருவதன் காரணமாக எங்கள் மாவட்டத்திலேகூட ஒரு கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திலே, இதேமாதிரி முறைகேடான முறையிலே நியமிக்கப்பட்டதன் காரணமாக மாணவர்கள் வெளியேற்றப்பட்டு அதன்காரணமாக அந்த மாணவர்கள் இப்போது பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஓரேயொரு விஷயத்தைச் சொல்லி முடித்துவிடுகிறேன். இன்று நான் மாண்புமிகு முதல்வரவர்களிடம் தெரிவிக்க விரும்புவது, சிறுபான்மையினரைப் பொறுத்தவரையில், கன்னியாகுமரி மாவட்டத்திலே அவர்களுடைய பாதுகாப்பும், உரிமையும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிலே காவல் துறை பாரபட்சமாக நடந்து கொண்டிருக்கிறது. அரசு பாரபட்சமாக நடந்துகொண்டிருக்கிறது. அலுவலர்களும் அவ்வாறு நடந்துகொண்டிருக்கிறார்கள் என்று அந்த மாவட்டத்திலே சிறுபான்மையினர் உரிமைப் பாதுகாப்புச் சங்கத்திலேயிருந்து கொடுக்கப்பட்ட கடிதத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு நான் என்ன சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால், பாரதிய ஜனதா கட்சி சம்பந்தப்பட்டிருக்கிற விஷயங்களிலே அந்த ஆட்கள் தவறு செய்தாலும் காவல் துறை அதிலே தலையிடுவதற்குத் தயாராக இல்லை. உதாரணமாக, மங்கலம் என்ற ஊரிலுள்ள கோயிலின் சாவி, கோயிலுக்குச் சம்பந்தப்பட்ட அந்தக் குடும்பத்திலுள்ள சொந்தக்காரர்களிடம் கொடுக்கப்பட வேண்டும் என்பது High Court

உத்தரவு. Superintendent of Police வந்திருந்து, M.L.A..-வை உட்கார வைத்து சமரசம் பண்ண வேண்டுமென்று சொல்லி, நான் சமரசம் பண்ணி, அந்தச் சாவி, அந்தக் கோயிலிலே இருக்கிற பூசாரியிடம் கொடுக்கப்பட வேண்டும் என்று ஒத்துக்கொண்டு கொடுக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது பூசாரிகிட்டேயிருந்து சில B.J.P. ஆட்கள் அந்தச் சாவியை வாங்கி வைத்திருக்கிறார்கள். ஆனால் காவல் துறை அதைத் திருப்பி வாங்கிக் கொடுப்பதற்கு தயாராக இல்லை. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வேலாயுதன் ஏதோ சொல்ல வருகிறார், திரு. சி. வேலாயுதன்

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மங்கலம் என்று சொல்லக்கூடிய ஊரில் நாயர் சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் வாழ்கிறார்கள். அந்த ஆலயத்தில் மற்ற அனைத்துச் சமுதாயத்தைச் சார்ந்தவர்களும் சேர்ந்து வழிபட வேண்டும், அந்த உரிமை வேண்டுமென்று 90 சதவீதம் மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பிட்ட ஒருசிலர்தான் மற்றவர்கள் வர வேண்டாமென்று சொல்கிறார்கள். எனவே, அரசாங்கம் நியாயமான முறையில் அனைத்துச் சமுதாய மக்களும் வந்து வழிபடக்கூடிய அளவிற்கு, வாய்ப்பைக் கொடுக்கக்கூடிய வகையில் நல்லபடியாக, நேர்மையாக நடந்துகொண்டிருக்கிறது என்றுதான் அரசு அதிகாரிகளைப் பாராட்டுகின்றார்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** காவல் துறைக் கண்காணிப்பாளர் அவர்கள் என்னையும் உட்கார வைத்து ஏற்படுத்திய முடிவை அமல்படுத்துவதற்கு Superintendent of Police நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

*பிற்பகல் 12-30*

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்றம் நான்காவது Budget-ஐ முடித்து நாளையோடு இந்த சட்டமன்றகூட்டம் முடிய இருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு 77-வது பிறந்த நாள் இன்னும் இரண்டு வாரங்களில் வர இருக்கிறது. எனவே, அவர்களுக்கு இப்போதே எனது



வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையத் தட்டும் ஒலியை). முதலமைச்சர் அவர்கள் நல்ல உடல் நலத்தோடு நீண்டநாள் வாழ வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் இந்த நான்காண்டு காலமும், எங்களுக்காக, நாங்கள் ஏதாவது அதிகப்படியாகப் பேசியிருந்தால்கூட, அதையெல்லாம் அவர்கள் பொய்க் கோபத்தோடு பார்த்து, மன்னித்து, அத்தனை பேரையும் சிறப்பான முறையில் நடத்தியதற்காக அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் அவர்களோடு ஒரு பெரிய சண்டை எனக்கு ஏற்பட்டுவிட்டது. சட்டசபையில் நான் பேசுகின்றபோது அவர் நீங்கள் என்ன T.V.-யில் செய்தி வாசிக்கிற மாதிரி ஒவ்வொரு கடிதமாக வாசிக்கிறீர்களே என்று சொன்னார். (சிரிப்பு) இதற்கு ஏதாவது பதில் சொல்ல வேண்டுமே என்பதற்காக அவர்மீது ஏதாவது குற்றச்சாட்டு வந்திருக்கிறதா என்று பார்த்து, உங்கள்மீது ஒரு நிருபர் எழுதியிருக்கிறார் என்று நான் பதில் சொன்னேன். அது கடைசியாக வெடித்து, மிகப் பெரிய பிரச்சினையாகி, இப்போது நாங்கள் ராசியாகிவிட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், அவர்களிடம் இப்போது நான் இரண்டு மூன்று கோரிக்கைகள் வைக்க வேண்டியிருக்கிறது.

என்னுடைய தொகுதியில் பரமக்குடியிலிருந்து கூத்தங்கால் என்ற ஒரு கால்வாய் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு, தாழ்த்தப்பட்ட ஒரு நடிகன், அந்தக் காலத்தில் சிறப்பான முறையில் ஊர்தோறும் நாடகம் ஆடி, பரமக்குடி வைகை ஆற்றிலிருந்து செல்வனூர் கால்வாய் வரை செல்வதால், அந்தக் கண்மாய் வரை, பரமக்குடி, முதுகுளத்தூர், கடலாடி பகுதிகளுக்குப் பயன்படக்கூடிய அளவுக்கு ஒரு சிறப்பான கால்வாயை வெட்டித் தந்த வரலாறு எங்களுடைய பகுதியில் மிகச் சிறந்த வரலாறாக இருக்கிறது. தாழ்த்தப்பட்ட அந்த கூத்தனுக்கு செல்வனூர் கிராமத்தில் இருக்கிற கிராம மிராசுதார் இந்தக் கால்வாயை நீ வெட்டிக் கொண்டுவந்தால் உனக்கு இன்ன பரிசு என்று சொன்னதாகவும், அந்தப் பரிசை அவர் கொடுக்க முடியாத காரணத்தினால் அந்த

ஊரை விட்டே வெளியேறி திருநெல்வேலி மாவட்டத்திலே இருக்கின்ற ஸ்ரீவைகுண்டம் கிராமத்தில் கோட்டை கட்டிக் குடியிருந்ததாகவும், அவர்கள்தான் கோட்டைப் பிள்ளைமார்கள் என்று சொல்லக்கூடிய வரலாறு எல்லாம் அதற்கு உண்டு. அந்தக் கால்வாய் தூர்ந்துபோய் விட்டது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இராமநாதபுரத்தில் நீதிமன்ற வளாகம் திறக்க வந்த நேரத்தில், அவர்களிடம் கோரிக்கை வைத்தேன். அவர்கள் அந்தக் கூட்டத்திலேயே, உடனடியாக எடுத்துக்கொள்ளப்படும் என்று சொன்னார்கள். இதுவரை அந்தக் கால்வாய் மராமத்து வேலைகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இப்போது அதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களுக்கும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய கோரிக்கையாக வைக்கிறேன்.

அடுத்தபடியாக, மானாமதுரை, இளையாங்குடி பகுதியில் சுப்பன் கால்வாய் திட்டத்தைப் பொறுத்தவரையில், அது *150* கண்மாய்களுக்கு தண்ணீர் தரக்கூடிய ஒரு நல்ல திட்டம். அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று எங்களுடைய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், மத்திய அமைச்சருமான திரு. ப. சிதம்பரம் அவர்கள் பல தடவை நம்முடைய அரசுக்குக் கடிதம் எழுதியிருப்பதாகச் சொன்னார்கள். *150* கண்மாய்களுக்குப் பயன்படக்கூடிய அந்த சுப்பன் கால்வாயை உடனடியாக மராமத்து செய்து தூர் வாரும் பணியைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் மண்டலமாணிக்கம் திருச்சுழி என்று சொல்லக்கூடிய—நம்முடைய மறைந்த முன்னாள் அமைச்சர் தங்கபாண்டியன் அவர்களுடைய ஊருக்குப் பக்கத்தில் போக, வர பாலம் இல்லாமல் அந்த மக்கள் மிகவும் சிரமத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே மண்டலமாணிக்கம் திருச்சுழி ரோட்டில் பாலம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அபிராமம் வீரசோழன் சாலையில் ஒரு பாலம் கட்டித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல என்னுடைய தொகுதியில் அபிராமம் என்பது மிகப் பெரிய ஒரு கண்மாய். பரலையாறு, அபிராமம் வரை அந்தக் கண்மாய்க்கு வருகின்ற கால்வாய், பரளியாற்றிலிருந்து மூன்று கிலோமீட்டர் வெட்டப்படாமல் தண்ணீர் வரத்து இல்லாமல் இருக்கிறது. அதையும் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



*பிற்பகல் 12-35*

இன்று பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள ஹெராயின் என்ற போதைப் பொருளைக் கடத்தியவர்கள் இரண்டு பேரை Narcotic Intelligence Bureau-வைச் சேர்ந்தவர்கள் பிடித்திருக்கிறார்கள். ஒரு கோடி ரூபாய் பெறுமானமுள்ள அந்த ஹெராயின் பொருளைக் கொண்டு வந்தவர்கள் யார் என்று சொன்னால், ஒருவர் Port Trust-ல் வேலை செய்கின்ற பெண் கடைநிலை ஊழியர். இன்னொருவர் வியாசர்பாடியில் இட்லி கடை வைத்திருக்கிற ஒரு பெண். இவர்களுக்கு ஒரு கோடியும் தெரியாது, ஹெராயின் என்றால் என்னவென்றும் தெரியாது; பத்திரிகையிலே அப்படித்தான் வந்து இருக்கிறது. ஆகவே, இதிலே மிகப் பெரிய ஒரு சதி இருப்பதாகத் தெரிகிறது. இதில் பெரிய கூட்டமே இருப்பதாக இன்று Indian Express பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. ஆகவே, நம்முடைய அரசு இந்தப் போதை மருந்துகளை யார் யார் எப்படியெல்லாம் கடத்துகிறார்கள் என்பதை மிகக் கவனமாகப் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருநெல்வேலி மாவட்டம், முல்லைக்காடு என்ற பகுதியில் V.V. Minerals என்கிற ஒரு நிறுவனம் இருக்கிறது. இவர்கள் காரனேட் என்ற ஒரு மணலை எடுப்பதற்காக இந்திய அரசிடமிருந்து Atomic Mineral licence வாங்கியிருக்கிறார்கள். ஆனால் அந்த licence-ல் நீங்கள் மாநில அரசிடம் licence பெற்றுத்தான் இதைச் செயல்படுத்த வேண்டுமென்று மிகத் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மாநில அரசிடம் இதுவரை அவர்கள் licence பெற்றதாகத் தெரியவில்லை. ஏனென்றால் மாநில அரசு கொடுக்க முடியாது என்று சொல்கிறது. அங்கே அந்த மணலை எல்லாம் எடுத்து, கோடி கோடியாகச் சம்பாத்தியம் செய்வதோடு, இலிமினெட் மற்றும் ஏராளமாக போதைப் பொருள்களையும் அவர்கள் கடத்துகிறார்கள் என்ற செய்தி நாள்தோறும் அந்தப் பகுதியிலே பரவலாகப் பேசப்படுகிறது. அந்த ஹெராயின் மற்றும் இந்த இலிமினெட் மணல் போகிற போக்கில் மணலை எல்லாம் கொண்டு போன இடங்களில் போலீஸ் அதிகாரிகளே அவர்களைப் பிடித்தும்கூட, சில அரசியல் குறுக்கீடுகளின் காரணமாக அவர்கள் எல்லாம் விடுவிக்கப்பட்டார்கள் என்றுகூட ஒரு செய்தி வந்திருக்கிறது. இதெல்லாம் இந்த நாட்டினுடைய பாதுகாப்புக்கே ஆபத்தான ஒரு சூழ்நிலையை உருவாக்கும் என்பதால் அரசு இதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டுமென்று நான்

கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய சென்னை நகரிலே எண்ணூருக்கு அருகிலேயுள்ள பழவேற்காடு பகுதியிலே உள்ள 29 கிராமங்களில் 40,000 மீனவர்கள் இப்போது பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். 1993 ஆம் ஆண்டு அங்கே அனல் மின்சார நிலையம் உருவாக்கப்பட்டது. அதன் காரணமாகவும், பழவேற்காடு ஏரியுடன் பக்கிங்காம் கால்வாய் நீரை மின் நிலையம் எடுத்துக்கொள்வதன் காரணமாகவும், அங்கேயுள்ள மீன்கள் எல்லாம் இறந்ததோடு மட்டுமல்லாமல், அங்கேயிருக்கின்ற நம்முடைய மீனவ மக்களுக்கு ஏராளமான நோய்கள் வருவதாகவும் செய்திகள் வருகின்றன. அவர்கள் எல்லாம் மிகப் பெரிய அளவிலே 10,000, 20,000 பேர் திரண்டு தலைவர் மூப்பனார் அவர்களுடைய தலைமையில் ஓர் ஊர்வலமாகவே வந்து நம்முடைய அரசுக்கு விண்ணப்பித்திருக்கிறார்கள். நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்கூட, இங்கே ஏற்கெனவே பதில் சொல்லி இருக்கிறார். ஆனால் அங்கேயுள்ள மக்களுக்கு அது திருப்திகரமாக இல்லை. இனிமேல் அவர்கள் மீன் பிடிக்கக்கூடிய தொழிலைச் செய்ய முடியாது. எனவே அவர்களுக்கு வேறு தொழிலைச் செய்கின்ற சூழ்நிலையை நாம் உருவாக்கியாக வேண்டும். ஏனென்றால் எண்ணூர் மின் நிலையத்தை இனிமேல் நாம் ஒன்றும் செய்ய முடியாது. அது வரவேற்கக்கூடிய ஒன்று. ஆனால், அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய வேண்டியது நம்முடைய கடமை.

1995 ஆம் ஆண்டு இளநிலை உதவியாளர்கள் பணிகளுக்குத் தேர்வு செய்து மருத்துவச் சான்றிதழும் கொடுத்த 119 பேர்களுக்கு இன்னும் வேலை கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். மின் வாரியத்தில் நேர் காணல் எல்லாம் முடித்து, மருத்துவப் பரிசோதனை எல்லாம் செய்த பிறகும்கூட, இவர்களுக்கு இன்னும் வேலை கிடைக்கவில்லை. எங்களுக்கு வேலை வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். அவர்களோடு சேர்ந்தவர்களுக்கு எல்லாம் வேலை கொடுத்த பிறகு, இவர்களுக்கு வேலை இல்லை என்று சொல்கிறார்கள். அதை நம்முடைய அரசு பரிவோடு கவனித்து அந்த 119 பேர்களுக்கும் வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தீரன் அவர்கள் கடந்த 3 ஆண்டு காலமாக இதே பிரச்சினைக்காக வாதாடிக்கொண்டிருந்தார். நானும் மின்சார வாரியத்தினரோடு பேசினேன். மின்சார வாரியத்திலே என்ன



விதிமுறைகளை வைத்திருக்கிறார்கள் என்றால், எப்போது நேர்காணலுக்கு வருகிறார்களோ, அந்த ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் தேதிக்குள் வேலைவாய்ப்பு கிடைத்தால் அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும். இல்லையென்றால் அடுத்த ஆண்டு மறுபடியும் அவர்கள் நேர்காணலுக்கு அழைக்கப்பட்டு வேலைவாய்ப்பு உண்டாக்கப்படுகிறது. எனவேதான் அதை வழங்கமுடியவில்லை. ஏற்கெனவே பலமுறை அவர்களுக்கெல்லாம் விளக்கம் சொல்லியாகிவிட்டது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

பிற்பகல் 12-40

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** கருங்கல் குவாரி என்பது இப்போது நாட்டில் மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. நம்முடைய அரசில் அவர்களுக்குப் பல தொல்லைகள் கொடுக்கக்கூடிய வகையில் சட்டங்கள் இயற்றி இருப்பதாகச் சொல்கிறார்கள். குத்தகைதாரர்கள் முடக்கும் முதலையும், கடின உழைப்பையும் அங்கீகரித்து, அவர்களுக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும். உற்பத்திச் செலவையும், விற்கின்ற விலையையும் கணக்கிலே எடுத்துக்கொண்டு குத்தகைத் தொகையை நிர்ணயிக்க வேண்டும். நீண்டகாலக் குத்தகை மற்றும் குத்தகையைப் புதுப்பித்தல் முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். கிராமத் தொழில் ஆணையம் வழங்கும் பண உதவி பெற உதவி செய்யவும் மற்றும் புதிய கருங்கல் குவாரிகளை உருவாக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும். ஒருங்கிணைப்புக் குழு அமைப்பு முறைகளை உண்மை நிலவரத்திற்குத் தகுந்தவாறு மாற்றி அமைக்க வேண்டும்.

அடுத்து என்னுடைய தொகுதியில் ஆனைசேரி என்ற கிராமத்தின் ஒரு பகுதியில் திடீரென்று பூமியே உள்ளே போய்விட்டது. நான் போய்ப் பார்த்தேன். அந்தக் கிராமத்திலே எப்படி நிலைமை இருக்கிறது என்று சொன்னால், உள்ளே ஒரு மிகப் பெரிய சுரங்கம் போல் தெரிகிறது. ஆனால் அதற்கு மேலே வீடுகள் இருக்கின்றன. அந்த வீடுகளில் குடியிருப்பவர்கள் எல்லாம் அவர்கள் வீடும் உள்ளே போய்விடுமோ என்று பயந்து போயிருக்கிறார்கள். இதுசம்பந்தமாக நான் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பை 15 நாட்களுக்கு முன்பாகக் கொடுத்தேன். இதுவரை அதற்குப் பதில் வந்து சேரவில்லை. இல்லாவிட்டாலும்கூட, கோரிக்கையாக நான் முதலமைச்சரிடத்திலே இங்கே வைக்கிறேன். உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அனுப்பி, அங்கே பார்த்து அந்த மக்களுடைய பீதியைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாநகராட்சியினுடைய கழிவு நீரின் பெரும்பகுதி நொய்யல் ஆற்றில் விடப்படுவதால், நொய்யல் ஆற்றின் கரை நெடுகிலும் வாழும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கழிவு நீரை வேறு பகுதியில் விடுவதற்கு வாய்ப்பிருந்தும்கூட அது நடைபெறவில்லை. 10 மைல் தூரம் கொசுத் தொல்லை தாங்க முடியவில்லை. கோவை மாவட்டம், தென்னிந்திய விஸ்கோஸ் தொழிற்சாலையிலிருந்து விடப்படும் கழிவு நீரும் இரவு நேரங்களில் சுத்திகரிக்கப்படாமலேயே விடப்படுகிறது. இதனால் அப்பகுதியிலுள்ள நீர்நிலைகளெல்லாம் பாதிக்கப்படுகின்றன. தண்ணீர் கொக்கோ கோலா போல் இருக்கிறது. இதனால் நோய்கள் பரவும் வாய்ப்பு இருக்கிறது. இதைச் சரிசெய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக Service Commission-க்கு மாணவர்கள் விண்ணப்பம் செய்வதற்கு 50 ரூபாய் D.D. எடுக்க 27 ரூபாய் செலவாகிறது என்று சொல்கிறார்கள். 4 இலட்சம் பேர் விண்ணப்பம் செய்தால் 1 கோடியே 8 இலட்சம் ரூபாய் D.D. Commission-ஆகப் போய்ச் சேருகிறது. அதற்குப் பதிலாக Postal Order வாங்கி அனுப்பச் செய்தால் பல ஏழை எளிய மாணவர்கள் பயன் அடைவார்கள் என்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதையும் அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை, மைலாப்பூர், லாலா தோட்டத்தில் உள்ள 800 குடும்பங்களுக்கு துரைப்பாக்கம் பகுதியில் வீடு கட்டி, நம்முடைய முதல்வர் அவர்களை வைத்து, வீட்டுமனைப் பட்டா கொடுக்கப் போகிறோம் என்று அவர்களையெல்லாம் பேருந்தில் ஏற்றி, அங்கே கொண்டு சென்ற நேரத்தில் பட்டாவும் கொடுக்கப்பட்டது. முதலமைச்சர் அவர்கள் விழா முடிந்து போனவுடன், அந்தப் பட்டாக்களையெல்லாம் திருப்பி வாங்கிவிட்டார்கள். உங்களுக்கு வேறு இடம் கொடுக்கிறோம், போங்கள் என்று அவர்களையெல்லாம் திருப்பி அனுப்பிவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டு இருக்கிறது.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி துரித இரயில் மேம்பாட்டுப் போக்குவரத்துத் திட்டத்திற்கு, M.R.T.S. மட்டும்தான் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. லாலா தோட்டத்திலுள்ள 800 பேர்கள் கோயில் நிலத்தில் குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவொரு பட்டாவும் கொடுக்கவில்லை, டோக்கனும் கொடுக்கவில்லை.





**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். நான் நேரில் போயிருந்தேன். அவர்கள் இந்தக் கோரிக்கையைச் சொன்னார்கள். இப்போது என்ன சொல்கிறார்கள் என்றால், நாங்கள் துரைப்பாக்கத்திற்குப் போகாவிட்டாலும் பரவாயில்லை, இங்கேயே எங்களுக்கு வீடு கட்டிக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அதனால் அதையாவது செய்து கொடுக்க வேண்டும்.

பிற்பகல் 12-45

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது கோயில் நிலம். கோயில் நிலத்திற்கு, சந்தை விலை கேட்கிறார்கள். ஆகவே, கட்ட முடியவில்லை. ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அன்றைக்கு நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் ஏழைகளாக இருந்தால் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். அவர்கள் பரம ஏழைகள். அவர்களுக்குக் கொடுக்குமாறு தெய்வ பக்தி உள்ள நானே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, A.V.M. காலனி என்று 1962 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கம். 1967 ஆம் ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோது, அந்தக் கூட்டுறவுச் சங்கத்தைத் தொடங்கி வைத்திருக்கிறார்கள். இப்போது அதை நடத்துபவர்கள், தற்போதுள்ள கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர், உரிய பங்கு லாபத்தினைக் கொடுக்காமலும், கணக்குகளைக் கூட்டுறவுச் சங்கத்திடம் சமர்ப்பிக்காமலும், மற்றவர்களை பயமுறுத்தி, மிரட்டி அங்கேயிருந்து அவர்களைக் காலி செய்து கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கு ஒரு நிவாரணம் தேடிக் கொடுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். அதையும் கோரிக்கையாக வைக்கின்றேன்.

அடுத்து, குடுகுடுப்பைக்காரர்கள் என்று ஒரு ஜாதியினர் இருக்கிறார்கள். ஒரு இலட்சம் பேர் இருக்கிற குடுகுடுப்பைக்காரர்கள் இனத்தைச் சார்ந்தவர்கள் தங்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கின்ற சாதிச் சான்றிதழ் கொடுக்க வேண்டுமென்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில், செங்கோட்டையில் அதிகம் உள்ள இவர்களுக்கு அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில்

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [2000 மே 17

246 சாதிச் சான்றிதழ் கொடுப்பதுபோல், தமிழ்நாட்டில் பல இடங்களில் வாழ்கின்ற அவர்களுக்கும் அத்தகைய சாதிச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சியர்கள் வழங்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைக்கிறேன்.

இன்னொரு கோரிக்கை. நேற்று இந்த அவையில் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒரு வெள்ளை அறிக்கை குறித்து நம்முடைய அரசு அறிவித்தது. நான் என்ன சொல்கிறேன் என்றால், முற்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், மலை சாதியினர் என்று இருப்பதுபோல் ஆறாவதாக இன்னொன்றை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சில, மிக மிக பாதிக்கப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். உதாரணமாக தேவேந்திரகுல வேளாள மக்களுக்கு சலவை செய்கின்றவர்களுக்கு குதிரை வண்ணான் என்று பெயர். குதிரை வண்ணான் என்று சொல்லக்கூடிய அந்தச் சமுதாயம் சாலையிலேயே நடந்து வர முடியாது. சாலை நல்ல சாலையாக, தார்ச் சாலையாக இருந்தால்கூட, அவர்கள் வயல் வெளிகளிலேதான் நடக்கிறார்கள். காரணம் என்னவென்று சொன்னால், சாலையில் வந்தால் எல்லோரும் அடிப்பார்கள் என்று பயந்துகொண்டு, சாலையிலேயே நடந்து வர முடியாத ஒரு சூழ்நிலையை பல இடங்களிலே நானே பார்த்திருக்கிறேன். அவர்களையும் இந்த S.C., S.T., பிரிவில் வைத்திருப்பது எந்தவகையிலேயும் நியாயமாகாது. அதேபோல அருந்ததியர் என்று சொல்லப்படுபவர்கள், நம்முடைய வடக்கு மாவட்டங்களில், கிழக்கு மாவட்டங்களில் எப்படி இருக்கிறார்கள் என்று தெரியாது. எங்களுடைய தெற்கு மாவட்டங்களில் அருந்ததியர் என்று சொல்லக்கூடிய இந்தச் சமுதாய மக்கள் மிக மிக மிக பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மக்கள். அவர்களுக்கு வீடே கிடையாது. நிலம் கிடையாது. எந்தவிதமான வசதியும் கிடையாது. கூலி வேலை செய்துதான் பிழைக்க வேண்டும். அவர்களையெல்லாம் நீங்கள் SC., ST., பிரிவிலே சேர்த்து நியாயம் கிடைக்க வேண்டுமென்றால் நியாயமே கிடைக்காது. இதுபோன்றவர்களையெல்லாம் பிரித்து ஒரு ஆறாவது பட்டியலை உருவாக்கி, அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டியது சமூக நீதி வழங்குகின்ற அரசினுடைய கடமை என்பதை இந்த நேரத்தில் நான் வலியுறுத்தி, இதோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.



2000 மே 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்க சட்டமுன்வடிவின் அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துகளை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். இதிலே நிதி ஒதுக்க விவரங்களைப்பற்றிக் கூறுவதற்கு முன்பு இங்கு சொல்லப்பட்ட அல்லது கேட்கப்பட்ட சில சந்தேகங்களுக்கு என்னுடைய விடைகளை அளிப்பது பொருத்தம் என்று கருதுகின்றேன்.

பதவி இழந்த முன்னாள் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது பற்றி நம்முடைய நண்பர் ஞானசேகரன் அவர்கள் தொடக்கத்திலே கேட்டார். இந்த அரசுதான் *14-11-1980*-ல் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியில் பதவி பறிக்கப்பட்ட முன்னாள் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு ஓய்வூதியமாவது தர வேண்டுமென்கிற ஒரு முடிவை எடுத்து, தர முன்வந்தது. அப்படி முன்வந்தபோது, *10* வருடங்கள் பணி முடித்திருப்பார்களேயானால், அவர்களுக்கு அந்த அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கப்பட்டது. ஆனால், அதிலே ஒரு பிரிவினர், *10* ஆண்டுகள் பணி முடிக்காமலேயே வயது மூப்பின் காரணமாக நாங்கள் ஓய்வு பெற்றிருக்கிறோம், எங்களுக்கு அந்தக் குறைந்தபட்ச ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டு, அதற்காக நீதிமன்றம் சென்றிருக்கின்றார்கள். நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு இன்னும் வரவில்லை. இந்தச் சூழ்நிலையிலேகூட நாங்கள் கருதிக்கொண்டிருப்பது, இந்தப் பிரச்சினையை ஆய்வு செய்த நேரத்தில், இவர்களுக்கும்கூட அதே அளவு ஓய்வூதியம் தராவிட்டாலும், *10* ஆண்டு காலம் அவர்கள் பணி முடிக்காத காரணத்தால், அவர்கள்மீது கருணை கொண்டு அல்லது இரக்கம்கொண்டு அல்லது பரிவுகொண்டு, ஒரு குறைந்த அளவாவது ஓய்வூதியம் தரலாமா என்பதுபற்றி அரசு ஆலோசித்துக்கொண்டிருக்கிறது.

*பிற்பகல் 12-50*

இன்னொரு முக்கியமான கேள்வி ஞானசேகரன் அவர்கள் கேட்டார்கள். சந்தனக் கடத்தல் வீரப்பன் என்ன ஆனான் என்பதுபற்றிக் கேட்டார்கள். அதில் உள்ள சிரமங்கள் பலமுறை இந்த அவையிலே விளக்கப்பட்டிருக்கின்றன. இது ஒரு மாநிலத்தினுடைய பிரச்சினை அல்ல; இரண்டு மாநிலங்களினுடைய காவல் துறைகள் ஈடுபட்டு, இரண்டு மாநில அரசுகள் ஈடுபட்டு, நடைபெற வேண்டிய ஒன்று. இந்தப் பகுதி காட்டிலே இருந்தால், பிடிக்கப் போகும்போது அந்தப்

பகுதி காட்டுக்கும், அந்தப் பகுதி காட்டிலே பிடிக்கப் போகும்போது இந்தப் பகுதி காட்டுக்கும் பயணம் செய்து இரு அரசுகளையும் கடந்த பல ஆண்டுகளாக வீரப்பன் கோஷ்டியினர் ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு என்ன செலவு ஆயிற்று என்று திரு. ஞானசேகரன் அவர்கள் கேட்டார்கள். இதுவரையிலே தமிழக அரசைப் பொறுத்தவரையில் அந்தக் காலத்திலே இருந்து இந்தக் காலம்வரையில், இரண்டு மூன்று ஆட்சிகள் மாறிமாறி வந்தாலும்கூட, மொத்தமாக 4 கோடியே 54 இலட்சம் ரூபாய் அதற்குச் செலவாகியிருக்கிறது என்பதை மாத்திரம் சொல்ல விரும்புகின்றேன். இதைவிட அதிகமாக செலவு கர்நாடக அரசுக்கு ஆகியிருக்கிறது என்கிற தகவல், அந்த விவரம் எனக்குத் தெரியாது. எனவே தமிழகத்தைப் பொறுத்தவரையிலே நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் 4 கோடியே 54 இலட்சம் ரூபாய் இதுவரையிலே செலவு செய்திருக்கின்றது.

நம்முடைய அ.இ.அ.தி.மு.க.-வினுடைய சட்டமன்றக் கட்சி தலைவர் திரு. சுந்தரம் அவர்கள் இங்கே உரையாற்றும்பொழுது தன்னுடைய தொகுதிக்கு எதுவுமே செய்யவில்லை என்று சொன்னார்கள். இன்றல்ல., சென்ற ஆண்டே அவர் இதே குற்றச்சாட்டைச் சொல்லி, நான் ஒரு நீண்ட பட்டியலை இந்த அவையிலே அவருக்கு அளித்திருக்கின்றேன். இரண்டரை ஆண்டு காலத்தில், 52.41 கோடி ரூபாய் அளவிற்குப் பணிகள் சுந்தரம் அவர்களுடைய தொகுதியிலே நடைபெற்றிருக்கின்றன என்பதை நான் அப்பொழுதே ராசிபுரம் தொகுதியிலே நடைபெற்ற அந்தக் காரியங்களை எல்லாம் எடுத்துக்காட்டி இருக்கின்றேன். இருந்தாலும்கூட, திரும்பத்திரும்பச் சொன்னால், அது தொகுதி மக்களிடத்திலே தன்மீது ஆர்வத்தை, ஒரு ஆவலை ஏற்படுத்தும் என்ற அந்த அளவிலே சொல்கிறார் என்றால், அதை நான் விட்டுவிடத் தயாராக இருக்கிறேன். ஆனால், எந்தத் தொகுதியும் புறக்கணிக்கப்படவில்லை. இரண்டரை அல்லது மூன்றாண்டு காலத்தில், சென்ற ஆண்டு நான் வைத்த கணக்கின்படி, வழங்கிய பட்டியலின்படி, 52.41 கோடி ரூபாய்க்கு அவருடைய ராசிபுரம் தொகுதியிலே பணிகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நான் மீண்டும் ஒரு முறை இங்கே நினைவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கின்றேன்

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர் வட்டத்தில் ஆனைசேரி கிராமத்திலே ஏற்பட்ட திடீர் பள்ளங்களைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள்.



அதைப்பற்றி செய்தி வந்தவுடன், விசாரித்த அளவில், களிமண் பகுதியாக இருக்கின்ற காரணத்தாலும் ஏற்கெனவே அங்கே சில ஆய்வுகள் நடைபெற்று, அதன் காரணமாகப் பல பகுதிகளிலே பள்ளங்கள் ஏற்பட்டு, அவை மீண்டும் மூடப்பட்டு அதன் காரணமாக திடீர் திடீரென்று இத்தகைய பள்ளங்கள் பூமியிலே ஏற்படுகின்றன. இந்தப் பள்ளம் ஏற்பட்ட பகுதியிலே, தேவையான மண் அள்ளுகின்ற இயந்திரங்களைக் கொண்டு 40 x 40 அடியளவில் பூமியைத் தோண்டி, தற்போது அமைந்துள்ள பள்ளத்தின் அளவினைக் கண்டறிந்து, அதனைச் சரளைக்கல் போன்ற இறுகும் தன்மை கொண்ட மண்ணால் முழுவதுமாக நிரப்பி இறுக்கப்படுவதன்மூலம் எதிர்காலத்தில் ஏற்படும் பாதிப்பைத் தவிர்க்கலாம் என்று சொல்லப்பட்டு, அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை நான் எதிர் கட்சித் தலைவர் அவர்களுக்கு இங்கே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 12-55

26,887 கோடி ரூபாய்க்கான அனுமதியை அவையிலே பெறுவதற்கான சட்டமுன்வடிவு இங்கே உங்கள் முன்னால் வைக்கப்பட்டு இருக்கிறது. இந்த 26,887 கோடியில் 21,494 கோடி ரூபாய் சட்டமன்றப் பேரவையில் வாக்களிக்கப்படும் voted தொகை ஆகும்; மீதமுள்ள 5,393 கோடி ரூபாய்—Charged—சாட்டப்பட்ட தொகை ஆகும். சாட்டப்பட்ட தொகை என்றால், Charged தொகை என்றால், பொதுக் கடன் திருப்பிச் செலுத்த 2,599 கோடி ரூபாய், கடனுக்கான வட்டி 2,749 கோடி ரூபாய், இந்த இரண்டுமே 5,348 கோடி ரூபாய் ஆகிறது. மேலும் நீதி நிர்வாகத்திற்காக 23 கோடி ரூபாய்; ஆளுநர், அமைச்சர்கள், தலைமையிட பணியாளர்கள் என்ற வகையிலே 16 கோடி ரூபாய் ஆக மொத்தம் எல்லாம் சேர்த்து இந்த Charged item 5393 கோடி ரூபாய் ஆகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். Voted item என்று பார்த்தால், அதாவது சட்டசபையிலே வாக்கெடுப்பு நடக்கின்ற Item என்று பார்க்கும்போது, பெரிய அளவிலான மானியங்கள் என்று சொல்லும்போது, கல்விக்கு 4,649 கோடி ரூபாய். கல்விக்கு அடுத்தபடியாக வருவது ஓய்வூதியம். அது 2,593 கோடி ரூபாய். நுகர்பொருள் வழங்கல்—Civil Supplies—1,868 கோடி ரூபாய், ஊரக வளர்ச்சி 1,320 கோடி ரூபாய், நகராட்சி 555 கோடி ரூபாய்; மக்கள் நல்வாழ்வு 1,763 கோடி ரூபாய் காவல் துறை 1,054 கோடி ரூபாய் இதுவன்னியில் வேறு சில தலைப்புகளிலும் ஓரளவு தொகை இடம்பெறும். சமூக நலத் துறை 624 கோடி ரூபாய், வேளாண்மைத் துறை 888 கோடி ரூபாய், சாலைகள்,

பாலங்கள் 803 கோடி ரூபாய், பாசனம் 687 கோடி ரூபாய் மாவட்ட நிருவாகம் 578 கோடி ரூபாய், குடிநீர் வழங்கல் 127 கோடி ரூபாய் மற்றும் பல இனங்கள் சேர்ந்து 21,494 கோடி ரூபாய் வாக்கெடுப்பிலே அடங்கும் என்பதை நான் இங்கே அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முன்கூட்டியே Vote on Account எடுத்ததில் உள்ள 7,009 கோடியே 48 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாயும் இதிலே அடங்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்விக்கான ஒதுக்கீடுக்கு அடுத்து, ஓய்வூதியச் செலவினம் என்று நான் குறிப்பிட்டேன். அரசு செலவினங்களில் மிக வேமாக அதிகரித்து வருகின்ற ஓர் இனம் அதுதான். 1995-96 ஆம் ஆண்டு 787 கோடி ரூபாயாக இருந்தது, 1996-97-ல் அந்த ஓய்வூதியம் 1,070 கோடி ரூபாயாக வளர்ந்தது. 1997-98-ல் ஓய்வூதியம் 1,287 கோடி ரூபாய், 1998-99-ல் 1,692 கோடி ரூபாய், 1999-2000-ல் திருத்திய மதிப்பீட்டின்படி 2,517 கோடி ரூபாய் ஓய்வூதியம், அதுவும் 1-1-1996 முதல் உயர்த்தி வழங்கப்பட்ட ஓய்வூதியத்தின் நிலுவைத் தொகையில் மீதம் உள்ள 40 விழுக்காடு நடப்பு நிதி ஆண்டிலே வழங்கப்படும் என்றும் நாம் அறிவித்து இருக்கிறோம் என்பதை இங்கே தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

நிதி நிலை அறிக்கையிலும் மற்றும் அமைச்சர்கள் இங்கே ஈடுபட்டு நடத்திய மானியக் கோரிக்கைகளினுடைய விவாதங்களிலும் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்புகள் வெறும் அறிவிப்புகளாக இருந்துவிடாமல், செயல்படும் ஆணைகளாகத் தயாரிக்கப்பட்டு, அந்த ஆணைகள் எல்லாம் வெளியிடப்படும் நிலையிலே உள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஏனென்றால், இந்தத் தீர்மானம் நிறைவேறிய பிறகுதான், அவை நிறைவுற்ற பிறகுதான், அந்த ஆணைகள் வெளியிடப்படுவது மரபு, முறை, சட்டம், விதி. எனவேதான், ஆணைகள் எல்லாம் தயாராகிவிட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

24-3-2000 அன்று வரவு செலவுத் திட்டத்தை, நிதிநிலை அறிக்கையை இந்த அவையிலே நான் வைத்தேன் என்றால், 27-3-2000-ல் எல்லாத் துறைகளினுடைய செயலாளர்களையும் கூட்டி அருகில் உள்ள நாமக்கல்லார் மாளிகையில் அவர்களை எல்லாம் அழைத்து, நிதிநிலை அறிக்கையைப்பற்றி அவர்களிடத்திலே ஒரு முறை விவாதித்து, இதிலே சொல்லப்பட்டிருக்கின்ற அறிவிப்புகளையெல்லாம் உடனடியாக



நிறைவேற்ற வேண்டுமென்று வழக்கம்போல், செயலாளர்களுக்கெல்லாம் கூறப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்லாமல் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய கூட்டத்தை வருகிற 27, 28 தேதிகளிலே நடத்துகிறோம் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். செயல்வடிவம் பெற்று, நாம் வழங்கிய அறிவிப்புகளையெல்லாம் மக்களிடத்திலே கொண்டுபோய் செயல்படுத்திட இந்த முயற்சிகள் பெரும் துணையாக இருக்கும் என்பதையும் நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

பிற்பகல் 1-00

:

ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு என்று பார்த்தால் நாம் 1999-2000 ஆண்டிற்கு திட்ட ஒதுக்கீடாக நிர்ணயித்தது 5,250 கோடி ரூபாய். ஆண்டு இறுதியிலே எதிர்பார்க்கப்படக் கூடிய திட்டச் செலவு 5,415 கோடி ரூபாய். சில மாநிலங்களிலே திட்டத்திற்காக நிர்ணயம் செய்து, பிறகு surrender செய்வது ஒரு முறை. ஆனால் இப்படி surrender செய்யாமல், நிர்ணயிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டுக்கும் அதிகமாக செலவு செய்துள்ள ஒருசில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் பெருமையோடு கூறிக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையை வழங்கியபோது 2000-2001 ஆம் ஆண்டிற்கு 665 கோடி ரூபாய் இறுதிப் பற்றாக்குறையாக இருக்குமென்று அறிவித்தேன். அதன் பிறகு அந்தப் பற்றாக்குறையை மேலும் பெருக்குகின்ற அளவிற்கு பல்வேறு அறிவிப்புகள், நேற்றையதினம் செய்யப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீட்டை விரிவாக்கியது ஆகிய இவையெல்லாம் உட்பட மேலும் அதிகமாக 200 கோடி ரூபாய் செலவு வந்திருக்கிறது. அதைப்பற்றி எல்லாம் கவலைப்படாமல் கை மாத்திரம் தட்டுகிறோம் என்று கையைத் தட்டிவிட்டு, நேற்றைக்கு எங்களைச் சிக்க வைத்திருக்கிறீர்கள். ஆக, 665 plus 200 கோடி, இரண்டையும் சேர்த்தால், ஆக மொத்தம் 865 கோடி ரூபாய் பற்றாக்குறை. அதிலே மாத்திரம் 200 கோடி ரூபாய் அல்ல—ஒவ்வொரு மானியத்திலும் அமைச்சர்கள் மாண்புமிகு உறுப்பினர்களுடைய வேண்டுகோள், முறையீடு, அவர்களுடைய கருத்துகளுக்கேற்ப வெளியிட்ட அந்த அறிவிப்புகளை எல்லாம் சேர்த்துத்தான் சொல்கிறேன்—மேலும் 200 கோடி ரூபாய் பற்றாக்குறை. ஆக மொத்தம் 865 கோடி ரூபாய் பற்றாக்குறையாக வருகிறது. இந்தப் பற்றாக்குறையைச் சரிக்கட்ட நான் நிதிநிலை அறிக்கையிலேயே சில வழிமுறைகளைச் சொன்னேன்.

[கலைஞர் மு. கருணாநிதி] [2000 மே 17

மத்திய அரசாங்கம் மொத்த வரி வருவாயில் 29 சதவீதத்தை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிப்பது தொடர்பான அரசமைப்புச் சட்டத் திருத்தம், வரும் நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட உள்ளது. அத்திருத்தம் கொண்டுவரப்பட்ட பிறகு, அதன் காரணமாகவும் தமிழக அரசுக்குக் கூடுதல் நிதி வர வாய்ப்புள்ளது என்று பேசியிருக்கிறேன். அது நம்முடைய பற்றாக்குறையைச் சரிக்கட்ட ஓரளவிற்கு பயன்படும் என்று நான் அன்றைக்குக் குறிப்பிட்டிருக்கிறேன். அதைப்போலவே, இங்கே நம்முடைய நண்பர் ஆளுங்கட்சியின் சார்பில் பேசிய திரு. குத்தாலம் பி. கல்யாணம் அவர்கள் குறிப்பிட்டதுபோல நேற்றையதினம் மாநிலங்களவை உட்பட, இந்த 29 சதவீதத்திற்கு ஒப்புதல் இரு அவைகளிலும் கிடைத்திருக்கிறது. இந்த 29 சதவீத நிதி மொத்த வரி வருவாயில், மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்கிற ஒரு திட்டம் ஐக்கிய முன்னணி ஆட்சியிலே நண்பர் சிதம்பரம் அவர்கள் நிதியமைச்சராக இருந்த அந்தக் காலகட்டத்திலேயே யோசிக்கப்பட்டு, ஆனால் அந்த ஆட்சி உடனடியாகக் கவிழ்ந்து விட்ட காரணத்தால் அல்லது முடிவுற்றுவிட்ட காரணத்தால் அந்த ஆட்சியும், அடுத்து வந்த பா.ஜ.க. ஆட்சியும் சில நாட்கள்தான் இருந்து மறைந்துவிட்ட காரணத்தால், அதிலும் நிறைவேற்ற முடியாமல், இப்போதுதான் அதை நிறைவேற்ற முடிந்திருக்கிறது.

அரசமைப்புச் சட்டத்தினுடைய 89-வது திருத்த மசோதா என்று அதற்குப் பெயர். இந்த 29 சதவீதத்தை, மத்தியிலே வர இருக்கின்ற மொத்த வரி வருவாயினுடைய அளவில் 29 சதவீதம் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கும்போது, இன்னொன்றையும் சொல்லி இருக்கின்றார்கள், 1996-97 முதல் 1999-2000 வரை வழங்கப்படலாம். இப்படி வழங்கப்பட்டால், முன்தேதியிட்டு வழங்கப்பட்டால், கணிசமான தொகை நம்முடைய மாநிலத்திற்குக் கிடைக்கும். அதையும் வைத்துக்கொண்டு, மேலும் சிக்கன நடவடிக்கைகள் மேற்கொண்டு—இப்போதுகூட இரண்டு முறை நம்முடைய தலைமைச் செயலாளருடைய தலைமையில், துறைகளுடைய செயலாளர்களுடைய கூட்டம் நடைபெற்று—இன்னும் சிக்கனமாக எப்படி அரசு நிர்வாகம் நடத்தப்பட வேண்டும் என்பது பற்றி கருத்துகள் ஆராயப்பட்டிருக்கின்றன. அந்த நடவடிக்கைகளையும் இணைத்து இந்தப் பற்றாக்குறையை நிச்சயமாகச் சரிக்கட்ட முடியும் என்று நான் கருதுகின்றேன். இந்த 29 சதவீதத்தின் மூலமாக வருகின்ற அதிகத் தொகை, பற்றாக்குறையைச் சரிக்கட்டுவது மாத்திரம் அல்ல, உங்களுக்கு நினைவு இருக்கும், திரு. இரத்தினவேல் பாண்டியன், உச்சநீதிமன்றத்தினுடைய முன்னாள் நீதியரசர் மற்றும்



2000 மே 17] [கலைஞர் மு. கருணாநிதி]

ஓய்வு பெற்ற திரு. சீதாராமதாஸ் I.A.S. மற்றும் திரு. ஏ. வெங்கட்ராமன் ஆகியோர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து தமிழகத்திலே தென் மாவட்டங்களிலே தொழில் துறையை வளர்ப்பதற்கு, வேலைவாய்ப்புகளை ஈட்டுவதற்கு என்ன காரியங்களைச் செய்யலாம் என்ற திட்டத்தைத் தயாரித்துக் கொடுங்கள் என்று கேட்டதற்கிணங்க அவர்கள் கொடுத்த திட்டங்கள் அரசுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பற்றாக்குறையை மாத்திரம் அல்லாமல், தென் மாவட்டங்களிலே உள்ள மக்களுடைய நல்வாழ்வுக்காகவும், வேலைவாய்ப்புக்காவும் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகவும் அந்தத் தொகை பயன்படுத்தப்படும். அதற்கு இன்னும்கூட கொஞ்சம் தொகை மத்திய அரசாங்கத்திடமிருந்து பெறப்படும் என்ற நற்செய்தியை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-05

இங்கே பேசிய உறுப்பினர்கள் யாவரும் ஒன்றைச் சுட்டிக் காட்டுவார்கள் என்று கருதினேன். ஒருவேளை நான் வெளியிலே சென்றிருக்கும்போது சொன்னார்களோ என்னவோ தெரியாது. பால் உற்பத்தியாளர்களுடைய சங்கடத்தைப்பற்றி யாரும் பேசவில்லை. ஏனென்றால் இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நிதி ஒதுக்கீடு மசோதாவைப் பொறுத்தவரையில் எல்லோரும் எண்ணிக் கொண்டிருக்கிறோம், அந்தப் பொருளாதாரத் தத்துவங்களை, பொருளாதாரக் கோட்பாடுகளை அரசினுடைய வருவாய் செலவு இவற்றைப்பற்றிப் பேசுவதோடு அல்லாமல் இது ஒரு பலசரக்கு மசோதாவாகவே எல்லாவற்றையும் பேசுவதற்கு ஒரு வாய்ப்பாக நாம் கருதிக்கொண்டிருக்கிறோம். அப்படி கருதிக்கொண்டிருக்கும்போது நிச்சயமாக இதிலே பாலும் வரும் என்று நான் எண்ணினேன். இல்லாவிட்டாலும்கூட சொல்ல வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது.

பால் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் பாலுக்கு உண்டான தொகையை வழங்குதில் காலதாமதம் ஏற்படுகிறது என்று பலரும் புகார் கூறி வருகின்றார்கள். பலரும் அரசுக்கு முறையீடு செய்து வருகின்றார்கள். ஏப்ரல் 1998 ஆம் ஆண்டு பால் கொள்முதல் விலை 7 ரூபாய் 51 காசிலிருந்து 9 ரூபாயாக உயர்த்தப்பட்டது உங்களுக்கு ஞாபகம் இருக்கும். ஆனால் அதேநேரத்தில் விற்பனை விலை லிட்டர் ஒன்றுக்கு ஒரு ரூபாய்தான் உயர்த்தப்பட்டது. ரூ. 9½-லிருந்து ரூ.10½ என்றுதான் உயர்த்தப்பட்டது. இதனை ஓரளவு ஈடுகட்டும் வகையில் அரசு உதவி வழங்கும் என்று அறிவிக்கப்பட்டு

அரசின் சார்பில் அதை ஈடுகட்ட 23 கோடி ரூபாய் வழங்கப்பட்டது, பால் உற்பத்தியாளர்களுக்கு அந்தப் பணம் போய்ச் சேருவதற்காக. ஆனால் ஆண்டுதோறும் தொடருகின்ற இழப்பாக இருக்கின்ற காரணத்தினால், இந்த ஆண்டும் பால் உற்பத்தியாளர்களுக்குச் சேர வேண்டிய தொகையை வழங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்த அவசியத்தை முன்னிட்டு அதைப்பற்றி யோசிக்க வேண்டும் என்று எண்ணியபோது டில்லியிலே நடைபெறுகின்ற, நாளைக்கு நாங்கள் செல்ல வேண்டிய அந்தக் கூட்டத்திற்கான முன் ஏற்பாடுகளைக் கவனிக்கவும், அங்குள்ள அமைச்சர்களோடும், அங்குள்ள Planning Commission அதிகாரிகளோடும் கலந்துபேசவும் நம்முடைய நிதித் துறைச் செயலாளர் அங்கு சென்றிருக்கின்ற காரணத்தால், அவர் திரும்பி வந்தவுடன், இந்தச் சட்டப் பேரவையினுடைய கூட்டத் தொடர் முடிந்தவுடன், அதற்கான நல்ல வழி ஒன்று கண்டு பால் உற்பத்தியாளர்களுக்கு உதவி நிச்சயமாகச் செய்யப்படும் என்ற நம்பிக்கையை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு முக்கியச் செய்தியை இந்த மாமன்றத்திலே சொல்ல விரும்புகின்றேன். வளரும் நாடுகளில் 80 விழுக்காடு மக்கள் தங்கள் உடல்நலம் பேணுவதற்காக பாரம்பரிய மருந்துகளான மூலிகைச் செடி மருந்துகளையே நாடுகின்றார்கள் என உலக மக்கள் நல்வாழ்வு அமைப்பு (World Health Organisation) மதிப்பிட்டுள்ளது. பக்க விளைவுகளை ஏற்படுத்தாததாலும், எளிதில் கிடைப்பதாலும், ஏழை மக்களுக்குரிய ஒரே வழியாக விளங்குவதாலும், மூலிகைச் செடிகளின் தேவை அதிகரித்து வருகிறது. சீனத்தில் (China) மூலிகைகளின் வாணிபம் சுமார் இருபதாயிரம் கோடி ரூபாய்; ஆனால் இந்திய மூலிகைகளின் வாணிபம் வருடத்திற்கு சுமார் 450 கோடி ரூபாய்தான். தமிழகத்திலே மானாவாரி நிலமாக உள்ள பரப்பில் அரிய மூலிகைகளை உற்பத்தி செய்ய வழிவகுத்தால் வருமானமும் அதிகரிக்கும், மூலிகைகளின் பயன்பாடும் பெருகும். அதற்கு ஏற்பாடுகளாக, அதிக அளவில் மூலிகைகள் உள்ள பகுதிகளான கொல்லிமலை, குற்றாலம், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி போன்றவை மருத்துவ குணமுள்ள செடிகளைப் பேணும் பகுதிகளாக (Medicinal Plants Conservation Areas) அறிவிக்கப்படும்.



பிற்பகல் 1-10

சிதைந்த வனப் பகுதிகளைக் கண்டறிந்து அங்கு தீவிர மூலிகை சாகுபடி செய்து தரமான மூலிகைப் பொருட்களைச் சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மருத்துவ குணமுள்ள செடிகள் மிகுந்துள்ள வனப் பகுதிகள் கண்டறியப்பட்டு அவற்றின் உபயோகத்திற்கான மேலாண்மைத் திட்டம் உருவாக்கப்படும்.

தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம் உள்ள இடங்களில் மூலிகைச் செடிகளை கிராம மக்களுடன் ஒருங்கிணைந்து பாதுகாப்பது மற்றும் பயிரிடுவது ஆகிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மருத்துவ குணமுள்ள செடிகள் இருக்குமிடம் மற்றும் அவைபற்றிய விழிப்புணர்வூட்டும் திட்டம் அரசுசாரா அமைப்புகள் மூலமாகத் தொடர்ந்து செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தோட்டக்கலைத் துறை, பழங்குடியினர் நலத் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் வனத் துறை ஆகிய துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு அபூர்வ மூலிகைகளைச் சிறப்பாகப் பராமரிக்கவும், பேணவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இத்திட்ட செயல்பாடு முதலமைச்சர் செயலகம் மூலம் ஆரம்பக் கட்டத்திலிருந்தே தீவிரமாகக் கண்காணிக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊராட்சி ஒன்றியங்களிலே உள்ள கல்வி நிதியில் இருந்து அந்தந்த ஒன்றியப் பள்ளிகளைப் பழுதுபார்ப்பது (Maintenance) மட்டுமல்லாமல் மீதம் போதிய நிதி இருப்பின் தேவைக்கேற்ப பள்ளிக் கட்டடம் கட்டவும் ஊராட்சிகளுக்கு அனுமதி வழங்கப்படும். ஊராட்சி ஒன்றியங்களின் பொது நிதியிலே போதிய நிதி இருப்பின் அந்த நிதியிலிருந்து சத்துணவுக் கூடக் கட்டடம் கட்டுவதற்கும், பழுது பார்ப்பதற்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

வரிகளைப் பற்றி யாரும் பேசவில்லை. திரு. பெரியசாமி மாத்திரம் தான் பேசினார். தேங்காயைப் பற்றி திரு. சுந்தரம் பேசினார். ஆனால் நான் எல்லாம் சொல்லிவிட்டேன், நிதி வருவாய் எவ்வளவு இருக்கிறது என்று சொல்லிவிட்டேன். பற்றாக்குறை எவ்வளவு இருக்கிறது என்று சொல்லிவிட்டேன். எந்த அளவிற்குச் சிக்கனமாக இருக்க வேண்டி

இருக்கிறது என்ற சூழ்நிலையையும் சொல்லிவிட்டேன். மத்திய சர்க்காருடைய பணத்தை எதிர்பார்த்து தான் இருக்கிறதைச் சரிசெய்து விட்டுப் போக முடியும். நெருக்கடியைச் சமாளிக்க முடியும் என்பதையும் சொல்லிவிட்டேன். இதற்கிடையிலேயும்கூட, நாம் வரிச்சலுகை அளித்த அளவிற்கு இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் அளித்ததாகச் சொல்ல முடியாது. இந்த 4 ஆண்டு காலத்திலே அந்த அளவுக்கு வரிச் சலுகையை இந்த அரசு வழங்கியிருக்கின்றது? வணிகர்கள் நம்மை பாராட்டுகின்ற அளவுக்கு, வாழ்த்துகின்ற அளவுக்கு வரிச் சலுகை அளித்திருக்கிறது., சுலபமாக ஆக்கியிருக்கிறது. விற்பனை வரியை சுலபமாகவும், எளிதாகவும் ஆக்கி அவர்களை மகிழச் செய்திருக்கிற அரசும் இந்த அரசு என்பதை யாரும் மறந்திட இயலாது.

*2000-2001* ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து சட்டமன்றப் பேரவையில் அளித்த பின்னர் விற்பனை வரி விகிதங்களில் மேலும் சில பொருட்களுக்கு வரிக் குறைப்புச் செய்ய வேண்டுகோள்கள் சில வணிகச் சங்கங்களிலிருந்தும், வணிக வரித் துறையைச் சேர்ந்த மானியக் கோரிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்தின்போது சில சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்தும் வரப்பெற்றன. அந்த வேண்டுகோள்களை நன்கு ஆய்வு செய்தபின்னர், பின்வரும் வரி மாற்றங்களை மற்றும் வரிவிதிப்பு நடைமுறைகளில் உள்ள மாற்றங்களை அறிவிக்கிறேன்.

பருத்தி கழிவு (cotton waste) மீதான விற்பனை வரி *8* விழுக்காட்டிலிருந்து *4* விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

P.V.C. குழாய் மற்றும் பொருத்திகள் மீதான விற்பனை வரி *12* விழுக்காட்டிலிருந்து *8* விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேற்கண்ட பொருட்களின் வரி விகிதங்கள் அண்டை மாநிலங்களை விட அதிகமாக இருப்பதால் வணிகம் அண்டை மாநிலங்களுக்குச் செல்வதைத் தடுக்கும்பொருட்டு இந்த வரிக் குறைப்பு செய்யப்படுகிறது. இதனால் ஏற்படும் வருவாய் மாற்றங்கள் ஆறு மாத காலத்திற்குப்பின் ஆய்வு செய்யப்படும். மேற்கண்ட பொருட்களில் வரி இழப்பு ஏற்படுமானால் இவற்றில் தக்க மாற்றம் செய்யப்படும்.

அடுத்து--மிதி வண்டி இருக்கை உறைகள் (Cycle seat covers) மீதான வரி *4* விழுக்காட்டிலிருந்து *1* விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)





பாலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பைகள் மீதான விற்பனை வரி *8* விழுக்காட்டிலிருந்து *4* விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

வணிகச் சின்னத்துடன் உள்ள பால்கோவா மீதான விற்பனை வரி *16* விழுக்காட்டிலிருந்து *12* விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

பழைய மற்றும் பயன்படுத்தப்பட்ட கண்ணாடி சீசாக்கள் மீதான கொள்முதல் வரி *12* விழுக்காட்டிலிருந்து *4* விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

முகம் பார்க்கும் கண்ணாடிகள், பிரதிபலிக்கும் வண்ணக் கண்ணாடிகள், பிரதிபலிக்கும் உருவக் கண்ணாடிகள் மீதான விற்பனை வரி *16* விழுக்காட்டிலிருந்து *12* விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

வேலூர் மாவட்டம், வாலாஜா, வாணியம்பாடி மற்றும் சேலம் மாவட்டத்தில் ஒருசில பகுதிகளில் கைத்தறித் தொழில் முறையில் தயாரிக்கப்படும் 'நிலக்கம்பளம்' பெருமளவில் ஜம்மு மற்றும் காஷ்மீர் பகுதிகளுக்கு ஏழை மக்கள் பயன்படுத்தும் வகையில் வெளி மாநில விற்பனை செய்யப்படுகிறது என்றும், அத்தகைய நிலக் கம்பளத்தின் மீதான விற்பனைக்கு முழு விற்பனை வரி விலக்கு அளிக்கும்படி அரசுக்கு பல கோரிக்கைகள் வந்துள்ளன.

*பிற்பகல் 1-15*

நிலக்கம்பளம் உள்மாநிலத்தில் விற்கும்போது *20* விழுக்காடு வரிக்கு உள்ளாகிறது. இது இடைமாநில விற்பனையின்போது சி படிவம் தரப்பட்டால், நான்கு விழுக்காடு வரிக்கு உள்ளாகிறது. சி படிவம் தரப்படாத நேரத்தில் *20* விழுக்காடு மத்திய விற்பனை வரிக்கு உள்ளாகிறது. நிலக்கம்பளம் இடைமாநில விற்பனையின்போது சி படிவம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நான்கு விழுக்காடு விற்பனை வரி விதிக்கலாம் என்று முடிவெடுக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

நீலக்கீல் என்னும் தார் பூசப்பட்ட கூரைத் தகடுகள் (Asphalt Roofing Sheets) மீதான விற்பனை வரி *12* விழுக்காட்டிலிருந்து *8* விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. மேற்படி வரி விகிதக் குறைப்புகள் எல்லாம் *1-6-2000* முதல் நடைமுறைக்கு வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரிவிதிப்பு தொடரப்படும் முதல் மேல்முறையீட்டிலிருந்து தகராறுக்குட்பட்ட வரியில் 25 விழுக்காடு செலுத்தினால் மட்டுமே மேல்முறையீடு அனுமதிக்கப்படும் என்று தற்போது உள்ளது. அந்த விகிதம் 12.5 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

சுயவரி விதிப்பிற்கு உச்சவரம்பு ரூபாய் 20 இலட்சத்திலிருந்து ரூபாய் ஒரு கோடியாக அதிகரிக்கப்பட்டு, அத்தொகை வரை, மொத்த விற்பனை செய்யும் வணிகர்கள் அனைவரும் பதிவுபெற்ற பட்டயக் கணக்கர் (Chartered Accountant) தணிக்கைச் சான்றிதழ் பெற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்போது ரூபாய் 20 இலட்சம் வரை மொத்த விற்பனை செய்யும் வணிகர்கள் பதிவுபெற்ற பட்டயக் கணக்கர் தணிக்கைச் சான்றிதழ் தருவதிலிருந்து விலக்களிக்கப் படுகிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், மூன்றாம் அட்டவணையில் பகுதி பி-யில் இனம் 81-ல் குறிப்பிட்டுள்ள பருப்பு வகைகள் மீதான வரி விலக்கு வரம்பு 100 கோடி ரூபாய் என்பது, ரூபாய் 300 கோடியாக 17-7-1996 முதல் முன்தேதியிட்டு உயர்த்தப்படுகிறது.

சமையல் எண்ணெய் மீதான தற்போதுள்ள வரி விலக்கு உச்சவரம்பு ரூபாய் 100 கோடியிலிருந்து ரூபாய் 300 கோடியாக 1-3-1999 முதல் முன்தேதியிட்டு உயர்த்தப்படுகிறது.

தற்போது பிரிவு 7(சி)-ன்கீழ், ஒப்பந்தக்காரர்கள் நிதியாண்டு அடிப்படையில் இணக்க வரி செலுத்தலாம். இதனை நிதியாண்டு அடிப்படையில் அல்லாது ஒப்பந்தப் பணிகள் வாரியாகவும் இணக்க வரி செலுத்த அனுமதிக்கப்படுவார்கள்.

ஒரு மகிழ்ச்சியான செய்தி, மத்திய சட்டத் துறை அமைச்சர் திரு. ராம்ஜெத்மலானி அவர்களுக்கு 3-5-2000 அன்று ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில் கம்பெனி சட்ட ஆணையத்தின் முதன்மை Bench (Principal Bench of Company Law Board) சென்னையிலே அமைக்க வேண்டுமென்ற தமிழகத்தின் நீண்டநாள் கோரிக்கையை வலியுறுத்தி கடிதம் எழுதியிருந்தேன். இது தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகம், கேரளா, பாண்டிச்சேரி ஆகிய ஐந்து மாநிலங்களுக்கும் சேர்த்து அமைய வேண்டிய முதன்மை Bench ஆகும். தொடர்ந்து மத்திய வர்த்தக, தொழில் அமைச்சர் திரு. முரசொலி மாறனுக்கும், மத்திய சட்ட அமைச்சரை இதுகுறித்து நேரில் சந்தித்து வலியுறுத்துமாறு



அறிவுறுத்தியிருந்தேன். என்னுடைய கடிதத்திற்கு இணங்கவும், திரு. மாறன் வலியுறுத்தலுக்கு இணங்கவும், மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. ராம்ஜெத்மலானி அவர்கள் நமது வேண்டுகோளையேற்று கம்பெனி சட்ட ஆணைய முதன்மை Bench-ஐ (Principal Bench of Company Law Board) சென்னையிலே நிறுவுவதற்கு ஒப்புக்கொண்டுவிட்டார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற மகிழ்ச்சிகரமான செய்தி காலையிலேதான் கிடைத்தது. அதை தமிழகத்திற்கும், இந்த அவைக்கும் அறிவித்துக்கொள்கிறேன். மேலும் நமது வேண்டுகோளை ஏற்று இதனை சென்னையிலே அமைக்க முன்வந்த மத்திய அமைச்சர் ராம்ஜெத்மலானி அவர்களுக்கும் தமிழகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இறுதியாக, தமிழகத்தினுடைய நிலவரம், வளம் குறித்து Associated Chambers of Commerce and Industry, Study on Yields என்ற ஒரு கருத்து Business Line என்கின்ற பிரபலமான ஆங்கில ஏட்டில் வெளியிடப்பட்டிருக்கிறது. அது அந்த ஏட்டின் கருத்தல்ல. Associated Chambers of Commerce and Industry Study—யினுடைய அந்தக் கருத்தை —அந்தக் கட்டுரையின் தலைப்பே, அந்தக் கருத்துரைக்குத் தலைப்பு—

TAMIL NADU TOPS IN OILSEEDS

While Punjab continues to lead in the yield rate of wheat, its pre-eminent position in the productivity of rice has been displaced by Tamil Nadu according to a study by the Associated Chambers of Commerce and Industry. The analysis reveals that Haryana too has slipped from its top position in oilseeds yield with Tamil Nadu emerging ahead of both Haryana and Orissa. Tamil Nadu in 1998-99 had a triple distinction— being the number one State in India in terms of yield rates of rice, sugarcane and oilseeds.

அதாவது, தமிழ்நாட்டிற்கு முதல் இடம் என்கிற தலைப்பு. பஞ்சாப் மாநிலம் கோதுமை உற்பத்தித் திறனில் தொடர்ந்து முன்னணியில் இருந்தாலும், அரிசி உற்பத்தியில் பஞ்சாப் மாநிலம் இதுவரை தக்க வைத்துக்கொண்டு இருந்த தனிச் சிறப்பை, அந்த நிலையை தமிழ்நாடு மாற்றி, முதல் இடத்திற்கு வந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனை Associated Chambers of Commerce and Industry நடத்தியுள்ள ஆய்வு வெளிப்படுத்துகிறது.

பிற்பகல் 1-20

மேலும், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திறனில் அரியானா மாநிலம் இதுவரை முதலாவது இடத்தில் இருந்து வந்துள்ளது. ஆனால்,

அந்த முதல் நிலை தற்போது அரியானாவிடமிருந்து நழுவிவிட்டது. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திறனில் அரியானா, ஒரிசா ஆகிய இரண்டு மாநிலங்களையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு, தமிழ்நாடு முதல் இடத்திற்கு வந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

1998-99 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு என்று மூன்று தனிச் சிறப்புகள் சேர்ந்துள்ளன. இந்தியாவிலே தமிழ்நாடு அரிசி உற்பத்தித் திறனில் முதல் இடம்; கரும்பு உற்பத்தித் திறனில் முதல் இடம்; எண்ணெய் வித்துகள் உற்பத்தித் திறனில் முதல் இடம் பெற்றுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியோடு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். இந்த சட்டமுன்வடிவை ஏற்று, ஒப்புதல் அளித்து, நிறைவேற்றித் தருமாறு கேட்டு அமைகின்றேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 9. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 18-5-2000

[பேராசிரியர் க. அன்பழகன்] [2000 மே 17

அன்று தளர்த்தி, அந்த நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (இ) கிருஷ்ணா நதி நீர் குறித்து 18-5-2000 அன்று ஒரு மணி நேரம் விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை. வினாக்கள்-விடைகள் நேரத்தில், அந்த ஒரு மணி நேரத்தில் ஏற்கெனவே வாக்குறுதி கொடுத்தபடி, கிருஷ்ண நதி நீரைப் பற்றி விவாதம் நடைபெறும். 40 நிமிடங்கள் உறுப்பினர்களுக்கும், 20 நிமிடங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரைக்கும் ஒதுக்கப்படும். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், நீங்கள் ஒன்றும் பேச வேண்டாம். நீங்கள் பேசாமல் இருந்தீர்களென்றால் நன்றாக இருக்கும்.

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி.

### (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2000), மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2000 மே 17] [திரு. அ. இரகுமான்கான்]

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2000) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (குறுக்கீடு)

திரு. ஹேமச்சந்திரன் கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடு) என்னை ஏன் அடிப்பதைப்போல் பார்க்கிறீர்கள்? கொஞ்சம் அமைதியாக, என் அனுமதி பெற்று, பின்பு சொல்ல வேண்டியதைச் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) இப்போது சொல்லுங்கள்.

பிற்பகல் 1-25

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது விற்பனை வரி மூன்றாவது திருத்தச் சட்டம். இதிலே, ரப்பர் பொருளைப் பொறுத்த அளவிலே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 8 சதவிகிதம் மாநில அரசும், 4 சதவிகிதம் மத்திய அரசும், அதற்குப் பிறகு turnover tax என்ற முறையிலே 2½ சதவிகிதமும், அதற்குப் பிறகு marketing tax என்ற முறையிலே ஒரு சதவிகிதமும், இப்படி 14½ சதவிகிதம் வரி ரப்பர் உற்பத்தியாளர்களிடமிருந்து, தமிழகத்திலே பெற்றுக் கொண்டிருக்கிறோம். அண்டை மாநிலமான கேரளாவிலே 11 சதவிகிதம்தான் இப்போது ரப்பர் உற்பத்தியாளர்கள் விற்பனை வரியாகக் கொடுக்க வேண்டி இருக்கிறது. ரப்பர் தொழில், இப்போது கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாடு நன்கு அறியும், முதலமைச்சர் அவர்களும், அதேபோல் அமைச்சர்களும் நன்கு அறிவார்கள்.

ரப்பர் தொழிலைப் பொறுத்த அளவிலே, அதிலே ஈடுபட்டிருக்கிறவர்கள், பெரிய தோட்டங்களை வைத்திருக்கிறார்கள் என்பது அபூர்வமாகத்தான் இருக்கிறது. பத்தோ, இருபதோ

@ 25-4-2000 நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

தோட்டங்கள்தான் பெரிய தோட்டங்கள் என்ற முறையிலே தமிழகத்திலே உள்ளன. கன்னியாகுமரி மாவட்டத்திலேதான் ரப்பர் தோட்டங்களே அதிகமாக இருக்கின்றன என்பதையும் நன்கு அறிவோம். இப்போது ரப்பர் தொழிலைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமேயானால், கேரள மாநிலத்திலே இருப்பதைப்போல 11 சதவிகிதம் விற்பனை வரி என்ற சலுகை இங்குள்ள ரப்பர் உற்பத்தியாளர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். சிறு உற்பத்தியாளர்கள் அதிகமாக இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தச் சிறு உற்பத்தியாளர்கள் இப்போது ரப்பர் தொழிலை நடத்திச் செல்ல வேண்டுமானால், ஏற்கெனவே மத்திய அரசு அதற்கு ஒரு பாதுகாப்பு கொடுத்திருந்தது. அதாவது floor price என்று நிர்ணயிக்கப் பட்டிருந்தது மட்டுமல்ல; வெளிநாட்டிலே இருந்து ரப்பர் பொருள்களை இறக்குமதி செய்யக்கூடாது என்ற தடையும் இருந்தது என்பதையும் நாடு நன்கு அறியும். *(மணியடிக்கப்பெற்றது)* ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள். நீங்கள் இப்போது பெரிய சொற்பொழிவை ஆற்றிக் கொண்டிருக்கிறீர்களே!

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** விஷயத்தைச் சொல்கிறேன். சொல்ல வேண்டிய விஷயத்தை முழுமையாகச் சொல்ல வேண்டும் அல்லவா? இப்போது இறக்குமதி, ஏற்றுமதிக் கொள்கையினுடைய விளைவாக அந்தப் பாதுகாப்பு எடுக்கப்பட்டதற்குப் பிறகு, வெளிநாட்டிலே இருந்து இறக்குமதி மூலம் ரப்பர் பொருள்கள் வர ஆரம்பித்ததற்குப் பிறகு, இங்கே ரப்பர் தொழில் அறவே பாதிக்கப்பட்டிருக்கிறது. தமிழக அரசும் இந்தப் பிரச்சினையிலே பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதும் என்னுடைய கருத்து. ஏனென்றால், 15 ஆயிரம் ஏக்கர் நிலத்திலே தமிழக அரசும் இப்போது ரப்பர் பயிரிட்டுக்கொண்டிருக்கிறது. 2,500-க்கும் அதிகமான தொழிலாளர்கள் இப்போது அங்கே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

இப்போது ரப்பர் தொழிலைப் பாதுகாத்துக்கொள்வதற்கு Marketing Cess வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எந்த முறையிலேயும் ரப்பர் உற்பத்தியாளர்களுக்கு உதவி செய்யப்படவில்லை. இந்த Marketing Cess மூலம் ரப்பர் உற்பத்தியாளர்களுக்கு எந்தப் பலனும் இல்லை. ஆகவே, Marketing Cess-ஐயாவது மாற்றுவதற்குத் தகுந்த அளவிலே அரசு



பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்த அளவுக்கு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமோ, அந்த அளவுக்குச் செய்ய வேண்டும்.

அதேபோன்று, இந்தச் சட்டத்திலே இன்னொரு விஷயம். Appeal கொடுப்பதற்கு 30 நாட்கள் என்று அதிகமாகக் கொடுக்கக்கூடிய முறையிலே ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதிலே நான் என்ன சொல்கிறேன் என்றால், ஏற்கெனவே கொடுக்கப்பட வேண்டிய விற்பனை வரியைக் காலா காலத்திலே கொடுக்க வேண்டுமென்று சொல்லாமல் retrospective effect என்ற வகையில், லட்சக்கணக்கிலே பணம் கொடுக்க வேண்டுமென்ற நிலை வருவதனால், இதிலே ஏற்கெனவே பல அரசு வேலைகளைச் செய்கிற Contractors இருக்கிறார்கள். அவர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த contractors-ஐப் பொறுத்தவரையிலே, அவர்களுக்கு விற்பனை வரி போடுவது சரிதானா என்ற முறையிலே, ஏற்கெனவே நாம் டிசம்பர் மாதத்திலே விவாதிக்கின்ற நேரத்திலே சட்டத் துறை அமைச்சர் அவர்கள், அவர்களும் பொருள்களை வாங்குகிறார்கள்; ஆகவே, அவர்களுக்கு விற்பனை வரி போடுவதிலே தவறு இல்லை என்று சொன்னார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், இப்போது அவர்களுக்கு இப்படி விற்பனை வரி போட வேண்டுமென்று ஒரு முடிவுக்கு வந்ததற்குப் பிறகு, முன்னாலே இருந்த பிரபல்யத்தோடு, பல வருடங்களுக்கு முன்னாலே இருந்து அவர்களே அந்தப் பணத்தைக் கட்ட வேண்டுமென்ற முறையிலே ஒரு நிலையை ஏற்படுத்துவதன் காரணமாக அவர்களும் கடினமாகப் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, இப்படி விற்பனை வரியைப் பொறுத்த அளவிலே இப்போது உள்ள பாதிப்புகளைச் சரிகட்டுவதற்கு அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1.-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவினை வரவேற்கிற அதேநேரத்தில் எங்களுடைய மாவட்டத்தில், நிலக் கம்பளம் தயாரிப்பவர்கள் கோரிக்கை வைத்திருந்த அந்த 20 சதவிகித வரி விதிப்பை, 4 சதவிகிதமாக குறைத்துக்

கொடுத்தற்காக, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத்தெரிவித்துக் கொள்கிறேன். நான்தான் அந்த representation-ஐக்கூட அவரிடம் கொடுத்தேன். ஆனால் அதே நேரத்திலே ஒரு கோரிக்கையை வைக்கிறேன். அது என்னவென்றால், ஏற்கெனவே retrospective effect கொடுத்து, கடந்த ஆண்டு காலத்தில் 20 சதவிகிதம் வரியைக் கட்ட வேண்டுமென்று சொல்லி பல பேருக்கு Notice போய்க்கொண்டிருக்கிறது. அந்த Notice போகிற காரணத்தினால், எல்லோரும் பெரும் பாதிப்புக்குள்ளாகி, ஒவ்வொருவரும் 2 லட்சம், ஒன்றரை லட்சம் என்று கட்ட வேண்டிய நிலை இருக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிட்டா நூலுக்கு 2% வரியை நாம் நம்முடைய மாநிலத்திலே போடுகிறோம். பக்கத்திலே இருக்கிற ஆந்திராவிலே அது இல்லை. அந்த சிட்டா நூலுக்குப் போடக்கூடிய வரியை முழுமையாக நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சேலத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள் எல்லோரும், ஒன்றாகச் சேர்ந்து, கூட்டுறவுச் சங்கமாக 'SAGOSERVE' என்கிற அமைப்பை வைத்திருக்கிறார்கள். அதிலே ஒரேயொரு நபர் வியாபாரம் செய்வதைப்போல எண்ணி, Additional Sales Tax போடுகிற காரணத்தினாலே, அந்த SAGOSERVE அதிகமான வரி கட்ட வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, சேலத்தில் இருக்கிற, அந்த 'SAGOSERVE'-க்கு Additional Sales Tax-ஐப் போட வேண்டாம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஞானசேகரன் அவர்கள் கூறியபடி நானும் இதை ஏற்கெனவே பலமுறை பேசியிருக்கிறேன். தற்போதுகூட, 100 கோடி ரூபாய் என்று விற்பனை வரி இருக்கிறது. சமையல் எண்ணெய்க்கும் மற்றொன்றுக்கும் வரி விலக்கு உச்சவரம்பை 300 கோடியாக உயர்த்தியிருக்கிறீர்கள். அதேபோல "SAGOSERVE"-க்கு விதிக்கப்படுகிற Additional Sales Tax-ஐ 300 கோடி ரூபாய் வரை குறைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் Director-ஐ, Chairman-ஐ கூப்பிட்டுப் பேசி, ஒரு முடிவை எடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எவ்வளவு பேர் பேசப் போகிறீர்கள்?

**திரு. ப. மோகன் கந்தசாமி:** பருத்தி textile mills....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிட்டா நூலைப் பற்றித்தான் அவர் பேசிவிட்டாரே?

**திரு. ப. மோகன் கந்தசாமி:** கோவை மாவட்டத்திலே........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் போகிற போக்கினைப் பார்த்தால், நான் அவையை ஒத்திவைப்பதைத் தவிர வேறு வழியில்லை.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** ஒரேயொரு point ஐயா. இப்போது வெளி மாநிலங்களிலே பருத்தி வாங்கும்போது, அங்கே 4 சதவிகிதம் வரி கட்டித்தான் இங்கே கொண்டு வருகிறார்கள். மீண்டும், நம்முடைய அரசு அதற்கு வரி விதிப்பதன் காரணமாகத்தான் textile mills நலிந்து போவதாக ஒரு காரணம் சொல்கிறார்கள். ஆகவே, வெளி மாநிலங்களிலேயிருந்து அதிகமாகப் பஞ்சு வாங்க வேண்டிய காரணத்தினால், அதற்கு அங்கே வரி விதித்திருக்கின்ற காரணத்தினால், இங்கே அதற்கு வரி விதிக்கக்கூடாது என்று அவர்கள் சொல்கிறார்கள். அதையும் அரசு கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் நான்கு பேர் சேர்ந்தாற்போல நில்லுங்கள்!

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களில் 8 சதவிகிதம் வரி விதிக்கப்படுகிறது. ஆனால், தமிழகத்தில் சிறு paint உற்பத்தியாளர்களுக்கும், பெரிய paint உற்பத்தியாளர்களுக்கும் 15 சதவிகித விற்பனை வரி விதித்திருப்பதனால், இங்கே சிறுதொழில் செய்கின்ற paint உற்பத்தியாளர்கள் நசிந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களை, கடந்த Paint உற்பத்தி செய்கின்ற சிறு உற்பத்தியாளர்களுக்கு பெரிய paint உற்பத்தியாளர்களுக்கு 15 சதவிகிதம் விற்பனை வரி விதிக்கப்படுகின்றது.

ஆண்டு சந்தித்துக் கேட்டபோது, இந்த ஆண்டு பார்க்கலாம் என்று சொன்னார்கள். ஆகவே, சிறு paint உற்பத்தியாளர்களுக்கு, அண்டை மாநிலங்களிலே இருப்பதைப் போன்று விற்பனை வரியை *8* சதவிகிதமாகக் குறைப்பீர்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் வணிக வரியில் பல்வேறு மாற்றங்களைச் செய்து, அதை மிகவும் எளிய முறையிலே நடைமுறைப்படுத்துவதிலே அவருக்கு ஈடு இணை அவரேதான். அந்த அளவிற்கு இந்த வரியை மிகவும் எளிமையாக்கியிருக்கிறார்கள். அவருடைய கவனத்திற்கு இன்னொரு விஷயத்தையும் கொண்டு வருகிறேன். Appeal-க்கு *25* சதவிகிதம் கட்ட வேண்டிய தொகையை *12* சதவிகிதமாகக் குறைத்து இருக்கிறீர்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில், appeal-க்கு போகும்போது, தனி நபர் அந்தத் தொகையை, contrast-ஆன தொகையை நிர்ணயம் செய்வதினால் ஆறு மாத காலம் அவகாசம் கொடுத்தால், அது மிகவும் ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, சமச்சீர் வரியிலே paint-க்கு *12* சதவிகிதம் என்று இருக்கிறது. ஆனால், நம்முடைய மாநிலத்திலே *16* சதவிகிதம் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, paint-க்கு உள்ள வரியை *12* சதவிகிதமாகக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, Brush, washer போன்ற பொருட்களுக்கு வரிகளில் இருந்து விலக்கு வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வணிக வரித் துறையிலே வழங்கப்படக்கூடிய applications தமிழிலே இல்லை. எல்லாம் ஆங்கிலத்திலே இருந்து கொண்டிருக்கின்றன. அது கிராமப்புறங்களில் தொழில் தொடங்கக் கூடியவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கின்ற காரணத்தினால், அதை தமிழிலே ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

பிற்பகல் *1-35*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, சமச்சீர் வரி என்றதும், எல்லோரும்



பேசிக்கொண்டேயிருந்தால், அவரவர்களும் தங்களுடைய ஆசையை வெளிப்படுத்தலாம். மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுக் காட்டும்பொழுது, தமிழ்நாட்டில் சமையல் எண்ணெய்க்கு அறவே வரி இல்லை. எந்த மாநிலத்திலாவது வரி இல்லை என்று எடுத்துக்காட்டினால், உங்களுடைய மற்ற யோசனைகளைப்பற்றி ஆராயலாம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** தலைவர் அவர்களே.........

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** தலைவர் அவர்களே........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் இல்லை. எவ்வளவு பேரை பேச அனுமதித்துக்கொண்டு இருப்பது? நினைத்து, நினைத்து ஒவ்வொருவராக பேசுவீர்கள் என்றால் முடியாது. விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு *2* திருத்தங்கள் இல்லை

பிரிவு *2*, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை, வியாழக்கிழமை (18-5-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-36 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

172. 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் 7-12-1998 ஆம் நாளிட்ட 159 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 41(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

173. 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆகிய ஆண்டுகளுக்கான சேலம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள். (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

174. 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆகிய ஆண்டுகளுக்கான தேனி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள். (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

175. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு எஃகு நிறுவனத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்).

176. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 2000-2001 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1999-2000ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு. (1948ஆம் ஆண்டு மின்சார (விநியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 61(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

307. 1989-90 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (தமிழ், ஆங்கிலம்)

308. 1989-90 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

309. 1989-90 ஆம் ஆண்டின் மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள் குறித்து மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி முதல் அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்.)

[2000 மே 17

310. பொது கணக்குக் குழுவின் இருநூற்று எழுபத்தி இரண்டாவது அறிக்கை. *(1999-2000)*

311. பொது கணக்குக் குழுவின் இருநூற்று எழுபத்தி மூன்றாவது அறிக்கை. *(1999-2000)*

312. பொது கணக்குக் குழுவின் இருநூற்று எழுபத்தி நான்காவது அறிக்கை. *(1999-2000)*

313. பொது கணக்குக் குழுவின் இருநூற்று எழுபத்தைந்தாவது அறிக்கை. *(1999-2000)*

314. பொது கணக்குக் குழுவின் இருநூற்று எழுபத்தாறாவது அறிக்கை. *(1999-2000)*

315. பொது கணக்குக் குழுவின் இருநூற்று எழுபத்தேழாவது அறிக்கை. *(1999-2000)*

316. பொது கணக்குக் குழுவின் இருநூற்று எழுபத்தெட்டாவது அறிக்கை. *(1999-2000)*

317. பொது கணக்குக் குழுவின் இருநூற்று எழுபத்தொன்பதாவது அறிக்கை. *(1999-2000)*

318. பொது கணக்குக் குழுவின் இருநூற்று எண்பதாவது அறிக்கை. *(1999-2000)*

319. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்தேழாவது அறிக்கை. *(1999-2000)*

320. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்தெட்டாவது அறிக்கை. *(1999-2000)*

321. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்தொன்பதாவது அறிக்கை. *(1999-2000)*

322. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பதாவது அறிக்கை. *(1999-2000)*

323. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்தொன்றாவது அறிக்கை. *(1999-2000)*

324. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்தி இரண்டாவது அறிக்கை. *(1999-2000)*

325. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பதினேழாவது அறிக்கை. *(1999-2000)*



2000 மே 17]

326. சட்ட விதிகள் ஆய்வுக்குழுவின் பதினெட்டாவது அறிக்கை. *(1999-2000)*

327. சட்ட விதிகள் ஆய்வுக்குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை. *(1999-2000)*

328. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்தாறாவது அறிக்கை. *(1999-2000).*

329. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்தேழாவது அறிக்கை. *(1999-2000).*

330. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்தெட்டாவது அறிக்கை. *(1999-2000).*

331. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்தொன்பதாவது அறிக்கை. *(1999-2000).*

332. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பதாவது அறிக்கை. *(1999-2000).*

333. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பத்தொன்றாவது அறிக்கை *(1999-2000)*

334. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பத்தி இரண்டாவது அறிக்கை *(1999-2000)*

335. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பத்தி மூன்றாவது அறிக்கை *(1999-2000).*

336. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினேழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

337. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினெட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

338. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பத்தொன்பதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

339. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (இருபதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

340. தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணைக் குழு [illegible] சாசனம்" என்ற புத்தகம், 2000-2001 (தமிழ், [illegible]லும்)

600 008

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079